உ
சிவமயம்

# குகப்பிரசாதம்

## மணிவிழா மங்கலர் மாண்புரை

மங்கலம்



# மணிவிழா மலர்

வாழ்த்தியல்

28:09:2014

உ

சிவமயம்

# மணிவிழா வாழ்த்து

மணிவிழாத்தம்பதிகள்



திரு.திருமதி.

## இ.குகதாசன் புவனேஸ்வரி

இறையருளால் வாழியநீர் பன்நூறாண்டே

அருந்"தெய்வத் தமிழிசைக் கவிஞர்"என்றே
அருள்மாவை ஷண்முகனார் அன்பாய் வாழ்த்த,
பெருந்"தெய்வப் புகழிசைவா ரிதி"யாமென்றே
புலவரவர் கந்தசாமி பொலிவாய் வாழ்த்த
வருந்திருவெம் "அருட்கவிச் செல்வர்" என்றே
வயித்தீசு வரக்குருக்கள் வரமாய் வாழ்த்த
கரும்புநிகர் நாவலரின் கவிதை போற்றி
"காலத்தா லழியாத கம்பன்" என்றே
பெரும்புலவர் வை.க.சிற்றம் பலனார் வாழ்த்த
புவியரசின் "சமாதான நீதி பதி"யாய்
திருந்திடுமெம் "தேசபந்து" "தேசப் பிரேமி"
திகழ்"ஜனதா புத்ர"னொடு "தேச மான்ய"
பொருந்திவரு "சாமஸ்ரீ" "சமூக திலகம்"
எனும்விருதொ டுனபுவனேஸ் வரியி னோடு
இரும்புவியில் மணிவிழாக் காணும் வேந்தே
இறையருளால் வாழியநீர் பன்நூ றாண்டே

விழாக்குழுவினர் :
நண்பர்கள்,கவிஞர்கள்,அன்பர்கள்
உறவினர்,மக்கள்,மருமக்கள்.

நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

# குகப்பிரசாதம்

## மணிவிழா மங்கலர் மாண்புரை மங்கலம்

“தெய்வப்புகழிசை வாரிதி”, “அருட்கவிச் செல்வர்”

“காலத்தால் அழியாத கம்பன்”, “தேசபந்து”,“தேசபிரேமி”,“சாமஸ்ரீ”

“தேசாபிமானி”, “ஜனதாபுத்ர”, “சமூகதிலகம்”

“தெய்வத்தமிழிசைக்கவிஞர்”,“தேசமான்ய”

## இராசையா குகதாசன் ஜே.பி

## குகதாசன் புவனேஸ்வரி

தம்பதிகளின்

# மணிவிழா

வெளியீடு

“தெய்வத்தமிழிசைக் கவிஞர்”இராசையா குகதாசன்

மணிவிழாக்குழுவுடன்

இணைந்து

திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகம்

நல்லூர்

ஜயவருடம் புரட்டாதித் திங்கள் 12ஆம் நாள் 28:09:2014

புரட்டாதிச் சதுர்த்தி ஞாயிற்றுக்கிழமை

# வெளியீட்டுரை

ஞானிகளும்,சித்தர்களும்,யோகிகளும் உலாவிய சிவபூமியாகிய யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டின் நன்முத்தாக,கருவிலே திருவுடை கவிதாயோகம் மிக்கவராக திரு அவதாரஞ் செய்தவர்தான் அன்பர் இராசையா குகதாசன் அவர்கள்.

அவனருளாலே அவன்தாள் வணங்குதல் போல இறையருளாலே இணைபுகழ் பாடிவருபவர்.சிவன் சீவனோடு கலந்து பாடாவிட்டால் பாடல்களில் உயிர்ப்பிருக்காது என்று நம்புவர்.முழு இலங்கையிலும் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளைப்பற்றி பாட சு.து.ஷண்முகநாதக் குருக்கள் பணித்தபோது பயந்தார், தளர்ந்தார்.பண்டைய சைவ நெறிமுறை வழியில் நீ பாடு என்றபோது பாரிலிவர் நோக்கம் பலிக்குமோ என உழன்றார். மன்றாடி மைந்தன் மாவைக்கந்தன் தன்றாள் நீரருவி கண்சோர நின்றார். நின்றாள் சரணென்று நீணிலத்தில் விழுந்தாரை தண்ணார் தமிழ் கொடுத்து தடுத்தாண்டான் மாவைக் கந்தன்.

காலத்தால் அழியாத காவியப் பெட்டகமாய்த் திகழப்போகும் தெய்வப்புகழிசைத் தேனமுதத்தை வடிக்க முருகனே மூலமாய் மூளையிற் புகுந்தும், நெஞ்சமதில் அருணகிரி நீக்கமற நிறைந்து வாக்குவழி வடிந்தும் நிகரில்லா இலக்கியத்தை நீடுலகிற் களித்தார்கள். சைவநெறி முறை துலங்கவும், எழிற்சைவ மரபெல்லாம் ஏற்றமுறவும் கூடிய பாடல்களை இவ்வுலகிற்கு அளிப்பது தன் அறிவால் மட்டும் முடியாதென்று அகமுணர்ந்தார். உழலும் மனதோடு, உய்யுமோதன் நோக்கம் உலகிலே எனக்கலங்கினார். வரலாற்று நூல்தேடி வாசல் தொறும் வாடி அலையாமல் உளமகிழ அந்த வள்ளலே கைகிடைக்க வழிசமைத்தான்.

ஏற்றமிகு புகழதனை எழுதவென ஈசனே அனுப்பி வைத்த நூலை விரித்தவர்க்கோ வியப்பு.குகதாசன் உள்ளிருந்தக் குகனே பாடுதற்கோ கொடுத்து விட்டான் நூலையெனக் கசிந்தார். ஐயநின் அடிசுயும் அருளினாலன்றித் தேசமெங்கும் கோலோச்சும் தேவ,தேவியர் மகிமைதனைச் செப்பவலனோ? என்றிரங்கிய தன் நோக்கறிந்து பாத்தொடுக்க இறங்கியும், இசைந்தும் வழியொன்று திறந்துவிட்ட வாஞ்சையினை வாழ்த்தி வணங்கினார். காலையென்ன, மாலையென்ன காலமுள நேரமெலாம் காவியமாய் மலர்ந்தது கழற் புகழ். பாடிப் பயனடைவோம். பாரிற் சைவநெறி வளர்ப்போம்.

இணையிலாப் புகழிழைத்தபெரியாரின் மணிவிழா மலராக "குகப் பிரசாதம்"என்ற சிறுநூலை வெளியிட்டு வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். நூலாக்கத்துக்கு தமது வாழ்த்துரைகள்,கவிதைகள், ஆசியுரைகள், அணிந்துரைகள் வழங்கி அவரைக் கௌரவித்த அத்தனை அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள். மணிவிழாத் தம்பதிகள் பல்லாண்டு வாழ்ந்து இறைபணியாற்ற இறையாசிவேண்டி பிரார்த்தித்து மகிழ்கிறோம்.

**"தெய்வத்தமிழிசைக்கவிஞர்"**
**இராசையா குகதாசன்**
**மணிவிழாக்குழு**

**நயினை.கி.கிருபானந்தா**
**திரு எஸ்.வெற்றிவேலாயுதம்**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம் : கம்பீரநாட்டை — தாளம் : ஆதி

பல்லவி

வாக்கினில் வருவாய் வல்ல விநாயகா!
காக்கும் அம்பிகை யருட் கழலிணைப் பாட

அநுபல்லவி

நாக்கினிலே யிருந்து நர்த்தனமே புரிந்து
ஆக்கிநற் பாமாலை அழகொடு நான் சூட

சரணம்

அன்னை இராஜேஸ்வரியை அருந்தமிழிற் பாட
இன்னிசை அறிவு எந்தனுக் கருள்வாய்
உன்துணை யன்றிமற் றோர்துணை யில்லை
என்னுளம் புகுந்து ஏழிசை வடிவாய்

தக்கதருணமதிற் தமியேனைக் காத்திடும்
விக்னவி நாயகா வியனடி தொழுதேன்
மிக்ககம்பீர நாட்டை மிளிரச்செய் தேவி
பக்குவம் பாடிட பசுந்தமிழாகியென் (வாக்கினில்)

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
24-வது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609803
நாகை மாவட்டம்.
போன் : 04364 - 232021



# அருள் வாழ்த்துரை

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

\- அப்பர் தேவாரம்.

ஈழத்திரு நாட்டில் சைவத்தமிழ்ப் பணிகளைச் செம்மையுற ஆற்றிவரும் அரும்பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள திருவாளர் இராசையா குகதாசன் அவர்கள் மணிவிழா காண உள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

அநேக பக்திஇலக்கியங்களையும், கீர்த்தனைகளையும், ஒலிப்பேழைகளையும், படைப்பாகவும்,தொகுப்பாகவும் வெளியிட்டுச் சீரிய முறையில் தொண்டாற்றிவரும் அன்பர் இராசையா குகதாசன் அவர்கள் தேக ஆரோக்கியமும், சிந்தனை வளமும், செல்வ நலமும், பணி ஊக்கமும், கீர்த்தியும் மேன்மேலும் தழைக்கப்பெற்று நீடூழி வாழவேண்டுமெனவும், தம்பதிகளின் மணிவிழா சிறக்கவும், மணிவிழா வெளியீடாக வரும் "தெய்வத்தமிழிசைத் தேனமுதம்"என்ற நூல் விரிந்து திசைதொறும் தெய்வீக மணம் பரப்பவும், நூலாசிரியர் சிறப்புரைக்கும் மணிவிழா மலரான "குகப்பிரசாதம்" சிறக்கவும் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

**திருக்கயிலாய பரம்பரைத்**
**திருவாவடு துறை ஆதீனம்**
**திருவாவடுதுறை**

**ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக**
**பரமாச்சாரியசுவாமிகள்**
**24ஆவது குருமகாசந்நிதானம்.**



**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

ஸ்தாபிதம் : 1966

021 222 2870

15 / 06 /2014

# சைவநெறி யோங்குபணி சகத்தாற்றி நீர்வாழி அன்புள்ளவர்களுக்கு என் ஆசிகள்!

சைவத்திற்கும்,தமிழுக்கும் மிகநீண்ட காலமாகப் பணியாற்றிவரும் திரு. இராசையா குகதாசன் அவர்கள் இன்று மணிவிழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். சைவ சமயத்திற்காக தனது வாழ்நாளையே அர்ப்பணித்துப் பணியாற்றிவரும் திரு.இராசையா குகதாசன் அவர்கள் இலங்கையில் உள்ள பலகோவில்களின் திருப்புகழ் பாடும் பணிமூலம் அனைவருடைய நன்மதிப்பையும் இறைவனுடைய ஆசியையும் பெற்றுள்ளார்.

எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் செயல்திறன், அனைவருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம் இறைபக்தி போன்ற நற்குணங்களை தன்னகத்தே கொண்டு சேவையாற்றிவரும் குகதாசன் அவர்கள் இலங்கையில் காணப்படும் ஆலயங்களின் மூர்த்திகளின் கீர்த்திகளை திருப்புகழாகப்பாடி அதனை நூல்வடிவில் வெளியிடுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.இப்பணியின் மூலமாக அவர் சைவத்திற்குப்பெரும் பங்காற்றியுள்ளார்.

இவரின் இப்பணி மேலும்தொடரவும் வெளிவரும் நூலினை அனைவரும் படித்துப் பயன்பெறவும் இறைவனின் ஆசி கிடைப்பதாக.

இத்தெய்வீகப்பணிக்குப் பங்காற்றும் அனைத்து அன்புள்ளங்களையும் மனமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.தங்களின் பணி மேன்மேலும் தொடர எமது வாழ்த்துக்கள்

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**
**பருத்தித்துறைவீதி**
**நல்லூர்**

**இரண்டாவது குருமகாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



உ
குருவே துணை

## சந்நிதியான் ஆச்சிரமம்

Sannithiyan Achcheramam



தொண்டைமானாறு,
செல்வச்சந்நிதி.

Thondaimanaru,
Selvachchannithy.



# முருகனின் ஆசிபெற்ற முந்துபுகழ்க் கவிஞர் முருகனின் ஆசீர்வாதம் ஆகுக!

வளம் நிறைந்த ஈழத்திருநாட்டில் உள்ள பல தலங்களின் மூர்த்திகளின் கீர்த்திகளைப் பற்றி முருகப்பெருமானின் அருட்துணையுடன் திருப்புகழ் வடிவிலான பாக்களைப்பாடி நூல்வடிவாக்கி மணிவிழா வெளியீடாக வெளியிடுவதையிட்டு சைவ சமயிகளாகிய நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும்.

அவ்வகையில் ஐநூற்று அறுபது தலங்களின் மீது அறுநூறு திருப்புகழ்ப் பாக்கள் பாடப்பெற்று "தெய்வத் தமிழிசைத் தேனமுதம்" என்ற திருநாமம் சூட்டி அவற்றை"ஷண்முகப்பிரசாதம்"ஆகத் தருவது போற்றத்தக்கது.

எமது பேரவையினால் வெளியீடு செய்யப்படும் "ஞானச்சுடர்"மலரில் இக்கவிஞர் செல்வச் சந்நிதிக் கந்தன்மேற்பாடிய பாடிய இருபத்தி யொன்பது "கீர்த்தனைகளும்" இருபத்தியெட்டு திருப்புகழ் பாடல்களும் "சந்நிதிக்கந்தன் கழற்கோர் கவிமாலை" என்ற தலைப்பில் தொடர்ந்து மாதம் ஒரு பாடலாக வெளிவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

அகவை அறுபது நிறைவடைந்து மணிவிழாவைக் காண இருக்கும் அன்பர் இராசையா குகதாசன் அவர்களை பல்லாண்டு காலம் பரம்பொருளின் பெரும்புகழைப் பாடி வாழ வாழ்த்துவதோடு, அவரது இவ்வாறான நூல் புனைதல் முயற்சி மேன் மேலும் வளர எல்லாம் வல்ல சந்நிதி வேற்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

சுபம் சாந்தி!!

**சந்நிதியான் ஆச்சிரமம்**
**தொண்டைமானாறு**

**குருபணியில்**
**செ.மோகன்தாஸ் சுவாமிகள்**

CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)

32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344

SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.

web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org



## ஆசிச்செய்தி

## சைவமது ஓங்கப்பணி சகத்தாற்றுங் கவிஞர்

தெய்வத்தின் பெருமையை, அவைகளின் புகழை தேனமுதமாக எடுத்துச் சொல்கின்ற "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" எனும் அருட் புகழ் பாடல்கள் அடங்கிய நூல், அகவை அறுபது நிறைவடைந்த அன்பர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப் படுவது மிக மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஈழமணித் திருநாட்டிலுள்ள ஐநூற்றி அறுபதுக்கும் மேற்பட்ட திருத்தலங்கள் மீது அருணகிரிப் பெருமானின் "சந்தக்கவி" வடிவில் தெய்வீக மணங் கமழும் படியாக பாடல்கள் அற்புதமாக பாடப் பட்டுள்ளன.பாடும் பணியோடு சைவமும், தமிழும் தழைத்தோங்க பல அரிய பணிகளை ஆற்றி வருபவர் இக் கவிஞர்.

சமாதான நீதிபதியாக,புராணபடன வித்தகராக, இன்னும் பன்முகப் பணிகளை இச்சமூகத்திற்கு ஆற்றிவரும் வித்தகர் குகதாசன் ஐயாஅவர்களின் சைவப்பணி மேன்மேலும் தொடரவும், மணிவிழா மலரான இந்நூல் வெளிவந்து பக்தி நெறி பரப்பவும், எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து பூஜ்ய குருதேவரின் நல்ஆசிகளையும் வேண்டி அமைகின்றோம்.

இந்நூல் ஒரு சிறந்த வரப்பிரசாதமாக சைவப்பெருமக்கள் அனைவருக்கும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க !!

ஓம் நமசிவாய!!!

**இல.9, செட்டித்தெரு ஒழுங்கை**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**இறைபணியில்**
**ஜாக்ரத சைதன்யா சுவாமிகள்,**
**சின்மயா மிஷன்**

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்
SRI SIVAGURUNATHA GURUPEEDAM
வேதாந்த மடம் VEDANTA MADAM
ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமம்
Srimath Mahadeva Swamikal Asiramam

# தேனமுதைப்பருகி
# திருவருளிந்திளைத்திடுவீர்



சைவமுந்தமிழும் தழைத்தோங்கப்பணிசெய்தோர் வாழ்ந்த நாயன்மார்கட்டு கிராமத்திலே சைவவாழ்வியலுக்கு ஏற்ற வகையில் சைவாசார அநுட்டானங்களைப்பேணியும் எந்நேரமும் விபூதியும் குங்குமமும் துலங்கும் நெற்றியுமாக சிவவாழ்வு வாழ்ந்துபல ஆலயங்களின் மூர்த்திகளின் கீர்த்திபற்றி திருவூஞ்சல், திருப்பள்ளி எழுச்சி, அட்டகம், சதகம்பலபாடி தனது கவித்துவத்தினாலே இறைகளின் நல்லாசிகளைப்பெற்று நிறை மனத்தராக வாழ்பவர்தான்அன்பர் இராசையா குகதாசன் அவர்கள். எமது மடத்தோடு நீண்டதொடர்புடையவர். இதன்வளர்ச்சியிலே அக்கறையோடு செயற்படுபவர். அருட்புகழ்ப்பாக்கள் பாடுவதிலே வல்லவர்.நல்லை, மாவை, சந்நிதிக்கந்தன் மேலும்,கீரிமலைசிவன் மேலும் பக்திச்சுவைகொட்ட இவர்பாடிய பாடல்கள் இவரின் புலமையைப் பறைசாற்றி நிற்கின்றன. பலஆதீனங்களதும், மடாதிபதிகளதும், துறவிகளதும் பேரன்பையும் ஆசிகளையும் பெறும்பேறு பெற்றவர். அரசடிப்பிள்ளையார் மேல்பாடிய திருப்பள்ளி எழுச்சிப்பாடல்களை வியந்து திருப்போரூர் ஆதீன குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் கலாநிதிஸ்ரீமத். குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகளால் பொன்னாடை, மாலைசாற்றிப் பாராட்டப் பெற்றவர். நாயன்மார்கட்டு சனசமூகநிலையம் நடாத்திய கவிதைப்போட்டியில் மேற்பிரிவில் முதற்பரிசு பெற்றதோடு அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தமாக வலம்புரி பத்திரிகை அகிலஇலங்கை ரீதியாக நடாத்திய கவிதைப்போட்டியில் முதற்பரிசையும் கேடயத்தையும் தனதாக்கியவர்.

தனதுகுருநாதர்களான சொக்கன்ஐயாவையும்,வீரமணிஐயாவையும் மறவாது நினைவுகூர்ந்துவருபவர்.இதனாலே குருவருளுக்கும்,திருவருளுக்கும் பாத்திரராகவாழ்பவர்.பலதுறைகளிலும் எழுதிவந்த இவருள் இருந்த ஆன்மீக நெஞ்சை உள்ளுணர்வால் உணர்ந்த குருமார் இருவரினதும் கண்டிப்பான ஆணையைசிரமேற்கொண்டு பல வருடங்களாக பொய்மையாளரைப்பாடாது இறைபுகழ்களையே பாடி வருபவர்.

இவரை வாழும்போதே வாழ்த்திக்கொண்டிருக்கும் நூறாண்டில் வாழும் முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயாவினதும்,தொண்ணூற்றி எட்டாம்

ஆண்டில் கால்பதித்திருக்கும் கலாநிதி.க.வைத்தீசுவரக்குருக்கள் அவர்களதும் ஆசியோடு மறைந்த மாவை ஆதீனகர்த்தர் "மகாராஜஸ்ரீ" சு.து.சண்முகநாதக் குருக்களுடைய அருளாணையை ஏற்று இலங்கை மணித் திருநாட்டிலுள்ள இந்துக் கோவில்கள் முழுவதையும் பாடும்பணியில் இதுவரை ஐநூற்றிஅறுபது தலங்களின் கீர்த்திபற்றி பாடப்பெற்ற அறுநூறு திருப்புகழ்அடங்கியநூலை "ஷண்முகப்பிரசாதம்"ஆக "தெய்வப்புகழிசைத் தேனமுதம்" என்ற பெயரில் வெளியிட இருக்கின்றார்.

இல்லறத்தானுக்குரிய அறங்களைஆற்றஇணைந்த மங்கைநல்லாள் புவனேஸ்வரியினோடு நிறைவாழ்வு வாழ்ந்து நன்மக்களைப்பெற்று அகவை அறுபது நிறைவடைந்து மணிவிழாக்காணும் இத்தம்பதியரின் மணிவிழா மலராக இத்தேனமுதம் மலர்வதும்பொருத்தமே.

தன் உயிருள்ளவரை பாமாலைபுனைந்து பரமன்தாள் சூட்டிமகிழ் வதையே லட்சியமாகவாழ்பவர். ஆயுள்முடியுமுன் சகலஆலயங்களின் கீர்த்திகளையும் பாடிமுடிக்கவேண்டுமென்ற அவாவுடையவர். இப்பெருமகனாருடைய ஆசைநிறைவுபெறவும்,மணிவிழாக்காணும் இத்தம்பதிகள் பலவளமும்பெற்று பல்லாண்டு வாழவும்,வெளிவரும் தேன முதம் எல்லோருடைய நாவிலும் தவளவும்,உளமுருகி இப் பாடல்களின் பொருளுணர்ந்து படிப்போர் பேரின்பப் பெருவாழ்விற் திளைக்கவும் குருவருளையும்,திருவருளையும் வேண்டிப் பிரார்த்தித்து ஆசீரவதிக்கின்றேன்.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை

**வேதாந்தமடம்**
**இல.18.குமாரசாமிவீதி.**
**கந்தர்மடம்**

**ஸ்ரீமத்.வேதவித்தியாசாகரர்சுவாமிகள்**
**எட்டாவதுகுருபீடாதிபதி**

உ

சிவமயம்

மறைந்த மாமேதை "மகாராஜஸ்ரீ"
சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
வழங்கியருளியது

# அருந்தமிழ் மாலைக்கென் ஆசியுரை



ஆன்மீகத்துறையிலும்,அறநெறியிலும்,வழுவிலா வழியில் நின்று மேம்பாடுற்றமைக்கும் காரணமாகஅமைவன வானுறவுயர்ந்து மழைமுகில் தழுவி, சூழல்முழுவதும் பா்சுரங்களது ஒலி அதிர்வுகளை உள்வாங்கி மிளிரும் ஆலயங்களேதான்.ஆலயங்களில் எழும் வேதகீதங்கள், பாடும்பண்ணிசைகள், மனமது இரங்கி முருகன் தாள்பணிந்து வேண்டும் வரங்களது ஓசைகள் இவைதான் சூழல் சுற்றுப்புறங்களை தெய்வீக நிலைக்கு ஈர்த்துவிடும்.இதனால் செம்மை சார்ந்தநிலையை முன்னெடுக்கும் மாந்தர்களது வாழ்வின் சிறப்பும்,அடியார்களது விசனங்கள் தீர்த்துவிழுமிய முத்தியை உவந்தளிக்கும் திருவருட்திறன்களும்,ஆலயச்சுற்றாடலில்தான் அரும்பும்.இதனாற்றான் "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" எனப் பெரியோர்கள் ஆற்றுப்படுத்து கிறார்கள்.

பாட்டு என்றால் எதையும்பாடு என்ற நிலையில் அவைபல நுட்பங்களோடு பல்துறைகளிலும் வளர்ச்சி கொண்டு பரம்பலாகி,சூழலையும்,மனித மனங்களையும் மாசுபடுத்தி நிற்கின்றது.வெண்பா,ஆசிரியப்பா,கலிப்பா என்றெல்லாமிருக்கும் இலக்கணம் உதைக்கப்பட்டு பாட்டானது தெருவழியே ஊளையிட்டுத் திரியும் ஆதாயிகளது புதியதோர் இலக்கணத்துள் இணைந்து பரவி நாடும் நரகமாகிறது. பாடும்வாயால் எழும் ஓசைகள் தொகை, வகை, விரி, எனவிரிந்து நூற்றுக்குமேலான வடிவங்களைத் தருகின்றது. இசை எனும்போது மந்திரம்,மத்திமம்,தாரம் என்றெல்லா மிருக்கும் வகைகள் விரல், விருட்சங்கள், மிருகங்கள், பட்சிகள் ஆகிய வற்றின் அசைவுகளாலும் சப்தங்களாலும் ஈர்க்கப்பட்டு எழும் ஓசையேயாம். எனவேபாட்டு இசை, ஓசை யாவும் இயல்பாகவே புனிதமடைகிறது.இன்றோ இவையாவும் புதுப்புது வடிவங்கள் பெற்று, வழிமாறி, நடைதவறி, வெடியோசைகளுக்குள் அமுங்கி யந்திரங்கள்,வாகனாதிகள் போன்றவற்றால் எழும்ஓசைகளோடு இணைந்து தெருவெங்கும் இரவுபகலாக வினாடிக்கு வினாடி ஏதோ புதுவித ராகரசனை

யோடு வளர்கிறது.இதனால் மனிதர்களது குணங்களும் சுபாவங்களும், வாழ்வுங்கூட மாற்றங் கொண்டு மாசடைகிறது.இது கூட கலியுகத்தின் மாண்புமாகிறது.

இறைவனுக்கு இருநிலைகளுண்டு ஒன்று மனம்,வாக்குக் கெட்டாதது. உருவ நாமங்களிற்கும் உட்படாதது.அது அதீதமாய் நிற்கும்.அது தான் தானாயிருக்கும் சொருபநிலை.மற்றையது தன் சக்தி வடிவமாய், உருவநாமங்களுக்கு உட்பட்டதாய், எம்பொருட்டு எம்மையே நோக்கிவந்து அருள்தரும் நிலை. இது "தடஸ்தநிலை"நிலை எனப்படுகின்றது. சொருபநிலை இறைவன் அசையாது இருக்கும் நிலையெனில் "தடஸ்த"நிலையானது இறைவன் நமக்காக நம்மை நோக்கி எதிர்வரும் நிலையாகின்றது.இந்த "தடஸ்த"நிலையிற்தான் விநாயகர்,சுப்ரமண்யர் முதலான சக்தி வடிவங்கள் நம்வழிபாட்டிற்காக எழுந்தன.

ஓசையானது இசைமூலம்தான் திருவருளுக்குத் துணைதருகின்றது. இன்னிசைக்கிணங்க இனிய சொற்பதங்களோடு இணைந்த தூய ஆசைகட்கிணங்கி இறைவன் பாலனாய்,விருத்தனாய்,குமரனாய்,குமரியாய் பற்பல நிலையிலிருந்து எமது பண்,ராக, இசைகளோடு இணைந்த கீதங்களால் லயமாகி எம்மை இரட்ஷித்தருள்கின்றார் என்பது ஞானிகள் கண்ட தரிசனமாகும். நாயன்மார்கள் அருணகிரிநாதசுவாமிகள் போன்றோரது வாழ்வின் மகத்துவம் சிறப்புற, இவ்வாறு நல்லருள்பெற இடமளித்துள்ளது.

"பாடினால் இறைவனையல்லாது பாடோம்"என்பதே பழம்பெரும் புலவர்களது தாகமாக இருந்தன. இதனால்தான் அந்தாதிகள், பிள்ளைத்தமிழ், ஊஞ்சல் என்றெல்லாம் எழுந்தன.இவற்றையனுசரித்து கொல்லங்கலட்டிப் பூபாலபிள்ளை- மாவை யமகவந்தாதி,மாவை இரட்டை மணிமாலை ஏழாலைபண்டிதர் மு.கந்தையா-மாவைப்பிள்ளைத்தமிழ், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்- மாவைப்பதிகம், தென்மயிலை இலக்கண வித்தகர் பண்டிதர் இ.நமசிவாயம்- மாவைப்பதிகம்,மாவைஇரட்டை மணிமாலை, மயிலிட்டி மயில்வாகனனார்- மாவைக்கந்தன் அகவல், குரும்பசிட்டி கணேசையர்- மாவை சுப்பிரமண்யர் தோத்திரம்,கரணவாய் செந்திநாத தேசிகர்- மாவை மும்மணிக்கோவை, நல்லூர் சரவண முத்துப்புலவர்-மாவைக்கந்தன் ஊஞ்சல், அளவெட்டி விநாசித்தம்பிப் புலவர்- பழனியாண்டவர் ஸ்தோத்திரம், மாவை முருகன், செஞ்சொற்புலவர் மா.குமாரசாமிப்பண்டிதர் -கந்தர்மாவை வெண்பா இவ்வாறு நல்ல ஓசைதரும்

பாக்களை இயற்றி உலகிற்கு ஈந்து புண்ணியம் பெற்றனர். இந்த வரிசையிலே இப்போ நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் "மாவைக் கந்தன் புகழ்மாலை"என்றநூலை அருமையானதோர் சந்தர்ப்பத்தில், வேண்டப்படும் காலநேரத்தில், தகுதியானதோர் சுபகாலத்தில் முருகப் பெருமானது திருக் கார்த்திகைத் தினத்தில் வெளியீடுசெய்து உலகிற்குத் தந்துள்ளார். இதுகூட சைவமக்கட்குக்கிடைத்த வரப்பிரசாதந்தான்.

கல்வியறிவு வேறு ஞான அறிவு வேறு.இது சுவாமி விவேகானந்தர் போன்ற பேரறிஞர்களின் முடிவு.கல்வியறிவு பெறவே பல்கலைக்கழகங்கள் தோற்றங் கொண்டன. ஞான அறிவுக்கு இவை தேவையற்றது.ஞான அறிவை இறைவனருளால் சுயமாகவும், இயல்பாகவும் சரியை, கிரியை, யோக மார்க்கங்களுக்கூடாகவும் பெறமுடிகிறது. உதவாத பல்கலைக் கழகக் கல்வியறிவு படும்பாடுகளையும், வேதனைகளையும் நாம் கண்டு கொண்டே தான் இருக்கின்றோம்.அவை பாவகாரியங்களையும், பாதகங்களையும் விளைவிக்கும் ஸ்தாபனமாகிவிட்டது.பஞ்சமா பாதகங்களது விளைநிலமாகவும் அவை வளர்க்கப்படுகின்றன. இது இவ்வாறு அமைய மறுபுறத்தில் அமைதியாகவும்,அவன் தாள் வணங்கி அருளமுதம்பெற்றும், பொறுமையாகவிருந்து ஆச்சிரம-தர்மங்களது துணையோடு ஆலயவிழாப்பொலிவுகளைத் தரிசித்து,ஞான சீலராக எவரது உதவிகளுமின்றி பலர் ஞானிகளாக வாழ்கிறார்கள்.இவர்கள் பல்கலைக்கழகங்கள் புக்முயலவில்லை.எனினும் பலர் பிறமத கலாச்சாரங்களைப் பதுங்கிப் பதுங்கி மக்களிடையே புகுத்தி,விஷசிந்தனைகளோடு இணைந்த பாக்களைப் பாடி திருமூலரால் சிவபூமியெனக் கண்டறியப்பட்ட இங்கு தாங்களும் பெரும் புலவர்களெனப் பாக்களிசைத்து இப்பூமியில் அலைகிறார்கள்.

இவர்களைப்பற்றி ........

இடுதற்கோர் பிள்ளைப்பாண்டியன் இங்கில்லை குறும்பியளவாய்க்
காதைக்குடைந்து தோண்டி எட்டினமட்டறுப்பதற்கோ வில்லியில்லை
இரண்டொன்றா முடிந்து தலையிறங்கப்போட்டு வெட்டுதற்கோ கவி
ஓட்டக் கூத்தனுமில்லை விளையாடக் கவிதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு தேசமெங்கும்
புலவரெனத் திரியலாமே.என முதுபெரும்புலவர் கூறி நகைக்கிறார்.

நல்ல வேளையாக ஆத்மீக உணர்வுகளால் ஆளப்பட்டு நிற்கும் இராசையா குகதாசன் ஆதியுமந்தமு மில்லா இறைவன்மீது, பார்பதி, பரமேஸ்வரனது திருவருளால் "முருகன் புகழ்மாலை"யொன்றைத்

தொகுத்து இச்சிவ பூமியின்கண் விதைத்துள்ளார்.செம்மையுடன் செழிப்பானதோர் விதை. முருகப்பெரு மானை மனத்திருத்தி அவரே ஞானசாரியாராக அமைந்து இப்புகழ் மாலையைத் தொகுக்க அருள்பாலித்தமை தெளிவாகின்றது.இது காலத்தால் ஆற்றிய பெரும் தர்மசாதனமுமாகிறது.அருணகிரிநாத சுவாமிகளது அநுக்கிரகமும் இவரிடம் இணைந்திருக்கின்றதென அறிஞர்கள் தரும் சாட்சியமும் துணைநிற்கின்றது.இப்பாமாலைப் பாடல்களைப் பாடப்பாட உள்ளம் நெகிழ்கிறது.உடல்பூரிக்கிறது.தெய்வமணம் கமழும் நாடாகவே இதனால் இப்பூமி மாற்றம்பெறும்.

இறைமணங் கமழும் திருநாடாகவும்,அறவுணர்வும்,அருளுரையும் விளைந்த நாடாகி, மக்கள் தமது சமய வாழ்வினை முன்னர் புனிதமாகவே முன்னெடுத்து இன்பப்பெருவாழ்வைப் பெற்றனர்.ஆனால் இன்றோ உலோகாயதங்கள் புகுந்துவிட்டன. காரணம் ஞானம் சிறிது சிறிதாக மறைகின்றது. இலகு தமிழால் இன்சுவையோடு இனிதே பாடி இறையுணர்வுகளை உடலினுள் ஏற்றி திருவருள்பெறும் வாய்ப்பைத் தரக்கூடிய பாக்களும் இல்லை.இவ்வேளையிற்றான் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்கள் முருகன் திருவருட்துணைகொண்டு மாவைக்கந்தன் பாமாலையை இச்சிவ பூமியின்கண் சூட்டுகிறார்.அருமையானதோர் படைப்பென அறிஞர்களது முடிபு. இவர் நன்றாக நீடூழி வாழ வேண்டுமென சைவமக்கள் பிரார்த்திக்கின்றார்கள். மாவைக்கந்தன் இராசையா குகதாசன் அவர்கட்கு சகல சௌபாக்கியங்களையும் தரல் வேண்டுமென்று யானும் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**மாவையாதீனம்**
**மாவிட்டபுரம்**
**தெல்லிப்பழை**

**"மகாராஜஸ்ரீ"**
**சு.து.ஷண்முகநாதக்குருக்கள்**
**ஆதீனகர்த்தா-பிரதமகுரு.**

சிவமயம்

## நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானுறை
## கீரிமலைச்சிவன் தேவஸ்தானம்
## கீரிமலை

## இறைகளின்அருளினாலே எண்ணியதெய்திவாழி



"அருட்கவிச்செல்வர்" திருவாளர் இராசையா குகதாசன் அவர்கட்கு அகவை அறுபது நிறைவடைந்து மணிவிழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.கீரிமலை நகுலேஸ்வரப்பெருமான்மீது அளவிலாபக்திகொண்டவர்.

கந்தப்பெருமான் இருந்து ஞானஆட்சிபுரிகின்ற நல்லையம் பதிக்கு அருகாமையில் அமைந்துள்ள நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர்கருவிலே திருவுடை கவிதாவரம் பெற்றவர்.

இவர்பாடும் திருப்புகழ் பாக்கள் சொல்நயமும்,பொருள்நயமும் இலக்கியச் சுவையும்மிக்கவை.தோத்திரங்கள் பொதுவாக அமைய வேண்டிய முறைகள் ஆறு.(ஷட்விதம்) அந்தஆறும் இணைந்துவரக் கூடியதாகவே இவரதுபாடல்கள் பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணலாம். இறையுணர்வினாலே உந்தப்பெற்று,அவனருளாலே அவன்தாள் பாடும் பேறுபெற்றவர்.அருணகிரிநாதரின் பரிபூரண அநுக்கிரகத்தாலே சந்தக்கவியான விந்தைப்புகழாலே மாலைதொடுத்து இறைகளை வந்தித்துவருபவர்.சந்நிதி,மாவை,நல்லூர்போன்ற ஆலயங்களுக்குஇவர்பாடிய திருப்புகழ் இசைமாலைகள் பெரும்பாராட்டைப் பெற்றவையாகும். நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப்பெருமான்மீது இவர் பாடிய"சிவனவன் கழற்கோர்செந்தமிழ்மாலை" பாடல்கள் நயக்கவும், வியக்கவும் வைப்பன.

சிறந்தநயமும்,பொருட்செறிவும் மிக்கன.இவரது வாழ்வை உள்ளும் புறமும் பற்றிநிற்கும் பக்திச்சுவைகளைத்தன்பாடலிலே வெளிப்படுத்தும் திறன்மிக, மிகப்போற்றத்தக்கதாகும். புராணப்படிப்பில், திருமுறைஓதுவதில், பொதுத்தொண்டுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்இவர் பலஆலயங்கள்மேல் திருவூஞ்சல், அட்டகம், சதகம், கீர்த்தனைகள் போன்றவற்றையும் பாடியுள்ளார்.

கலாநிதி.க.வைத்தீசுவரக்குருக்களினாலே "அருட்கவிச்செல்வர்"என்று பாராட்டப்பெற்றவர். எமது நகுலேஸ்வரப்பெருமான்மீது "திருப்பள்ளி எழுச்சி"யும் பாடியுள்ளார். மாவைஆதீனகர்த்தர், மைத்துனர் "மகாராஜஸ்ரீ" சு.து.ஷண்முகநாதக் குருக்கள்மீது பெருமதிப்புக்கொண்டவர். அவராணையைச் சிரமேலேற்று "ஷண்முகப்பிரசாதமாக"ஐநூற்றிஅறுபது ஆலயங்களின் மேல்பாடிய அறுநூறுதிருப்புகழ் அடங்கிய "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" எனும்நூலை தங்களதுமணிவிழா மலராக வெளியிட இருப்பது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது.சைவத்தையும், தமிழையும் தன் இருகண்களாகப் போற்றிவருவதோடு அழகுற செந்தமிழ்க்கவி செய்து தெய்வங்கள்மீது துதிபாடி வருவதும் ஒருமிகப்பெரிய சிவத்தொண்டாகும்.

மணிவிழாக்காணும் இத்தம்பதிகள் பல்லாண்டு,பல்லாண்டு எல்லா நலனும் பெற்றுவாழவும், "தெய்வப்புகழிசைவாரிதி"யான பாவலர்இராசையா குகதாசன் அவர்கள்மேலும்,மேலும் இறைபுகழைப்பாடிப்பரவி இப்பாரினைச்சிறக்க வைக்க வேண்டுமென்றும் வாழ்த்துவதோடு இவருக்கு நீண்டஆயுளும்,நிறைந்த புலமையும் வாய்க்க எல்லாம்வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப்பெருமான் பாதாரவிந்தங்களைப் பிரார்த்திப்பதோடு ஆசிகூறி அமைகிறேன்.

—:சுபம்:—

**ஆதீனகர்த்தர்**
**நகுலேஸ்வரம்,கீரிமலை**

**"இராஜராஜஸ்ரீ"**
**கு.நகுலேஸ்வரக்குருக்கள்**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம்:சாருகேசி

தாளம்: ஆதி

பல்லவி

கலங்கிட விடுதல் முறைதானோ? தாயே
நலந்தர நாயன்மார்கட்டு அமர்ந்தவளே என்னைக்

அநுபல்லவி

குலந்தனின் குறைதீர்க்கும் தேவியுனக் கழகோ
புலந்தனின் வழிசென்ற புன்நெறியின் விழைவோ

சரணம்

காருற்ற குழலாளுன் கடிமலார்த் தாள்தன்னை
பாருற்ற துணையாக பற்றித் தொழுதுநின்றேன்
யாருற்றார்எனக்கிங்கு இராஜராஜேஸ் வரியே
சீருற்ற அருளிருந்தும்(உன்) சேயன்எனது சித்தங்

உ

சிவமயம்

வாழ்வுபெற்றவல்லி சோழஇளவரசி
மாருதப்புரவீகவல்லியின்
மாவைஆதீனப்பேரரசு
அருள்மிகு மாவிட்டபுரம்கந்தசுவாமிகோவில்
மாவிட்டபுரம்

# ஷண்முகன் அருளினாலே சகமதிலுயர்ந்துவாழி



நாயன்மார்கட்டு இராசையா.குகதாசன்அவர்கள் ஆழ்ந்ததமிழ்ப் புலமையும், கவிபுனையும் பேராற்றலும் கொண்டவர். அருணகிரிநாதரின் அநுக்கிரகத்தினாலும், தமிழேவடிவான முருகனின் பேரருட்திறத்தினாலும் தெய்வப்புகழிசைபாடும் கவிஞராக விளங்கிவருபவர்.நாவலர்வழிநின்று சைவத்தையும் தமிழையும் வளர்த்துவரும் பெருமகன் இவர். இந்துசாதனம் இதழில் இவர்வரையும் “நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை”தொடர்ந்து வெளிவருவது யாவரும் அறிந்ததே. அரசகேசரிமன்னன் இருந்து “இரகுவம்சம்”பாடிய திருக்குளம் அமைந்த நாயன்மார்கட்டின் சூழலும் குருமாராக அமைந்த சொக்கன், வீரமணிஐயா போன்றோரின் வழிகாட்டலும் இவரைஉலகம்போற்றும் கவிஞனாக்கின என்றால் மிகையாகாது.

எமதுமாவை முருகனின்மேல் இருபத்திஆறு திருப்புகழ்பாடியுள்ளார் திருவருட்தொடர்பினாலே தந்தையாரோடு மிகநெருக்கமான உறவைப் பேணிவந்தவர். அவரின் வேண்டுகோளையும் ஆணையையும் ஏற்று “இலங்கைத்திருநாட்டின் இந்துக்கோவில்கள்”முழுவதையும்பாடிவரும் முயற்சியிலே தளராது ஈடுபட்டுக்கொண்டிருப்பவர். இறையுணர்வு உந்த தமிழ்ப்புலமையாலும்,கவியாற்றலினாலும் இதுவரை மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம், பொலநறுவை, மொனராகலை, பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, களுத்துறை, கொழும்பு, புத்தளம், காலி, கம்பஹா மாவட்டங்களோடு யாழ்மாவட்டம் உட்பட ஐநூற்றிஅறுபது ஆலயங்களின் மூர்த்திகளின் கீர்த்திபற்றி அறுநூறு திருப்புகழ் பாடியுள்ளார்.

"தெய்வத்தமிழிசைக்கவிஞர்"என்று தந்தையாரால் போற்றப்பட்ட இவர் பல்வேறு புலமைவிருதுகளின் நாயனாகத்திகழ்கின்றார்.இப்பெருமகனார் புவிவாழ்வின் அறங்காக்க இணைந்தமங்கை புவனேஸ்வரியினோடு நிறைவாழ்வில் அகவை அறுபது அடைந்து மணிவிழாக்காணுவது பெருமகிழ்வைத்தருகின்றது. குகதாசன்-புவனேஸ்வரி தம்பதிகளின் மணிவிழாமலராக வெளிவரஇருக்கும் "தெய்வப்புகழிசைத்தேனமுதம்" எனும்நூல் "ஷண்முகப்பிரசாதமாக" வெளியிடப்பட இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

மணிவிழா பெருவிழாவாகசிறக்கவும் ஷண்முகப்பிரசாதமாக வெளிவரும் "தெய்வப்புகழிசைத்தேனமுதம்" நூல்திக்கெட்டும்பரவி மணம்பரப்பவும், நாயன்மார்கட்டின் நன்மணியாகத்தோன்றி ஜொலிக்கும் தெய்வப் புகழிசைக் கவிஞரின் சைவப்பணிகளும்,தமிழ்ப்பணிகளும் மேன்மேலும் வளர்ந்து வானுயர்ந்தநிலை பேறுகொள்ளவும், இவர்பல்லாண்டு வாழ்ந்துகவியால் இறைபாதம்துதிபாடும் பேறுபெறவும், சகலசெல்வயோகமிக்கபெருவாழ்வை அருளவேண்டுமென்று மாவையுறை வள்ளிதேவ சேனாசமேத மாவைக் கந்தப்பெருமானை மன,மொழி,மெய்களாற் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**மாவைஆதீனம்**
**மாவிட்டபுரம்**
**தெல்லிப்பழை**

**"மகாராஜஸ்ரீ"**
**து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள்.**
**ஆதீனகர்த்தா -பிரதமகுரு**

இராகம்:ஆபோகி பல்லவி தாளம்:ஆதி

மங்கள ரூபிணி மகிழ்ந் தருள்வாள்
எங்கணும் நிறைந்திருக்கும் ஏகாம்ப ரேஸ்வரி

அநுபல்லவி

தங்கிடும் புகழோடு நாயன்மார் கட்டமர்ந்த
சங்கரன் பாங்கமர்ந்த ஸ்ரீஜெக தீஸ்வரி

சரணம்

பங்கயப் பூங்கழலாள் பார்பதி கல்யாணி
அங்கயற் கண்ணியவள் ஆனந்த பைரவி
இங்கித மாயருளும் இராஜ ராஜேஸ்வரி
குங்குமந் தனையருளும் கோமளி யபிராமி

உ
சிவமயம்

# நல்லன யாவும்பெற்று நலமுடன் நீடுவாழி



என் பேரன்பிற்கும்,பெருமதிப்புக்குமுரிய இராசையா குகதாசன் அவர்களுக்கு அறுபது வயது நிறைவடைந்து ஷஷ்டியப்த பூர்த்திவிழா திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் அபிராமி அம்பாள் முன்றலில் நடைபெற்றதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

அன்பரே!தாங்களும் தங்கள் மனைவி,மக்கள்,மருமக்கள் குடும்பத்தினர் அனைவரும் எல்லா நலங்களும் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.தாங்கள் எனது சிறுகுடிலுக்கு வந்து நீண்டநேரம் உரையாடிக்கொண்டிருந்து என்னை மகிழ்வித்தீர்கள்.நன்றி கூறுகின்றேன்.

நிற்க!"அரிது அரிது மானிடராதல் அரிது"என்றுகூறுகின்றார் ஔவையார். "நெருநலுளனொருவனின்றில்லையென்னும் பெருமையுடைத்திவ் வுலகு"என்கிறார் வள்ளுவர்."எப்போதும் ஆயத்தமாக இரு"என்கிறார் யோகர். எனவே நாம் ஒரு நிமிடத்தையும் வீணாக்காது நல்லகருமங்களைச் செய்துகொண்டிருக்க வேண்டும். இதனை உணர்ந்து தாங்கள் பலநல்ல கருமங்களைச் செய்துவருவது மட்டுமல்ல மற்றவர்களும் பலநல்ல கருமங்களைச்செய்ய உந்துசக்தியாக இருக்கிறீர்கள்.பாராட்டுகிறேன்.

ஷண்முகப்பிரசாதமாக வெளிவரும் "தெய்வப்புகழிசைத்தேனமுதம் " நிலைத்து நின்று தெய்வீக மணம்பரப்புமென்பது திண்ணம். "குகப்பிரசாத மாக" வரும் ஆசிச்செய்திகள் அடங்கிய மணிவிழா மலரும் தங்கள் புகழை பறைசாற்றும்.தாங்கள் செய்துவரும் புண்ணியச்செயல்கள் தொடரட்டும்.

நாவலர் தொடர்பாகத் தாங்கள் பாடிய பாடல்கள் மிகமிகச்சிறப்பானவை. ஆழமான கருத்துக்கள் கொண்டவை.அவற்றையும் விரைவில் அச்சேற்ற வேண்டும். அப்பாடல்களும் சைவமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறும். சைவர்கள் மத்தியில் சைவர்களாக வாழவேண்டுமென்ற எண்ணத் தையும் உண்டாக்கும்.நாவலரைப்பற்றி தாங்கள் பாடுவது ஒரு சிறந்த சிவத் தொண்டாகும்.

தங்கள் மணிவிழா சிறப்பாக நடைபெறவும் மணிவிழாமலர் மலர்ந்து தெய்வீக மணம்பரப்பவும் எல்லாம் வல்ல ஈழத்துச்சிதம்பர சௌந்தராம்பிகா சமேதசுந்தரேஸ்வரப்பெருமான் திருவடிகளை வழுத்தி ஆசி கூறுகின்றேன்.

**ஈழத்துச்சிதம்பரம்**
**காரைநகர்**

**உங்கள் அன்பும் பண்பும் மறவாத**
**கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள்.**

உ

சிவமயம்

# பக்திமரபியலை நித்தம்பரப்பிடும் பண்பாளர்



சந்தக்கவி அருணகிரிநாதப் பெருமான் அருளிய திருப்புகழ் மரபைப்பின்பற்றி, அதே சந்தஇலக்கிய மரபில் செந்தமிழ்த் தெய்வமான ஷண்முகப்பெருமான் உள்ளிட்ட பல்வேறு மூர்த்திகளுக்கும் பாமாலை சாற்றிவரும் பாவலர் பெருமகன்தான் திரு.இராசையா குகதாசன் அவர்கள்.

இலக்கணச் செழுமையும்,இலக்கிய வளமையும், ஆற்றோட்ட நடையும் அழகான சந்தமும் கொண்டதாக இவரின் பாடல்கள் அமைந்திருக்கும். அதுமட்டுமின்றி பொருட்சிறப்பு மிகுந்ததாயும், எந்தத்தலம் மீது பாடப் படுகின்றதோ, அத்தலத்து மூர்த்திகளின் கீர்த்திகளையும், சிறப்புக்களையும் பேசுவதாயும், பக்தி உணர்வைப் பெருக்குவதாயும் ஒருங்கே அமைந்து உள்ளமை பெருமிதத்துக்குரியது ஆகின்றது.

அப்பரும், சுந்தரரும்,ஆளுடைப்பிள்ளையும்,அருள்மணி வாசகரும் தொடர்ந்த பக்தி மரபியலை பேணிவளர்க்கும் அருட்கவிச்செல்வர், நாயன்மார்கட்டின் மைந்தர் இராசையா குகதாசன் அவர்களின் பணி மேன்மேலும் வளரவும், குகதாசன் புவனேஸ்வரி தம்பதிகளின் மணிவிழா மிளிரவும், மலர இருக்கும் தெய்வப்புகழிசைத் தேனமுதத்தை யாவரும் மாந்தி ஒளிரவும் நமது நீர்வை செல்லக்கதிர்காம வேலவரின் திருவடிகளை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்.

இவரின் நற்பணிகள் வாழ,வளர மீண்டும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**செல்லக்கதிர்காம தேவஸ்தானம், நீர்வேலி**

**கு.தியாகராஜக்குருக்கள். "நீர்வைமணி" பிரதமகுரு**



ஸ்ரீராம ஜெயம்
Sriraama Jeyam

வேதாகமகிரியா கலாபூஷணம் பிரதிஷ்டா கிரியாபானு
ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ. க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்
பிரதமகுரு, பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
Vedakama Kiriya Kalapusanam, Pirathisda Kiriyabanu
Sri Vishnu Sri K.S. Somaaskanthakurukkal
*Chief Priest, Ponnalai Sri Varatharajapperumal Thevasthanam*

பொன்னாலை
சுழிபுரம்.
Ponnalai.
Chulipuram.

# பேரொடு புகழுங்காண பொன்னாலை வரதன்காக்க



"அருட்கவிச் செல்வர்"திருவாளர் இராசையா குகதாசன் அவர்கட்டு மணிவிழா மங்கலம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவர் சிறந்த முருக பக்தர்.இதனால் முருகப்பெருமான் மீது திருப்புகழ் பாக்கள் பலவற்றை இயற்றியுள்ளார். இவர்பாடிய பாடல்கள் யாவும் இலக்கிய நயம், சொல் நயம், பொருள் நயம் மிக்கவை. தலவிஷேடம், மூர்த்தி விஷேடம், தீர்த்த விஷேடம், கீர்த்தி, போன்றவற்றைத் தான் தெளிவுற ஆராய்ந்து யாத்து வருவதால் இவரின் பாடல்கள் பலராலும் பாராட்டப் பெற்று வருகின்றது.கருங்காலி முருக மூர்த்தி ஆலயத்திற்கு ஒரு திருவூடல் எழுதவேண்டும் என்ற யோசனை பிறந்த போது அப்பணிக்கு இவரையே தெரிவு செய்திருந் தோம். முருக தத்துவங்களை,அவனது புகழை உள்ளடக்கி இவர் யாத்தளித்த திருவூடல் பெருவரவேற்பைப் பெற்றது.

சைவத்தையும், தமிழையும் இருகண்ணாகப் போற்றிவரும் இவர் பல ஆலயங்களுக்குத் திருவூஞ்சல், திருப்பள்ளியெழுச்சி, அட்டகம், கீர்த்தனை போன்றவற்றையும் பாடியுள்ளார்.ஆலயங்களில் திருமுறை ஓதுதலோடு பல சமய நிறுவனங்களில் இணைந்து நல்ல பல சமூகப் பணிகளையும் ஆற்றி வருகின்றார்.

எமது பொன்னாலை வரதராஜப் பெருமான் மீதும் இரு திருப்புகழ் பாடியுள்ளார். அப்பாடலிலே ஆலயத்திலுள்ள மூர்த்தங்கள். பெருமானின் பராக்கிரமங்கள், வேண்டுகோள்கள், வரலாறு போன்றவற்றை இணைத்து யாத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

"கருணையது வாரு லக்மி கவினொடமர் ராம லக்வன்
கனியுமன வாயு புத்ர — னவரோடே" என்று மூர்த்தங்களையும்
"பொருதவரு மாவ ரக்கன் யமனுலகு சேரு தற்கு

பெருகணைய தேவிடுத்த — நெடியோனே'' என்று பராக்கிரமத்தையும்

திகழுமுன நாமம் நித்தம் புகலமற வீன னுக்கும்

திருநிறையு வாழ்வ ளித்து — புவியாள்வாய்'' என்று வேண்டுகோளையும்

அரசென அமரு பூனைக் கணரவர் வருமு னாக

அழகுறு பதிபொன் னாலை — நகர்நாடி'' என்று வரலாற்றையும் பாடியிருப்பது வெகுவாக நயக்கத் தக்கதாகும்.

மணிவிழா நாயகர் மாண்புரை ''குகப்பிரசாதம்''நூலும்,விழா வெளியீடாக ''தெய்வப் புகழிசைத் தேனமுதம்'' மலரும் மலரஇருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. சைவ சமயத்திற்குப் பெரும் பொக்கிஷமாகத் திகழப்போகும் ''தெய்வப் புகழிசைத் தேனமுதம்''போல் இன்னும் பல நூல்களைக் கவிஞர் இயற்றவும்,தனது துணைவி யாரோடு பேரொடும், புகழொடும் வாழவும் வாழ்த்தி, பொன்னாலை வரதராஜப் பெருமாளை வணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

சுபமஸ்து

**ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ**

**வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் க.ச.சோமஸ்கந்தக் குருக்கள்**
**பொன்னாலை பிரதம குரு**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

பல்லவி

அருள்சொரியும் அன்னை பாதம் - நாளும்
பெருந்தவ முனிவரும் போற்றும் பொற்பாதம்

அநுபல்லவி

குருபூசை மடமொன்று குரவர்கட் கமைத்துப்
பெருமைபெறு நாயன்மார் கட்டிருந்து

சரணம்

அன்னமெமக் கருளும் அன்ன பூரணியே
மின்னுமிடை யழகி ஆனந்த பைரவி
கன்னிமகேஸ்வரி காளி லிங்கேஸ்வரி
உன்னிஉளமுருகும் உத்தமர்க்குப் பேய்ச்சி (அருள்)

சிவமயம்

# சாதனை நாயகர் சகத்தினில் இனிதுவாழி



சைவ பாரம்பரியத்தை தன் இறுதி மூச்சுவரை பேணி வாழ்ந்த திருவாளர் இராசையாவுக்கும் அவர்தம் மனையாள் தங்கலட்சுமி அவர்களுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தவர்தான் "தெய்வத்தமிழிசைக் கவிஞர்"என்று அன்பாக அழைக்கப்பெறும் திரு இ.குகதாசன் அவர்கள்.சிலர் பிறந்த மண்ணால் பெருமையுறுவர்.சிலரால் மண்பெருமையுறும்.அந்த வகையில் இவர்பிறந்த மண் இவரால் பெருமையும்,புளகாங்கிதமும் அடைந்து நிற்கின்றதென்றால் மிகையாகாது.

சைவத்தையும், தமிழையும் இரு கண்ணாகப் போற்றி வருபவர்.நாயன் மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி(பேய்ச்சி) அம்பாள்மேல் அபார பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர். இதன் காரணமாக இந்த ஆலயத்திற்கென தனது உள்ளத்தில் உதித்த தமிழ் வார்த்தைகளுக்கு சந்தம் கொடுத்து அதற்கு இசை கொடுத்து இனிமையான குரல் கொடுத்து அன்னையின் அருட்பாமாலையை நாயன்மார்கட்டின் மறைந்தும் மறையாது புகழோடு போற்றப்பட்டுக் கொண்டிருக்கும் "சொக்கன்"என்று எல்லோராலும் பேசப்படுகின்ற திருவாளர் சொக்கலிங்கம் அவர்களின் தலைமையில் ஆலய முன்றலில் அரங்கேற்றிய காட்சி இன்றும் எம் கண்முன்னே நிழலாக காட்சி கொடுக்கின்றது.

மறைந்த மகான் முன்னாள்மாவை ஆதீன கர்த்தரின் அருளாணை ஏற்று எம் திருநாட்டிலுள்ள பல்வேறு இறை மூர்த்தங்களின் மேலும் அருணகிரி பாடிய சந்தக்கவிபோல அறுநூறு பாடல்கள் பாடியிருப்பது ஒருவரும் இதுவரைமுயற்சிக்காத சாதனை என்பதே அறிஞர்களின் முடிவாகும்.இச்சாதனை நாயகர் எம் அன்னையைப் போற்றியும் சந்தக்கவி பாடியுள்ளார்.

அன்னை தேரேறி வரும் திருக்காட்சியை வர்ணிக்க முற்படும் கவிஞர்
"அழிசெவ் வாடையே சூடி அணிபொன் மாலை யேயாட
அடியர் தோளின் மீதேறிச் - சதிராடி" என்றும்
தேவலோகத்திலிருந்து வரும் கந்தர்வர் மாலை சூடும் காட்சியை

வியந்து

"உருகி தேவ ரேநாடி தருநன் மாலை தோள்சூடி
உலவு தேரின் மீதேறி - வலம்வந்தே" என்றும்

அன்னை பச்சை சாத்தி பன்னீர் மழையில் நனைந்து வரும் காட்சியிற் திளைத்து

"ஒளிரு மேனி மீதேநற் பசுமை யாடை யேசாற்றி
நறும்பன் னீரி லேயாடி - வருதாயே" என்றும்

பாடியது வியக்கத்தக்கது.

மணிவிழா மங்கலம் காணும் இத் தம்பதியர் இறையருளாற் பெருவாழ்விற் திளைக்கவும், மணிவிழா வெளியீடாக வரும் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" நூல் செழிக்கவும், மணிவிழா நாயகர் மாண்பினை "குகப்பிரசாதம்" உரைக்கவும் அன்னை பேய்ச்சியின் பரிபூரண கிருபாகடாட்சம் கிடைக்கவும் வேண்டிப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி(பேய்ச்சி)அம்பாள் ஆலயம் நாயன்மார்கட்டு.**

**சிவஸ்ரீ.சதா.மகேஸ்வரக்குருக்கள்
பிரதமகுரு**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

பல்லவி

மரகதப் பூந்தண்டிகையில் மாட்சியொடு காட்சி தந்து
வரந்தனை எமக்கருள்வாள் வடிவழ காம்பிகே

அநுபல்லவி

தேசமெல்லாம் புகழ்ந்து ஏத்திடுஞ் திருச்செல்வி
பாசவினை யறுத்துப் பக்தரைக் காத்திடவே

சரணம்

நன்மணிநாதம் முழங்கி நல்லிசை ஒலிக்க
பொன்மணி தரித்தழகுக் கமலமுகம் ஜொலிக்க
தன்விழி மலர்பொங்கும் கருணையிற் குளிக்க
இன்முகம மலர்ந்தடியார் இதயங்கள் களிக்க (மரகத)

# போற்றி போற்றி ஷண்முகப் பிரசாதம் போற்றி



வரலாற்றுச் சிறப்புமிக்க நாயன்மார்கட்டுக் கிராமத்தை பிறப்பிடமாகக்கொண்ட திருவாளர் இராசையா குகதாசன் அவர்கள் எமது கிராமமாகிய நாயன்மார்கட்டை மிகவும் பெருமையடையச் செய்தவர் ஆவார்.பல திருமுறை ஒலிப்பேழைகளையும், இறுவட்டுக்களையும் மட்டுமல்ல [illegible]ன பேய்ச்சியின் மேல் அருட்பாமாலை பாடி அதையும் இறுவட்டாக வெளியிட்டவர்.

கருவிலேயே கவிபாடும்திரு கைகூடப்பெற்ற இக்கவிஞர் எத்தனையோ ஆலயங்களுக்குத் திருவூஞ்சல் ஆக்கித் தரும்படி நாம் கேட்ட போதெல்லாம் மிகக்குறுகிய காலத்தில் அப்பாடல்களை யாத்துத் தந்ததும், அந்த ஊஞ்சற் பாடல்களை இவரைக்கொண்டே பாடுவித்து நாம் மகிழ்ந்தும்,பாராட்டியும் இவரின் சமயப் பற்றை ,தமிழ்ப் பற்றை உளமார நினைத்து மகிழ்வதுண்டு.

கீரிமலை நகுலேஸ்வரம் உட்பட பலஆல்யங்களுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியுள்ள கவிஞர் எமது அரசடிப் பிள்ளையார் மீதும் "போற்றி முற்பூசைகள் புரிபவர் இடர்அற"என ஆரம்பிக்கும் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களை யாத்துத் தந்துள்ளார்.இப்பாடல்களைப் படித்து குறிப்பாக

"கதிரவன் ஒளிவந்துன் கருவறை விழுமே
கதியெனத் தொழுபவர் கழுபிணி அறுமே" என்ற

வரிகளில் வரும் காட்சியையும்,கானத்தையும் கருத்தையும் பாராட்டி அன்றைய திருப்போரூர் ஆதீன குருமகா சந்நிதானத்தின் இளைய பட்டம் கலாநிதி குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கவிஞர் பெருமானைத் தான் பாராட்டவேண்டுமென்று எமது சந்நிதானம் அழைத்துப் பொன்னாடை மாலை சூட்டி மகிழ்ந்தார்கள். இவர்பாடிய அப்பாடல்கள் அச்சேற்றம்பெற்று இன்றும் திருவெம்பா காலத்தில் தினமும் அதிகாலையில்

எங்களால் ஓதப்பெற்று வருவது குறிப்பிடத்தக்தாகும்.

இவரின் பக்திரசம் கலந்த தமிழ்ப் பாடல்களைத் தாமும் கேட்க நினைத்த தமிழ்க் கடவுளாம் கலியுக வரதன் கந்தப்பெருமான் "மாவை" ஆதீனகர்த்தாவின் மனதில் புகுந்து இலங்கையில் உள்ள அனைத்து ஆலயங்களின் கீர்த்திகளைத் "திருப்புகழ் வடிவில் பாடுக" என்று அருளாணை வழங்க, ஆலயங்களின் விபரங்களை எங்ஙனம் தேடுவேன் என்று அன்பர் ஏங்க, அத்தகவல்களை இறையருளால் அவரடியாரால் அவர்கையிற் கிடைக்கவைத்து இறைவன் காட்டிய திருக்குறிப்பை உள்ளுணர்ந்து விளங்கப்பெற்று இலங்கையில் இருக்கின்ற ஐநூற்றி அறுபது தலங்கள் மீது அறுநூறு திருப்புகழைப் பாடும் பணி நிறைவடைந்துள்ளது. இது எம்மால் இயலுமான செயலா? இல்லை இ∴து இறையருள் பெற்ற அன்பர், கந்தன் திருவடிக்கே அடிமையாக உள்ள குகதாசனால் தான் முடிந்தது.

எமது அரசடி விநாயகர் மேலும் மூன்று திருப்புகழ் பாடியுள்ளார்.

"குடியொடு குலமும் கொடிவழி யுறவும்
குவலய முயர - அருள்வோனே" எனபுகழ்ந்தவர்

பின் "குரைகழ லிணையில் துயில்வு னருளை
கொடுமைய னிவனும் - பெறுவேனோ? என

கதறுகிறார்.

"திக்கிலை யெனஅழு பக்தரின் குறைகளை
செப்பம தடையவை - திருவோனே என்றும்

"இத்தரை யுனதடி பித்தொடு தொழுபவ
ரிச்சைகள் நிறைவுற - அருளாழி என்றும்

புகழ்ந்தவர்

"முற்பவ வினையது கற்பக னெனவவை
முற்றற வுனதருள் - தருவாயே என்றும்

வேண்டுகிறார்.

இன்னவாறு பாடல்கள் தோத்திர முறைப்படி அமைவுற்றிருப்பது பாரட்டுக்குரியதே.

தென்னிந்திய திருக்கடையூர் அபிராமியம்மை உடனுறை அமிர்தகடேஸ்வரர் சன்னிதானத்தில் சஷ்டியப்த பூர்த்தி விழாக்கண்ட இராசையா குகதாசன், குகதாசன் புவனேஸ்வரி தம்பதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பெறுகின்ற மணிவிழாவின் நினைவாக அதிவணக்கத்திற்குரிய பெரியார் கலாநிதி க.வைத்தீஸ் வரக் குருக்கள் ஐயாவினதும், முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயாவினதும் அருட்கட்டளையோடும், நல்லாசியோடும் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்ற நூல் "ஷண்முகப் பிரசாதமாக" எல்லோருடைய கைகளிலும் கிடைக்கப் பெறுகின்றது. இஃது எங்கள் பாக்கிய மாகும்

இராசையா குகதாசன் தம்பதிகளின் மணிவிழா சிறக்கவும் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"சிறந்த முறையில் வெளிவரவும், தெய்வத் திருப்புகழ் தந்த "அருணகிரிநாதர்" கலியுகத்தில் எம்மண்ணில் பிறந்து எம்குல தெய்வமான அரசடி விநாயகர் மேலும் திருப்புகழ் பாடினார் என்று மனம் புளகாங்கிதம் அடைந்து இறையருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும் என்று பிரார்த்தித்து "ஷண்முகப் பிரசாதத்தை" போற்றி வணங்கி நிற்கின்றோம்.

**அரசடிப் பிள்ளையார் ஆலயம்** **சிவஸ்ரீ.சதா.மகாலிங்கசிவக் குருக்கள்**
**நாயன்மார்கட்டு** **பிரதமகுரு**

## கவிஞரின் அரசடி விநாயகர் கீர்த்தனை மாலையிலிருந்து

பல்லவி

அரசடிப் பதிவாழும் ஆனைமுகனே --இந்த --எமக்கு
இருள்நிலத் தருள்வாரி ஈந்திடவே எழுந்து

அனு பல்லவி

உமைசிவன் புதல்வோனே ஊரெங்கும் இருப்போனே
எலிமிசை அழகோடு ஏறிவந் தருள்வோனே

சரணம்

ஐங்கரத் தோடிருந்து அருளினை வாரவரும்
ஒற்றைநல் மருப்போனே ஓங்கார வடிவினனே
ஔவைசொல் அகவலிலே அகமகிழ்ந்தே தூக்கி
சங்கரன் பதஞ்சேர்த்த சாரங்கன் மருகோனே.

சிந்தைவை யடியார்க்கு சீரெல்லாம் தரும்தேவே
சுந்தர வடிவோனே சூழிடர் களைவோனே
செந்தமி ழிசைபாடி சேவிக்க அருளீசா
சைவமாக் குருமணிகள் சொக்கிடும் கழலோனே.



உ

சிவமயம்

யா/நாயன்மார்கட்டு

ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தானம்

J/NAYANMARKADDU

SRI VEGILUGANTHA VINAYAGAR THEVASTHANAM

Chemmani Road,
Nallur.
Jaffna.

செம்மணி வீதி.
நல்லூர். யாழ்ப்பாணம்.

29.08.2014.

## பாமாலை சூடிய நாயகனுக்கு பரம்பொருளின் அருளாசிகள்



இறைவனைப்
பூக்களால் வழிபடுவோர் ஒருவிதம்
பாக்களால் வழிபடுவோர் புதுவிதம்

பூமாலை சூட்டி வழிபடுவதுபோல்
பாமாலை சூட்டி வழிபடுவதும்
ஒருமகத்தான கைங்கரியமாகும்.

வாடா மலர் கொண்டு
வண்ணத்தமிழ் மலரால் எண்ண இனிக்கும்
இன்சுவைப் பாக்களால் இறைவனை
யாசித்திருக்கிறார் இப்புலவர்.

எமது வெயிலுகந்த விநாயகரை
துங்க நன்மு கம்ம லர்ந்து அங்க வர்வி ரும்பு கின்ற
திந்த நன்றி லம்வ ளங்கும் - அருளாழி என்று
புகழ்ந்தவர், பின்
நம்பி யின்பு தல்வி தன்னை தம்பி யர்ம ணந்து கொள்ள
நன்வ னம்அ ணைந்த தும்பி - முகவோனே என்று
விநாயகப் பெருமானின் பராக்கிரமத்தை உரைக்கிறார் பின்னர்

நந்து யர்வ டிந்து வென்றும் இன்பி னில்வி ளங்க வுந்தன்
நன்ம னம்இ ரங்கி யென்றும் - அருளாயோ?

என்று தன் வேண்டுதலையும் முன்வைக்கிறார்.

இவ்வாறு பாடும் கவிஞர் இராசையா குகதாசன் அவர்கள் குகனுக்கு மட்டும் தாசனல்ல அப்பன் விநாயகனுக்கும் தாசன்தான். ஆலயங்கள்

பலவற்றிலும் உறையும் ஆண்டவர் பதம் பணிந்து பாடிய இப்பாமாலையில் ஈழ நல்லூர் பதியுறையும் இன்முகக் கடவுள் ஐங்கரனாம் ஸ்ரீ வெயிலுகந்த பிள்ளையாருக்கும் இடம் கொடுத்திருக்கின்றார். அந்த வகையில் எல்லாம் வல்ல ஸ்ரீ வெயிலுகந்த விநாயகப் பெருமானின் இன்னருள் பெற்று, இவரது இறை சேவை மேலும் சிறக்க இம் மணிவிழாநாளில் மனமுவந்து வாழ்த்துகிறேன்.

**ஸ்ரீ.வெயிலுகந்த பிள்ளையார்**
**தேவஸ்தானம்**
**நாயன்மார்கட்டு**

**சிவஸ்ரீ சிவஞானசுந்தர ஐயர்**
**ஜதீஸ்வரக் குருக்கள்**
**ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும்.**

## கவிஞரின் வெய்யில்உகந்த விநாயகர் கீர்த்தனை மாலையிலிருந்து

பல்லவி

வெற்றியைத் தருபவனே வெயிலுகந்த விநாயகனே
பற்றிய பவவினைகள் பாறிடச் செய்பவனே

அநுபல்லவி

கொற்றவன் சங்கிலியன் தருகோவிலில் அமர்பதியே
கொற்றவை சக்தியவள் கொஞ்சி மகிழ்ந்திடும் கணபதியே

சரணம்

நற்கலை வடிவினனே நாத சொரூபனனே
கற்பக மெனவினைகள் கடிதேகிடச் செய்பவனே
அற்புதம் பலவு மீந்தே ஆனந்தம் தருபவனே
பொற்புறு பதமலரை பூசிக்க அருள்பவனே

நெஞ்சுள ஆசையெல்லாம் நிறைவேற்றுவதுன் பொறுப்பே
கெஞ்சிடும் ஏழையவன் மீதினில் ஏன்வெறுப்பே
தஞ்சமெனத் தொழுவார் நெஞ்சமதுன் இருப்பே
அஞ்சலென் றணைத்தருளை அள்ளித் தருவது உன்விருப்பே

சீ.வீ.கே. சிவஞானம்
සී. වී. කේ. සිවඥානම්
C.V.K. Sivagnanam
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
සභාපති, උතුරු පළාත් සභාව
Chairman, Northern Provincial Council

# நீடுலகில் இவர்புகழ் நீடித்து நிலைக்கும்



அன்பரும், நண்பரும், அயலவருமான இராசையா குகதாசன் அவர்கள் ஆழ்ந்த சமயப்பற்று மிக்கவர். சைவமும், தமிழும் தழைத்தோங்க அளவிலாப்பணி செய்து வருபவர்.

வாக்கும் வாழ்வும் ஒன்றானவர். பேரறிஞர்களின் கூட்டினாலே சைவநெறிமுறை வழுவாது வாழ்வதே தன் பேச்சும் மூச்சுமாகக் கொண்டவர்.சொக்கன், வீரமணி ஐயா போன்றவர்களின் வழிகாட்டலிலும் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம், கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள் போன்றோர் வழங்கும் ஊக்கத்திலும் மிகச்சிறந்த கவிஞராகத் திகழ்பவர்.

இற்றைக்கு பதின்நான்கு வருடங்களுக்கு முன்பாக என்று நினைக்கின் றேன் நான் ஆசிரியராக இருந்த முரசொலி பத்திரிகையில் உற்சவ காலக்கவிதைகள் பகுதியில் இவர் இயற்றியதும், பின்னாளில் "அம்பாள் இசைமாலை"யாக இறுவட்டில் வந்து மிகப் பிரபலமானதுமான கீர்த்தனை மாலைப்பாடல்கள் தொடராக வெளிவந்தது இங்கே நினைவு கூரத்தக்க தாகும்.

இவரது கவிதைகள் கருத்தாளம் மிக்கவை. சொல்நயம்,இலக்கியநயம், கொண்டவை.மரபு தழுவியவை. தனது நீண்டகால அநுபவத்தினூடாகப் பெறப்பட்ட அறிவினாலும், ஞான உணர்வினாலும் இவர் வடித்த திருப்புகழ்ப் பாணிக் கவிதைகள் அந்த அருணகிரியாரையே நினைவு படுத்துபவை.எமது குலதெய்வமான சந்திர சேகரப் பிள்ளையார் மேற்பாடிய திருப்புகழில், அகத்தியர் கமண்டலத்தில் இருந்து காவிரி பிறந்த செய்தியும், அரவுருவடைந்து ஆலின் கீழிருந்துலைந்த மாலின் துயர் தீர அருளிய செய்தியும் பொருத்தமாக அமைந்துள்ளது.

"அன்றொரு மாமுனி கொண்டிரு சாடியு
ளொன்றிடு காவிரி - தருவோனே" என்றும்

செங்கண ணாருறு பங்கம தேகிட
தங்கணி னாலருள் - புரிதேவே" என்றும்
செந்திரு வாயசெட கல்வியங் காடுறை
சந்திர சேகரப் - பிள்ளை...யாரே. என்றும் உருகிப்
பாடுகிறார்.

அயலிலுள்ள சட்டநாதரைப் பாடும்போது வரலாறுகள், அமைவிடங்கள் துலங்கப் பின்வருமாறு பாடுகின்றார்.

"அரசதில்வ டக்க தாக அமையமு ... கிட்ட வாக
அரனெனவ மைத்த கோவி - லதைநாடி
அகமுளகி டைக்கு மாறு அருளவரு சட்ட நாத
னெனஅடியர் செப்ப வாழு - சிவனாரே" என்றும்

கவினுறவெ ழுந்த யாழி லரசுதர வந்த கூழங்
கையரளி நல்லை நாத - னெனவோத
கழனிநிறை நல்லை மேவி கனியமுது நல்லை நாய
கியனொடுமி ருந்து - -பரமேசா!"
என்றும் பாடிப்பரவிபணிகின்றார்.

அர்ச்சனை பாட்டேயாகும் என்ற ஆண்டவன் மொழிக்கமைய பொய்மை யாளரைப் பாடாது எமது சந்திரசேகரப் பிள்ளையார் உட்பட பல ஆலயங்களுக்குத் திருவூஞ்சல்கள், திருப்பள்ளி எழுச்சிகள், கீர்த்தனைகள், திருவுடல் போன்றவற்றையும் வடித்துள்ளார். திருவூஞ்சல்களில் வழமையான காப்பு, நூல், வாழி, எச்சரீக்கை, பராக்கு, லாலி, மங்களம் ஆகியவற்றை விட தனது முத்திரையாக கப்பற்பாட்டு வடிவை அந்தந்தத் தலங்களுக் கேற்றவாறும் நடைஎய மாற்றிப் பாடக்கூடியவாறும் அமைப்பது இக்கவிஞரின் தனிச்சிறப்பாகும். சமயக்காவலர் நாவலரின் திருச்சரிதையை "நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை"என்ற தலைப்பில் பெருங் காப்பியமாகவும் இயற்றி வருகின்றார்.

தற்போது இலங்கைத்திரு நாட்டின் அனைத்து இந்துக்கோவில்கள் மீதும் திருப்புகழ் பாடும் பெரும் முயற்சியில் அறுநூறு திருப்புகழை யாத்துள்ளார். பக்திக்கு முக்கியத்துவம் கொடுத்துப் புகழிசை பாடிவரும் இவர்புகழ் நீடுலகில் நீள நினைக்கப் பெறுவதோடு, சைவ உலகமும்

பெருமையடையும் என்பது திண்ணமாகும்.

அகவை அறுபது நிறைவடைந்து மணிவிழாக் காணும் குகதாசன் புவனேஸ்வரி தம்பதிகளின் மணிவிழா சிறப்புறவும், மணிவிழா நாயகரின் மாண்புரை "குகப்பிரசாதம்" மலரும், மணிவிழா வெளியீடான "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" நூலும் மலர்ந்து எல்லோர் நாவிலும் தித்திக்கத் தித்திக்கத் தவளவும் இறையருளை பரிபூரணமாக வேண்டி வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**வடக்கு மாகாணசபை**
**கைதடி,யாழ்ப்பாணம்.**

**சீ.வீ.கே.சிவஞானம்**
**அவைத்தலைவர்**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம் : ஜோன்புரி

தாளம் : ஆதி

பல்லவி

அம்மையவள் அமர்ந்து வந்தாள் அழகான தேரினிலே
அடியவர்க்கு அருள் பொழிய ஆர்வமுடன் நேரினிலே

அநுபல்லவி

இம்மையிலும் மறுமையிலும் இன்பவாழ் வளித்திடவே
நம்மையென்றும் காத்து நின்று நற்கதியைத் தந்திடவே

சரணம்

பக்தியுடன் வடம்பிடித்துச் செந்தமிழ்ப்பா மலர்தொடுத்து
சக்தியுந்தன் பதம்பிடித்துத் தொழுமடியார் கரமெடுத்து
சித்திமிக்க வாழ்வருள சிறப்புடனே வீற்றிருந்து
வித்தகியாம் பேச்சியம்மை விளங்குபுகழ் காட்சிதந்து
(அம்மை)

# பரம்பொருளின் பெரும்புகழை பழந்தமிழில் பாடவல்லார்

அன்பர் இராசையா குகதாசன் அவர்கள் நமது அயலூரைச் சேர்ந்தவர். தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமையும், இந்து மதத்தின்பால் அதீத நம்பிக்கையும், சிறந்த பக்தியும் கொண்டவர். பண்டிதர் கால பழைய பாடல்கள், தேவார பாமாலைகள் போல செழுந்தமிழில் பாடல்களைப் பாடிடும் வல்லமை யுள்ளவர். அவர் சாதாரண மாகவே தம்மைக் கவர்ந்த, விரும்புகின்ற கடவுள்கள், பிரமுகர்கள் மேல் கவிமாலை சூடும் கவித்துவம் கொண்டவர்.அதுவும் திருப்புகழ் வடிவில் சந்தக்கவி பாடும் திறமை மிக்கவர். இத்திறமைதான் அவரை இன்று இந்த நிலைக்கு அதாவது இலங்கையில் உள்ள திருத்தலங்கள் மீது அறுநூறு திருப்புகழ்களைப்பாடி ஷண்முகப்பிரசாதமாக நூலுருவில் கொணர்வதற்கு உயர்த்தியுள்ளது.

இத் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்ற நூலிலே எனது குடும்ப தெய்வமாகிய அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகரைப் புகழ்ந்தும் இரு திருப்புகழ்கள் பாடப்பெற்றிருப்பது மிக மிகப் பாரட்டுதற்குரிய தாகும்.

தமிழ் மொழிப் புலமையும், சைவ மதத்தின் மீது பற்றும், திருப்புகழைப் பாடுகின்ற அளவிற்கு மொழித் தேர்ச்சியும் உடையவர்கள் அரிதாகி மிகக் குறைந்தளவினரே உள். அவர்களுள்ளும் பலநூற்றுக் கணக்கான பாடல் களைப்பாடி அதனை நூலாக்கி வெளியிட்டு வைக்கின்ற அளவுக்கான துணிவும், மனப்பக்குவமும் நண்பர், புலவர் திரு.இராசையா குகதாசன் போன்ற ஒருசிலருக்கே உண்டு.

மணிவிழாக் காணும் மாண்புடைக் கவிஞர் மணிவிழா சிறக்கவும், அருட்புகழ் பாடும் அவரது புலமை, அறிவு மேன்மேலும் விரிந்து வளர்ந்திடவும், அவரின் இத் தெய்வீகப்பணி மேலும், மேலும் செழித்திடவும் எனது வாழ்த்துக்கள்.

ஆனந்தன்வடலி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

செல்லையா பத்மநாதன்
யாழ்ப்பாணம்,வவுனியா
ஓய்வுநிலை அரசாங்க அதிபர்

உ
சிவமயம்

# வாழ்த்துரை
## பாடும்பணியை பார்செய்வித்தகர்



ஆதியும் அந்தமும் இல்லாத இந்து மதமானது நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஓதுவார்கள் போன்றோரின் பாடல்களினால் இன்றும் அழியாப் புகழுடன் உலகெங்கும் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆலயங்கள், மதவிழாக்கள், பாடசாலைகள் என எல்லா இடங்களிலும் இறைவனைப் போற்றிப்பாடும் பாடல்கள் இன்று எம் மத்தியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் சைவத்தை வளர்த்தெடுத்த நல்லைநகர் நாவலர் பெருமான் வாழ்ந்த நல்லூர் பிரதேசத்திற்கு அண்மித்த நாயன்மார்கட்டு கிராமத்தில் சைவப்பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்த திருவாளர் இராசையா குகதாசன் அவர்கள் இறைவனைப்பாடும் பணியைச் செய்துவரும் நல்லதொரு கவிஞராவார். இவர் புராணபடன வித்தகராகவும், இறைவன்மேல் எண்ணற்ற கீர்த்தனைகள், திருவூஞ்சல் பாடல்கள், பல ஆலயங்களின் மூர்த்திகளுக்குத் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள் ஆகியவற்றை உருவாக்கியவராகவும் திகழ்கின்றார்.

இவைதவிர இவர் சமயக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளதோடு சைவ பரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் போன்ற சமய நிறுவனங்களில் அங்கம் வகித்துச் சேவையாற்றியுமுள்ளார்.இவரது சைவ சமயப் பணியின் தொடர்ச்சியாக தற்போது இலங்கை முழுவதிலுமுள்ள ஆலயங்களில் வீற்றிருக்கும் தெய்வங்களின் புகழைப் பாடும் முயற்சியின் ஒருபகுதியாக ஐநூற்றி அறுபது திருத்தலங்கள் மீது அறுநூறு திருப்புகழ் வடிவிலான பாக்களை பாடியுள்ளார்.

இப்பாக்களை திரு.இ.குகதாசன் அவர்களின் மணிவிழா நாளில் நூல்வடிவில் "தெய்வப் புகழிசைத் தேன்முதம்" என்ற பெயருடன் ஷண்முகப்பிரசாதமாக வெளியிட இருப்பது மிகவும் சாலச்சிறந்த செயலாகும். எனவே திரு.இ.குகதாசன் அவர்களது மணிவிழா நாளில் அவரது சமயப்பணி தொடர்ந்தும் நடைபெற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை மனதார வேண்டி, திரு.இ.குகதாசன் அவர்கள் சீரும்

சிறப்பும் பெற்று நீடூழி காலம்வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற வேண்டுமென அவரை வாழ்த்துகிறேன்.

**நல்லூர்** **பா.செந்தில்நந்தனன்**
**யாழ்ப்பாணம்** **பிரதேச செயலர்.**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம்:ரேவதி பல்லவி தாளம்:ஆதி

சங்கடந் தீர்த்தெனையாள் சாம்பவி
மங்கள வாழ்வருளும் மாகருணாகரி

அநுபல்லவி

பொங்கர வாடநடம் புரிந்திடு நர்த்தகி
எங்களை யாதரித் தருளிடும் நந்தினி

சரணம்

மூவர்க்கும் முதலாகி முத்தொழில் புரிதேவி
தேவர்க்கும் எட்டாத துர்க்கா துரந்தரி
யாவர்க்கும் அருளிடும் யாமினி யாழினி
பாவுக்குப் பொருளான பார்வதி மாதவி

(சங்கடம்)

இராகம்:சுருட்டி பல்லவி தாளம்: ஆதி

சௌபாக்ய மருள்வாயே சௌந்தரி
பௌவியமாய்த் தொழவே பரிந்தருள் பகவதி

அநுபல்லவி

கௌமாரி மகமாயி காளிமகா மாரி
ஔவைக் கருள்அழகன் அன்னையே மாதங்கி

சரணம்

பூரணி புராதனி புங்கவி சங்கவி
நாரணி நர்த்தகி நடமிடு வித்தகி
தாரணி நாயன்மார் கட்டுரா ஜேஸ்வரி
காரணி திரிசூலி கதியென நம்பினேன்

(சௌபாக்யம்)

உ

சிவமயம்

# வாழ்த்துரை

## சந்தத் திருப்புகழைச் சாற்றுவதிற் சமர்த்தர்



சந்தம் நிறை சமயப் பாசுரங்களை ஆக்குவதிற் சமர்த்தரான கவிஞர் இராசையா குகதாசன் அவர்களின் மணிவிழா வெளியீடாக "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்ற நூல் ஷண்முகப்பிரசாதமாக பிரசவமாவது பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. பண்டு தொட்டு சமய இலக்கியங்கள் சமூகப் பிறழ்வுகளைச் சீர்திருத்தி வரும் நிலையில் ஈழத்தின் புகழ்பூத்த ஆலயப் பெருமைகளைத் தாங்கி வெளிவருகின்ற இத்திருப்புகழ்ப் பாமாலை சமய ஞானத்தைப் பெருக்கி நல்வாழ்வுக்கு வழிகாட்டும் ஓர் கலங்கரை விளக்காகத் திகழவேண்டும் என்பதே நல்லோரின் எதிர்பார்ப்பாகும்.

இளமை தொட்டே தமிழிலக்கியங்களிலும் சமய அனுட்டானங்களிலும் அதீத ஈடுபாடுடைய திருவாளர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்கள் சஷ்டி யப்தபூர்த்தியினை எய்தியிருக்கும் சுப வேளையில் சந்தம் நிறை திருப்புகழால் இறைவனைப் பாடியிருப்பது மிகவும் போற்றுதற் குரியதே.

பரம்பொருளின் பெரும்புகழைப்பாடும் இப்பணி இடையறாது தொடர்ந்து மேன்மேலும் வளரவும், ஈழமண்டலத்திலுள்ள ஆலயச் சிறப்புக் களையெல்லாம் பாசுரமாக்கி வெளியிட வேண்டும் என்ற இவரது எண்ணம் பலிதமாகவும், இவர்பாடியளித்த அருட்புகழ்ப்பாக்கள் யாவும் காலத்தால் அழியாது நீடுலகில் என்றும் நிலைத்து நின்று நிலைபேறெய்தவும், இவற்றைப் மனமுருகப் பாடி ஆராதிப்போர்க்கு, இறையருளைக் காண வழிகாட்டும், போதிக்கும் அருமருந்தாக அமையவும், திருவளர்நிறை "தெய்வத்தமிழிசைக் கவிஞர்" இராசையா குகதாசன் அவர்கள் மீண்டுமொரு மணி விழாக்காணும் "பிரமாயுள்"காலம் வரை வாழ்ந்து இறைபுகழ் பாடவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.தமிழ்மாறன்**
**கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர்**

**பிரதேச செயலகம்,**
**நல்லூர்.**



திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்
திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறைப் பயிற்சி மையம்
கொழும்பு.

**Thiruvavaduthurai Adheenam**
**Saivathirumurai Training Centre**
**Colombo.**

இயக்குனர் - சைவப்புலவர் செ. நவநீதகுமார்
Director - Saivappulavar C. Navaneethakumar



## திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்
## திருவாவடுதுறை
## ஆதீன சைவத்திருமுறைப்பயிற்சிமையம்
## கொழும்பு.

## சிவப்பணிபலவாற்றி செகத்துயர்ந்துவாழி

கருநட்ட கண்டனை அண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதில் எய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச் சிற்றம்பலத்தை
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே.

—திருநாவுக்கரசுவாமிகள் -

நாடறிந்த நற்றமிழ்க்கவிஞர் இராசையா குகதாசன் அவர்கள் மரபுக் கவிதைகள் மறைந்தும்,மறக்கப்பட்டும் வரும்இக்காலத்தில் இலக்கணவழு வின்றி கவிதைகளை ஆக்கும்பணிகளை பலரும் பாராட்டச் செய்து வருகின்றார்.

"எங்கைஉனக்கல்லால் எப்பணியும் செய்யற்க" என்கிறார் மணிவாசகர். "பொய்மையாளரைப்பாடாதே எந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்"என்கிறார் சுந்தரர். வாசகரதும், சுந்தரதும் வார்த்தைக்கு அமைய இறைவனை, அவன் புகழை பாடும் தவப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளார்.

எமது இலங்கைத்திருநாட்டிலுள்ள திருத்தலங்கள் தோறுமிருந்து அருளாட்சிபுரிந்துவரும் மூர்த்திகளின் கீர்த்திபற்றி சந்தக்கவி பாடும் பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளார்.அந்தவகையிலே ஐநூற்றிஅறுபது திருத்தலங்களின் சீர்த்திபற்றி அறுநூறுபுகழிசைப்பாடல்களை யாத்துள்ளார். இதுமாத்திரமின்றி திருப்பள்ளி எழுச்சி, திருவூஞ்சல், திருவூடல்

போன்றவற்றோடு எமதுசைவத்தின் விடிவெள்ளியாய்த்தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது திருச்சரிதத்தை "நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை"என்ற தலைப்பிலே காப்பியமாகவும் பாடியுள்ளார்.

குருவருளும்,திருவருளும் துணைநிற்க திருமுறைகள்,புராணங்கள் முதலியவற்றை படித்ததின் மூலமாகப்பெற்ற ஞானத்தால் பொருட்சிறப்பு மிக்கதான செய்யுள்களை இயற்றியுள்ளார்.கவிதை புனைவது மாத்திரமின்றி யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை,கந்தர்மடம் வேதாந்தமடம் போன்றசைவ அமைப்புகளூடாக பல சமய,சமூகப்பணிகளையும்சிறப்புற ஆற்றிவருகின்றார்.

மாண்புடைக்கவிஞரின் மணிவிழா சிறக்கவும்,ஷண்முகப்பிரசாதமாக வெளிவரும் "தெய்வத்தமிழிசைத்தேனமுதம்"நூல் இறைபுகழ் பரப்பவும், கவிஞர்நலம்பலபெற்றுப் பல்லாண்டு,பல்லாண்டு வாழ்ந்து பலப்பல தலங் களின் இறைபுகழ்பாடும் சிவப்பணியாற்றவும் வாழ்த்துவதோடு அப்பெரும் பணி நிறைவுற திருக்கயிலாதநாதன் திருவருள்வேண்டியும் பிரார்த்திக்கின்றேன்.

**திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்**
**திருவாவடுதுறை ஆதீன**
**சைவத்திருமுறைப்பயிற்சிமையம்,கொழும்பு**

**சைவப்புலவர்**
**ச.நவநீதகுமார்**
**இயக்குநர்**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம்:சிந்துபைரவி பல்லவி தாளம்:ஆதி

ஏனிந்தத் தாமதமோ என்அன்னையே - எனக்கு
வானின்மழை யெனவே வாரியருள் பொழிய

அநுபல்லவி

நானிந்த நானிலத்தில் நாடுதற் கெவருண்டோ
நீயிரங்கா விடிலோ நிம்மதி யெனக்குண்டோ

சரணம்

தேனொத்த மொழிபேசும் தீங்கனி இதழாளே
கானத்தீ யாடலைமுக் கண்ணனோ டுகந்தாயே
மானொத்த விழியாலே மகிழ்ந்தருள் தருபவளே
ஊனத்தை நீக்கியெமை உய்ந்திட அருள்பவளே.

உ

சிவமயம்

# மாண்புறு சேவைபொலிக!
# மணிவிழா இனிதே மலர்க!



உலகம் உய்ய உதித்த உமைமகனின் உழுவலன்பர் கவிஞர் இராசையாகுகதாசன் சந்தக்கவி புனைவதில் வல்லவர்.

தமிழ் இலக்கியப் பரப்பில் விஜய நகர நாயக்க மன்னர் காலத்தில் சந்தக்கவி சிறப்பிடம் பெற்றது.அருணகிரிநாதர் முருகப் பெருமான் மீதுபாடிய சந்தத் திருப்புகழ் சந்தப் பாக்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று அமைந்திருக்கின்றது.

சந்தப் புகழ்மாலை சூட்டுவது இலகுவான காரியமல்ல.நம் மண்ணில் பாப்புனைவோருள் ஒருசிலரே இத்தகைய வரம் கைவரப் பெற்றோராக விளங்குகின்றனர்.

அவர்களுள் இராசையா குகதாஸனும் குறிப்பிட்டுச்சொல்லக்கூடியவராகத் திகழ்வது மகிழ்வுக்குரியது.

மேன்மை கொள் சைவநீதியால் இம் மண் செழிப்புற்றிருந்த நாள்களில் இலங்கை எங்கணும் சைவத் திருக்கோவில்கள் சிறப்புற்று விளங்கின.ஆயினும் இனத்துவப் பரம்பலில் தமிழ்க்குடி தாழ்வுற்ற நிலையில் எமது பண்டைய திருக்கோவில்களுடனான எமது உறவுக்கும் சவால்கள் ஏற்பட்டுள்ளன. அருணகிரிநாதர் திருப்புகழ்பாடிப் போற்றிய கதிர்காமத்திற்கு நேர்ந்துள்ள கதி இக்கருத்திற்குச் சிறந்த ஆதாரமாக அமையுமென நினைக்கின்றேன்.

எமது வரலாற்று ஆதாரங்களைப் பேணுவதற்கு தலங்கள் மீதான பாக்கள் புனைவதும் சிறப்பான மார்க்கமாக அமையும்.இலங்கை எங்கணும் விரிந்துள்ள சைவத்தின் இருப்பை பறைசாற்றும் வகையில் கவிஞர் இராசையா குகதாசன் பாடல்களைப் புனைந்துள்ளமை எமதுசமய வரலாற்றில் சிறந்த திருத்தொண்டாகக் கருதப்பெறும்.தனது மணிவிழா வயதில் மாண்புறு சேவையாற்றி பெருமையுறும் கவிஞர் இராசையா குகதாசனின் சேவைகளைப் போற்றுகிறேன்.அவர் நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வங்களையும் பெற்றுவாழ இறையருளை இறைஞ்சுகின்றேன்.

**விரிவுரையாளர்**
**கோப்பாய் ஆசிரியகலாசாலை**

**"செந்தமிழ்ச்சொல்லருவி"**
**ச.லலீசன்**

சிவமயம்

# இறைபுகழ் பாடும் இன்பிற்திளைப்பவர்.



யாழ் நாயன்மார்கட்டிருந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாளினதும், நல்லூர் முருகப் பெருமானினதும் அருட்கடாட்சத்தினை நிறைவுறப் பெற்றவர் கவிஞர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்கள். அதன் பயனாய் இளமை தொட்டு கவிபுனையும் ஆற்றல் இவருக்கு வாய்க்கப் பெற்றிருந்தது. அந்த ஆற்றல் இணுவையூர் கவிமாமணி வீரமணி ஐயர் அவர்களாலும், நாயன்மார்கட்டின் ஒளிவளர் விளக்கு பேரறிஞர் "சொக்கன்" அவர்களாலும் மேலும் மெருகூட்டி வளர்க்கப் பெறலாயிற்று.

தனக்குக் கிடைத்த இவ்வாற்றலை இறைவன் புகழ்பாடி இன்புற்று வாழ்ந்திட முடிவு கொண்டார் கவிஞர் இராசையா குகதாசன் அவர்கள். மரபுக் கவிதைத் துறையில் தடம்பதித்து, யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு ஆலயங்களின் திரு மூர்த்திகளின் சிறப்புகளை யெல்லாம் மெய்யுருகிப் பாடி நின்றார். நல்லை நகர் நாவலரின் வரலாற்றைத் தொடராகக் கவிதை வடிவில் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அளித்தார். நல்லூர், சந்நிதி, கீரிமலை, மாவை ஆகிய திருத்தல மூர்த்திகள் மீது சந்தத் திருப்புகழ் பாடிநின்றார்.

கவிஞரது குலதெய்வமான நாயன்மார்கட்டு அன்னை ஸ்ரீ.இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி)அம்பாள் மீதுஅநேக பதிகங்களை நெஞ்சுருகப் பாடியுள்ளார். அம்பாளுக்கு ஆடிமாதத்தில் நடைபெறும் மகோற்சவ திருவிழாக் கோலங்களை ஒவ்வொன்றாக உளத்தூய்மை கொண்டு பாடிப்பரவி அவற்றை இசைமாமணி, கரவைக் குமரன் திரு செ.குமாரசுவாமி அவர்களைக் கொண்டு பாடுவித்து யாழ்ப்பாணத்தின் முதலாவது இறுவட்டாக வெளியிட்டார்.அவை ஒவ்வொன்றும் பக்திச்சுவை நனி சொட்டும் முத்துக்கள்.

இவைதவிர வாழ்த்துப்பாக்கள், பாராட்டுவிழாக் கவிதைகள், தனிப் பாடல்களென அவரது கவிதைப் பயணம் நீண்டு செல்வது மகிழ்ச்சிக்கு ரியது. அவர் பணி தொடர மனநிறைவுடன் வாழ்த்துகிறேன்.

முருகப் பெருமான் அருள்பெற்றுத் திருப்புகழ் பாடிய அருணகிரி நாதரைப் போன்று அம்பிகையினதும், முருகப்பெருமானதும் அருள் பெற்ற கவிஞர் அவர்கள் மேலும் சந்தத் திருப்புகழ் பாடி தனது மணிவிழாவின் போது வெளியிடுகின்றார். பாராட்டுப் பெறும் சிறப்பான கைங்கரியம் இதுவாகும். இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள சைவ ஆலயங்களைத் தேடி அவற்றை நாடி அங்கு கோவில் கொண்டு அருள் பாலிக்கும் மூர்த்திகளின் சிறப்புகளைப் புகழ்ந்து கவி புனைந்துள்ளார். அவரின் இவ்வரிய பணிகண்டு வாழ்த்தி மகிழ்கின்றேன்.

சைவ நாயன்மார்கள் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் உள்ள சைவ ஆலயங்களைத் தேடிப் பாடித் தேவாரங்களாகவும், திருவாசகமாகவும் எவ்வாறு தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தார்களோ அதை யொத்தசைவத் தமிழ்ப் பணி ஆற்றியிருக்கும் கவிஞர் நாயன்மார்கட்டு இராசையா குகதா சன் அவர்களை வாழ்த்துவதற்கும், பாராட்டுவதற்கும் கிடைத்த இச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய இறையருளுக்கு நன்றி கூறுகின்றேன்.

நீறணிந்த நெற்றியுடன், என்றும் இன்முகத்துடன், இனிமை ததும்ப உரையாடி மகிழும் கவிஞர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்களின் உயர்வுக்கும், சிறப்புக்கும் பல துணைநின்றிருப்பதை அவதானத்திற் கொள்ள முடியும். அவற்றில் முக்கியமானது அவரது பக்தி மார்க்கம். நாயன்மார்கட்டின் சிவநெறிச் செல்வர் திரு.கா.இரகுநாதன் அவர்களின் வழிகாட்டலை முழுமையாக உள்வாங்கி உணர்ந்து கொண்டதின் வெளிப்பாடே அது. மற்றையது தான் பிறந்த மண்ணையும், பெற்றோரையும் மறவாது தனது பெயருடன் இணைத்து மகிழ்வது.

இன்னுமொன்று அறிஞர்கள், பெரியோர்களை மதித்து வணங்கித் துதிப்பது. திருவாளர்கள் சொக்கன் ,வீரமணி ஐயர்,மாவை "மகாராஜஸ்ரீ" சு.து.ஷண்முகநாதக் குருக்கள், கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள், நூறாண்டில் வாழும் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்கள் மீதும் மேலும் பல அறிஞர்கள் மீதும் மானசீகமான பற்றுக் கொண்டவர். அவர்களின் வாழ்த்தும் வழிகாட்டலுந்தான் கவிதைத் துறையில் தன்னை உயர்வுபெற வைத்தது என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர்.

இவ்வகைச் சிறப்புக்கள் பல கொண்ட கவிஞர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்கள் அகவை அறுபதைக்கண்டு மணிவிழா

காண்பதும், அதனை நல்லுள்ளங்கள் பெருவிழாவாகச் சிறப்பிப்பதும், அவ்விழாவிலே கவிஞரால் ஐநூற்றி அறுபது தலங்கள் மீது பாடப்பெற்ற திருப்புகழ் வடிவிலான "தெய்வத் தமிழிசைத் தேனமுதம்" என்னும் நூல் ஷண்முகப் பிரசாதமாகவும், மணிவிழா மங்கலர் மாண்புரை மங்கலமாக வெளிவரும் மணிவிழாமலர் குகப்பிரசாதமாகவும் வெளிவருவதும் அந்த இறையருளே.

இந்த மணிவிழா மங்கல நாளிலே மணிவிழாத் தம்பதிகளான திரு.திருமதி குகதாசன் அவர்களை வாழ்த்துவதிற் பெருமகிழ் வெய்துவதோடு, இத்தம்பதிகள் பலவளமும் பெற்றுப் பெருவாழ்வு வாழ, எல்லாம் வல்ல நாயன்மார்கட்டு அன்னை இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி)அம்பாளை மன,மொழி,மெய்களாற் பிராாத்தித்து அமைகின்றேன்.

**அம்பாள் வீதி** **கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்**
**நாயன்மார்கட்டு** **முதலாவது பீடாதிபதி**
**யாழ்ப்பாணம்.** **யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம்:பைரவி பல்லவி தாளம்:ஆதி

அருள்தன்னை அள்ளிநிதந் தந்தாள் -அன்னை
பெருமைதனைப் பாட நெஞ்சில் சுகந்தான்

அநுபல்லவி

மருவியருள் பொழிய வந்திங்கு அமர்ந்தாள்
இருகையும் கூப்பித் தொழும் இறைவியென மலர்ந்தாள்

பல்லவி

ஒப்பரிய சடைபுரள ஒண்திலகம் ஒளிவீச
செப்பரிய பட்டுடுத்து செவ்வாயில் நகைமலர
இப்பதியாம் நாயன்மார் கட்டுவந்த பைரவியாள்
எப்போதும் திருப்பொலிவு காட்டித்தன் விழியாலே
(அருள்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - கோப்பாய்
යාපනය ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨය - කෝපායි
Jaffna National College of Education - Kopay

08.08.2014

# வித்தக விநாயகனார் வெகுஅருளை வாரட்டும்



திருமிகு இராசையா குகதாசன் அவர்கள் மிகச்சிறந்த சமயப் பற்றாளர், ஆக்க இலக்கியவாதி, கவிஞர், கட்டுரையாளர், ஆன்மீக வாதி, சமூக சேவையாளர் என்ற பல பரிமாணங்களைக் கொண்டவர். அவருடைய மணிவிழா விற்கும் விழாவன்று வெளிவரவுள்ள "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" நூலுக்கும் வாழ்த்துச் செய்தி வழங்கு வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இறைபுகழ் பாடுதல் பலருக்குக் கிடைக்காத பேறாகும். ஆனால் ஸ்ரீமத் குகதாசன் அவர்கள் இறை புகழ் பாடும் பெரும் பேறு மிக்கவர். மாவை, கீரிமலை, சந்நிதி, நல்லூர் ஆகிய தலங்களின் மேலே சந்தத்திருப்புகழ் பாக்களைப் பாடியுள்ளார். அவை மிகமேலான இறைஞானத்தைத் தரவல்லனவாகப் படைக்கப்பெற்றுள்ளன. அவர் பெற்ற, அடைந்த இறைஞானத்தின் வெளிப்பாடே இதுவாகும்.

தொடர்ந்து முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம், மாத்தளை பொலநறுவை, மொனறாகலை, பதுளை, நுவரெலியா, கண்டி, குருநாகல், காலி கேகாலை, கழுத்துறை, கொழும்பு, கம்பஹா என இலங்கைத் தீவிலுள்ள உன்னதபுனித தலங்கள் மீது அறுநூறு திருப்புகழ் வடிவிலான பாக்களைப்பாடி இறை சாதனை படைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் வாழ்ந்த காலத்தில் பல கோவில்களின் மீது அருட்பாக்களைப் பாடியுள்ளார். அவருடைய அருட்பாக்கள் எமது சமயம், பண்பாடு, பாரம்பரிய விழுமியங்கள் மேம்பாடடைய ஒரு உந்துதலை வழங்குகின்றன. இன்றைய காலத்தில் சமய, விழுமிய, பண்பாட்டு எழுச்சியின் தேவை் அதிகரித்துள்ளது. இவ்வேளை ஸ்ரீமான்

குகதாசன் அவர்களது "தெய்வப்புகழிசைத் தேனமுதம்" என்ற அருட்பாக்கள் அடங்கியநூல் ஷண்முகப் பிரசாதமாக வெளிவருவது பாராட்டுக்குரியது.அவரது இறைபணி தொடர வித்தக விநாயகன் அருள் வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

—தாயுமானவர்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. சதாசிவம் அமிர்தலிங்கம்**
**யாழ்ப்பாணம் பீடாதிபதி.**

## யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி வித்தக விநாயகர் மீது கவிஞர் பாடியது

இராகமாலிகை

பல்லவி

முத்தனை வாழ்வருவாய் மூஷிகனே - எங்கள்
சொத்தென வேயமரும் கற்பகனே அரனே

அநுபல்லவி

வித்தையெ ல்லாம் அருளும் வித்தகவி நாயகனே
பத்திசெய் வார்க்களு பரமதயா நிதியே

சரணம்

சித்தரும் யோகியரும் சீர்தரும் யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி யமர்ந்தவனே
சத்திய வாழ்வு தனை சகமது நாங் காண
நித்தியம் அருள்வாரி நீணிலம் அருளாயோ?

நிர்த்தனம் சங்கீதம் நிகரரி ஆங்கிலமும்
அர்த்தமுள் மொழியோடு அரங்கியல் நாடகங்கள்
சொத்தெனும் கணிதமொடு சோர்வறு விஞ்ஞானம்
அத்தனையும் அறியும் அறிவினை அவனிதந்தே

வித்தக நாயகனார் வியனருள் ஈவரென்றால்
வித்தைகள் யாவையுமே விரைவினில் கூடுமென்பார்
சத்திய வுரையாலே (அந்த) தாள்சரண் புகுந்தோமே
சித்தியுன் அருளாலே செழியறி வோடுலவு

சிவமயம்

# தெவிட்டா இனிமையில் திளைக்கச்செய் தேனமுதம்



இறைபக்தி, தமிழ், சமயஇலக்கிய ஈடுபாடு, சைவ சித்தாந்தத் தெளிவு, கவியாற்றல் முதலான சிறப்புத் தகுதிகளுடன், திருவூஞ்சற் பாடல்கள், திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள், பக்திரசக் கீர்த்தனைகள் என்றுபல வும் பாடிச் சைவமுந் தமிழும் வளர்த்து வரும் முன்னணிக் கவிஞர்,"தெய்வத் தமிழிசைக் கவிஞர்"தான் நாயன்மார் கட்டு திரு.இராசையா குகதாசன் அவர்கள். வரலாற்றுச் சிறப்பும் திருவருட் பொழிவும் நிறைந்த மாவைக் கந்தனின் சந்நிதானத்தில் அவருக்குக் கிடைத்த அருளாணை,

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்".... என்ற

அப்பரடிகளின் அர்த்தம் பொதிந்த தேவாரப் பாடலடிகளையும்

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்கினும் தொண்டர் தருகிலார்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்"....என்ற சுந்தரரின்

செந்தமிழ் வேண்டு கோளையும் இவருக்கு நினைவூட்ட அவர் கண்ட ஆனந்தக் காட்சிகள் அருமையான திருப்புகழ் பாடலாகி... "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"ஆகித் தெவிட்டா இனிமையில் எம்மைத் திளைக்கச் செய்கின்றன.

இறைவன் ஒருவனே. கற்றறிந்த மேலோர் அவனை வெவ்வேறு பெயர்களாற் குறிப்பிடுவர் என்ற கருத்து வேதத்திலுண்டு.இலங்கையின் தென்புலத்திலும், வடபுல யாழ்ப்பாணத்திலும், வன்னிப்பெருநிலப் பரப்பிலும் பிள்ளையார்,முருகன்,ஐயனார்,மாரியம்மன்,பேச்சியம்மன்,கண்ணகையம்மன் முதலான பலபெயர்களில் ஆங்காங்கே கோயில் கொண்டுள்ள இறைவனின் திருக்கோலப் பொலிவையும்,அருளாட்சிப் பெருக்கையும், ஒவ்வொரு தலத்திற்குமுரிய தனித்துவச் சிறப்புக்களுடன் பாடியுள்ளமை இங்கு குறிக்கத் தக்கதாகும்.

இறைவனருளைக் கோரிக் கடுந்தவம் செய்தல் கிருதயுகத்தின் வழிபாட்டு முறையாக இருந்தது. பெருமள்வில் வேள்விகள், யாகங்கள்

செய்தல் திரேத யுக வழிபாட்டு முறையாக இருந்தது. துவாபர யுகத்தில் ஆகமக் கிரியைகள் முக்கியத்துவம் பெற்றன. இறைவனுடைய நாமங்களையும், அருட்கோலப் பொலிவுகளையும் பாடிப் பாடிப் பணிவதே கலியுகத்திற் குரியது.உள்ளன்புடன் இறைவனின் எல்லையில்லா ஆற்றல்களையும் அருட்சிறப்புக்களையும் இக்கலி யுகத்தில் பாடிப் பரவுவதற்கு உதவும் வகையில் கவிஞரின் இந்தத் திருப்புகழ்ப் பாடல்கள் அமைந்துள்ளது போற்றத்தக்கதாகும்.

சொல்விற்பனமும் அவதானமும் கவிசொல்ல வல்ல நல்வித்தையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றுள்ள "அருட்கவிச்செல்வர்", "தெய்வப் புகழிசை வாரிதி" மணிவிழா மங்கலம் காணும் இராசையா குகதாசன், குகதாசன் புவனேஸ்வரி தம்பதியர் நிறைவாழ்வில் இந்த நீடுலகிற் திளைக்கவும், விழாநாயகரின் இத்தகைய தொண்டு மேன்மேலும் சிறக்கவும் மாவைக்கந்தனின் மலரடிகளை வணங்குகிறேன்.

**கந்தரோடை** — **சி.சரவணபவன்**
**சுன்னாகம்.** — **(சிற்பி)**

**கவிஞரின் சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலையிலிருந்து**

பல்லவி

எந்நிதியும் தருவான் சந்நிதியான் --வாழ்வில் -பாதம்
தன்நிதி யெனவேயித் தாரினிற் துதிப்போர்க்கு

அநுபல்லவி

நன்நிதி வாரியென்றே நாடெலாம் போற்றிடவே
பன்நிதியும் வாரும் பரம்பொரு ளாயிருந்தே

சரணம்

நின்நிதி தேவிதெய்வி மூலஸ்தானத் திருக்க
பின்நிதி யானவள்ளி பெருவீதி கொலுவிருக்க
தன்நிதி யாமருளை தரணியெல்லாம் வாரி
மன்நிதி யாகவிந்த மாநிலத்தே யருளி

துன்நிதி கொண்டோரும் தூயவன் முன்புவந்தால்
வன்நிதி நிலைமாற்றி வாழ்வினைத் தந்திடுவான்
முன்நிதி யாய்வந்தே மூழ்வினை நிலைமாற்றி
தொன்நிதி யெனும்வாழ்வை தொல்லுலகில் வாழ

உ

சிவமயம்

# பாரும்பணியே பணியாகக்கொண்டு வாழ்பவர்



சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு பக்தர்கள், ஞானிகள்,சித்தர்கள்,யோகிகள் என ஆன்மீகச்செல்வர்கள் பலர்வாழ்ந்த தெய்வீக பூமியாகும். முருகப் பெருமானது அருளாட்சி யாழ்மாவட்டம் முழுவதும் வியாபித்துக் காணப்படுகின்றது.சைவத்தமிழர்களின் சொந்தப்பூமியாகிய யாழ்ப்பாண இராச்சியத்தை தமிழ்மன்னர்கள் ஆட்சிசெய்த காலத்தில் நல்லூர் இராஜதானியாகவும் தலைநகரமாகவும் மிளிர்ந்தது. ஞானபண்டிதனாகவும், அலங்காரக் கந்தனாகவும் மிளிர்கின்ற நல்லைக்கந்தனின் அருட்பார்வைக்குப் பாத்திரமாகி வாழ்ந்த மக்கள்பலர் நல்லூரைச்சுற்றியுள்ள கிராமங்கள் பலவற்றிலும் வாழ்ந்தார்கள். நல்லூரான் திருவடியை நாள்தோறும் பணிந்து வணங்கிவந்த நாயன்மார்கட்டைச் சேர்ந்த இராசையா தங்கலட்சுமி தம்பதிகள்செய்த தவத்தின்பயனாக20:11:1953இல் குகதாசன் தோன்றினார்.

கவிதாயோகம் கருவிலே திருவாக அமைந்த தங்கள் புத்திரனுக்கு முருகனின் அடிமை என்றகருத்துப்படக் குகதாசன் என்றநாமத்தைப் பெற்றோர் சூட்டினார்கள்.

குகதாசன் வளர வளர அவரிடமிருந்த கவிதா யோகமும் வளர்ச்சி பெற்றது. “பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்” என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாக்கிற்கு அமைய குகதாசன் தனக்கு இறையருளால் கிடைத்த கவிதைபாடும் ஆற்றலை இறைவனுக்கே அர்ப்பணித்தவர். கலியுக வரதனாகிய கந்தவேள்ப் பெருமானை, தமிழர் தெய்வம் என்றுபோற்றும் வடிவேலனை முருகபக்தர்கள் காலத்திற்குக்காலம் பல்வேறு தமிழில் பாடிப் பரவினார்கள்.சங்கத்தமிழில் நக்கீரரும், புராணத்தமிழில் கச்சியப்பரும்,பிள்ளைத்தமிழில் பகழிக்கூத்தரும், சந்தத் தமிழில் அருணகிரிநாதப் பெருமானும் பக்திரசம் ததும்பும் பாடல்களைால் பாடித்துதித்தார்கள்.

“வாக்கிற்கு அருணகிரி”என்னும் சிறப்பு திருப்புகழ்பாடியதால் அருணகிரி நாதருக்குக் கிடைத்தது.ஆழ்ந்தபொருள்,அமைதி,பொருளுக்கேற்ற சந்தம், தடையில்லாத சொல்லோட்டம்,இசையின்பம்,தாளக்கட்டு ஆகிய அனைத்

திற்கும் திருப்புகழ் இலக்கியமாக விளங்குகின்றது. சொற்சுவை, பொருட்சுவை, பக்திச்சுவை ஆகியமூன்றும் இணைந்த சந்தப் பாமாலையாகத் திருப்புகழ் திகழ்கிறது.

பாடல்பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரம் உட்பட பலகோயில்கள் மீதும் திருப்புகழ் பாடிய அன்பர் குகதாசன் அவர்கள் ஈழநாட்டில் உள்ள பல திருத்தலங்கள் மீதும் திருப்புகழ் பாடியுள்ளார்.கவிதைக்குரிய இலக்கண மரபுகள் எதையும் மீறாமல் மரபுநிலை நின்று கவிதைபாடும் ஆற்றல் உடையவராக விளங்குகின்றார்.திருவருள் இல்லாமல் தெய்வீகப் பாடல்களைப் பாடமுடியாது. அகத்துறையும் அழகனாக நின்று முருகப்பெருமானே இவர்கவிதைபாட வழிப்படுத்தியுள்ளார்.

திருவருள் மாத்திரமல்லாது குருவருளும் இவருக்குத் துணையாக உள்ளது. மறைந்தமாவை ஆதீனகர்த்தர் "மகாராஜஸ்ரீ" சு.து.ஷண்முக நாதக் குருக்கள், சிவப்பழமாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள்,முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயா ஆகிய பெருமக்கள் மூவரும் இவருடைய கவிதை பாடும்பணியை வாழ்த்தி ஆசீர்வதித்து ஊக்குவித்துள்ளார்கள்.

அன்புள்ளஇடத்தில் தான் உரிமைவரும்.சந்நிதி வேலவனின் பாதக்கமலங்களைப் பற்றிப்பிடித்து அன்புரிமையுடன் பாடும் பாடல்களை சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் ஞானச்சுடர்மலரில் வரும் "சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை"என்ற அவரதுபாடல்களில் காணலாம்.

(உ-ம்) பல்லவி

சந்நிதியில் நின்றாளும் வேலவா –எம்மைச்
சந்ததமும் காத்து நின்று ஆளவா

அநுபல்லவி

உந்தன்புகழ் பாடிவந்தோம் கேளையா –நாங்கள்
நிம்மதியாய் வாழ்வதெந்த நாளையா?

(ஞானச்சுடர்,புரட்டாதி-2012)

சைவசேனாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவத்தையும்,தமிழையும் வளர்ப்பதற்காகத் தனதுவாழ்வையே அர்ப்பணித்திருந்தார்.பயன்கருதாமல் தமது பணிகளையெல்லாம் செய்தநாவலர்பெருமான் தனதுவாழ்வில் பலசோதனைகளையும்,வேதனைகளையும் சந்தித்தார்.இவற்றையெல்லாம் போதனைகளாக்கிக் கொண்டு சாதனைகள்பலசெய்து தியாகசொரூபியாக

வாழ்ந்தார்."நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை"என்ற தலைப்பில் இந்துசாதனத்தில் தொடர்ந்து நாவலருடைய வாழ்க்கை வரலாற்றினைக் கவிதைகளாக அன்பர் குகதாசன்அவர்கள் அழகுதமிழில் பாடியருளினார்.

"தூயவை துணிந்தபோது பழிவந்துதொடர்வதில்லை"என்பது கம்பன் வாக்கு.நாவலருடைய பணிகளுக்கு உதவிகள் செய்யாததோடு அவமதிப்பினையும் நம்மவர்கள் பலர் செய்தார்கள். இதனால் அவர்சிறிய அளவிலும் கவலைகொள்ளவில்லை.ஈஸ்வர அர்ப்பணமாகச் செயல்களைச் செய்பவர்கள் இவற்றைப்பொருட் படுத்துவதில்லை என்பதை நாவலர்மரபில் வந்த குகதாசனின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

சைவர்க ளெல்லாம் தங்கள் சமயமும் பாஷை தானும்
வையக முயர நான்செய் வகையில முயற்சிக் கெல்லாம்
கைவர உதவி டாதும் கனஅவ மதிப்பு மூறும்
செய்குவ ரேனும் அற்ப அளவிலும் கவலை யில்லை

சைவத்தமிழ்ப் பண்பாட்டில் ஊறி வளர்ந்த குகதாசனின் எண்ணத்திலும் நாவிலும் வாலை சரஸ்வதிநின்று நர்த்தனமாடுகின்றாள்.இவரும்,இவரது துணைவியாரும் தங்களது ஷஷ்டியப்ப பூர்த்தியினைத் தம்பதி சமேதராக திருக்கடவூர் அபிராமிஅம்பாள் ஆலயத்தில் செய்து அம்பிகையின் அருளைப் பெற்றுள்ளார்கள்.

இவருடைய பணிகள் தொடரவும்,சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்று நிறைவான வாழ்வு வாழவும் பேசும்தெய்வமாக நின்று பேரருள் புரிகின்ற நல்லைக்கந்தனின் திருவருள் பூரணமாகக்கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர்** **"சிவத்தமிழ் வித்தகர்"**
**இந்துசமய கலாசார அலுவல்கள்** **சிவ.மகாலிங்கம்.**
**திணைக்களம்**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka

T.P. No : 021-3213151 திகதி 24.06.2014



## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை
### மரபினைக் காக்கும் மாண்புடைக் கவிஞர்

"தெய்வப் புகழிசைத் தேனமுதம்"என்ற பெயரில் ஈழத்துத் திருத்தலங்கள் மீது பாடப்பட்ட திருப்புகழ் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். இசையால் இறைவனை அர்ச்சிக்கும் இனிய வழிபாட்டு மரபு என்றும் நிலையானது. இம்மரபைக் காக்கும் புகழ்பூத்த கவிஞர் இராசையா குகதாசன் அவர்களின் தெய்வீகப் படைப்புக்கள் நூல்வடிவில் வெளிவருவது குறித்து பெருமையடைகின்றேன்.

கவிஞர் இராசையா குகதாசன் அவர்களின் கவிதைகள் கருத்தாளம் மிக்கவை. வித்துவச் சபைகளினால் அங்கீகரிக்கப்பட்டவை.மரபுக் கவிதை களைப் படைப்பதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருபவர்.வித்துவான் சொக்கன் போன்ற அறிஞர்களின் ஆற்றுப்படுத்தலில் வளர்ந்தவர்.

தனது நீண்டகால அநுபவ ஞானத்தோடு ஈழத்துத் திருத்தலங்கள்மீது திருப்புகழ் பாடியுள்ளமை கண்டு சைவஉலகம் பெருமை கொள்ளும் என்பது திண்ணம். அகவை அறுபதைச் சந்திக்கும் கவிஞர் சகல செல்வங்களோடும் நிறைவாக வாழ துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

பலநூறு திருக்கோவிலின் மேன்மையைப் பாமாலையால் சந்தத்தில் பாடிய சரித்திர நாயகன் என்றும் வாழ்த்துக்குரியவர்.அவர் புகழ்சிறக்க, நூல் சிறக்க வாழ்த்தி அமைகின்றேன்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை**

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்**

காரைநகர் வியாவில்

**ஐயனார் கோயில்**

பதிவு இல - HA/S/JA33

இலங்கை வங்கி காரைநகர் கணக்கு இல — 123

தொ.பே 222 3104

காரைநகர்.

.........200..



# ஐயனார் ஆலய அறங்காவலரின் அகமகிழ் வாழ்த்து தேனமுத நூலுலகில் தெய்வநெறி பரப்பட்டும்

இறையருளால் இலங்கையில் உள்ள திருத்தலங்கள் மீது நண்பர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்பாடிய அறுநூறு சந்தத் திருப்புகழைத் தாங்கி, அவரின் மணிவிழா வெளியீடாக, “ஷண்முகப் பிரசாதம்”ஆக வரும் “தெய்வப் புகழிசைத் தேனமுதம்”என்ற நூலுக்கும்,“மணிவிழா மங்கலர் மாண்புரை மங்கலம்” ஆக வெளிவரும் “குகப்பிரசாதம்” மலருக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதிற் பெருமகிழ்வடைகின்றேன்.

ஓர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஓர் இறைவனுக்கு ஒரு திருப்புகழ் பாடுவதே கடினமான காரியம். இப்படி இருக்க ஐநூற்றி அறுபது தலங்கள் மீது அறுநூறு சந்தப்புகழ் பாடிய இவர்மீது பதிந்துள்ள இறையருளின் அபார சக்தியை எண்ணி வியந்து நிற்கின்றேன்.

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட நண்பர் குகதாசன் காரைநகரைப் புகுந்த வீடாகக் கொண்ட பெருமைக்குரியவர். காரைநகரில் உள்ள ஆலயங்கள் பற்றியும், காரைநகர் மக்கள் பற்றியும் நன்கு அறிந்தவர். அந்தண சிவாச்சாரியார்களே அதிசயிக்கத் தக்களவிற்கு ஆலயக் கிரியைகள் பற்றி சிவாகம விதிமுறைகளை அறிந்து, தெரிந்து வைத்துள்ள அடக்கமான பண்புள்ள பெரியவர் இவர்.

சைவ சமயம் மற்றும் ஆலயக் கிரிகைகள் தொடர்பான எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லத்தக்க ஆற்றலும் அறிவும் நிரம்பிய இவர் வியாவில் ஐயனார் ஆலய திருவூஞ்சல் பாடலை மட்டுமன்றி, பல்வேறு ஆலயங்களுக்கும் ஊஞ்சல் பாட்டு இயற்றிய பெருமைக்குரியவர்.

இவரது மைத்துனர் மிகச்சிறந்த ஆன்மீக வாதி. கொடை வள்ளல். தர்மகாரியங்களுக்கு உதவி வரும் திருவாதிரை இவரது ஆக்க முயற்சி களையும் ஊக்குவித்து வந்தவர். கவிஞர் குகதாசனின் தர்மபத்தினியாக அமைந்த பாரியார் மட்டுமல்ல, குழந்தைகளும், குடும்ப உறவுகளுங் கூட, ஊக்கம் கொடுத்தனர்.

இறைகளளி திருவருளும், நிறையவரு குருவருளும் துணைநிற்க அருமையான சந்தங்களில் இந்தஅறுநூறு பாடல்களும் பிறந்துள்ளன. மிகுதி ஆலயங்களையும் தன் வாழ் நாள் முடியுமுன் பாடி முடிக்க வேண்டுமென்று ஆசைகொண்டுள்ள இவரை "ஈழத்து அருணகிரி" என்று போற்றுவதில் பெருமை யடைகின்றேன்.

மாவை சு.து.ஷண்முகநாதக் குருக்கள் நாயன்மார்கட்டு குகதாசனை நன்கு இனங்கண்டு வேண்டிக் கொள்ள, அகவை நூறு கண்ட முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்களும், நூறாவது அகவை நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் பண்டிதர், கலாநிதிக.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களும் வாழ்த்தும், ஆசியும் வழங்க இவ்வருட் புகழ்ப்பாக்கள் இன்று நூல் வடிவில் எமக்குக் கிடைக்க இருக்கிறது. இன்று மணிவிழா காணும் இத்தம்பதிகள் ஷதாபிஷேக தம்பதிகளாக வாழும் திருவை அருள வேண்டி பூரணை புட்கலாம்பா சமேத ஐயனார் திருவடிகளைப் பிரார்த்திப்ப தோடு இந்த நூல் ஈழத்தில் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் சைவப்பெருமக்களின் கரங்களில் தவழ்ந்து பக்தி நறுமணம் பரப்பி சைவம் மறுமலர்ச்சிபெற உதவும் என எண்ணி வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

**ஐயனார் தேவஸ்தானம்** | **க.சோமசேகரம்(மகாராணி)**
**வியாவில்,காரைநகர்** | **அறங்காவலர்**

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை திருவாவடு துறை
ஆதீனப்புலவர்
சிவத்திரு ஏ.அனுசாந்தன் அவர்கள் மனமுவந்து
நல்கிய வாழ்த்துரை

## ஆகமவரன்முறையை அகிலத்திற் பேணுபவர்

சந்தத் தமிழ்செய்த பெரும்புலவோர் இருவர்.ஒருவர் அருணைப் பெரு முனிவர்.மற்றையவர் வில்லிபுத்தூராழ்வார். முருகனருள் விலாசத்தாலே கந்தரந்தாதி பாடி மேல் நின்றவர் அருணகிரி.அவர்வழி ஒழுகி சந்தத்தமிழாலே ஈழத்துச் சைவாலயங்களைப் பாடும் பணியாய்க் கொண்ட நாயன்மார்கட்டு வாசி சிவத்திரு இராசையா குகதாசன் அவர்கள் சஷ்டியப்ப பூர்த்தி கண்டு மணிவிழாகாணும் மங்கலத்திரு நாளில் அவரது “தெய்வப் புகழிசைத் தேனமுதம்” படையலாகிப் பகிர்ந்தளிக்கப் படுதலறிந்து பரிபூரணானந்தம்.

தலங்கள் ஒவ்வொன்றையும் பாடுமிடத்து அத்தலங்களின் வரலாற்றுணர்வு சிதையாமலும், அவ்வவ் இடச் சூழமைதி கெடாமலும் பாடுவதோடு பர வாழ்வும், இகவாழ்வும் சிறக்க வரங்கேட்கும் பாங்கினை இவரது பாக்களிலே காணமுடிவது தனிச்சிறப்பாகும்.

இணுவைப் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு “மடத்து வாசற் பிள்ளையார்”என்பதே இணுவையில் வழங்கும் பிரபல்யமான பெயர்.

“சேமமவை யேகொ டுக்கும் சேயனென வேம டத்து
வாசலதி லேநி லைத்த - பரராச
சேகரரென் றோத நித்தஞ் சேவியடி யாரினுக்கு
சீர்நிறைய வேகொடுக்கும் - பிள்ளையாரே.

என்று அவர்மேல் பாடியிருப்பது மிகச்சிறப்பாகும்.இவ்வாறே இணுவைக் கந்தனாலய மூலாலயத்திலே ஆதியில் வேல் இருந்த செய்தியும், பின்னாளிலே மூர்த்திப் பிரதிஷ்டை செய்யப்பட்டதும் பலரறியாத விஷயங்கள். ஆசிரியர் நூலாக்கத்திற்காக வரலாற்றாராய்ச்சியில் எவ்வளவு ஈடுபட்டுள்ளார் என்பதனை இணுவைக் கந்தனாலய வேல்பற்றிக்

குறிப்பதிலிருந்து தெரிகிறது.

"ஆதியிரு வேலின் பின்னர் ஆசையணங் கார்ம ருங்க
தாயமர வாழு சுப்ர - மணியாரே" — எனப்பாடுதல்

காணலாம்.

இணுவையின் தனிச்சிறப்பே உலகப் பெருமஞ்சம் கொண்டிருப்பதல்லவா?

"பாருளரெ லாம்பு கழ்ந்து பேசுமழ கான மஞ்சம்
பாசமொடு ஏறி வந்து - அருள்வோனே.

என்று அவ்வழகிய பெருமஞ்சச் சிறப்பைக் குறித்துள்ளார்.

ஆசிரியர் ஆகம வரன்முறை பேணுவதிலும்,பேணாதாரைச் சீர்திருத்து வதிலும் சிம்ம ஏறு.இதிலிவருக் குளதாய ஊக்கமும் ஈடுபாடும் வல்வை வைத்தீசரைப் பாடுமிடத்து அத்திருக்கோவிலின் மணிய கார்களும், பக்தப் பெருமக்களும் விதிவழியிகவாது வழிபடுவதனைப் புகழ்தலிலே யிருந்து உணரமுடியும்.

"வரைமுறை யோடுனை வழிபடர் வாழுவல்
வையிலருள் வாரிடு - சிவனாரே என்று பாடுகிறார்.

ஆசிரியரின் ஆகமவழி பேணும் உயர்பண்பிற்கு அகிலப் பிரசித்தமான ஒன்றைக் கூறலாம்.கருங்காலி முருக மூர்த்தி ஆலயத்தில் சனீஸ்வரப் பிரதிஷ்டை விவகாரத்தில் அப்பிரதிஷ்டை ஆகம விரோதமானதென நிரூபித்து அதை அகற்றுவித்தமை இவரின் ஆகமவழி ஒழுகலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

அம்மானே ஆகமசீலர்க்கு அருள்நல்கும் பெம்மானே" - எனச் சுந்தரர்பாடியாங்கு மணிவிழா மங்கலம் காணும் இந்நூலின் ஆசிரியரும் கௌரிமனோகரனாகிய திருக்கேதீச்சரப் பெருமான் திருவருள் பெருகி வாழ்க!

இவர் சதாபிஷேகசீலராகுக!
சிவ சிவ

சிவமயம்

# இப்பெரியாரின் ஆற்றல் சிவன்தமிழின் தேற்றம்



"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்றுணர்ந்து, தமிழ்பாடிச் சிவபெருமான் குமரிக்கண்டத்துக் கபாட புரத்தில் தோற்றுவித்த தமிழமுதை, அகத்தியரும், தமிழே வடிவான முருகனும், திருமந்திரம் சொரிந்த திருமூலரும் வையமனைத்தும் அறிய உரைத்தனர்.

இப்பெருமைக்குரிய தமிழ்க்கடலில் சிலதுளியை இவருக்கு வார்த்தவர் சொக்கன் என்று அன்பாக அழைக்கப்பெற்ற அமரர் சொக்கலிங்கம் ஆசிரியர். தமிழிசையில் இறையருளை வளர்த்த வீரமணி ஐயா கீர்த்தனை வரைவதைச் சாத்திய மாக்கினார்.இவ்விருவரினதும் வழிகாட்டலில் வளர்ந்தவர் தான் "தெய்வத் தமிழிசைக் கவிஞர்" இராசையா குகதாசன் அவர்கள்.

ஓசை வடிவான இறைவன் பறவைகள், விலங்குகள், சிற்றுயிர்கள், போன்றவற்றினூடாக எழுப்பிய ஒலி மூலம் ஒலிக்கு ஒரு மொழிவடிவத்தை அமைத்தான். அவ்வொலி கேட்டு காட்டுமிராண்டிகளாக, விலங்கினங்கள் போல்வாழ்ந்த மக்களும் அவ்வொலியை எழுப்பினர்.இன்னவாறாக "ஓம்"என்ற எழுதாமறை ஒலி காற்றூதும் வையமெங்கும் தமிழ் ஒலியாய்ப் பரவியது.இதனால் கட்டுப்பாடின்றி இருந்த மனிதனும் கபாடபுரத்துக் கடவுளிடம் தமிழறிந்து தமிழன் ஆனான்.

பின் இரண்டாவது தமிழ்ச்சங்கத்தை குமரிக்கண்டத்துத் தென்மதுரையில் அமைத்து,அதன்மூலம் "தமிழ் நெடுங்கணக்கு"முழுமையடைய தமிழ் இலக்கியங்களும் எழுந்தன.தமிழர்களும் இயக்கர், நாகர், அரக்கர்,அசுரர் எனப்பெருக்கமுற்றனர் ஆணவம், கன்மம், மாயை யாகிய மும்மலத் தாக்கங்களினாலே சகலர், விஞ்ஞானகலர், பிரளயாகலர் எனும் கன்மவினைத் தொடர்பும் கொண்டனர்.விளைவு அறம், மறம், வீரம், அறிவுடைமை, மடைமை, வஞ்சகம், பொறாமை, தவம், தூய்மை எனப் பலவகை நிலைகளும் தோற்றம்பெற்றன.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் வாளொடு முன்தோன்றிய

மூத்த தமிழில், சந்தக் கவியில் சிந்துகள் தந்த அருணகிரி போல் மாவிட்டபுரம், சந்நிதி, கீரிமலை, நல்லூர் ஆகிய தலங்கள் மேல் சந்த நிறை சிந்து பாடியவர் தான் எங்கள் இராசையா குகதாசன் அவர்கள்.மாவைக்கந்தன் மேல் பாடிய தெய்வத்தமிழிசை கொண்டு ஷண்முகருக்குத் திருப்புகழ் அர்ச்சனை செய்து பெற்ற ஆனந்த உணர்வினாலோ? அருட் பிரவாகத்தினாலோ? அன்றி தமது ஆன்மா முந்து புகழ் முருகன் கழலடையும் காலமதை யுணர்ந்தோ மறைந்த மாவை ஆதீனப்பேரரசர் "மகாராஜஸ்ரீ"சு.து.ஷண்முகநாதக்குருக்கள் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதியின் கருணையை இவர் பெற்றுய்யவேண்டும் என்ற உணர்விலோ அல்லது ஆவணமாகட்டும் என்ற நினைவிலோ "இலங்கைத் தீவு முழுவதிலுமுள்ள" ஆலய மூர்த்திகளின் கீர்த்திகளை இந்த வையமுணர்ந்து வழிபட ஒரு திருப்புகழ் வீதமாவது பாட அருளாணையிட்டார்கள்.

நூறாண்டில் வாழ்ந்து வருபவரும், தமிழில் நுண்ணறிவு பெற்றவ... நற்றுணை யாவது "நமச்சிவாயவே"என்ற சம்பந்தர் வாக்கிற்கு அமைய மூலமந்திரத்தை ஜெபித்து இன்றும் சிவனை வழிபடும் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயாவும், மூதறிஞர் கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்க ளும் சந்தக்கவிச்சிந்து பாட ஆசிவழங்க ஐநூற்றி அறுபது ஆலயங்களின் மேல் அறுநூறு அருட்புகழ்ப் பாக்களைப்பாடி சாதனை படைத்துள்ளார்

ஒரு வர்த்தகராக இருந்த போதும் அறவழி நடந்து, நெறிமுறை வாழ்ந்து ஐயமிட்டுண்டு, பண்ணொடு பாடி, சைவ வாழ்வு வாழ்ந்தவர். இப் பேராண்மை யளித்த இறையருளாலே ஞானம் கைவரப்பெற்று திருவூஞ்சல்கள், திருப்பள்ளி எழுச்சிகள், கீர்த்தனைகள் பாடியவர்.இவர் பாடிய அரசடி விநாயகராலய திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களில் மகிழ்வுற்ற அன்றைய திருப்போரூர் ஆதீனம் சீர் வளர் சீர் கலாநிதி குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் நேரில் அழைத்து பொன்னாடை, மாலை சாற்றியது வர்த்தகர்களாகிய எமக்கெல்லாம் பெருமையாக அமைந்தது

எமது திக்கரை முருகன் மீது தெய்வப் புகழிசை வாரிதியான கவிஞர் பாடிய பாடல்கள் சொல்,பொருள் நயம் மிக்கவை.படிக்கப் படிக்கத் தித்திப்பவை.

பிரமனைச் சிறையிட்ட கதை, காரைநகர்ப்புகழ்,அமைவிட சூழல்

போன்றவை மிகத்துல்லியமாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

திக்குத்தொறுந் தர்க்கித் தலைபுரி திக்குத்தலை வைத்தப் பிரமனை
குட்டிச்சிறை யிட்டுப் பணிபுரி - குருநாதா! என்றும்
மிக்கப்புவி மெச்சப் புகழுடை சித்தர்தொழு மிச்சைப் பதியென
திக்குத்திசை யெட்டும் புகழுடை - பதிகாரை என்றும்
மக்கட்கருள் கிட்டக் கடலலை சப்தித்திட இட்டத் துடனருள்
நித்தந்தர இத்திக் கரையுறை - இறையோனே. என்றும்

பாடுகிறார்.

பக்திக்கெடு வுற்றுப் பணிபவர் சித்தத்துள சித்தித் தகமது
தித்தித்திட நித்தம் அருளிடு - முருகோனே என்றும்

புகழ்கிறார்.

துக்கக்கரு வுற்றுற் றலைவதை விட்டிட்டெழில் கொட்டும் பதமதில்
நித்தந்துயி லுற்றுக் கிடவென -அருளாயோ?என்றும்

வேண்டுகிறார்.

இன்னவாறே அவரின் பாடல்கள் பக்திநெறி பரப்பிநிற்கின்றன.இவைதவிர நம் சிந்தையெல்லாம் நிறைந்துள்ள சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருச்சரிதையைக்கூட யாரும் இதுவரை முயற்சிக்காத புராணவடிவிலே தந்துள்ளார்.

மணிவிழா மங்கலம் காணும் திருநாளில் சிவனவன் சிந்தைநின்றூட்ட இவர் எழுதிய அருட்பாடல்கள் ஷண்முகப் பிரசாதமாக"தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்ற பெயரில் வெளிவரத் திருவருள் கூடியுள்ளது.இவரின் இயக்கம் முழுவதும் இறைவன் திருவருளே.இவரின் ஆற்றல் சிவன்தமிழின் தேற்றம். இவர்படைப்பைப் போற்றி வணங்குவதோடு மணிவிழாத் தம்பதிகள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து பரன் புகழ்பாட, நிறைவுடன் வாழ அருளவேண்டி தில்லைக்கூத்தன் திருவடிகளைப் பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

**பொருளாளர்**
**அகிலஇலங்கைத்திருமுறைமன்றம்**

**க.கு.க.சிவபாலன்**
**அடியார்க்கு அமுதூட்டும்**
**அண்ணலார்**

உ

சிவமயம்



# மணிவிழா நாயகனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்

எனது அன்புக்கும்,மதிப்புக்கும் உரியவரான கவிஞர் இராசையா குகதாசன் அவர்கள் மணிவிழாக்காண்பதையிட்டு மனமிக மகிழ்வுறுகின்றோம். இவர் ஓர் உத்தமநற்குண சீலர். திருப்பகழ் பாடுவதில் நல்ல வித்தக சூரர். இவரது சந்தப்பாக்கள் கருத்தாழம் மிக்க சிந்தனைக் கருவூலங்கள். படிக்கும் தோறும் இன்பம் பயப்பவை,நயம்மிக்கவை.

சந்தக்கவி யாப்பிலக்கணத்துக்கமைவாக பலமாவட்டங்களிலுமுள்ள மூர்த்திகளின் கீர்த்திபற்றி வெளிவருகின்ற அறுநூறு திருப்புகழ்பாடல்கள் அடங்கிய இவரது "தெய்வப்புகழிசைத்தேனமுதம்"என்ற நூலானது கிடைத்தற்கரிய ஓர்அருங்கலைத்தமிழ்ப் பொக்கிஷமாகும்.எமது காமாட்சியம்பாளின் கும்பாபிஷேக நிகழ்வின் நிறைவாக வெளியிடப்பெற்ற மலரில் வெளிவந்த தாயின்மீது இவர்பாடியளித்த பக்தி ரசமும், வரலாற்று விபரமுமடங்கிய அரியகீர்த்தனைகள் இவரின் கீர்த்தனைப் புலமையை எடுத்துக்காட்டுகின்றது.

பலசமய சமூக நிறுவனங்களோடு இணைந்து அளப்பரிய தொண்டாற்றித் தனக்கென வாழாது பிறர்க்குரியராக வாழும்பெருமைக்குரிய இவர் நல்ல தேகாரோக்கியத்துடன் நீண்டநாள் வாழ்ந்து தமிழ்ப்பணியாற்றவேண்டுமென எனது குலதெய்வமான வண்ணை ஸ்ரீ காமாட்சித்தாயை மனமொழிமெய்களால் வேண்டிப் பிரார்த்திக்றேன்.

நாவலர்வழியில் சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபடும் இவரதுமணிவிழா சிறப்புற உளமாரவாழ்த்துகிறேன்.கள்ளமிலா உளங்கொண்ட கவிஞர் இராசையா.குகதாசன் அவர்கள் நல்லைக்கந்தன் அருளால் நீடூழி பல்லாண்டு வாழ எனது நல்லாசிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

பக்திச்சுவை நனிசொட்டச்சொட்ட இனிக்கும்தமிழில் எம்இதயங்கனிய உயிரோட்டமான பா அமைக்கும் ஆற்றல் இவருக்கு இறைவனால் கொடுக்கப் பெற்றது. அருணகிரிநாதரின் பரிபூரண அநுக்கிரமும் இவருக்குண்டு.

என்பது அறிஞர்பெருமக்களின் முடிவாகும். மணிவிழாக்காணும் மனநிறைந்த பாவலன் தன்மனையினோடு மண்ணில்நல்லவண்ணம் வாழவும்,குறைவிலா நிறைவாழ்வில் எல்லாநலங்களோடும் திகழவும் வேண்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியுடன் இறும்பூதெய்துகின்றேன்.

வாழ்கவளமுடன்! பல்லாண்டு!! பல்லாண்டு!!!

**நாச்சிமார் கோவிலடி** **கலாபூஷணம்**
**யாழ்ப்பாணம்** **இராசையா.ஸ்ரீதரன்.**

## கவிஞரின் அரசடி விநாயகர் இசைமாலையிலிருந்து

மல்லாரி

திருநிறை வுளபதி யரசடி யிருந்தருள் தரவரு பெருநிதி
பெருமணி ரதமதி வருபஞ்ச முகமொடு நசகரம் உடையவர்
பொருணிறை வொடுபுகழ் உறுநிலை புவிவர வரமருள் இறையவர்
கருணையுள் கணபதி கழல்தொழ கமுமல பிணியது கரையுமே

இறைதரு மறையெனும் பரியது எழிலுறு ரதமதை இழுத்திட
சிறைவிடு மலருறை பிரமனும் திருவுள வழியதைச் செலுத்திட
நறைநனி வழிவுறு கமலங்கள் நிறைகுளத் தடியிருந் தடியவர்
குறையது நிறைவுற அருளிடு குணநிதி குரைகழல் தொழுவமே

பல்லவி

அரசடியின் ஐங்கரனார் அழகுரத மேறிவந்தார்
பரவடியர் படுதுயரம் வேருடனே பாறவந்தார்

அநுபல்லவி

விரவுகுளத் தடியதனில் வீற்றிருக்கும் வஞ்சிமகன்
அரவணையிற் துயில்மாலின் இடர்கெடுத்த பஞ்சமுகன்

குரவையொடு காவடிகள் குஞ்சரனார் முன்னாட
சிரங்குவிவார் உளம்நெகிழ்ந்து சேவடியின் துதிபாட
கரதாளம் இட்டடியார் திருமுறைதேர் பின்பாட
சரணடைவார் உளதுயரம் சகமதனிற் பறந்தோட

பிரபஞ்சம் அகத்தடக்கு பெருவேழ முகன்பாதம்
சிரங்குட்டி நீதொடங்கு செயலெல்லாம் நிறைவாகும்
பரன்சைவக் குருமணிகள் பரம்பரைக்கே அருள்வாரும்
புரபஞ்ச முகன்தாளை போற்றிசெயு திருசேரும்.

சிவமயம்

# சான்றோர்சுரபி

கவிவேந்தர் குகதாசன் அண்ணரின் படைப்பினைப் பன்முறை படித்ததின் விளைவால் ஏற்பட்ட வியப்பின் எல்லையில் இவ்வுரையை எழுதுவதில் பெரிதும் பெருமைப்படுகின்றேன்.இவரின் எல்லாப்படைப்புகளையும் உரசிப்பார்த்தவன் யான்.

மனித உள்ளங்களை உழுதுபுனிதப்படுத்தும் மாபெரும் எழுத்தரசன் இவர்.சொல்லுக்கும்,செயலுக்கும் இடைவெளி காட்டாத துல்லியமான உறுதிநெஞ்சு இவருடையது. இவரின் படைப்புகளில் உள்ள தேன்சுவை என்றென்றும் தெவிட்டாதது. இவருடைய கவிதை அடிகளில் காணப் உவமையழகும்,கருத்தாழமும் நம்மைச்சொக்க வைக்கக்கூடியவை.

இவரின் முழு உழைப்புப் பரிமாணத்தின் மொத்த வடிவம்தான் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்".தொட்டஇடமெல்லாம் இனிக்கும்வகையில் சுவை சுவையான செய்திகளை அணி அணியாக நடமாட விடுகின்றார். இடையிடையே அவர் பெய்தளிக்கும் மேற்கோள்களும்,எழிலார்ந்த பொன்மொழிகளும் ஏற்றமிகு பாடல் அடிகளும் நம்மை இன்பவெள்ளத்தில் மூழ்கடிக்கின்றன.

கவிதைகள் துள்ளலும் துடிப்பும் உடையவை.மரபு மீறாதவை.தமிழின் அருமையும்,பெருமையும்,செழுமையும் கொண்டவை.கவிதை ஓட்டமும் சொல்லாட்சித்திறமும் தரம்தாளாத் தன்மையும் ஒருங்கே பெற்றவை.

கரும்புத் தோட்டத்தில் நுழைந்து நாம்கைவலிக்க அதைவெட்டிவரும் சிரமத்தைத் தராமலேயே கற்கண்டுக் கட்டிகளாய் நமக்குப் பரிமாறி விடுகிறார் நம் கவிவேந்தர்.காலமெல்லாம் "படிப்பு-படைப்பு"என்றே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இக்கவிஞர் பெருமகனின் பேனா வலிமையை இந்தநூலை நுகர்வோர் அறிந்து வியந்து போற்றப்போவது உறுதி.

ஆண்டு தோறும் அரிய படைப்புகளால் தமிழ்ச் சமுதாயத்திற்கு அறிவு விருந்து படைக்கும் மாண்பாளரான நம்கவி வேந்தர் நீடூழி வாழ்ந்து தமிழன்னைக்கு இதுபோன்ற ஒப்பரிய அணிகலன்களை அணிவித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதே என் பெருவிருப்பம்.தமிழ்போல் ஊழி கடந்து வாழ்கவென வாழ்த்துவோம்.

வாழ்க கவிவேந்தர்! வெல்க அவருடைய எழுத்தாற்றல்!

**செயலாளர்** **நயினை**
**யாழ்-இலக்கியவட்டம்.** **கி.கிருபானந்தா**

**கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து**

இராகம்:பாகேஸ்வரி பல்லவி தாளம்:ஆதி

இன்முகம் மலர்ந்தருளை என்றுமருள்வாள் -இந்த
நாயன்மார் கட்டுஸ்ரீ இராஜரா ஜேஸ்வரி

அநுபல்லவி

அன்பெனும் மலராலே அவளடி துதிசெய்ய
இன்பமெலாம் நிறை இணையிலா வாழ்வுவர

சரணம்

செஞ்சொலிசை பாட சிந்தையெலாம் உருகி
நெஞ்சதனிற் கவலை நீங்கஅருள் தருவாள்
தஞ்சமெனப் பாதம் சரண்புகுந்தால் அன்னை
அஞ்சலென வந்து அரவணைத் தெமக்கு

## நலமாக வாழ்கவென உளமார வாழ்த்துகிறேன்

சிந்தனையி லென்நாளும் சிறப்பாரு மெண்ணமுடன்
சீராகப் பாவிசைக்கும் சிந்தனைப் பெட்டகமே
உந்தனைநான் வாழ்த்துவதி லுவகையே காணுகிறேன்
ஊர்போற்ற பார்போற்ற மணிவிழாக் கண்டிடவே
வந்தனைகள் செய்கின்றேன் வகைவகையாம் வளஞ்சேரும்
வாழ்வினொடு நலமென்றும் வற்றாத நிலைபேறாய்
கந்தனளி யருளாலே காலமெலாம் களிப்புடனே
நலமாக வாழ்கவென உளமார வாழ்த்துகிறேன்.

**சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்**

# செய்பணிகளிந்த செகத்தே நிலைத்திருக்கும்



ஞானிகளும்,யோகிகளும் நடமாடிய நல்லையம்பதிக் கருகாமையில் உள்ள நாயன்மார்கட்டுக் கிராமத்திற்பிறந்த தீந்தமிழ்க்கவிஞர் இராசையா குகதாசன் அவர்கள் சித்தம் புகுந்து தித்தித் தினிதுாறவல்ல பலநூற்றுக்கணக்கான பாடல் களை இறைகள்மீது யாத்து இம்மண்ணில் விதைத்துள்ளார். அவர்கள் மணிவிழா காணுவதையிட்டு மிகமிக மனமகிழ்வெய்துகின்றோம்.

பிரபல கவிஞர்களான சொக்கன்,வீரமணி போன்ற பலபெரியார்களின் உள்ளத்திலிருந்து வழங்கப்பெற்ற ஆத்மார்த்த ரீதியான ஆசியுடனும், அறிவுறுத்திய வழியைப்பின்பற்றியும் தெய்வீகப்பாடல்களை ஆக்க வேண்டுமென்ற சிந்தனையுடன் பாடல்களை ஆக்கியுள்ளார்.

"புவியதனில் பிரபுவான புகலியில் வித்தகர்போல" தான் பாடவேண்டு மென்று ஆசைப்பட்டு அருணகிரிநாதர் பாடியுள்ளதுபோல இவரும் அந்த அருணகிரி தந்த சந்தத்தமிழ்ச் சிந்துபோல தானும்பாட வேண்டுமென்று விரும்பி,அந்த உள்ளுணர்வானது உந்தித்தள்ள மனஉறுதியுடன் இப்பணியை மாண்புறச் செய்துள்ளார்.

வாழ்வுபெற்ற வல்லி சோழஇளவரசி மாருதப்புரவீகவல்லியின் மாவை ஆதீனப்பேரரசின் ஆதீனகர்த்தர் மறைந்த "மகாராஜஸ்ரீ" சு.து,ஷண்முக நாதக் குருக்களது அருளாணையை ஏற்று கீரிமலை கு.நகுலேஸ்வரக் குருக்கள், முதுபெரும் புலவர்வை.க சிற்றம்பலம், கலாநிதிக.வைத்தீஸ்வரக் குருக்கள் போன்றோரது ஆசிகளையும்,ஆலோசனைகளையும் தனது கவிப்புலத்திற்கும், புலமைக்கும் தரும் ஊக்கமாக,உந்துசக்தியாகக்கொண்டு சந்தத்திருப்புகழ் அமைப்பிலே அறுநூறு பாடல்களைப் பாடியுள்ளார்.

நாயன்மார்களைச் சிந்திக்கவைக்கும் நாயன்மார்கட்டுப்பதியிலே பிறந்தவராகையால் இயற்கையாகவே திருமுறைகள்மேல் அதீத பற்றுடையவராய் இருப்பது வியப்பன்று.திருமுறை ஆலயங்களில் படும்பாட்டைக்கண்டு சகிக்காதவர். சொற்பிழை, பொருட்பிழை, இடப்பிழை, அவமதிப்பு போன்றவற்றுக் கெதிராக அவ்வப்போது நாவலர் வழியிலே

கண்டனம் தெரிவிப்பவர். இதன்மூலம் திருமுறைக் காவலராகவும் திகழ்பவர். அவரின்பணி மிகமெச்சத்தக்க பணியாகும்.பேசுவது சுலபம். செயல்படுத்துவ தென்பது சாதாரண விடயமல்ல.இவர்செயல் வீரராகவே திகழ்ந்தார். நாயன்மார்கள் அருளிய சைவத்திருமுறைகளை"திருமுறைத் தேனமுதம்" என்ற தலைப்பிலே வெளியிட்டு பலரும் பிழையின்றிப்பாட வழி சமைத்தவர்.1999ஆம் ஆண்டு மூன்று ஒலிப்பேழைகளையும்,2000 ஆம் ஆண்டு திருவெம்பாவை,திருப்பள்ளி எழுச்சி அடங்கிய இரு ஒலிப் பேழைகளையும், 2003ஆம் ஆண்டு மூவர்தேவார இறுவட்டொன்றையும், 2007 இல் தென்னிந்திய வாத்தியக் கலைஞர்களது பக்க வாத்தியத்துடன் ஐந்து இறுவட்டுக்களையும் வெளியிட்ட பெருமைக்குரியவர். இந்தப் பத்துப் இறுவெட்டுக்களையும் பாடும் பணியில் அடியேனையே ஈடுபடச் செய்து வெற்றி கண்டவர்.

ஈழத்திலே பலமாவட்டங்களிலுள்ள ஆலயங்களின் மூர்த்திகளின் கீர்த்திபற்றி திருவூஞ்சல்,திருப்பள்ளி எழுச்சி,திருவூடல், கீர்த்தனைமாலை, போன்றவற்றை யாத்தளித்துள்ளார்.இவர் உருவாக்கிய அம்பாள் இசைமாலை அக்காலத்தில் உலகெங்கும் ஒலித்ததோடு இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பானது குறிப்பிடத்தக்கதாகும்.

சமயப்பணியோடு,பலசமூகப்பணிகளையும் ஆற்றிவருவதை உங்கள் எல்லோரையும்போன்று நானுமறிவேன்.அதுமட்டுமல்ல பயன்கருதாது பாடும்பணியில் உள்ள எம்போன்றோருக்கு ஆக்கமும் ஊக்கமும் தருபவர்.பயன்கருதாப்பணிசெய்த பண்ணிசைப்புலவர் வேலுப்பிள்ளை சிவஞானம் அவர்களுக்குப் பெருவிழா எடுத்தவர். இவ்வாறு இவர்ஆற்றிய பணிகள் நெஞ்சிருக்கும்வரை நினைவுகொள்ளத்தக்கதாகும்.

இப்புலமை யாளரின் மணிவிழா சிறக்கவும்,வெளியிடப்பெறும் மணி விழா மலரான "தெய்வப்புகழிசைத் தேனமுதம்"தெய்வீகமணத்தோடு பக்திநெறி பரப்பவும் எல்லாம் வல்ல நடராஜப்பெருமானதும்,எனது குருநாதர்களதும் பொன்னார் திருவடிகளை சிந்தித்து,வந்தித்து ஏற்றிப் போற்றி மகிழ்கின்றோம்.

**குமாரசாமி வீதி**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தேவாரஆசிரியர், தாவடியூர்**
**கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்.**

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B 1 மாவட்ட உப ஆளுநரும் யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியின் ஆலோசகர் சபை சிரேஷ்ட உறுப்பினரும், பிரபல சமூக சேவையாளரும், அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய



## "கருமத்திருதி" "கோவைக்குரிசில்" லயன் Dr.வை.தியாகராஜா MJF, J.P. அவர்கள் வழங்கிய மணிவிழா வாழ்த்து

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான முருகப்பெருமானின் புகழ்பாடும் நல்லூர் - நாயன்மார்கட்டை பிறப்பிடமாகக் கொண்டவரும் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரும், பழகுவதற்கும் பேசுவதற்கும் இனியவருமான கவிஞர் இராசையா குகதாசன் அவர்களின் அறுபது அகவை நிறைவு மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

அன்புக் கவிஞர் குகதாசன் அவர்கள் செய்து வருகின்ற இறைபுகழ் பாடும் ஆன்மீகப்பணி மகத்தானது. அப்பணி எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பேறல்ல.

ஆண்டவன் அருட்கடாட்சம் பெற்றவர்களினாலேயே நிறைவேறக் கூடியது. இலங்கையிலுள்ள முருகப்பெருமானின் தலங்களை மட்டுமல்ல ஏனைய தலங்களிலு முள்ள இறைமூர்த்தங்களின் பேரிலும் திருப்புகழ் பாடிய அரும்பணி அளப்பரிய பணியாகும்.அவரது அகவை அறுபதின் நிறைவில் அறுநூறு திருப்புகழ் நூலுருப்பெறுவது பாராட்டப்பட வேண்டியது.

அழகன் முருகனோடு, மற்றுள தெய்வங்கள் மீதும் அறுநூறு திருப்புகழ் பாடியதுடன் அதனை மணிவிழா நாளில் நூலுருவில் வெளியிடும் செயலும் செயற்கரியசெயலாகும்.

அந்நிகழ்வு இறைவன் அருட்பிர வாகத்தால் நிகழும் பெரும்பணி. மணிவிழா நாயகன் மயிலேறும் பெருமானின் புகழ்பாடி சைவ மக்களை மகிழ்வித்தமை பாராட்டுக்குரியது. "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" பருகத்தந்த கவிஞர் குகதாசன் எல்லா நலங்களும் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் நல்வாழ்வு வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

வாழ்க பல்லாண்டு

**லயன் டாக்டர்.வை.தியாகராஜா** MJF ,J.P
**சர்வதேச லயன்ஸ் கழகங்களின்**
**306** B1 **மாவட்ட உப ஆளுநர்,**
**ஸ்ரீலங்கா.**

உ
சிவமயம்

**ஸ்ரீ கலைமகள் நாடக சபா**
**SRI KALAIMAGAL NADAKA SABHA**

ஸ்தாபிதம் :1933 Estd: 1933

KALAIMAGAL VEETHY,
ARIYALAI WEST,
JAFFNA.

கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
..16:07:.....2014..

# விழுமியம் பேணிவாழும் வியத்தகு கவிஞர்



இலங்கைமணித் திருநாட்டின் கண்ணேயிருந்து அருளாட்சி செய்கின்ற ஆலயங்களின் மூர்த்திதலக் கீர்த்திகளை அருணகிரி பாடிய சந்தக்கவிச் சிந்தான திருப்புகழ் போற்பாடி இந்த மண்ணில் புதியதோர் அத்தியாயம் ஒன்று இன்று படைக்கப் பெற்றுள்ளது.இதற்குக் காரணகர்த்தாவாக விளங்குபவர் "தெய்வப்புகழிசை வாரிதி" நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் ஆவார்.இவரின் அருட்பணி போற்றுவதற்குரிய தொன்றாகும்.சைவ விழுமியப் பண்புகளை பேணிப் பாதுகாத்து, தன்னகத்தே கொண்டு விளங்கும் யாழ்ப்பாண மண்ணில் புகழ்பூத்த சித்தர்களும் யோகிகளும் உலாப்போந்த நல்லூருக்கு அருகாமையில் அமைந்த நாயன்மார்கட்டுக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சங்கிலி அரசனாற் கட்டப்பெற்ற வெய்யிலுகந்த விநாயகரும், அரசகேசரியார் அமர்ந்து இரகுவம்சம் பாடிய குளத்தின் முன் அமர்ந்திருக்கும் அரசடிவிநாயரும்,அன்னை இராச இராசேசுவரி(பேய்ச்சி) அம்பாளும் அருளாட்சி செய்யும் திருப்பதியில் வாழும் இவர் சிறந்ததொரு தமிழறிஞர்.இறை கடாட்சம் கைவரப் பெற்ற ஓர் அருட்கவி.சந்த ஓசைபிறழாது கவி படைக்கும் ஆற்றல் வல்லோன்.இயல்பாகவே கவிதைகளை இயற்றும் திறமை மிக்கோன்.

ஈழத்தில் தன் புலமைத் திறத்தால்ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பெற்றிராத பலவிருதுகளைப் பெற்ற இவர் விழா நாயகனாக மட்டுமல்ல விருதுகளின் நாயகனாகவும் விளங்குகின்ற பெருமைக்குரியவராகிறார்.எமது சமய இலக்கி யங்கள் கூறுகின்ற பல்வேறு விழுமியப் பண்புகளை பின்பற்றி வாழுகின்ற இவரின் மணிவிழா மங்கலம் சிறப்புற நடைபெறவும்,ஷண்முகப் பிரசாதமாக வெளிவரும் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"திக்கெட்டும் தெய்வீக மணம் பரப்பவும்,இவரது சமய,இலக்கியப் பணிகள் தொடரவும் எமது கலைமகள் நாடக சபாவின் சார்பில் வாழ்த்துவதோடு, இவர் தன் கவித்துவ வாழ்விற் திளைக்க நாவில் நின்று நர்த்தனமாடும் அன்னை கலைவாணியின் பேரருளை வேண்டி மனமொழி மெய்களால் வழுத்துகிறோம்.

**ஸ்ரீகலைமகள் நாடக சபா**
**அரியாலை,யாழ்ப்பாணம்.**

**ஐயாத்துரை குமரதாசன்**
**செயலர்**

# கலாநிதி சு.மேகனதாஸ் அவர்களின் கண்ணியமார் வாழ்த்து

## விரிவான தேடலில் விளைந்திட்ட அருட்புகழ்



"ஷண்முகப்பிரசாதமாக" வெளிவரும் தெய்வப் புகழிசைத் தேனமுதம் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனநிறைவும் பெருமகிழ்வும் அடைகிறேன் இலங்கை பூராகவும் அமைந்துள்ள திருத்தலங்கள் மீது திருப்புகழ் பாட எடுத்த கைங்கரியம் மிகத் துணிச்சலானதும் போற்றுதற்கும் உரியதாகும்.

"அருட்கவிச் செல்வர்" இராசையா குகதாசனின் விரிந்த தேடற் பணியும், கடின உழைப்பும், மிகுந்த அர்ப்பணிப்புமே இவ்வருட்புகழ் நூல் வெளி வரக் காரணமாக அமைகின்றது. அதுமட்டுமல்ல பல தலங்கள் மேல் சந்தக்கவிச் சிந்து பாடிய அநுபவமும், ஆற்றலும்', புலமையும், பல சைவப் பெரியார்களின் நல்லாசியும் இவருக்கு நிறையவே உண்டு. அதனோடு இறையருளும் துணை சேரவே வாடாத பாமாலைகளாக இணையிலாப் புகழ்மாலைகள் படைக்கப் பெற்றுள்ளன.

தேடற் கரிதான வெளிமாவட்டங்களிலுள்ள தலங்களை நிறைய உள்ளடக்கி வெளிவரும் ஷண்முகப்பிரசாதம் அடியார்களுக்கு மாத்திர மன்றி, சைவப் பெரியார்களுக்கும், மாணவர்களுக்கும் நிறைந்த பல பிரயோசனத்தைக் கொடுக்கத் தக்கதாக அமையுமென்பது திண்ணம்.

விநாயகரின் புகழ், பராக்கிரமம், வரலாறு போன்றவற்றை இணைத்து அரியாலை நீர் நொச்சித் தாழ்வு சித்தி விநாயகரை

அவருரைய தேநி னைத்து அடியிணைய தேது திக்கும்
அதிபெரிய ரான கச்சிக் -- கணேசையர்
உரியசைவ ஆக மத்தி லுரைவழிய தேச மைத்து
ஒளிருமரி யாலை வைத்துத் -- தரவேதான்
உருகிடுவர் வாழ்வு பெற்று உலகுபல யோக முற்று
உலவவரி தான சித்தி -- தருகோனே என்றும்

கரியதிரு மாலெ டுத்த அரவுருவ தேய ழித்து
அரியுருவ தேகொ டுத்த -- திறலோனே என்றும்

பாடுகிறார். திருத்தலங்களின் மூர்த்திகளின் கீர்த்திகளைப் பாடுவது

சுலபமான காரியமல்ல. ஆனால் நூலாசிரியர் திரு.இராசையா குகதாசன் அவர்கட்கு அது அருட்கொடையாகவே கிடைக்கப்பெற்றது.

நூல் வெளியீடும், மணிவிழாவும் மிகவும் சிறப்பாக அமைய இறையருளை வேண்டி அவரது தெய்வீகப்பணி மேன் மேலும் மெருகுற வாழ்த்துகின்றேன்.

**முன்னைநாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**532 கண்டி வீதி, அரியாலை**

**கலாநிதி.சு.மோகனதாஸ்**
**பல்கலைக்கழக மானியங்கள்**
**ஆணைக்குழு அங்கத்தவர்**

## மனமார வாழ்த்துகிறேன் மாண்புடனே நீர்வாழி

கண்யமொடு சீலமெலாம் கைவரப்பெறு நண்பரே
காசினியியே புகழ்சந்தக் கவிபாடிப் புவிமீதே
எண்ணிலரும் போற்றியதை ஏற்றிடவே யரங்கேற்றி
ஏரம்பன் அருளாலே இகம்போற்ற நிறைவான
புண்ணியமார் பணிகளளி புருஷோத் தமரேநீர்
புகலரிய பெருவாழ்வை மனையா ளுடனே
மண்புகழ மாண்புடனே மங்கலமாய் வாழ்கவென
மனதார வாழ்த்துகிறேன் வாழியபன் நூறாண்டே.

**தெய்வத் தமிழ்ச்சுடர்.இராசையா ஸ்ரீதரன்**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம்:சல்லாபம் பல்லவி தாளம்:ஆதி

ஆனந்தமய வாழ்வு தருவாள் - அன்னை
ஈனம்நேராதிருக்க நித்தம் நித்தம் அருள்வாள்

அநுபல்லவி

வானத்தவர் புகழும் வளநாயன் மார்கட்டில்
மோனத்தவத் திருந்து மேன்மையெல்லாம் நல்கி

சரணம்

உளமெனும் மலர்கொண்டு அவள்பாத மர்ச்சிக்க
வளமேவு வாழ்வுவர வாயார வாழ்த்திடுவாள்
கழல்மணி சிலம்பொலிக்க களிநடம் புரிந்துள்ளம்
புளகாங்கிதம் கொள்ள பூரிப்போடு அமர்ந்து

# முன்னாள் துணைவேந்தரின் முத்தனை வாழ்த்து தேசப் பரப்பை விரித்த தெய்வப்புகழ்



பக்தி இலக்கிய பாரம்பரியத்தில் திருப்புகழ் கொண்ட இடம் தனித்துவமானது. ஆத்மாவை ஆழ அசைத்திடும் திருப்புகழின் சந்தமும், மனச் சரவணத்தின் அழகை வெளிப்படுத்தும் கவிதை நயமும் இணையிலாதவை.

அருணகிரி நாதரினால் தமிழுக்கு வாய்த்த திருப்புகழ் வடிவத்தை தங்கள் மனவெளிப்பாட்டுக்கான சாதனமாகப் பயன்படுத்தி வெற்றி கண்டவர்களில் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் குறிப்பிடத்தக்கவர்.

முருகனுக்கானது திருப்புகழ் என்ற மரபின் வழி ஈழத்து முருகன் ஆலயங்கள் மீது பாடிய குகதாசன் இப்பொழுது திருப்புகழின் எல்லையை விரிவாக்கி ஏனைய தெய்வங்களுக்கும் திருப்புகழாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐநூற்றியறுபது ஆலயங்கள், அறுநூறு திருப்புகழ்கள் தமிழுக்கு புதுவரவாகின்றன. தேசப்பரப்பெல்லாம் விரிந்த எங்கள் பண்பாட்டு எல்லைகளைத் தொடும் இந்த "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" எங்கள் மனங்களையும் மிகஆழ வசப்படுத்துகின்றன.

"தெய்வப் புகழிசை வாரிதி"யான இராசையா குகதாசனின் உள்ள அழகும் பண்பாட்டு உணர்திறனும் திருப்புகழ் முழுமையும் துலங்குகின்றன. சமூகப்பயன் நிறைந்த தம் அறுபதாம் ஆண்டு நிறைவினை "ஷண்முகப் பிரசாதமாக" வழங்கும் குகதாசன் புவனேஸ்வரி தம்பதியரின் வாழ்வு, தெய்வத் திருப்புகழ் அமுதமென நிறைந்திட எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

**கலாநிதி என்.சண்முகலிங்கன்**
**முன்னாள் துணைவேந்தர்.**
**தலைவர், சமூகவியல் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

# திருப்புகழ் பாடும் அருட்கவி வாணர்



யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு "தெய்வத்தமிழிசைக்கவிஞர்" சிவத்திரு இராசையா குகதாசன் ஜே.பி அவர்களின் அகவை அறுபதையொட்டி ஷண்முகப்பிரசாதமாக வெளிவரும் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்னும் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகதிலகம் இ.குகதாசன் ஓர் அருட்கவிஞர். கடவுளின் கருணை வாய்க்கப் பெற்றவர். இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள இந்து ஆலயங்கள் மீது அருட்புகழ்ப் பாக்கள் பாடிய அருளாளர்.

இவர் இளமைக்காலம் முதல் இயல்பாகவே கவிதை பாடும் வல்லமை வந்து வாய்க்கப் பெற்றவர். இந்து ஆலயங்கள்மீது பாடியுள்ள பாடல்களின் ஒரு தொகுதியை மணிவிழாவன்று வெளியிடுவது இறைவன் திருவருளாகும். இறைகளை திருப்புகழ் பாணியில் புகழ்வதில் இவருக்கு நிகர் இவரே. இவரது பாமாலைகளெல்லாம் சைவத் தமிழ்த் தேன முதமாகவே தெரிகின்றது.

மணிவிழா சிறக்கவும், மணிவிழா நாயகரான இப்பெரியார் இன்னும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து இதுபோன்ற பணிகளில் மேன்மேலும் ஜொலிக்கவும், இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்**

**பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்**
**தலைவர், இந்துநாகரிகத்துறை**

# உள்ளொளி பெற்ற உயர்தமிழ்க் கவிஞர்



திருவாளர் இராசையா குகதாசன் அவர்கள் ஒரு சிறந்த கடவுள் பக்தன். இவர் முறையான சைவ வாழ்வை சைவர்கள் அநுட்டித்து அதன் மூலம் சிவனருள் பெற்று இவ்வுலகத்தில் சாந்தியும் சமாதானமும் கைகூடும் என்ற நம்பிக்கையோடு பல்வேறு சபைகளிலும் குறிப்பாக சைவ வித்தியா விருத்திச் சங்கம், சைவ பரிபாலன சபை போன்றவற்றின் நிர்வாக சபைகளில் இருந்துவெகு சிறப்பாகக் கடமையாற்றியவர். இவர் சொல்வதையே செய்வார். செய்வதையே சொல்வார்.சிறந்த ஒழுக்க சீலராக வாழ்பவர்.இவரைப்பற்றி நிறையச் சொல்லலாம். ஏனெனில் இவரின் வாழ்க்கையே சைவ வாழ்வாக விளங்கு கின்றது.

சைவ நாயன்மார்கள் இறைவனை இசையாற் போற்றித் துதித்துப் பாடி சைவர்களையெல்லாம் பக்திமழையில் நனைவித்ததோடு இறையன்பில் மூழ்கவும் செய்தனர். இப்போதும் தேவார திருவாசகங்களை உரிய பண்ணோடு பாடும்போது நாமெல்லாம் சிவத்துடன் கலந்து விடுவதுபோன்ற பேரானந்தம் ஏற்படுகின்றது. அதேபோன்று "வாக்குக்கு அருணகிரி"என்று தெய்வத்தமிழைத் திருப்புகழாகத் தந்த அருணகிரி நாதரையும் சைவத்தமிழ் உலகம் ஏற்றிப் போற்றுகின்றது.

"ஞானம் என்பது ஈசன்பால் அன்பே"என்பது தெய்வச் சேக்கிழாரின் அநுபூதி மொழி.பேருணர்வாகிய ஞானம் என்பது ஈசன் பாலன்பாகும். அத்தகைய அன்பைப் பெறும் மார்க்கமாக அமைவது இசையன்றோ. இந்தவகையிலே புராணபடனங்களில் பங்குபற்றியும்,ஓதுவா மூர்த்தியாக ஆலயங்களிலே தெய்வத்தமிழாம் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்,திருப்புகழ் என்பவற்றை ஓதி,ஓதி வந்தும், அதனாற் பெற்றுக்கொண்ட திருவருட் சக்தியினாலே உள்ளொளி பெற்றும், இலங்கைத்திரு நாட்டில் உள்ள தலங்களுக்கெல்லாம் திருப்புகழ் பாடும் அருட்பணி கைகூடப் பெற்றவர்தான் நம் அன்புக்குரிய தெய்வத் தமிழிசைக்கவிஞர் குகதாசச் செம்மல் ஆவார்.அருணகிரி நாதசுவாமிகளின் திருப்புகழுக்கு ஈடாக ஒரு அருட்புகழைப் பாடக் கூடிய தகைமையை அந்த இறையருளே இவருக்கு வழங்கியுள்ளது. இலங்கைச் சைவ ஆலயங்

களில் வீற்றிருக்கும் இறைகளின் நலத்தை அருள்வழி நின்று அவனருளாலே அவன்கழல் புகழ் பாடுவதும் அருட்செயலே.ஆலயங்கள் இறைவனின் பேரருள் நிறைந்திருக்கும் அருள்நிலையங்கள். இவ்வருள் நிலையங்களின் தெய்வீக சக்தியை,அதன் ஐதீகத்தை எடுத்தியம்பும் வகையில் இவரின் திருப்புகழ் அமைந்திருப்பது போற்றத்தக்கதாகும். ஈழச்சைவர்களுக் கெல்லாம் பெருமை தரக்கூடியது.இந்தியத் திருத் தலங்களுக்கு நம்மவர்கள் யாத்திரை செல்வது தொன்று தொட்டு நடைபெற்று வரும் ஒரு நிகழ்வாகும்.இவற்றில் பாடல் பெற்ற தலங்களும் அடங்கும்.

இந்தவகையில் இராசையா குகதாசன் பாடிய திருப்புகழை ஒத்த அறு நூறு அருட்பாடல்களைப் பெற்ற ஐநூற்றி அறுபது திருத்தலங்களும், இனிமேல் பாடல் பெறஇருக்கும் திருத் தலங்களும் எதிர்காலத்தில் தல யாத்திரை செய்யும் தலங்களாக விரைவில் விளங்கும் பேறைப் பெறும் என்பது திண்ணம். ஏனெனில் இப்பாடல்கள் சாதாரண உலகக் கவிதைகள் அல்ல. இவையெல்லாம் அருளின் விளைச்சல்.அன்பர் குகதாசன் தன்ஆன்மீக பயணத்தில் உய்வுபெற மிகஉயர்ந்த நிலையில் இவற்றைப் படைத்துள்ளார்.

வாழிய இவர் மேன்மை, வளர்க இவர் இசைத்தொண்டு

**இந்துநாகரிகத்துறை** **நாச்சியார் செல்வநாயகம்**
**யாழ்,பல்கலைக்கழகம்** **முதுநிலை விரிவுரையாளர்.**

## கவிஞரின் நவராத்திரி திருமகள் கீர்த்தனையிலிருந்து

பல்லவி

திருவருள் தாருமம்மா திருமகளே --உந்தன்
அருளொடு பொருளுமிந்த அவனியெலாம் பெருக

அநுபல்லவி

பெருநிதி யேயருளு போரொளியே தாயே
கருதுபொன் பொருளோடு காலமெலாம் வாழத்

சரணம்

சரணடை யேதிலியார் சார்துய ருழலாதே
வரமருளிக் காக்கும் வண்மையுடை தாயே
தரணிவாழ் யாவரதும் சங்கடந் தீர் தருவே
பரமஆ னந்தமதை பரிந்தருளும் திருவே

# பக்தி இலக்கியங்களில் பரிச்சய முடையவர்



கவிஞர் இராசையா குகதாசன் அவர்களின் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்னும் நூல் வெளி வருவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்

கவிஞர் இராசையா குகதாசன் அவர்களை நீண்ட நாட்களாக நன்கு அறிவேன். அவ்வப்போது பத்திரிகைகளில் அவர் எழுதும் பக்தி பூர்வமான பாக்களைப் படித்திருக்கின்றேன்.

கலாநிதி சொக்கன் முதலான மூத்த தமிழறிஞர்களின் தொடர்பும் நட்பும் இவரது கவிதைப் பாதையைச் செப்பனிட உதவிய தெனலாம். பழந்தமிழ் இலக்கியங்களிலும் பக்திஇலக்கியங்களிலும் நல்ல பரிச்சயமுடைய குகதாசன் திருப்புகழ் மீது அளவிறந்த ஆர்வம் உடையவர்.அந்த ஆர்வத்தின் வெளிப்பாடே அவரைத் திருப்புகழ் சந்தத்தில் பாட்டமைக்க உதவியதெனலாம்.

சந்தக்கவிகளுக்கு என்றும் நன்மதிப்புண்டு. "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா"என்று பாடிய பாரதி அதேவாயால் "பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா"என்றும் பாடிப் போந்தான்.

குகதாசனின் அறுநூறு திருப்புகழ் ஒருசேர ஒருநூலாக வெளிவந்ததும் அவரின் புலமை மேதாவிலாசத்தை தமிழ்கூறும் நல்லுலகம் அறியும் வாய்ப்பு உண்டாகும். திருப்புகழ் சந்தத்தில் பாடுவதென்பது "இலேசான" காரியமல்ல குகதாசனுக்குத் திருப்புகழ் சந்தம் கைவந்திருக்கின்றது. அருணகிரியார், அபிராமிப்பட்டர் முதலியோரிடம் பக்தி பூண்ட குகதாசன் புராணபடன வித்தகராகவும் திகழ்கின்றார்.

1996 ஆண்டு யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்த பொழுது எனது சொந்த ஊரான கரவெட்டியிலேயே அவரும் இருந்தார்.கரவெட்டி யார்க்கரு விநாயகர் ஆலயத்திலே மார்கழித் திருவாதிரையின் போது திருவாதவூரடிகள் புராணம் படித்தோம்.

குகதாசனும் எம்முடன் சேர்ந்து புராண படனம் செய்தார்.இப்புராண படனத்தை ஒவ்வொரு நாளும் தவறாது அருகிருந்து கேட்டுக்கொண்டிருந்த இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகர் எம்மையும் திரு குகதாசன் அவர்களையும் மனமுவந்து, மனந்திறந்து பாராட்டினார். இப்படியான சான்றோர்களின் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக் கொண்ட "தெய்வத் தமிழிசைக்கவிஞர்" இராசையா குகதாசன் இன்னும் இன்னும் பல கவிமாலைகள் யாக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

ஈழ நாட்டுத் திருத்தலங்கள் பலவற்றின்மீது திருப்புகழ் பாடிய பெருமை இவர் ஒருவரையே சாரும்.

"ஆதிமுத லேயி ருந்த ஆலயமி தாகு மென்று
ஆறுமுக நாவர் தந்த – உரையாலே"

எனத் திருக்கேதீஸ்வரப் பெருமான் மீதுபாடும் குகதாசன் வரலாற்றுச் செய்திகளையும் ஆங்காங்கே பதிவு செய்வது பாராட்டிற்குரியது.

அகவை அறுபது நிறைவடைந்து மணிவிழாக்காணும் தம்பதிகளின் மணிவிழா சிறக்கவும், அவரது பாடும்பணி மேன் மேலும் தொடரவும் வாழ்த்துவோமாக.

**பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா.**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம் :ஷண்முகப்பிரியா — தாளம்:ஆதி

பல்லவி

ஆதரித் தருள்வாய் அம்மா--அம்மா --உந்தன்
பாதமே கதியென்று பணிந்திடு மென்னை

அநுபல்லவி

சோதனை போதுமம்மா மாதவன் சோதரியே
வாதனை புரியாது வருந்துமுன் அடியனை

சரணம்

மலைபோலத் துயர்சூழ்ந்தும் தெரியலையா? தாயே -இல்லை
நிலைகுலைந் தழுமோசை விழவிலையா
குலதெய்வம் நீயன்றி துணை வேறுண்டோ --இந்
நிலமீதில் உனதருளுக் கிணைவேறுண்டோ?

# சைவமும் தமிழும் தழைத்தோங்க வாழ்பவர்



அறிமுறை நிலையிலும் ஆற்றுகை நிலையிலும் சைவத்தோடும் தமிழோடும் வாழ்ந்து வருபவர் கவிஞர் இ.குகதாசன் அவர்கள்.

தமது வாழ்வையும் பணிகளையும் சைவத்தின் செய்திகளாகத் தந்து கொண்டிருப்பவர். சைவசமயத்திற்குரிய தனித்துவமான கல்வி முறைமைகளான குருகுலக் கல்வி, திண்ணைமரபுக்கல்வி, புராணபடனக்கல்வி, மடாலயக்கல்வி முதலியவற்றைத் தமது எழுத்துக்களாலும்,தெய்வீக உரைமரபுகளாலும் நீட்சிகொள்ளச் செய்துவருபவர் கவிஞர்இ.குகதாசன் அவர்கள். சொக்கன் ஐயாவின் ஞானமரபு வீரமணி ஐயாவின் தெய்வீக இசைமரபு, கலாநிதி தி.கமலநாதனின் கல்விமரபு ஆகியவற்றோடு சங்கமித்து திருவூஞ்சல்கள் திருப்பள்ளி எழுச்சிகள்,திருப்புகழ் மாலைகள்,கீர்த்தனங்கள் ஆகியவற்றை விரதமிருந்து உருவாக்கி வருபவர்.

இசை,பக்தி,தமிழ் ஆகியவற்றுக்கிடையேயுள்ள ஒன்றிணைப்பை அறிவு நிலையிலும் உணர்வுநிலையிலும் புரிந்து கொண்டமையின் வெளிப்பாடாக அவரது இறைபுகழ்க் கவிகள் அமைந்துள்ளன.

இலங்கையில் உள்ள அனைத்துத் திருப்பதிகளைத் தரிசித்தலும், அவற்றைப் பாடுபொருளாக்குதலுமான சைவவழிபாட்டு மரபைத் தொடர்ந்து பின்பற்றுதல் காலத்தின் குறிப்பறிந்த ஆற்றுப் படுத்தலாகின்றது.

சைவக்கல்விமரபும்,கவிமரபும் ஆற்றுப்படுத்தலையும்,சீர்மியத்தையும் உட்பொருளாகக் கொண்டவை.உலகநிலை வரங்களின் அழுத்தங்க ளிலிருந்து விடுபடுவதற்கு உதவுபவை.கவிஞரின் எழுத்து முயற்சிகள் அந்த வகையில் நிலைத்தபதிவுகளாகின்றன.

“நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை”இவர் மேற்கொண்ட உச்சமான

பாடல் முயற்சி.இதுவரை யாருமே மேற்கொள்ளாத பிரமாண்டமான ஆக்கம். நாவலர் வரலாற்றை வசன வடிவில் எழுதுதல் சுலபம். அதனைப் பாடல் வடிவிலே பழுதின்றி எழுதிய அவரின் கவித்துவம் வரலாற்றுப் பதிவுக்குரியது.

சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் முதுபெரும் சைவப்பெரியார்களான கலாநிதி க.வயித்தீசுவரக்குருக்கள்,முதுஞானி வை.க.சிற்றம்பலம் ஆகியோரின் ஆற்றுப்படுத்தல்,கவிஞர் இ.குகதாசனின் இறைபுகழ் இலக்கியப் பணிக்கு மேலும் வலுவூட்டிய வண்ணமுள்ளது.

இவர் தெரிந்தெடுத்திருக்கும் திருப்புகழ் சந்தப்பாவடிவம் சமகாலச் சூழலில் பக்தியுடன் இணைந்த சந்தமுக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது. இவ்வளவு பெருந்தொகையான திருப்புகழை பக்திச் சுவையோடும், தலத்தொடர்போடும் பாடியிருத்தல் கவிஞர் இ.குகதாசனுக் குரிய தெய்வீகத் தனித்துவமாகின்றது.

இவரது மணிவிழா சிறக்கவும்,இறைபுகழ்பாடும் இலக்கிய ஆற்றல் நெடிது நீட்சி கொள்ளவும் எமது இனிய வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா.**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம்:மாயாமாளவகௌளை தாளம் ஆதி

பல்லவி

ஆடிமாசம் ஒருவிழா அன்னைக்கோர் திருவிழா
நாடிவரும் அடியார்நல் வாழ்வுபெறும் ஒருவிழா

அநுபல்லவி

வாடியுனைத் தேடிவரும் வஞ்சியர்கள் வாழ்விலின்பம்
கூடிவரப் பெற்றிடவே கொடியேற்றத் திருவிழா

சரணம்

ஆர்த்தெழுந்து அன்னையருட் பவனிவரும் கொடியேற்றம்
ஏத்து மடியார் வாழ்வு என்றும் பெரும் முன்னேற்றம்
கூத்தனிடப் பாகமதை கொண்டவளின் திருப்பாதம்
பார்த்து மகிழ்ந்தவர் பெறுவர் பார்வதியின் அருட்பார்வை.

உ
சிவமயம்

# சிறு வண்டொன்று இசைபாட வளர்ந்திட்ட கோலம்

**பிறந்த ஊர்**

இந்துமா சமுத்திரத்தின் முத்தெனத்திகழ்வது இலங்கை.இந்த இலங்கைமணித்திருநாட்டின் சிரசாய்த்திகழ்வது யாழ்ப்பாணம்.யாழ்நகரின் நெற்றித்திலகமென சுடர்விட்டுப்பிரகாசிப்பது நாயன்மார்கட்டு என்ற சிறிய கிராமம்.நல்லூராரைத் தலைநகராகக்கொண்டு அரசாண்ட யாழ்ப்பாண இராச்சியத்து மன்னர்களின் கிழக்குக்கோட்டை வாயிலாகத்திகழ்ந்த திருவூர்.அதுமட்டுமல்ல அலங்காரக்கந்தன் என்று அகில உலகமே போற்றும் நல்லூர் முருகப்பெருமானின் அருளாட்சிக்குட்பட்ட ஒருசிறு ஊர்.அவன் ஆலயத்தைச் சூழவிருந்து வேற்பெருமானின் திருவருட்பார்வைக்குப் பாத்திரரான மக்கள் வாழுகின்ற கிராமங்களில் இதுவும் ஒன்றாகும்.

பரராசசேகர மன்னனின் மருகரான அரசகேசரி என்பார் மத்தியில் ஐங்கோண வடிவிலே அமைந்திருந்த நீராழி மண்டபத்திலேயிருந்து தென்றற் காற்றிற் தவழ்ந்துவரும் மலர்களின் வாசனையை நுகர்ந்தபடி "இரகுவம்சம்"என்ற நூலைப்பாடிய திருக்குளம் இருந்து அழகுதரும் சிறப்புக்குரியஊர். இலங்கையின் முதல்நூலகமாக விளங்கிய "சரஸ்வதிமஹால்"இங்குதான் அமைந்திருந்தது.மன்னராட்சிகாலத்திலேயே பிரசித்திபெற்ற சித்தவைத்தியசாலை இருந்ததும் இங்குதான். இலங்கைத்தமிழரின் நாகரிகச்சிறப்பிற்கோர் விளக்கமாக இலங்கைத்தீவிலேயே தங்கியிருந்து வைத்தியம்செய்யக்கூடிய ஓர்வைத்தியசாலையாக இவ்வைத்திய சாலைதிகழ்ந்தது. மன்னனால் கிழக்கெல்லைக் கோவிலாக அமைக்கப்பெற்றவெயிலுகந்த பிள்ளையாரும், அரசகேசரி மன்னனால் கட்டப்பெற்றதாகக் கருதப்படும் அரசகேசரிப்(அரசடி) பிள்ளையாரும்.அன்னை இராஜஇராஜேசுவரி(பேய்ச்சி) அம்பாளும் இருந்து அருளாட்சிசெய்யும் திருவூர்.

**பிறப்பு**

இவ்வூரிலே கார்காத்த வேளாளர் மரபிலே மிதித்த இடத்துப்புல்லும் சாகாது என்று ஊரே புகழ்ந்து பேச சைவ நெறிமுறை வழுவாது, அந்நெறியிலிருந்து தன்இறுதி மூச்சுவரை பிறழாது வாழ்ந்தவர்தான் திரு.இராமலிங்கம் இராசையா அவர்கள்.தன்வாழ்வியற் தொழிற்பாடு களினோடு அன்னையின் திருமேனியை அலங்கரிக்கும் மலர்மாலைக்குத்

தேவையான புட்பங்களை சேகரித்து வழங்கும் திருப்பணியையும் செய்துவந்த ஓர்பெரியார்.அன்னைக்குப் பூமாலை சூட்டி மகிழ்ந்த இவருக்கும் இவர்தம் மனையாட்டி தங்கலட்சுமித் தாய்க்கும் இரண்டாவது மகனாக திரு அவதாரஞ் செய்தவர்தான் இன்று இறைமூர்த்தங்களுக்கு பாமாலை சூட்டி மகிழும் "தெய்வத்தமிழிசைக்கவிஞர்"இராசையா குகதாசன் ஆவார்.

கருவிலேயே கவிதைபாடும் திருவினைப்பெற்ற இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்-நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலத்திலேயே கற்றுக் கொண்டார்.இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலே பெற்றார்.

இங்குதான் தமிழாசிரியராக இருந்த ஏழாலைப்பண்டிதர் இராசையா என்பவரால் இவரது கவித்துவ வாழ்விற்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. இயற்கையாக அமைந்த இவரது தமிழார்வத்தையும், கவியாற்றலையும்உய்த்துணர்ந்து ஊக்கப்படுத்தினார். பாடசாலைக் காலத்திலிருந்தே பொழுது போக்காகக் கவிதை எழுதி வந்தபோதும் 1977 ஆம் ஆண்டிலிருந்துதான் திருப்பம் ஏற்பட்டது.

## கா.இரகுநாதன் அவர்களின் பங்களிப்பு

அக்காலத்தில்"சொக்கன்"போன்ற பிரபல எழுத்தாளர்களெல்லாம் இருந்ததால் இவருக்கு வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும்.நண்பர் வட்டாரம் திருமண வாழ்த்துப்பாவிற்கு இவரையே நாடும்.அப்படி நண்பர் வட்டாரத்தின் கோரிக்கைக்கு ஏற்ப இவர் கொழும்பிலிருந்து எழுதிக் கொடுத்த ஒருவாழ்த்து அச்சுப்பதிவிற்கு அக்காலத்தில் பிரபலமாயிருந்த இந்துசாதனம் இதழை வெளியிடும் சைவபரிபாலன சபைக்குச்சொந்தமான சைவப்பிரகாச அச்சுயந்திர சாலைக்கு வந்திருக்கின்றது. அங்கு தான் இரகண்ணை என்று எல்லோராலும் அன்பாக அழைக்கும் இரகுநாதன் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

தமது நாயன்மார்கட்டுக் கிராமத்தில் சைவமுந் தமிழும் வாழுகிற தென்றால் அதற்கு மூலகாரணமானவர் இரகண்ணைதான் என்பார். நாயன்மார்கட்டு மக்களின்நலந்தீங்கெதிலும் தவறாது திருமுறை பாடுவார். பேய்ச்சியின் ஆலய மகோற்சவங்களிலாகட்டும், மார்கழி திருவெம்பாவையி லாகட்டும் எந்தப் பனியோ,மழையோ,வெய்யிலோ,நேரமோ பொருட்படுத்தாது

தான்திருமுறை ஓதுவதோடு மட்டுமல்லாது அப்போது சிறுவர்களாயிருந்த இவர்களையும் விடாது இழுத்துச்சென்று அப்பணிகளில் ஈடுபடுத் துவாராம். அவரின் கைக்கு அச்சுக்கோப்பதற்கு வாழ்த்துச் சென்றிருக்கின்றது.ஆக்கம் இராசையா குகதாசன் நாயன்மார்கட்டு என்றிருப்பதைப்பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்த அவர் கொழும்புக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் இவ்வளவு நாளும் இப்படி எழுதுவாய் என்று தெரியாமல் இருந்துவிட்டதாயும் நன்றாக வந்திருக்கென்றும் தெரிவித்தாராம்.இவரும் சந்தோஷத்தில் வேறுவிடயங்கள் பற்றி, முந்தி எழுதின நறுக்கெல்லாம் இருக்கென்று சொல்ல எல்லாவற்றையும் அனுப்பென்று அவர்சொல்ல அவைகளை அனுப்பிவிட்டு அதை மறந்தும்விட்டாராம்.

## குருவாக வந்தார் சொக்கன் ஐயா

யாழ்ப்பாணம் லீவில் வந்திருந்த நேரம் இவரை வந்து சந்தித்த இரகண்ணர் எல்லாம் பாரத்தேன். நன்றாக உள்ளது.சொக்கன் ஐயாவிடமும் சொன்னேன். நீர் ஒருக்கால் சந்தியும் அவரை என்றுவிட்டு,இவர்வந்துள்ள சேதியை சொக்கனையாவிற்கும் தெரிவித்து இருக்கிறார். ஓரிருநாட்கள் இவர் அலட்சியமாக இருந்துவிட்டாராம்.

சொக்கன் ஐயாவிடம் இருந்து ஒருநாள் அழைப்பு வந்தது. சென்றபோது அவர் கையில் முன்பு புழுகில் இரகண்ணைக்கு அனுப்பிய நறுக்கெல்லாம் இருந்தது. அதைப்பார்த்ததும் வியர்த்து விறுவிறுத்து விட்டதாம்.அவரும் எடுத்த எடுப்பில் பரவாயில்லை,துண்டெல்லாம் பார்த்தேன்.நன்றாக அமைந்திருக்கு.என்றாலும் சில சொல்லாட்சிகளை மாற்றி இப்படி,இப்படிப் போட்டால் பொருத்தமாக இருக்கும்என்று விளக்கங்கள் சொல்லி பாடமெடுக்க,அதாவது படிப்பிக்கத் தொடங்கிய போது தான் இரகண்ணை மாட்டிவிட்டார் என்ற சங்கதியை இவர் உணர்ந்து கொண்டாராம்.

மதியம்வரை தொடர பசி,திடீரென மூதறிஞர் முன் நின்ற தயக்கம், நடுக்கம், வியர்வை எல்லாம் பார்த்து சரி நாளைக்கும், இனியாழ்ப்பாணம் வந்தால் அப்போதும் தவறாது வாரும் ஒழுங்குபடுத்தி,சீராக்கி எழுதவைக்க வேண்டும் என்றாராம்.ஒன்றுமே சொல்லாமல் சிக்கலுக்குள் இழுத்துவிட்டார் என்ற கோபத்தோடு அச்சகத்திற்குச்செல்ல இரகண்ணை நிலமையை உணர்ந்து சந்தோஷத்திலே காட்டினேன். அதுமட்டுமல்ல நீங்கள் தான் வாத்தியார் பெடியனை வழிப்படுத்தி விடவேணும் என்றும் சொன்னேன்.

வருகிற வேகத்தைப் பார்த்தால் வாத்தியார் வகுப்பெடுத்திருக்கின்றார்போல் தெரிகின்றது.சரி கவிதைகள் நன்றாக வந்தால் உனக்கும் பெருமைதானே என்று ஆதுரமாக உரையாட அந்தவெள்ளையுள்ளத்தின் முன் தன்கோபமெல்லாம் பறந்ததை இன்றும் சொல்லி நகைப்பார்.இவ்வாறு தொடங்கிய வகுப்பு யாராவது வாழ்த்தெழுத வந்தால் சொக்கனையா எனக்குக்கொஞ்சம் சுகமில்லைப்பாருங்கோ பக்கத்திலே ஒருபெடியன் எழுதுகிறான்.நான் எழுதிவாங்கித்தாறன் என்று எழுதி,எழுதி இனி சுயமாக எழுதுவான் ,எழுதவிடலாம் என்றுஅவர் திருப்திப்படும்வரை நடந்தது. முதலாம் கட்டத்தை இரகண்ணையும் சொக்கனையாவும் இணைந்து நகர்த்திவைக்க இரண்டாம் அத்தியாயத்தைஅன்புக்குரிய உடன்பிறவா சகோதரரான கலாநிதி.திருநாவுக்கரசு கமலநாதன் நகர்த்தியதாகச் சொல்வார்.தன்னுடைய பத்திரிகைத்துறை நண்பர்களை அறிமுகப் படுத்தி இவரது ஆக்கங்கள் அன்றைய சகலபத்திரிகைகளிலும் வர வழிசமைத்தார்.

**டி.எம்.எஸ் உடன் சந்திப்பு**

அன்றைய காலகட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒரு இசைநிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யும்போது ஐம்பது அல்லது அறுபது பேர் ஒலிப்பதிவுக் கலையகத்தில் அநுமதிக்கப்படுவார்கள்.அப்படியானதொரு சந்தர்ப்பத்தில் யாழில் கச்சேரி முடித்துவந்த டி.எம்.எஸ் அவர்களது இசைநிகழ்ச்சி. ஒலிப்பதிவின்போது அவருடன் ஒருமணித்தியாலம் உரையாடும் வாய்ப்புக்கிடைத்தது.பல்வேறு கருத்துப்பரிமாற்றங்களின் நடுவில் பாடல் அமைப்புப்பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.இலங்கையில் பாடல்கள் பிரபலமாகாத காலம்.இவரது கேள்வி பாடல் எழுதும் முறையில் பிழையா? அல்லது இசையமைப்பில் குறையா? என்பதே.இவரின் அறிமுக நிகழ்வின்போது யாழ்ப்பாணத்தவர் என்றுசொன்னதை மனதில் வைத்து இவரைப்பார்த்து நான் பாடிய "கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன்"என்ற பாடல்மட்டுமல்லாது வேறும்பல பாடல்களை எழுதியுள்ள வீரமணி ஐயாஇருக்கும் ஊரிலிந்து வந்த நீரா இக்கேள்வியை எழுப்புகிறீர்? என்று பதில்கேள்வி கேட்டிருக்கின்றார்.அதுவரை வீரமணி ஐயாவை ப்பற்றி அறியாதிருந்ததையெண்ணி அன்று வருத்தப்பட்டதாக இன்றும் கூறுவார். அந்த நிகழ்வின் பின் இருவிடயங்கள் தோன்றியதாம்.முதலாவது வீரமணி ஐயாவைச் சந்திக்க வேண்டும்.இரண்டாவது கீர்த்தனைகள் எழுதப்பழக வேண்டும்.

## வீரமணி ஐயா காட்டிய விநோதம்.

சௌந்தர ராஜனின் சந்திப்பு நிகழ்ந்த அன்றே தன் குலதெய்வமான பேய்ச்சி ஆச்சிக்கும் பாடல்கள் எழுதி ஒலிப்பேழையாக்க வேண்டுமென்ற எண்ணம் மேலிட பாடல்களை மிகமுயன்று எழுதிமுடித்தார்.பின் யாழ்வந்த போது வீரமணி ஐயாவைச் சந்திக்க அண்ணர் தி.கமலநாதன் ஏற்பாடு செய்திருந்தாராம்.குறித்த நாளில் வீரமணி ஐயாவைச் சந்திக்கச் சென்றனர்.பேய்ச்சி ஆச்சிக்காக எழுதப்பட்ட பாடல்களோடு அவரின் ஆசிவேண்டியும் ஒருபாடல் எழுதிச்சென்றாராம்.

அப்பாடல்

எமைப்பெரும் வியப்பி லாழ்த்தும் எழிலுறு சாகித் யங்கள்
சமைப்பதில் வல்ல ரான சற்குருவீ ரமணி ஐயா
இமைப்பினில் கவிதை சொல்லும் இலக்கியச் சுரங்க மேயுன்
அமைப்பினில் கவிதை சொல்ல ஆசியை நல்கு வாயே.

அறிமுகம் நிறைவுபெற்றதும் அவர் பாடலைப் பார்க்கக்கேட்க இவர் ஆச்சியின் பாடலைக் கொடுக்காமல் இப்பாடலைக்கொடுத்துள்ளார்.எளிதில் உணர்ச்சி வசப்படும் மென்மையான உள்ளங்கொண்ட வீரமணி ஐயா இப்பாடலைப் படித்து முடித்ததும் மகிழ்ச்சியின் உச்சத்திற்கே சென்று கட்டிப்பிடித்துத் தூக்கித் தனது சாமியறைவரை கொண்டுசென்று தலையிலும், வாயிலும் விபூதியிட்டு ஆசிநல்கியதை இன்றும் நன்றிப் பெருக்கோடு நினைவுகூர்வார். இதன்பின் குருவாயும்,தோழனாயும், ஆசானாயும் இருந்து கீர்த்தனை நுட்பங்களை அவர் விளக்க இவர் கற்றுத்தேர்ந்தார்.

## கரவைக்குமரன் கலைமாமணி செ.குமாரசாமியின் சந்திப்பும் நட்பும்.

இன்னவாறாக கீர்த்தனை பாடுவதை அறிந்திருந்த நண்பர் என்.இராஜேஸ்வரன் இவரை சங்கீதபூஷணம்,இசைமாமணி செ.குமாரசாமி அவர்கட்கு அறிமுகம் செய்து வைத்தார்.இவரின் கீர்த்தனை எழுதும் முயற்சிக்கு இவரே தீனிபோட்டவரெனலாம். சீர்காழி கோவிந்தராஜன் பாணியிற்பாடும் இவர் தன்னுடைய கச்சேரிகளிலெல்லாம் இவரின் கீர்த்தனைகளைப்பாடி பிரபலப்படுத்தினார்.பாதை அடைபடுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பு கூட திருகோணமலை பத்திரகாளி அம்மன்கோவில் கச்சேரிக்காக மூன்று கீர்த்தனைகள் ஒத்திகை பார்க்கப்பெற்றிருந்ததை

இன்றும்நினைவு கூர்வார்.இவரைப்பற்றிக் குறிப்பிடும்போது உழுந்தூர் பேட்டை சண்முகத்திற்கு ஓர் சீகாழி போல நாயன்மார்கட்டுக் குக தாசனுக்கு ஓர் கரவைக் குமாரசாமி என்று பெருமையோடு குறிப்பிடுவார். இருவரும் இணைந்து பல கீர்த்தனைகளை அரங்கேற்றினர். இடப்பெயர்வு காலத்தில் யாக்கருப் பிள்ளையாருக்காக எழுதிய "கரிமுகவாரண"என்ற கீர்த்தனை பல இடங்களில் முதற்பாடலாகப் பாடப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இருவரும்மிகஆழமான அன்பும் நட்பும் கொண்டிருந்தனர். எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நேரத்திலேயும் இருவரது நட்பின் ஆழத்திற்கு அடையாளமாக உருவாக்கப் பெற்ற யாழ்ப்பாணத்தின் முதலாவது ஒலிப்பேழையான "அம்பாள் இசைமாலை" உலகெங்கும் ஒலித்து அந்தநேரத்தில் பெருவரவேற்பைப் பெற்றதோடு இருவருக்கும் பெரும்புகழையும் ஈட்டிக் கொடுத்திருந்தது.

## தெய்வீகப்பணிக்கான திருப்பம்.

எழுதவேண்டும் என்ற ஆர்வத்தில் எந்தவிடயம் என்றில்லாமல் எல்லாவிடயம் பற்றியும் கிறுக்கித்திரிந்த இவரை தெய்வீகவழியிற் திருப்பிய பெருமை குருநாதர்களான சொக்கன் ஐயாவையும்,வீரமணிஐயாவையும் சாரும்.இருவரும் இறையருளினாலே தெய்வீகப்பாடலை மட்டும்பாடும்படி ஆணையிட்டார்கள். அதுமட்டுமல்ல அவ்வாறு பாடல்கள் எழுதும்போது கடைப்பிடிக்கும் வழிமுறைகளையும் இருவரும் ஒரே விதமாக உபதேசித்தார்கள்.இறை மூர்த்தங்களுக்கு படையல் செய்வதாயின் எப்படி குளித்து, முழுகி உடல்,உளத் தூய்மையோடு செய்கிறோமோ அதேபோல பாமாலை என்ற படையலுக்காக பாடல் புனையும் போதும் உடல்,உளத் தூய்மை பேணவேண்டும் என்று புகட்டினார்கள். அதுமட்டுமல்ல ஒவ்வொரு பூர்வபக்க விநாயக சதுர்த்தி அன்றே குளித்து சந்தியாவந்தனம் முடித்து காப்பையாவது அல்லது காப்பின் ஓரிருவரிகளையாவது பாடிவிட்டு பின் நூலை வசதிபோல் பாடப்பணித்தார்கள்.தவிரவும் படுக்கைக்குச் செல்லுமுன் ஒருசெம்பு தண்ணீர் விளக்கு(அந்தநேரத்தில் மின்சாரம் இல்லை) என்பவற்றை ஆயத்தமாக வைத்துவிட்டு எந்த இறைமூர்த்தத்திற்கு பாடல் புனையப்போகிறீரோ அந்த மூர்த்தத்தை மனதிலே தியானித்து வேண்டிக்கொண்டு தூங்கப்பணித்தார்கள். இரவு எந்த நேரமென்றில்லை ஆழ்ந்த அமைதியான நேரத்தில் பாடல் உறக்கத்திலிருக்கும்போதே உள்ளத்தில் ஓடும்.விடியப்பார்க்கலாம் என்றால் விடிய எல்லாம் மறந்துவிடும்.உடனே எழுந்து வாய்கொப்பளித்து விட்டு எழுதப் பணித்தார்

கள். இப்படியாக எழுதும் பாடல்கள் தான் ஊன்கலந்து வரும். சிந்தித்து எழுதும்பாடல்கள் திறமையாக வராது என்று புகட்டினார்கள். அவர்கள் ஆணையை ஏற்று இன்றுவரை அவர்கள் உபதேசித்த முறையிலேயே எழுதிவருகிறார்.அதுமட்டுமல்ல அன்றிலிருந்து கல்வெட்டு எழுதுவதை முற்றாக நிறுத்திவிட்டார்.பொய்மையாளரைப் பாடுவதையும் விட்டுவிட்டு எந்தை புகழையே பாடத்தலைப்பட்டார்.விளைவு திருவூஞ்சல்கள் எழுந்தன. யாழ் மாவட்டத்தில்மட்டுமல்ல கொழும்பு,திருகோணமலை,மன்னார் போன்றபல இடங்களிலுமுள்ள ஆலயங்களின் மூர்த்திகளுக்கும் பாடியளித்தார். மகோற்சவ காலங்களில் சகலபத்திரிகைகளிலும் அருட்பாக்களும், புகழ்ப்பாக்களும். பிறந்தன."தடஸ்த" நிலையிலிருந்த இறைகள் இவர்பாடப்பாட இவரைநோக்கி அருள் நோக்கம் செய்தன. திருவருள் கூட்ட பாடல்களும் பலநிலையிற் தோற்றம்பெற்றன.

## மாவைக்கந்தன் மனங்கொண்டு ஆட்கொண்டான்

சுயமாக மாவைக்கந்தனைத் தரிசிக்க முடியாத ஒரு நேரம்.அனுமதி பெற்று ஆடிக்கிருத்திகை உற்சவம் பார்க்க இவர் சென்றிருக்கின்றார்.மாவை ஆதீன கர்த்தர் "மகாராஜஸ்ரீ"சு.து.ஷண்முகநாதக்குருக்கள் ஒரு தூண்அருகே நின்றிருந்த இவரைப்பார்த்து "நீர்பாடுமன்"என்கிறார். இவருக்கு அவரைத்தெரிந்தாலும் அவருக்கு இவரைத்தெரியாது. வேறு யாரையோ சொல்கிறார்போலும் என்று திரும்பிப்பின்னால் பார்க்க அவர் சற்றுக்கோபமாகி உம்மைத்தான் இன்றைக்கு"நீர்பாடும்"என்கின்றார். இவருக்கோ புத்தகம் இல்லாமல் பாடும் பழக்கம் இல்லை.புத்தகம் தேடும்அளவுக்கு நேரமில்லை. வசந்தமண்டப பூசை திருமுறை ஓதப்படும் கட்டத்திற்கு வந்துவிட்டது. அக்காலத்தில் குருக்களின் கோபம் பிரசித்தம். பிழையாகப் பாடினால் என்ன நடக்குமென்று பக்கத்தில் நின்றவரின் பயமுறுத்தல் வேறு. முருகனையே துணைக்கு அழைத்து வேண்டி திருமுறையை ஒழுங்காக ஓதி காளாஞ்சியும் பெற்றுக்கொண்டார். இப்படித்தான் ஓதவேண்டும் என்று ஒரே ஒரு வார்த்தை மட்டுந்தான் இருவரும் பேசிக்கொண்டது. இறைவன் திருவுளம் வேறுவிதமாக இருந்ததை இருவரும் அறிகிலர்.ஆவணி சதுர்த்திக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் இவரின் மதிப்புக்குரிய வரும்,சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய தலைவருமான திரு வ.கந்தசாமி ஐயா சதுர்த்தியில் அன்று பிள்ளையார் கோவிலில் திருமுறை ஓதக்கேட்டிருக்கின்றார்.

அப்போ இவர் மாவிட்டபுரத்தில் நடந்ததைக் குறிப்பிட்டு எனக்குப்பயமாக இருக்கின்றது என்றிருக்கின்றார்.ஏன் என்று கந்தசாமி ஐயா கேட்ட போது இறைகள் கிட்ட அடிக்கடி கூப்பிட்டால் பயந்தானே ஐயா.தற்செயலாக முத்தியைக்கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்றிருக்கின்றார். அவரும் சிரித்து விட்டுவிபரம் கேட்க இவர் நடந்ததைச்சொன்னதோடு இறைவன் ஏதோ பணிகொள்ள விழைந்து தான் இத்திருவிளையாடல் செய்திருக்கின்றான்.இதை யோசித்து பல நாளாக நித்திரையுமில்லை.மன உழைச்சலாகவும் இருக்கு என்றிருக்கின்றார். ஒருநிமிடம் கண்மூடி நின்றிருந்த கந்தசாமி ஐயா நீர் திருப்புகழ் அழகாக எழுதுவீர்தானே. ஒருவேளை அதுதான் கேட்கிறாரோ தெரியவில்லை.புகழைப்பாடிவிடும் என்கின்றார்.கேட்டதிலிருந்து இவர் மனதிலும் அதுவரை இருந்த குழப்பம் தீர்ந்தது போல ஒரு அமைதி.அவனருள் வேண்டி அவன்தாள் நினைந்து குருவடியையும் திருவடியையும் மனமொழிமெய்களால்வணங்கி குருமார்புகன்றவாறே ஆவணி சதுர்த்தி அன்று காப்பை எழுதி முடித்து கந்தசாமி ஐயாவிடம் காட்டிய தோடு தொடர்ந்து இருபத்தி ஏழு பாடல்களை எழுதி முடித்தார்.எழுதிய பாடல்களின் பிரதிகளை ஆலயவிலாசத்திற்கு அனுப்பிவைத்தார்.என்னே ஆச்சரியம் ஒருவாரத்தின்பின் குருக்களின் கடிதம் இவர்கைகளில்.அறிமுகமே இல்லாமல்தான் அனுப்பிவைத்திருந்தார்.

எனினும் பாராட்டுக்கடிதமும் விபூதிபிரசாதமும் வந்தது மாத்திரமல்லை எதிர்வரும் ஆடிக்கிருத்திகைக்கு ஷண்முகருக்குத் திருப்புகழ் அர்ச்சனை நடைபெறும். உமது இருபத்தேழு பாடல்களும் பாமாலையாக இசைக்கப்பெற்று ஆறு குருக்கள்மார் ஆறுபக்கமும் நின்று ஒவ்வொரு பாடலுக்கும் பூச்சொரிந்து திருப்புகழ் அர்ச்சனை செய்ய இதே திருப்பகழ்கள் ஆறு உருத்திர வீணைமூலம் இசைக்கப்பெற பக்க வாத்தியமாக இந்தியாவிலிருந்து வந்திருக்கும் சிறப்பு மேளமும் வாசிக்க கோலகலமாக அரங்கேற்றப்படும். என்றிருந்ததைப்பார்த்து அழுதேவிட்டாராம்.அது மட்டுமல்ல மாவிட்டபுரத்தில் ஒரு அரங்கேற்றம் நடைபெற வேண்டுமென்றால் எழுதியவர்யார், அவர்வாழ்வியல்பற்றிய பார்வை,அவரின் ஒழுக்க விழுமியம் எல்லாம் ஆராயப்பெற்றுத்தான் நடைபெறும்.உமது பாடலைப்பார்த்தபின் அத்தகையதகுதி தாராளமாக உண்டு என்று கருதி அரங்கேற்றம் நடைபெறும்.வந்தே தீரவேண்டும் என்றுவிட்டாராம். போக்குவரத்து இல்லாத நேரத்தில் முருகன் பேரருளைவியந்து விமானமூலம் வந்து அரங்கேற்ற நிகழ்வில் கலந்துகொண்டார்.

அரங்கேற்ற ஆரவாரங்கள், கூட்டங்கள்,பூசைகள் முடிந்தபின் சிறப்பு அர்ச்சனையும்,தரிசனமும் மாவைக்கந்தன் கருவறை வாசலில்வைத்து வெகுசிறப்பாக நடைபெற்றது.இவை நிறைவேறியதின்பின் கருவறை வாசலில் ஆசீர்வாதம் செய்ய குருக்கள் அமர இவர் விபூதி போடுவதற்கு வசதியாக நிலத்தில் அவர் காலடிக்குச்சமீபமாக இருந்திருக்கின்றார். தலையிலும், வாயிலும் விபூதியைப்போட்டு ஆசீர்வதித்த குருக்கள் பேரன்பின் வெளிப்பாடாக பாடல்கள் வெகுஉச்சம்.இது நீர் பாடவில்லை. முருகனே அதிட்டித்து நின்று பாடியிருக்கின்றான்.என்றாலும் நீர் ஒரு "தெய்வத்தமிழிசைக் கவிஞர்"தான் இதில் இருகருத்தில்லை வேலன் வாசல்முன் வைத்து நான்வழங்கிய இந்த விருது உம்முடைய இறுதிக்காலம்வரை உம்மோடு நிலைத்து நின்று துணையாக வரட்டும் என்றாராம். குருவருட்பெருக்கினாலும், திருவருட் பெருக்கினாலும் இருவர் கண்ணிலும் கண்ணீா. ஓரிரு நிமிடங்களில் ஓரளவு சகஜநிலைக்கு இருவரும் திரும்ப இவர் கந்தசாமி மாஸ்டர் தான் இந்த ஆலோசனையைச் சொன்னவர் என்றாராம். இவ்வளவு காலமும் கீழே சொல்லப்படும் அற்புதத்தை அறியாததால் குருக்கள் ஏன் அதீத, மிகஉன்மத்தமான பக்திப்பெருக்குடன், ஒரு வித படபடப்புடன் நடந்து கொள்கிறார் என்று யோசித்து அனுமானிக்க முடியாது தவித்து வந்த இவர் காரணத்தை அறிந்தவுடன் அவர் பாதங்களில் சாஸ்டாங்கமாக விழுந்து அழுதாராம். இங்கேதான் முருகன் விளையாடினான்.

**பணிகொள்ள விழைந்த பார்பதி மைந்தன்.**

இந்து மாநாட்டிற்கு வந்திருந்த தவத்திரு சாந்தலிங்கம் அடிகளார் இந்த முருகன் முழுலட்சணத்தோடு இருக்கின்றான்.இவருக்குப் பிடித்தமான திருப்புகழ் அர்ச்சனையை வருடத்தில் ஒருநாளைக்காவது செய்யுங்கள் என்று சொன்னாராம்.அதற்குத் தான் வேறு கோவில் மூர்த்தியை விழித்துப்பாடிய திருப்புகழைவிட எமது மாவை முருகனை விழித்துப் பாடிய திருப்புகழ் பாக்கள் என்றால் திருப்புகழ் அர்ச்சனை செய்யலாம்.இப்போ அப்படி எழுத யாரிருக்கினம்.அப்படி யாராவது இருந்து எழுதித்தந்தால் திருப்புகழ் அர்ச்சனை செய்வேன் என்றாராம்.அன்பும்,உரிமையும் கூடும்போது பேச்சுவழக்கு ஒற்றைச்சொல்லில் வருவது இயல்பு. இச்செய்தியைக் கூறிய குருக்கள் "எடேய் மோனை (தன்னைச்சுட்டிக்காட்டி)இந்தச் சண்முகநாதன் கருவறை வாசலில் வைத்து சாந்தலிங்கம்அடிகளுக்குச்சொன்னதைஅந்தச் சண்முகநாதன்

(மூலத்தானத்து வள்ளி,தேவசேனா சமேதரான (முருகனைக்காட்டி) கேட்டு எனக்கு அப்பணியை நிறைவேற்றக் கூடியஆள் இவன்தான் என்று குகனுக்கு தாசனான குகதாசனை அடையாளங் காட்டியும் எனக்கும் விளங்கவில்லை உனக்கும் தெளிவில்லை. பிறகு தன்ரைவேலை முடியவேணுமென்று உனக்கு கந்தசாமியைக்கொண்டு விளங்கவைச்சிருக்கிறார் முருகன். இப்ப விளங்குகிறதா நான் அருணகிரியின் அநுக்கிரகமும்,முருகனே ஞானசாரியாராக நின்று எழுதிவித்தான் என்று சொன்னதும்"என்ற போது இவர்விக்கித்துப்போனாராம்.இதில் கந்தசாமி என்ன நீ,நான் எல்லோரும் கருவிகள்தான்.அவனே ஆட்டுவித்தான்.நாங்கள் ஆடினோம். என்று கண்ணீர்சிந்தினாராம்.

மிகப்பெரும் கோபக்காரர் என்று எல்லோரும் சொல்லும் அந்த மெய்யடியார் நான் சொன்னதைக் கேட்டு என் அப்பன் முருகன் பணிகொள்ளுவித்தானே என்ற அருட் பெருக்கால், பக்தி மேலீட்டால் மெய் உருகி நின்ற கோலம் இன்று நினைத்தாலும் புல்லரிக்கும் என்றார். மேலும் அவர் "எடேய்மோனை நீ கோவிலுக்கு ஒருநாளும் வராத ஆள்.ஆடிக்கிருத்திகைக்கு வாறாய். உனக்குப்பாடத் தெரியுமென்று எனக்குத்தெரியுமோ? நானும் பாடக்கேட்கிறேன். நீயும் பாடுகிறாய்பாடின நீ சும்மா இதை சாதாரணவிஷயமாக எடுத்திருக்கலாம் தானே? நீ ஏன்மனஉழைச்சலுடன் நித்திரையின்றித்தவிக்க வேணும்.கந்தசாமி மாஸ்டர் சொன்னபின்பு ஏன்அமைதி வரவேணும். எல்லாவற்றையையும் கூட்டிக்கழித்துப்பார். ஆக எத்தனையோபேர் இருக்க முருகன் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்றால் அதே உனக்குள்ள தகுதி. மற்றத் தகுதி உண்டோ இல்லையோ என்று பார்க்க நான் யார் என்று நினைத்தே எதையும் யோசிக்காமல் இவ்வளவு ஏற்பாட்டையும் செய்தேன்" இப்ப விளங்குகிறதா என்றபோது முருகன் கருணையை எண்ணி,எண்ணி விழிநீர்பெருக தன்னை மறந்து தன்நாமங் கெட்டு நின்றகுருக்களின் இருதாள் நெடுஞ்சாண் கிடையாய் வீழ்ந்து வணங்கிவிட்டு வந்துவிட்டேன் என்றார்.

பின்பு நகுலேஸ்வரக் குருக்களின் வேண்டுகோளின்படி நகுலாம்பிகா சமேதநகுலேஸ்வரப் பெருமான் மீது பாடிய"சிவனவன் கழற்கோர் செந்தமிழ் மாலை"யும் அடியேனின் வேண்டுகோளை ஏற்று "சந்நிதிக்கந்தன் கழற்கோர் கவிமாலை"யும் வெற்றிவேலாயுதம் ஐயாவின் வேண்டுகோளை ஏற்று"நல்லூர் கந்தன் கழற்கோர் கவிமாலை"யும்பாடப்பெற்றது.இவற்றின் பிரதிகள் யாவும் குருக்களையாவின் பார்வைக்கும் அனுப்பிவைக்கப்பெற்றது.

மாவை கந்தன் புகழ்மாலை அரங்கேற்ற நிகழ்வின் பின் இருவரும் மிகஅந்நியோன்யமாக தொலைபேசியிலும் நேரிலும் பழகிவந்தனர். குருக்களையாவின் பேரறிவைக் கண்டு இவர் வியந்ததுண்டு. இருவரும் யாழ்வரும் நேரங்களிலெல்லாம் ஆலயத்தில்,அல்லது மல்லாகம் வீட்டில் சந்தித்து பலவேறு ஆன்மீக விடயங்களையிட்டு அளவளாவி மகிழ்ந்தனர்.தமிழில் தகர,மகர இணைப்பு செய்யும் எதிர்மறைத்தாக்கம் போன்ற பலவிடயங்களையும் அவர் விளக்க மலைப்புடன் இவர் கேட்டதுண்டு. இப்படியான ஒரு சந்திப்பின்போது தான் இன்று வெளியிடும் நூலுக்கான கால்கோள் இடப்பெற்றது.

### குருக்களின் ஆசையும்,ஆணையும்

வழமையான சந்திப்பின்போது ஒருநாள் இவர் அனுப்பிய எல்லாப் பாடல் பிரதிகளையும் குருக்கள் கையில் கொண்டுவந்து "இங்கை பார்மோனை எல்லாம் படித்துப் பார்த்தேன். மிக,மிக நன்றாக இருக்கு.உனக்கு நல்ல திறமையிருக்குதடா. இப்ப ஒரு வரும் இவ்வளவு சுத்தமாக எழுதமாட்டினம். இறைவன் உன்னை இப்பாடும் பணிக்கு தெரிவுசெய்திருக்கின்றான். நாலு கோவிலுக்கும் ஏறக்குறைய நூற்றிப்பதினாறு பாடல் வந்துவிட்டது. ஒருகோவிலுக்கு ஒருபாட்டாய் பாடியிருந்தால் மோனை நூற்றிப்பதினாறு கோவிலுக்கு பாடியிருக்கலாம். புகழ் பெற்ற கோயில்களைப் பற்றி எல்லோரும் பாடுவினம் ஆனபாடியால் நீ இலங்கை முழுதுமுள்ள கோவில்களின் மூர்த்திகளின் கீர்த்திபற்றி ஒரு திருப்புகழ் வீதம் பாடு. எல்லா மூர்த்தங்களையும் பாடினதாயுமிருக்கும், ஒரு ஆவணமுமாயிருக்கும்" என்ற தனது ஆசையை வெளியிட்டார்.

அதைக்கேட்டு இவர்சிரிக்க குருக்கள் சற்று கோபத்தோடு ஏன் சிரிக்கிறாய் என்று கேட்க "ஆயிரக்கணக்கான கோவில் இருக்கு. அதன்வரலாறென்ன, மூர்த்தமென்ன,இவற்றையெல்லாம் எங்குதேடுவது, படித்துமுடிப்பது, பின்நான்விளங்கி எழுதுவது இதுவெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? என்னுடைய வயதென்ன,வாழ்நாளெத்தனையோ? அதை நினைத்துச் சிரித்தேன்" என்று சொன்னார். குருக்களுக்கு வந்ததே பெருங் கோபம் மடையா நான் முன்னமே சொல்லியிருக்கின்றேன் அருணகிரியும், என்அப்பன் முருகனும் உள்நின்று ஆட்ட நீ ஆடுகிறாய் அல்லாது உன்சுயஅறிவாலல்ல என்று. அப்படியிருக்க இன்னும் நீ எழுதுவதாக நினைக்கிறாயா? போய் எழுதுகிற வேலையை மட்டும் நீ பார். இறைவனுக்கு

எதை,எப்படி,எப்போ செய்யவேண்டுமென்று தெரியும். அதைவிட்டு விட்டு வேறுகதை பேசாதே. இது முன்பு நான் சொன்னதுபோல உன்னுடைய பாடல் எல்லாவற்றையும் ஆலயத்தில் வைத்து நீ அனுப்ப, அனுப்ப நான்படித்தபோது மனதில் தோன்றியது. இது முருகனையே உபாசிக்கும் நான் அவன் வாசலிலிருந்து இது தெய்வீகப் பாடல்கள் தான் என்ற நினைவோடு படிக்க படிக்க என் மனதில் முருகனே இந்த எண்ணத்தை தோற்றுவித்திருக்கிறான் என்று நான் நம்புகிறேன். எனவே நீ பாடு இது என்ஆணை என்றுவிட்டார். மிகுந்த மனக்கலக்கத்தோடு இறைவா! ஒப்பரிய தலங்களிலுள மூர்த்திகளின் கீர்த்திகளை தப்பில்லாத் திருப்புகழாய் நானியற்ற வேண்டுமாம். மன்றாடி மைந்தனே நின்றாளே துணைஐயா. முருகனே!, முன்புகழை யோதிநின்ற அருணகிரியாரே, ஓதி உணர்ந்திடு வார்க் கொப்பரிய கதிகாட்டும் நீதித்திருப்புகழை நீயுளத்தே நின்றுணர்த் தினல்லால் நீசனென தறிவாலே நிலமுரைக்க வல்லேனோ? அன்று அழுதார். மூலமென அகமுறைந்தென் மூளைவழி கருத்தாகி காலங்கடந்து நிற்கும் கவிதைப்பெட்டகமாய், தப்பில்லாக் காவியமாய் பாயவழி காட்டையா பரம்பொருளே சரணமென்று தொழுதார்.ஈழமணித் திருநாட்டில் எழுந்தருளும் இறைகளது திருப்புகழை யெந்தன் சீவனறு முன்னே செப்பிவிட வுந்தன் திருவருளைக் காட்டையா, நாதவடிவான நாதனே நா நின்று நவின்றிடவுன் நற்றமிழை வார்த்திடையா என்று நைந்தருகி விழுந்து வணங்கினார்.

விடைபெற்று வரும்வழியில் இவர்மேல் அன்பும் மரியாதையும் கொண்ட கலாநிதி.க.வயித்தீசுவரக்குருக்களிடம் சென்றார்.சுக,ஷேம அளவளாவலின் பின் மெல்ல விடயத்தைக் கூறினார்.அவரும் ஏன்மோனை அந்தாளுடன் அப்படிக் கதைத்தனீ.முருகன் திருவுளமோ தெரியாதுதானே. முன்பும் முருகன் பணிகொள்ளுவித்த வண்ணம் தெரியுந்தானே.இப்போ ஒன்றும் கதைக்க வேண்டாம். கொழும்பு சென்று என்ன மாதிரியான அடிப்படையில் அமையவேண்டும் என்று கேள். அவர் வழிப்படுத்துவார் என்று ஆலோசனை சொன்னதோடு “உன்னால் முடியும்” என்றார். அப்படியே நூறாண்டில் தற்போது வாழும் இவரின் நலன்விரும்பும் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயா அவர்களையும் சந்தித்து முழுவிபரத்தையும் கூறினார்.அவர் சிவபூசைக்காரர். எதையும் கண்மூடி தியானித்து இறைவாக் காகவே கூறுவார்.சிறிது நேரத்தியானத்தின் பின் வெண்தாடி முகமூடே சிரித்தவாறே “நீ செய்வாயடா” என்றார்.ஆக மூன்று பேரும் சொல்லுகி றார்கள். எனவே குருவருள் கிடைத்துவிட்டது திருவருள் கிடைத்தால் முயன்று பார்ப்போம் என்று கொழும்பு சென்றுவிட்டார்.

## அற்புதம் காட்டினான் ஆண்டவன்

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் திருமுறை ஓதி வந்தவர் திரு அ.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை.அவரோடு மிக நெருக்கமான உறவு இவருக்குண்டு.அவர் மறைவின்பின் அவர் பாவித்த திருமுறை புத்தகங்களை யாரிடம் கொடுத்தால் பயன்படும் என்று அவரதுமகன் அறம்வளர்த்த சுந்தரம்பிள்ளை நினைத்தபோது இவரின் ஞாபகமே வந்துள்ளது.இவர் கொழும்பு திரும்பிய மறுநாள் அப்புத்தகப்பெட்டியோடு கையிலும் ஒருபுத்தகத்தை வைத்தவாறு இவரைச்சந்தித்த அவர் திருமுறைப்புத்தகப் பெட்டியை கொடுத்துவிட்டு கையிலுள்ள புத்தகத்தைக் காட்டி இது அப்பாவுக்கு சைவமாமணி விருதுவழங்கி கௌரவ அமைச்சர் செல்லையா இராஜதுரை அவர்கள் கொடுத்த புத்தகம்.பயன்படுமோ தெரியாது பாருங்கள் என்று கையில் கொடுத்துள்ளார்.வாங்கித்திறந்து பார்த்தால் 1982ஆம் ஆண்டு நடைபெற்ற இந்துமாநாட்டையொட்டி இந்து கலாச்சார அமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்றதான "இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோவில்கள்"என்ற புத்தகமே அது.மாநாடு நடைபெற்ற காலம்வரை இலங்கையின் சகலபாகங்களிலும் உள்ள ஆலயங்களின் சுருக்க விபரம். இறைவன் திருவிளையாடலை, அவன் பணிகொள்ள விழைந்த அற்புதத்தை நினைந்து,நினைந்து வியப்புற்றார்.தொலைபேசியில் ஷண்முகநாதக் குருக்களுக்குச் சொன்னபோது அவர் ஏளனமாக நகைத்து நீ புத்தகத்தை எங்கு தேடுவது. எப்படி எழுதுவது என்று சொன்னாயே. இறைவனே புத்தகத்தைத் தேடாமலேயே உன் கையிலேயே கிடைக்கச் செய்திருக்கின் றான். இறைவன் மயிலில்வந்து உன்னை ஏற்றுவான் என்று பாடல்களைப் பார்த்து முன்னம் நான் சொன்னபோதும் ஒரு சிரிப்பு எழுதடா மோனை என்று சொல்லவும் ஒருசிரிப்பு. இப்போ பார்த்தாயோ நீ தேடாமலேயே தேவையான நூலை தேடிவரவழைத்து உன் கையில் தந்ததன் மூலம் இறைவனே இசைவு தந்துவிட்டான். இப்பவாவது இது முருகன் திருவுளம் தான் என்று கொண்டு நம்பி எழுது. வழியை அவன் காட்டுவான் என்றார். இதுநடந்தது 2012 தையில். அத்தைமாசம் வந்த விநாயகசதுர்த்தி அன்று குருநாதர்கள் சொன்னவாறு உடல்,உளத் தூய்மையோடு வேழமுகத்து விநாயகன் அருளைவேண்டி நடந்த சம்பவங்கள் பெயர்கள் யாவும் அமையுமாறு காப்பு எழுதப்பெற்றது.

யாழ் சென்றபோது காப்பைப் பார்த்து வியந்த அவர் முழுசம்பவத்தையும்

ஒருபாட்டுக்குள்,அதுவும் பதினாறு வரிக்குள் அமைப்பதென்றால் அது முருகன் விளையாடல் தான். எழுதடா வெற்றி தான் என்றார். சரி அமைப்பு முறை பற்றி விளக்குங்கள் என்றார். அவர் உபதேசித்த அமைப்பின் சுருக்கம் பின்வருமாறு.

இறைவனை வழிபடுமுறைகளில் தோத்திர முறையும் ஒன்று.அது ஷட்வித மாகும்.வேதங்கள்,ஆகமங்கள்,புராண,இதிகாசங்கள் போன்றவற்றில் வர்ணிக்கப்பெறும் அந்தந்த மூர்த்தங்களின் மூலக்கருத்தான குணாதிசயங்கள்,தத்துவங்கள்,பராக்கிரமங்கள்,பெருமை,புகழ்,பக்தர்களின் விருப்பம்,வேண்டுதல்,வேண்டும்முறை போன்றபல விடயங்களை விரிவாக இயம்பி அவற்றோடு அந்தந்த ஊர்ப்பெயரையும்,தெய்வத்தின் பெயரையும் இணைத்து பக்திரசமும்,இலக்கியநயமும்,இசைநயமும் கலந்து பாடலை அமைப்பீராயின் அது பாடுபவர் நெஞ்சில் பேரானந்தத்தை விழைவிப்பது திண்ணம் என்றாராம்.

இவ்வுபதேசத்திற் கமைவாக மன்னார் மாவட்டம் எழுதி முடித்துவிட்டேன் என்று அறிவித்தபோது தனது உடல்உபாதைபற்றி தெரிவித்த அவர் யாழ் வரும்போது வாமோனை.ஒன்றுக்கும் சோராமல் தொடர்ந்து எழுது மோனை.இறைன்முடித்து வைப்பான் என்றார்.இதுவே இருவரும் உரையாடிய கசிவார்த்தை. பிரதியுடன் இவர்சென்றபோது அவர்சுயநினைவின்றி வைத்தியசாலையில். பிரதியைப் பாராமலே முருகன் கழலில் சேர்ந்து விட்டார்.இதுவே பாடல் பிறந்த கதையும் இவர் பாடல் புனையுங் கவிஞனாக வளர்ந்த விதமும் ஆகும்.

**பொதுவாழ்வும்,சமயவாழ்வும்**

பாடசாலை காலத்திலிருந்தே நவராத்திரி போன்ற பாடசாலை சார்ந்த சமயநிகழ்ச்சிகள்,பரிசளிப்பு விழாக்கள்,விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை ஒழுங்கமைத்தல் நடாத்த உதவுதல் போன்ற நிர்வாக முகாமைத்துவம் சார்ந்த தொண்டுப் பணிகளில் ஈடுபட்டுவந்தார்.இந்த அநுபவமே பிற்காலத்தில் இவர்பல நிறுவனங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கத் துணையாக இருந்தது. யாழ்-நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்திலும், விளையாட்டுமைதான உருவாக்கக்குழுவிலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலும் இணைந்து அரும்பணியாற்றினார். விளையாட்டு மைதானம் ஒன்று அமைய வேண்டுமென்பதில் முனைப்புடன் செயற்பட்டார்.எந்தவித அடிப்படை

வசதிகளுமற்றதோர் சூழ்நிலையில் ஒரு தனியார் காணியை தற்காலிக மைதானமாகப்பயன்படுத்த அநுமதிபெற்று அரச அதிபருடாக டீசல் வாங்கி யாழ்மாநகரசபையின் உதவியுடன் அக்காணியை சுத்திகரித்து சிலகாலம் மைதானமாகப் பயன்படுத்த வழி சமைத்தார்.அக்காணியை குறைந்த விலைக்கு தர உரிமையாளர் சம்மதம் தெரிவித்தபோதும் உரிய நேரத்தில் பணம்புரட்ட முடியாததால் அதுகைகூடவில்லை.பின் நாயன்மார்குளத்து வயற்காணி ஏறக்குறைய முப்பது பரப்பளவில் காலஞ்சென்ற இ.சரவணமுத்து அவர்களின் உதவியோடு உரிமையாளர்கள் இலவசமாக தரஒப்புதல் அளித்தபோதும் ஆட்சியில் உள்ள பாவனையாளரின் ஒத்துழைப்பின்மையால் பெரிய மைதானமாகப் பயன் படக்கூடிய காணியைப்பெறும் சந்தர்ப்பமும் கைநழுவிப்போனது.பின்னும் தொடர்ந்த முயற்சியின் பயனாக இப்பாடசாலை அமைந்திருக்கும் காணியை அன்பளிப்புச் செய்தவர்களின் வம்சாவழியினருடன் தொடர்பை ஏற்படுத்தி (அப்போது மைதானத்தை வேறு ஒருகழகத்திடம் இருந்து அவர்கள் பொறுப்பேற்ற தருணத்தில்) பாடசாலைக்காகக் கேட்டபோது அவர்கள் பாடசாலைக்கு முழுமனதோடு தரச்சம்மதித்தார்கள். உத்தேச ஒப்பந்த வரைபும் இவர்களுக்கும் காணிச் சொந்தக் காரர்களுக்குமிடையில் முடிவடைந்த நேரத்தில் அதிபர் இறுதிநேரத்தில் ஒப்பமிட மறுத்ததால் அதுவும் கைகூடவில்லை. இப்பணியில் நடிப்பிசைத்திலகம் செல்வரத்தினம் (செல்வம்) அவர்கள் இவருடன் மிகுந்த ஈடுபாட்டோடு ஒத்துழைத்ததை நன்றியுடன் நினைவுகூர்வார். அதுமட்டுமல்ல பாடசாலைக்கான இல்லக் கீதத்தையும் இயற்றி வழங்கியவர். விளையாட்டுப் போட்டிகளின் போது அக்கீதங்கள் மைதானத்தில் முன்னர் இசைக்கப்பெற்று வந்தது.

இந்துபோர்ட் இராசரத்தினத்தின் முயற்சியினால் உருவாக்கப்பெற்ற சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகிய இவர், சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தை பேராசிரியர் அ.சண்முகதாஸ் பொறுப்பேற்ற ஓர் இக்கட்டான காலகட்டத்தில் பணிப்பாளர்களில் ஒருவராக அவருடன் இணைந்து அதன் வளர்ச்சிக்கு ஏறக்குறைய ஒன்பது வருடங்கள் பணியாற்றினார்.சமயத்திட்டப் பணிப்பாளராயும்,கொடித்தினக்குழுத் தலைவராயும், இருந்ததோடு மட்டுமல்ல திரு.ஆறு திருமுருகனின் உதவிப்பணிகள் கிடைப்பதற்கு திரு சகாதேவசங்கரியோடு இணைந்தும் பணியாற்றியிருந்தார்.தவிர இந்துப்போட் இராசரத்தினத்தின் பவளவிழாக் குழுவிலும் அங்கம் வகித்து பவளவிழா சிறப்புற உதவிநின்றார்.பணி நிமித்தம் இவர் கொழும்பு சென்றபோதும் பல நண்பர்களின் ஆதரவினோடு

இன்றும் பிள்ளைகளின் மதிய உணவிற்கான நிதியைப்பெற்றுக்கொடுத்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சைவபரிபாலன சபையினதும் ஆயுட்கால உறுப்பினரான இவர் மிக நீண்ட காலமாக நிர்வாக சபையில் பல்வேறு நிலைகளில் கடமையாற்றி வந்தார்.உறுப்பினராக,உப தலைவராக,செயலராக பல்வேறுபட்ட நிலைகளில் தனது சேவையை வழங்கினார். செயலராக இருந்த காலத்தில் நூறு வருடங்களாக இருந்த யாப்பில் தற்போதைய தேவைகளைக் கருத்திற்கொண்டு நிறுவுனர்களின் நோக்கங்களுக்கு மாறுபடாத வகையில் திரு.த.சண்முகலிங்கம் அவர்களுடன் இணைந்து ஒருபுதிய யாப்பை உருவாக்கி வைத்தார்.பரீட்சைப்பகுதிக்கும் கந்தசாமி ஐயாவோடிணைந்து பல விடயங்களில் உதவி நின்றார். பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு கல்வியியற் கல்லூரியினரின் சேவையைப் பெறுவதற்கும் இவர் காரணராயிருந்தார். நடைபெறும் அனைத்து விழாக்கள்.சைவமாநாடு போன்றவற்றின் வெற்றிக்கும் அயராது உழைத்து நின்றார்.

வேதாந்த மடத்தோடு நீண்ட தொடர்பைப் பேணிவந்த இவர் மடத்தின் வளர்ச்சிக்காக பலவழிகளிலும் உதவி வருபவர்.இவர் பொருளாளராகக் கடமையாற்றிய காலத்தில் கனகரத்தினம் சுவாமிகள் பிரார்த்தனை மண்டபம் கட்டிமுடிக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.இன்றும் மடத்தின் ஆலோசனைச்சபை உறுப்பினராகவும் உள்ளகக் கணக்காய்வாளராகவும் இருந்து அரும்பணியாற்றி வருகின்றார்.

சைவப்புலவர் கந்தசாமி அறக்கொடை நிதிய ஆயுட்கால செயலாளராகக் கடமையாற்றி வருபவர்.தலைவர் வெளிநாடு சென்றிருந்த நேரத்தில் தடையின்றி குறித்த பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி நிறுவுனரின் விருப்புகமைவாக நடைபெற கொழும்புயாழ் போக்குவரத்து இல்லாத நேரத்திலும் தற்காலிகமாக ஒருவரை நியமித்து குறித்தநிதியம் தடையின்றி செயற்பட வழிவகுத்த பெருந்தகை.இன்றும் அந்தநிதியத்தின் செயலராக இருந்து அரும்பணி யாற்றிவருகின்றார்.

நாவலர் பெருமானின் சொத்துக்களை நிர்வகித்து வரும் "நாவலர் தர்மகர்த்தா சபை"யின் பதவிவழி தவிர்ந்த ஏனைய மூன்று உறுப்பினர் களில் ஒருவராக இருந்து அரும்பணியாற்றி வந்தவர்.மீள்புனரமைப்பு நடவடிக்கையிலும் உதவி நின்றவர்.

யாழ்-காயத்திரி காமகோடி பீடம் ஆதரவற்றோருக்கான மறுவாழ்வு இல்லம் ஒன்றை கொழும்புத்துறையில் அமைக்க முயன்ற போது அதை நிறுவுவதற்கான இடஒழுங்குகள் மற்றும் பல்வேறு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததோடு அதன் பொருளாளராக இல்லம் மீசாலைக்கு மாற்றப்படும்வரை கடமையாற்றியவர்.

நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டுக்கழகத்தின் செயலராக பலஆண்டுகள் பணியாற்றி வருபவர். "திருமுறைத்தேனமுதம்" இறுவட்டுக் களை கழகம் வெளியிட முன்னின்று உழைத்தவர்.ஆறு ஆண்டுகளுக்குள் திருப்பள்ளி எழுச்சி,திருவெம்பாவை,திருமுறைகள் அடங்கிய தொகுப்பாக பத்துஒலிப்பேழைகளை தாவடி ஊர் தேவார இசைமணி கே.எஸ்.ஆர். திருஞர்னசம்மந்தன் அவர்களைக் கொண்டு பலகலைஞர்களின் ஒத்துழைப் புடன் பாடுவித்து ஒலிப்பதிவு செய்து வெளியிட்டவர்.

சிறிது காலம் அரியாலைமத்தி-வடக்கு கிராமஅபிவிருத்திச்சங்கத்தின் உப-செயலராகவும் இருந்து பணியாற்றியவர்.

யாழ்-நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் ஆரம்பகாலந்தொட்டு இன்னொருவரின் பங்களிப்போடு ஈழநாடு பத்திரிகையை தவறாது கிடைக்கச் செய்தவர்.நிலாக்கால கருத்தரங்குகளுக்கு தன் அண்ணர் கமலநாதனுடன் இணைந்து பேராளர்களை ஒழுங்கு செய்து பல கல்வி சம்பந்தமான கருத்தரங்குகள் நடைபெற உதவி நின்றவர்.வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி ஊக்குவிக்க வேண்டு மென்ற நல்ல எண்ணத்தோடு பெரிதும் முயன்று ஒரு புலமைப்பரிசில் நிதியத்தை நிறுவியவர்.சன சமூக நிலையத்தின் பொருளாளராகவும் கடமையாற்றியவர். சனசமூக நிலயத்தின் ஆயுட்கால உறுப்பினரான இவரை நிலையம் நிதியத்தின் ஆயுட்கால பொருளாளராக நியமித்தது. சனசமூக நிலையம் நடாத்தி வந்த சிவபரன் பாலர் பாடசாலைக்கான பாடசாலைக் கீதத்தையும் இயற்றியளித்தவர்.

இளங்கலைஞர் மன்றத்தின் வளர்ச்சிக்கு தான்சார்ந்த நிறுவனத்தூடாக ஆரம்பகால கட்டத்திலிருந்து பேராதரவை வழங்கி வந்த வந்த இவர் பின்னர் மன்றத்தின் நியமன ஆட்சிக்குழு உறுப்பினராகவும் இருந்து அரும்பணியாற்றினார்.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபரச்சங்கத்தின் பணிப்பாளர் சபையில் சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் தலைவராகவும் அமரர் நமசிவாயம் அவர்கள் செயலாளராயும் கடமைபுரிந்த காலத்தில் இவரும் ஒரு பணிப்பாளராக இருந்து மீள்புனரமைப்பு பணிகளுக்கான ஆக்கபூர்வமான பல நடவடிக்கை களை எடுத்திருந்தார்.

தவிரவும் இந்துப்போட் இராசரட்ணம் பவளவிழாக்குழு,பேராசிரியர் சண்முகதாஸ் மணி விழாக்குழு,சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி பவளவிழாக்குழு போன்ற பலபெரியார்கள்,பேராசிரியர்கள் போன்றோரின் விழாக்குழுக்களில் பொறுப்பான பதவிகளை வகித்து விழா வெகுசிறப்பாக நடைபெற உதவிநின்றவர்.

**நாவலர் போல் காவலர்**

ஏழாலை.மு.கந்தையாப்பண்டிதர்,சுன்னாகம் திருமதிமங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் பேராசான் க.சிவராமலிங்கம் போன்றோரின் தொடர்புகள் இவரை ஓரளவு சமய ஞானத்துடன் உலவ வழிவகுத்தன. திருமுறையை உயிரெனப் போற்றிவருபவர். பூஜாத்துதியாகவோ, பூஜாவிதியாவோ பெரிதும் கருதப்படாத ஆசீர்வாதத்தின்பின் திருமுறை ஓதப்பெறுவதை முற்று முழுதாக எதிர்த்தவர். இதை நிறுவுவதற்காகவே "சிவாலய பூசையில் சிவத்தமிழ் வேதங்கள்" என்ற நூலை எழுதியவர். அது பொன்னரியம் வெளியீடாக வெளிவந்தது.அபரக்கிரியைகளில் இப்போதும் புத்தளிகைக்குப் பதிலாக ஏனோ தானோ என்று ஒரு கூர்ச்சத்தை வைத்து கிரியைகளை நடாத்துவதையும் கண்டித்தவர். இதற்காகவே புத்தளிகை செய்யும் முறையை உள்ளடக்கிய "அபரக்கிரியைகள் ஒரு நோக்கு" என்ற நூலை எழுதியவர்.திருமுறைப்பெருமை என்ற நூலைஎழுதிய பேரறிஞர் வாழும் காரைநகர் மண்ணில் வாரிவளவுப்பிள்ளையார் ஆலயகும்பாபிஷேக முகூர்த்தப்பத்திரிகையில் திருமுறை ஆசீர்வாதத்தின் பின்தான் ஓதப்பெறும் என்று பலஇடங்களிலும் குறிப்பிட்டத்தைப்பார்த்து கொதித்தெழுந்துதனது நீண்ட கண்டனத்தை ஆலயமுகாமைத்துவம், திருமுறைமன்றம், ஆதீன குருமகாசந்நிதானம் போன்றோருக்கு எழுத்து மூலம் தெரிவித்தவர். குப்பிளான் கற்கரை விநாயகராலய கும்பாபிஷேகத்தில் திருமுறைக்கு அவமதிப்பு ஏற்பட்டபோது பத்திரிகை மூலம் கண்டனம் வெளியிட்டவர். இன்றும் கூட சமயப்பெரியார்கள்,சமய நிறுவனங்கள் சைவ சமயத்திற்கு, அதன் நெறிமுறைகளுக்கு மாறாக எத்தனையோ செயற்பாடுகள் நடைபெறும் போதுகூட கண்டும் காணாத போக்கைக்கடைப்பிடித்துவரும்

கலி காலத்தில் தனிஒருமனிதனாக நின்று நாவலர் அன்று செய்தது போல் துண்டுப்பிரசுரங்கள், கண்டனக்கடிதங்கள் எழுதி சமயத்தின் காவலராக விளங்கி வருகின்றார். இதனால் பலரின் வெறுப்புக்கு ஆளானாலும் நாவலர் சொன்னதுபோல் சிவஅபராதம் நடைபெறப் பாத்திருப்பதும் சிவத்துரோகமே என்ற கொள்கையுடையவர்.

## தெய்வத்தின் மீதும் திருவுளச்சீட்டின் மீதும் நம்பிக்கை கொண்டவர்

குருநாதர்களின் வழிகாட்டலில் இறைபுகழோதும் சிந்தனையில் மூழ்கி இருப்பதாலோ என்னவோ எதுவும் இறைவன் திருவுளப்படி நடக்கும் என்றே சொல்வார்.முடிவுகளை திருவுளச்சீட்டை நம்பி எடுப்பார்.தங்கள் ஊர் ஆலயம்பற்றிய பிணக்கு பற்றி வீரமணி ஐயாவோடு உரையாடியபோது அவர்தெரிவித்த விடயம் பின்னர் பலசிக்கல்களைச் சீரசெய்ய உதவியதாகச் சொல்வார். தெய்வம் ஒரு இடத்தை ஏதோ ஒருகாரணம்பற்றி நிர்மூலம் செய்ய நினைத்தால் கலிகாலத்தின் கோலமான சகல காரியங்களும் நடைபெறும்.ஒவ்வாத பிரதிட்டைகள், கிரியைமுறைகள், குருவைமதியாமை, போன்ற நியதிக்கு,வழமைக்கு மாறான விடயங்கள் நடைபெறும் அவைஅந்த இடத்தின் அழிவுடன் நிறைவுறும் என்று சொன்னாராம். இதுவே பின்னர் கருங்காலி முருகனாலயத்தில் பிணக்கு ஏற்பட்டபோது இலகுவாகத் தீர்க்க முடிந்தது என்பார்.

ஆலயத்தினூடு அறப்பணி நடத்துவதிலும், தொட்டதெல்லாம் துலங்கச் செய்வதிலும் சோமண்ணையை உதாரண புருஷராக கொள்ளலாம்என்பார். வெறும் காவுளாய் காடாயிருந்த ஐயனார் ஆலயம் இன்று பூத்துக் குலுங்கும் நந்தவனமும், ஆலய பூசைக்குத் தேவையான இளநீர், கரும்பு, பழவகை கள், பத்திர வகைகள் தரும் மரங்கள் நிறைந்த சோலையாக்கியதும், அபிஷேகத்துக்கு தேவையான பால், தயிர், நெய், கோசலம், கோமயம், கலந்த பஞ்ச கௌவியத்தை தரும் கோ பலவளரும் கோசாலை, யாகசாலை, பாகசாலை போன்றவற்றைஅமைத்திருப்பதே சாட்சியாகும் என்பார். தவிரவும் ஒரு காலத்தில் சோமண்ணையின் சேவையை (தேவையை) யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் வேண்டி நின்றதையும் நன்றியோடு நினைவு கூர்வார். அதே போல ஆலயத்தை அறவழி, நெறிவழி நடத்துவதில் ஸ்ரீ அண்ணையை உதாரண புருஷராகக் குறிப்பிடுவார். கருங்காலி முருகன் ஆலயவிடயத்தில் அவர் எடுத்த முடிவு அவர் ஒருசிறந்த நிர்வாகி என்பதைக்காட்டுமென்று

இருவிடயத்தைக் குறிப்பிடுவார்.ஒன்று பிரதிட்டை சம்பந்தமான பிணக்கில் அவர் எடுத்த முடிவாகும். ஏறக்குறைய யாழ்ப்பாணத்தின் சமயத் தலைவர்கள் என்று அக்காலத்தில் கருதப்பட்ட ஆன்றோரும், சான்றோரும் எடுத்த முடிவுகளை ஏற்காது நூல்வழி ஆதாரமே வேண்டும். நூல்வழி ஆதாரம் இல்லை எனில் ஏற்க மாட்டேன் என்று உறுதியாக நின்றதைக் குறிப்பிடுவார். சம்பந்தப்பட்ட பிணக்கில் இவர் விரும்பாவிட்டாலும் பலர் வலிந்து இவரை சம்பந்தப்படுத்தி விட்டனர். வீரமணி ஐயா குறிப்பிட்டது போல அழிவு குறித்தபகுதியில் நடைபெற்று முடிந்ததாலும் திருவுளச்சீட்டு தலையிட அநுமதி தந்ததாலும் தான் இதில்துணிந்து தலையிட்டதாகச் சொல்லுவார். அப்போது ஸ்ரீ அண்ணருக்கும் இவருக்கும் எந்தவிதமான தொடர்புமில்லாத போதும் அவர் ஒருவர் பிரதிட்டை சம்பந்தமாக ஒருகருத்தைச்சொல்லுகின்றார்,அல்லது சுட்டிக்காட்டுகின்றார் என்றால் அது பிழையாயின் திருத்தப்படவேண்டும், சரியாயின் அவருக்குத் தெளிவு படுத்தவேண்டுமென்பதில் மிகமிக உறுதியாக இருந்தார்.இது ஒவ்வொரு ஆலய நிர்வாகிக்கும் இருக்குமாயின் எல்லா ஆலயங்களிலும் விதி முறைக்கமைவாக எல்லா விடயங்களும் நடைபெறும் என்பது திண்ணம். ஆன்றோர், சான்றோர் அபிப்பிராயத்திற்கும் ஆலோசனைக்கும் அசையாது நூல்வழி விதிமுறைக்குப் பிழையென்று நிரூபணமான போது பெருந் தன்மையாக ஒப்புகொண்டு மாற்று நடவடிக்கையை துணிந்து எடுத்தார்.தான் செய்ததுதான் சரி என்பதை நிரூபிக்க என்னென்னவோ தகிடுதத்தங்கள் செய்வோர் வாழும் கலிகாலத்தில் அவர் எடுத்த நடவடிக்கை போற்று தற்கும், வாழ்த்துதற்கும், உதாரணத்திற்கும் உரித்தாகும். இது மகாத்மாக் களின் செயலாகும். தானும் இதில் ஒரு கருவியாகவே செயற் பட்டிருந்த தாகக் குறிப்பிடுவார். இரண்டாவது திருவூடல் விடயம்.இப்போது இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துள்ள நிலையில் காலத்திற்கு ஒவ்வாத கருத்து ளோடு பாடப்பட்டு வந்த திருவூடலை மாற்றம் செய்ய வேண்டுமென்று இவருடன் ஆலோசித்தபோது இவரும் பாடல்களை பார்த்து மாற்றுவது நல்லது என்ற முடிவுக்கு வந்தார். பலரிடம் மாற்றி எழுதலாமா? என்று அபிப்பிராயம் கேட்டபோது பல குருக்கள்மாரும் பலவருடம் பூசைக்கு ஒப்புக்கொடுக்கப்பெற்ற பாடல்கள் இவை. எனவே மாற்றுவது பற்றி ஆலோசியுங்கள் என்றே சொன்னார்களாம். ஸ்ரீ அண்ணரிடம் தெரிவித்தபோது மாற்றவேண்டு மென்ற முடிவில் மாற்றமில்லை. இதில் மாற்றம் செய்ய தங்களுக்கு சங்கடம் என்றால் அந்த உற்சவத்தையே நிறுத்துவது

நல்லது என்று உறுதியாகச்சொல்லிவிட்டாராம். பின்னர் வாழும் குருநாதர்களான கலாநிதி க.வயித்தீஸ்வரக் குருக்களும், முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயாவும் மாற்றலாம் என்று அநுமதி தந்தபோதும் இறைவன் ஏதாவது திருக்குறிப்புத் தந்து வழிகாட்டுவான் என்ற நம்பிக்கையோடு கொழும்பு திரும்பினாராம்.

### திருக்குறிப் பளித்தான் திருமுருகன்

ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் உற்சவத்திற்கு நண்பரின் வேண்டுகோளுக்காக திருமுறை ஓதச்சென்றார். திருமுறை ஓதிமுடிந்தபின் காளாஞ்சிகொடுக்கும்போது குருக்கள் யாழ்ப்பாணமா என்றார்.இவர் ஆமென்றார்.நாவலர் பிறந்த இடத்தில்தான் இந்தப்பக்குவம் இருக்கும் என்றார்.இவரும் நீங்கள் ஆசீர்வாதத்திற்கு முன் "திருமுறை அவதாரய" என்று சொன்னபடியால் உங்களிலும் பக்குவம் உண்டென்றார்.பின்சந்திப்போமென்றார்.அப்படி ஒருசந்திப்பின்போது தான் இவர் திருவூடல் பற்றிய குழப்பத்தை சொல்லியிருக்கின்றார். அவர் பழைய ஊடலைப்பார்த்துவிட்டு கண்டிப்பாக மாற்றத்தான் வேண்டுமென்றதோடு தத்துவங்களை வைத்து ஊடலை அமைக்கலாம் என்று தத்துவத்தையும் அமைப்பையும் கூறினாராம்.பாடல் ஆக்கம் முடிந்தபின் பிரதியைப்பார்த்து நன்றாக வந்திருக்கின்றது.ஒரு இடத்தில் பொருட்பிழை உள்ளது. திருத்துங்கள் என்றார்.தெய்வயானை தன்பிழையை ஒப்புக்கொள்வதான பாடலில் "வஞ்சக மாயையேவந் தென்கணை மூடலாலே" என்று வருகின்றது. தெய்வயானை தெய்வமூர்த்தம்.தெய்வத்தை மாயைபற்ற முடியாது, அப்படிக்காட்டவும் கூடாதென்றார். குருக்கள் ஒவ்வொரு சொல்லையும் எவ்வளவு நுணுக்கமாகப் பார்த்துள்ளார் என்று இவர் வியந்து போனார்.பின் அதே இடத்தில் வைத்தே மாயையோ? என்று கேள்வியாக மாற்றிவிட மகிழ்ந்து பாராட்டினாராம். அவர் வேறுயாருமல்ல பழநிமலை தலைமைக் குருக்களின் மகன். குழப்பந்தீர்ந்து பாடல் அரங்கேறியது. வரவேற்பையும் பெற்றது.

இதிலும் ஸ்ரீஅண்ணையின் உறுதி வியக்கவைத்தது என்பார். இவையெல்லாம் இவர் நெறிமுறை பேணப்படவேண்டுமென்பதிலும், சமய முறைதவறியோ,சாத்திர, தோத்திர விரோதமாகவோ எந்த விடயமும் நடைபெற்று விடக்கூடாதே என்பதில் எவ்வளவு பற்றுக்கோடோடு இருந்தார் என்பதையும், ஏதோ ஒருவிதத்தில் தெய்வங்களும் இவரின் கவியாக்கங்களுக்கு உதவியும், வழியும், திருக்குறிப்பும் காட்டியிருக்கின்றன என்பதையும் புலப்படுத்தவே இங்கு இவைபற்றிக் குறிப்பிட்டோம்.

தெய்வப்பணியென்பதாலும்,இறைவன் தமிழைத்தந்தது தன்னைப்பாடவே யென்று நினைந்ததினாலும் திருவூஞ்சலானாலும்,திருப்பள்ளி எழுச்சியானாலும் எந்தப்பாமாலைக்கும் எதுவித சன்மானமும் வாங்குவதில்லை.இவர் எழுதிய திருவூஞ்சல் பாடலொன்றுக்காக வசதியான ஆலயமொன்று பொன்னாடை, மாலை,சூட்டி வேட்டி,சால்வையும்,பணமாக ரூபா பத்தாயிரத்தி ஒரு ரூபாவைவைத்துக்கொடுத்த போதும் ஒருரூபாயை மட்டும் எடுத்துக்கொண்டு பத்தாயிரத்தை நிர்வாகத்திடமே திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தவர்.இதனால் தானோ என்னவோ திருவூஞ்சல்கள் மற்றும் இவரதுபாடல்பெற்ற பலஆலயங்களும் விருதைக்கொடுத்துத் தம்நன்றியைத் தெரிவிக்க முயன்றன.இவர் மறுத்தே வந்துள்ளார். இவரைப்பற்றி நன்கறிந்தவரும் எனது குருநாதரும்,சைவபரிபாலன சபைத் தலைவருமாய் இருந்த திரு.வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் இத்தம்பதியரின் திரு ண வெள்ளிவிழாவன்று வழங்கிய "தெய்வப்புகழிசை வாரிதி"என்ற விருதை அவரின் வயது,புலமை,அன்புகருதிப் பெற்றுக்கொண்டார்.பலகாலம் பயன்படுத்தவில்லை. பின்னர் மாவைக்கந்தன் திருமுன்பு சு.து.ஷண்முகநாதக் குருக்கள் "தெய்வத்தமிழிசைக்கவிஞர்"விருது வழங்கிய போது முருகன்தந்த விருதாகவே பெற்றுக்கொண்டதோடு அவர்கட்டளைக்கிணங்க தன் பெயரோடு இணைபிரியாது பேணிவருகின்றார். பலவிடயங்கள் பற்றிப்பேசும் நேரங்களில் விருதைப்பற்றியும் பேச்சு வரும்.அப்போதுவிருது கொடுப்பவர் இத்துறை சார்ந்தவராக,வயதில் மூத்தவராக, புலமையாளராக இருக்கவேண்டும் என்று இவர் கொண்டிருந்த கருத்தை மனதில் வைத்து "கீரிமலைச் சிவனவன் கழற்கோர் செந்தமிழ்மாலை" நூல் வெளிவந்தபோது, பொதுவாக திருப்புகழ் முருகனுக்கே பொருந்திவரும் என்ற தோற்றப்பாட்டுக்கு மாறாக எந்தத்தெய்வத் திற்கும் பொருந்துமாறு,சிவனுக்கே பொருந்துமாறு வரையப்பட்டிருந்த அழகைப் பாராட்டி பாடல்களைப் படித்துச் சுவைத்த கலாநிதி.க.வைத்தீசுவரக்குருக்கள் "அருட்கவிச்செல்வர்"என்ற விருதை வழங்கினார்.முது பெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயா இந்து சாதனம் இதழில் வெளிவந்து கொண்டிருக்கும் "நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை" நூலைவியந்து அவ்வப்போது தனது மகிழ்ச்சியையும், வியப்பையும், வாழ்த்தையும், அன்பையும் தெரிவித்து வருபவர். தொண்ணூற்றி எட்டு வயதைக்கடந்த அப்பெரியார் இவரது ஐம்பத்தி எட்டாவது பிறந்த நாள் வாழ்த்தாக "தில்லைக்கூத்தன் திருவாக்காக" அளித்த "காலத்தால் அழியாத கம்பன்" என்ற விருதையும் பெற்றுக்கொண்டார். இவரது பிறந்தநாளுக்கு விருது கொடுக்கவேண்டும் என்ற நினைவோடு

சிவபூசையை நிறைவுசெய்து தியானத்தில் இருந்தபோது தில்லைக்கூத்தனே எடுத்துத்தந்தான் என்ற அவரின் கடிதம் பார்த்து நெகிழ்ந்து விட்டார்.தற்போது நூறாண்டில் வாழும் இப்பெரியாரும் தொண்ணூற்றியெட்டாம் ஆண்டில்வாழும் கலாநிதி.க.வைத்தீசுவரக்குருக்களும் இவரது அறுபதாவது பிறந்த நாளுக்கு வாழ்த்துப்பா வழங்கியும் பொன்னாடை போர்த்தும் கௌரவித்தது எல்லோருக்கும் கிடைக்காத பாக்கியம் என்று கூறி மகிழ்வார்.

அரச விருதுகளாக சமூகத்திற்கு ஆற்றியபணிகள் போற்றி "சமாதன நீதிபதி"விருதுவழங்கப்பெற்றது.பின்னர் அவ்வப்போது "தேசபந்து", "தேசப்பிரேமி", "ஜனதா புத்ர" "தேசமாண்ய", "சாமஸ்ரீ"தேசாபிமானிபோன்ற கௌரவ விருதுகளும் வழங்கப்பெற்றன.இவரின் சமூகசேவைகளைப்பாராட்டி கொட்டடி சனசமூகநிலையம் "சமூகதிலகம்" விருதளித்தது. சான்றிதழை பாராளுமன்ற உறுப்பினர் சில்வஸ்ரி அலன்ரினும், கேடயத்தை யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் வழங்கி கௌரவித்தனர்.

**குடும்பம் எனும் கோவில்**

மனைவி புவனேஸ்வரி.அவர்பற்றி இவரது வார்த்தையில் சொல்லுவதாக இருந்தால், வாழ்ந்தால் உன்னோடு வாழ்ந்திருப்பேன் என்று வனம்புகுந்த சீதை.சமய,சமூக பொதுப்பணிக்கு,நாட்டுப்பணிக்கு ஈடுபாட்டோடு உதவுபவர்கள் வீட்டிற்குதவாதவர்களாக இருப்பது பொதுவான உலகியல் நடைமுறையாகும்.அதற்கு இவரும் விதிவிலக்காக இருக்க முடியாது.அதுவும் படித்து கருத்தை உள்வாங்கி பாடல் எழுதும் துறையில் இருப்பவர்கள் நிலை சொல்லுந்தரமன்று.இரண்டு ஆண்குழந்தைகள்.ஒரு பெண் குழந்தை. இவர்கள் தியாகமும்,சேவையும் குறைத்து மதிப்பிட முடியாது. பின்தூங்கி முன் எழும் பேதையாகிய துணைவியையும், இவர் பணிக்கு இடைஞ்சல் செய்யாத பிள்ளைகளையும் பெற்றது இறைவன் கொடுத்த வரமாகும்.

**நிறைவுரை**

தன்வாழ்வில் பாடும்பணியே பணியாய் வாழும் தலைசிறந்த கவிஞராக மட்டுமல்ல ஒரு நல்ல சமயவாதியாக,பண்பான சமூகசேவையாளனாக, புராணபடன வித்தகராக சிறந்த நிர்வாகியாக, சமாதான நீதவானாக பன்முகங் கொண்டு ஆடம்பரமேதுமின்றி மிக அமைதியாக இருந்து அரும்பணியாற்றி வருபவர்.பல மதபீடாதிபதிகள்,கல்விப் பீடாதிபதிகள்,சமயப்பெரியார்கள், நிறுவனங்கள், கலைஞர்கள் என்று பலரின் பட்டமளிப்பு விழாமேடைகளை

மட்டுமல்லாது பல பொன், மணி, வயிர, பவள விழா மேடைகளையும் இவரது கவிதைகள் அலங்கரித்துள்ளன.இதுதவிர எண்ணற்ற தம்பதிகளுக்கு திருமண வாழ்த்துப்பாவும் கன்னியர் களிப்புடன் ஆட பூவூஞ்சற்பாக்களும் வடித் துள்ளார். மணிவிழாக்காணும் இவ்வளவு பெருமைக்குமுரிய இப்பெரியார் மனைவி மக்களோடு பூரண நிறைவாழ்விற் திகழவும் "ஷண்முகப் பிரசாதம்" ஆக வெளிவரும் "தெய்வப்புகழிசைத்தேனமுதம்" என்ற நூலும் "குகப் பிரசாதம்"ஆகவெளிவரும் மணிவிழாமலரும் இத்தேசமெங்கும் மலர்ந்து தெய்வீக மணம்பரப்பவும் எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரனின் பேரருளை வேண்டிப்பிரார்த்தித்து விழாக் குழுவினரான நாமும் ஆசீர்வதிக்கின்றோம்.

**தெய்வத் தமிழிசைக் கவிஞர்**
**இராலசையா குகதாசன் மணிவிழாக் குழு**

**செஞ்சொற்செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## தெய்வத் தமிழிசைக் கவிஞரின் தமிழ் அ[illegible]ர் கீர்த்தனையிலிருந்து இருபாடல்கள்

பல்லவி

தங்கத் தமிழ் எங்கள் தாய் மொழியே -அது
தரணியிலோங்கும் செய் நூல்வழியே எழிலார்

அனுபல்லவி

சங்கந் தனில் வளர்த்த இருவிழியே -இச்
சகமெலாம் ஏற்றிவைப்போம் இதன்ஒளியே

சரணம்

எண்திசையும் நாங்கள் சென்றிடுவோம் -கலைச்
செல்வமெலாம் இங்கு கொணர்ந்திடுவோம்
மண்மணம் சேரநல்ல மாற்றஞ் செய்வோம் -வேற்று
நாட்டவரும் போற்றும் ஏற்றஞ் செய்வோம்

பல்லவி

ஏற்றஞ் செய்வோம் எங்கள் தமிழினிற்கே --வேண்டும்
மாற்றஞ் செய்வோம் தமிழ் தழைப்பதற்கே

அனுபல்லவி

மேற்குலகத் துறைசார் நுட்பமெலாம் எங்கள்
மென்தமிழில் மாற்றம் முனைப்பொடு செய்துவைத்தே

சரணம்

முன்னைக் கதைகளெலாம் முழுமையுறப் படித்தே
கன்னித் தமிழ் மொழியில் கவினுற அதைவடித்தே
பின்னிய காவியத்துப் பெருமையெலாம் குடித்தே
பன்னிறற் பாமாலை பசுந்தமிழிற் தொடுத்தே

உ

சிவமயம்

**நிகழும் மங்கள கரமான பார்த்திப வருடம் கார்த்திகைத் திங்கள்** 19ஆம்நாள்04:12:2005 ஞாயிற்றுக்கிழமையன்று திருவாளர் **இராசையா குகதாசன், குகதாசன் புவனேஸ்வரி** தம்பதிகளின் 25ஆவது திருமணநிறைவு நாள் வெள்ளி விழா நிகழ்வின்போது **"தெய்வப் புகழிசை வாரிதி"**விருது வழங்கி தம்பதிகளை வாழ்த்தி வழங்கிய



வாழ்த்துப்பாமாலை

சைவநெறி முறையதனைச் சகத்திற் தேக்கி
தன்நடையிற் புல்லதுவும் நோகா நடந்தே
வையமதில் வாழ்இரா சையா மனையாய்
வருதங்க லட்சுமியும் வளர்த வத்தால்
கைவருநற் கவிதைபுனை புலமை யோடு
காசினியில் உலவுகுக தாசன் புவியில்
மெய்யொடிணை புவனேசு வரியோ டெல்லா
மேன்மைகளும் கூடிவர மிளிர்ந்தே வாழி.

செந்தமிழில் சிவநெறியில் திருமு றையிற்
தேர்ந்துபணி புரிந்துவரு சிந்தை யாளா
எந்தமுளம் வாழிறைகள் ஏறி யாட
எண்ணரிய ஊஞ்சலிசை இழைத்த சீலா
சிந்தழகுப் பெருவிழாக்கள் திரும ணங்கள்
சிறந்தமணி விழாவயிர விழாக்க ளெல்லாம்
உந்தனெழிற் கவிதைகளால் உயர்த்தி வைத்த
உத்தமனே மனையொடுளம் உவக்க வாழி.

பாடசாலை அபிவிருத்திச் சபைகள் பாலர்
படித்துயர வைபுலமைப் பரிசில் நிதியம்
தேடரிய சைவஅபி விருத்திக் கழகம்
திகழ்கிராம முன்னேற்றச் சங்கம் அறிஞர்
கூடரிய மன்றங்கள் கொழிக்கச் சேவை
கொடுதலைவர் அருஞ்செயலர் பொருள ராகி
நாடரிய பணிகளினை நன்கே யாற்றும்
நம்பனவன் குகதாசன் நீடு வாழி.

அவாவினிற் பூசைமுறை அறியா தாற்றல்
அறிந்தெவரும் ஆகமவழி ஆற்ற வேண்டி
சிவாலயப் பூசையிற்சிவத் தமிழ்வே தங்கள்
செய்முறைக்கோர் நூலாக்கிச் சிறப்புச் செய்தாய்
சுவாலையென நுண்ணுணர்வாய் சுடரும் தெய்வத்
திருப்பள்ளி யொடுபுகழும் செதுக்கும் உனக்கே
தவாவினொடு தெய்வப்புக ழிசைவா ரிதியாம்
தகைமையுள விருதளித்தேன் தமிழ்போல் வாழி.

சைவபரி பாலனஞ்செய் சபையின் தூணாய்த்
தாங்குமுப தலைவர்சைவ வித்யா விருத்தி
செய்துவரு சங்கமதிற் சிவநெ றியிற்
சிறுவர்நிறை வாழ்வுறவே சிரத்தை யோடு
மெய்நெறியைப் புகல்திட்டப் பணிப்பா ளருமாய்
மிகுபணிகள் ஆற்றிவரு மேன்மை யாளன்
உய்வுதரு மனையினொடிவ் வுலகே போற்ற
ஒண்தமிழ்போல் வாழியநீ பன்னூ றாண்டே.

வேதாந்த மடத்தினிணைப் பொருள ராக
விளங்கிவரும் பேறதனை விரும்பிப் பெற்றாய்
போதாய்ந்த திருமுறைகள் புராண படனம்
பெருமடங்கள் ஆலயங்கள் ஆதீ னங்கள்
நீதோய்ந்த அறிவுடனே நிகழ்த்தி நின்றாய்
நீணிலத்தில் ஏதிலர்க்கும் நிறையச் செய்தாய்
நாதாந்த வடிவுமையாள் நல்கு மருளால்
நறுந்தமிழும் சுவையுமென நன்கே வாழி.

நாவலரின் நெறிமுறையில் நடந்தே சைவம்
நாடதனில் உயரவழி நயந்தே செய்தாய்
ஆவலினால் ஆகமத்தின் வழிநில் லாதே
அவனிதனிற் செய்பணிகண் டாற்றா நின்றாய்
மேவுபல பிரசுரஞ்செய் முறைமை யாலே
மேன்மைபெறும் சைவநிலை நாட்டிச் சமயக்
காவலரென் றுலவிவரு கண்ய சீலா
காசினியில் உன்பணிகள் கருதற் பாற்றோ.

தகவுடைய நிறைவாழ்வு தருமில் லங்கள்
சனசமூக நிலையங்கள் பாட சாலை
திகழுதிரு நெறியதமிழ் இசைநா டாக்கள்
செழித்துலவும் இளங்கலைஞர் மன்றம் என்றே
சகமதனி லாற்றுபணித் தன்மை கண்டே
சமாதான நீதிபதி விருதும் தந்தார்
அகமதிலுள் மனைமக்கள் அணிக ளோடு
அவனிபுகழ் நிறைவாழ்வை அடைந்தே வாழி.

தாய்இராச இராசேசு வரியாள் பூசை
தருமலராற் சிறந்திடவை யுந்தன் தாதை
சேயெனவே யுனைப்பெறவென் நோற்றா னென்றே
செகத்திலுள் மெச்சிடுநற் தனய னாகி
நேயமுடை புவனேசு வரியி னோடு
நிலமதனிற் கண்டுமகிழ் நிகரில் வாழ்வில்
பாயருளா லாயிரம்பிறை கண்டே வாழ
பரைபேய்ச்சி நிதம்வாரி யருள்க மாதோ.

தன்னலமே குறிக்கோளாய்த் தரணி யெல்லாம்
தயைவின்றிப் பணிகொழுவார் தவளும் நாட்டில்
உன்னலமே பேணாது உவப்பி னோடு
உய்யுவகை யுணர்ந்தவர்கள் உடனே கூடி
நன்நலமே மேவுபல நலமார் சேவை
நல்லியல்பா யமைகுணத்தால் நாட்டி நின்றாய்
இன்னெனவே யுன்பணியென் றியம்பற் பாற்றோ?
இணையொடிணை பிரியாதே யின்பாய் வாழி.

—:சுபம்:—

| | |
|---|---|
| **இல.25 அரசடி வீதி** | **சைவப்புலவர், கலாநிதி** |
| **கந்தர்மடம்** | **வல்லிபுரம் கந்தசாமி** |
| **யாழ்ப்பாணம்** | **தலைவர்,சைவபரிபாலனசபை** |

உ
சிவமயம்

# ஆண்டுஒரு நூறுகண்டு ஆனந்தமாய்வாழி



## உளநிலை

நாயன் மார்கட்டு குகதாசன் எனும்பெயரில்
நான்பல கவிதைபார்த்து நயந்திங்கு ரசித்ததுண்டு
ஆளைநான் கண்டதில்லை ஆற்றலை வியந்ததுண்டு
வேளைஒன்றமைத் தாள்அன்னை வியந்தும்மைப்போற்றுதற்கு.

பல்கலை சென்றாயில்லை பட்டங்கள் பெற்றாயில்லை
சில்லறை களோடுசேர்ந்து சீரழிந் தாயுமில்லை
வல்லஓர் சக்தியுந்தன் பின்னாலே உள்ளதாலே
வளமானநல்ல பலகவிதைகள் யாத்தாய் பார்த்தேன்.

## களநிலை

குயில்களோ உறங்கலாச்சு கோட்டான்கள் அலறலாச்சு
மயில்களோ உறங்கலாச்சு வான்கோழிகள் ஆடலாச்சு
நாலைந்து பேர்கள்சேர்ந்து நாங்கள் கவிஞரென்றால்
ஆமாஎன் றவரின்பின்னால்(அவரைஏத்தி)அலையுது தமிழர்கூட்டம்.

எதுகையா? மோனையா? எதற்கையா? இவைவேண்டும்
புதுக் கவிதையையா புரியாது புவிக்கையா
நைன்றிநீ ருவன்றிநாம் நன்றாகப் புரிந்திடையா
எதைஎப்படி எழுதினாலும் ஏற்குமாம்எம் தமிழுலகம்.

முத்தெனும் சந்தக்கவிகள் அப்பன்என் சந்நிதியான்மீது
சித்தன்அவ் அருணகிரியை விஞ்சிடப் பாடியுள்ளாய்
எத்தனை தரமாய்எவரும் எப்படிப் பாடினாலும்
அத்திருப் புகழுக்கீடாய் அடுப்பரோ அவனியோர்கள்.

அம்பாளை வைரவரை ஆலடிமுனி யப்பரை
கும்பிட்டுப் போனவர்கள் கொத்தாகக் காசனுப்ப
தம்பாட்டில் பாட்டெழுதி தமிழகத்தார் பாடித்தர
கும்பிடும் மரபும்ஒன்று எம்மிடம் வளரலாச்சு.

## வாழ்த்து

வாழ்த்திடும் தகுதிஎனக்கு இருக்குதோ இல்லையோஎன்
ஆச்சியின் அருளைச்சிறிது அனுபவித்து அறிந்தபேயன்
வாழ்த்தடா இவனைஎன்று வலிந்துஎன்னை அழைத்ததாலே
வாழ்த்துகின்றேன் உம்மை வளமாக வாழிவாழி.

எத்தனை ஆண்டின்பின்னும் எவர்எதைப் பாடினாலும்
இத்தரையில் உள்ளோர் ஏற்றியும் போற்றாரையா
அர்ச்சனைக்கு உதவாவிடினும் எம்ஆலயங்களுக்குச் சான்றாய்
வைத்திவர் போற்றும்வண்ணம் பாடினாய் வாழிவாழி.

இப்புவியிலுள் ளோர்க்குஎம்மால் இயன்றதைச் சொல்லிவிட்டோம்
"தக்கன பிழைக்கும்"என்ற டார்வினின் கொள்கைக்கேற்ப
மக்களிங்கு அவற்றைஏற்று மாண்புறும் வண்ணம்பாடி
வைத்தனை குகதாஸனே வாழிநீ வாழிஜயா.

அன்னையின் அருளையென்றும் அரற்றிடும் பேயன்இந்த
அன்னைதாஸன் என்றுஇங்கே அனைவரும் அறிவரென்றோ
முன்னரும் வினைகள்தூண்ட முத்தெனும் "கவிஞ" நின்னை
பன்னெடுங்காலம் வாழஎன் அன்னையை வேண்டுகின்றேன்வாழி.

**க.ஆனந்தராசா** — **கவிமணி**
**ஸ்ரீரங்கம்** — **அன்னைதாஸன்**
**ஊரெழு** — **(ஓய்வுநிலை அதிபர்)**

## கவிஞர் கீரிப்பிள்ளையார் மேற்பாடியது

பல்லவி

வேறிடம் எமக்குண்டோ வேண்டித்தொழ -என்றும்
பூரிப்போ டெமக்கருள கீர்ப்பிள்ளையா ரிருக்க

அனுபல்லவி

பாரினிலருள் அள்ளிப் பரிந்தெமக்கே பொழிந்து
நேரிலா வாழ்வருளும் நிர்மலன் தாளிருக்க

சரணம்

தனையெண்ணிச் செய்கருமம் தழைத்திட அருளியே
மனைதொறும் காத்திருந்து மங்கள மாண்பு தந்தே
இணையடி தொழுதெழவே இன்முகம் மலர்ந்தெங்கள்
துணையென வருமழகார் தும்பிக்கை யானிருக்க

உ

சிவமயம்

## 58வது பிறந்தநாள் வாழ்த்தும் விருதும்

நிகழும் கரவருடம் கார்த்திகைத்திங்கள் 04ஆம்நாள் (20:11:2011)
ஞாயிற்றுக்கிழமை 58ஆவது பிறந்ததினத்தன்று



நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை
நூலாசிரியர்

## இராசையா குகதாசன்

அவர்களுக்கு தில்லைக்கூத்தன் திருவாக்காக

## "காலத்தால் அழியாத கம்பன்"

எனும் உயரியவிருதை வழங்கி வாழ்த்திப்பாடிய
வாழ்த்துப்பாமாலை

ஞாலத்தார் போற்றுகின்ற நல்லைநகர் நாவலரைப் பாடித்தந்த
கோலத்தால் திருஞான சம்பந்தராய்க் குவலயம்கொண் டாடுகின்ற
சீலத்தான் சிறந்தகவி குகதாசன் மேன்மையாம் செம்மைநோக்கி
"காலத்தால் அழியாத கம்பன்"என்னும் விருதளித்தேன் கவிஞன்நானே.

நல்லையூர் வாழ்ந்து சென்ற நாவலர் பெருமான் தன்னை
சொல்லரும் வரலாற் றோடு சுருக்கமாய்ப் பாடித் தந்த
நல்லவோ ரிளங்க விஞர் (இ)ராசையா குகதா சனையே
எல்லோரும் போன்றி யானும் ஏற்றமாய் வாழ்த்து வேனே.

நெற்றிநீ றுடன்தி லகம் நிரம்பிய சைவங் காட்ட
மற்றவர் முகமோ என்றால் மாண்புடை உளத்தைக் காட்டும்
பற்றுட னெழுதப் பெற்ற நாவலர் நூலோ என்றால்
அற்புதன் குகதா சனைநேர் அளந்தவர் புலம்காட் டும்மே.

முன்னரே தாள்வ ணங்கும் முதல்விரா சேஸ்வ ரியை
பின்னரும் பலத லங்கள் பரமனைப் பாடி யின்று
சொன்னயம் பொருந்தச் சந்நிதி ஆச்சிர மச்சுட ரிலுமே
நன்னய மாகப் பாடி வருகின்றார் நெடிது வாழ்க.

நமதுநாட் டிலுமே யன்றி நற்றமிழ் நாட்டி லும்போய்
தமதுநல் தொண்டே யாகத் தமிழ்சைவம் வளர்த்த அந்த
அமரர்நா வலரைப் பற்றி அருந்தமிழ் விருத்தப் பாவால்
எமர்பிறர் மதிக்க யாத்த குகதாசன் வாழ்க வாழ்க.

இலக்கண இலக்கி யங்கள் இனியதாம் சைவம் பற்றி
அலக்கணொண் றின்றிப் பன்னூல் அரியசொற் பொழிவு செய்த
தவப்பெரும் நாவல் லாரை சந்நிதா னம்அ ழைத்தே
உவப்புடன் பாராட் டியதை ஓதிய கவிஞர் வாழ்க.

நாடுமா வடுது றையில் நற்றவச் சந்நி தானம்
பீடுயர் இருக்கை நல்கி பொன்னாடை போர்த் தவர்க்கு
ஈடில்நா வலர்பட் டத்தை எடுத்துச்சூட் டியதை யெல்லாம்
பாடியே நூலைத் தந்த கவிஞர்குக தாசன் வாழ்கவே.

**வட்டுவினி** **முதுபெரும்புலவர், கலாபூஷணம், புலவர்மணி**
**இணுவில்** **வை.க.சிற்றம்பலம்**

## கவிஞரின் அம்பாள் இசைமாலையிலிருந்து

இராகம்:தோடி தாளம்:ஆதி

பல்லவி

எனைக்காக்க விரைந்தோடி வா -தாயே-ஊழ்
வினையாலே உருவாகி அவமாகி உழல்கின்ற

அநுபல்லவி

உனையன்றித் துணைவே றுண்டோ? தாயே
நினை நாளுந் தொழுவோரை நிதமாளும் அம்பாளே

சரணம்

தவமேதும் குறைவோ? அருளாதல் முறையோ?
அபவாதம் உனக்கோ அவமானம் இல்லையோ?
உவமானமில் அருள்தந்து ஆழ்வாயென் எழிற்தாயே
நவலோகமும் பணியும் சிவகாம சுந்தரியே.

உ

சிவமயம்

## கன்னித்தமிழ் போலென்றும் கவினோடு வாழ்வீரே.



பண்ணொடு பாடியே பரவிடும் அடியராய்
கண்ணியம் காத்திடுங் கந்தனின் தாசனாய்
குகதாசன் நாமமே கொண்டுள அன்பரே
இகமது சிறந்திட இயலிசை வளர்க்கிறீர்.

முகமதின் மலர்வினில் முறுவலில் தினம்வளர்
இறைபணி செய்துமே இலக்கியம் படைக்கிறீர்
மறைவழி நின்றுமே மன்றாடும் புலவரே
நிறைமொழி மாந்தராய் நீணிலம் ஓதினீர்.

கறையணி கண்டனொ டவன்பல உருவதும்
மறைவழி யாடிட மகிமைகள் பலவுரை
நிறைபணி ஊஞ்சலாய் நிதம்பாடும் வித்தகா
நறைநிறை ஊஞ்சலை நானிலம் போற்றுமே.

சொல்வளம் புதிது சுவைகளும் புதிது
எல்லோரும் பக்தியில் இணைந்திட வைத்திடும்
பல்லோசை கொண்டதும் பரவிட இனியதும்
உல்லாச மொடுநிதம் உள்பயனும் தருமே.

சங்கங்கள் பலவற்றில் அங்கங்கள் கொண்டுநிதம்
பங்கங்கள் ஏதுமின்றிப் பணிகளினைப் பாராற்றி
எங்கெங்கும் நெறிபரப்பும் சிங்கேறு பாவலரே
திங்களின் நிறைவடிவே தீந்தமிழ்போல் வாழ்வீரே.

உன்பணி தொடரட்டும் ஊர்க்கோயில் சிறக்கட்டும்
என்னரும் வாழ்த்தோடு இறைகளி னருளாலே
மன்னனாய்க் கவிபாடி மன்றாடு குகதாசா
கன்னித்தமிழ் போலென்றும் கவினோடு வாழ்வீரே.

--:சுபம்:--

**சுன்னாகம்** **கலாபூஷணம்**
**சு.துரைசிங்கம்**

## கவிஞரின் வெய்யில் உகந்த விநாயகர் கீர்த்தனை மாலையிலிருந்து

பல்லவி
பிள்ளையார் சுழிபோட்டுன் பணிதொடங்கு --நாளும்
பெருகிடும் வாழ்விலின்பம் பலமடங்கு --என்றும்
அநுபல்லவி
வெள்ளைப்பா லறுகுவைத்து தொழஇணங்கு
வேண்டும் வரம் அருள்வான் நிதம்வணங்கு
சரணம்
எண்ணிய கருமங்கள் எண்ணிய வாறுனக்கு
கண்ணியமாய் முடிப்பான் கணபதி கருத்திருத்து
மண்ணினில் அவன்பாதம் மனதினில் நீஇருத்து
தண்ணருளைத் தருவான் தருணமதிற் தடுத்து

மண்ணிலும் மஞ்சளிலும் மனதுறை யுருப்பிடித்து
கண்நிறை மலர்பறித்து கவினுறக் கழல்தொடுத்து
பண்ணிடு பூசைதனை பரிவுடனே யெடுத்து
உண்ணிறை வாயருள்வான் உலகினிலே முடித்து

உ

சிவமயம்

## தெய்வத்தமிழிசைக்கவிஞர்
## நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்
## அவர்களின்
## மணிவிழா வாழ்த்துப் பாமாலை

**வையத்தில்வாழ்க வளமதொடு பல்லாண்டே**

சைவமும் தமிழும் சார்ந்த நன்னெறியும்
கைவரும் கடமையிற் றோய்ந்த –ஐயமில்
பணிகளின் பயனென இராசையா குகதாசன்
மணிவிழா காட்சிப் பொலிவு.

அறுபது வயதினை யடைந்திட்ட பாவலன்
உறுதுணை பிள்ளைகள் உறவுடன் -பெருகிடும்
எல்லா வளங்களும் எளிதில் பெற்றுவாழ
நல்லூர் முருகனே யருள்.

“தெய்வப் புகழிசைத் தேனமுதம்”திருநூல்
உய்யும் மாந்தர்க்கு உவப்பாகும் -வையத்தில்
ஷண்முக தரிசனம் அறுநூறு திருப்புகழ்
ஓண்முகச் சைவத்தின் உயர்வு.

நாயன்மார் கட்டூர் நன்மகன் குகதாசன்
ஆயபே ரன்பில் அருளிய –தூயதாம்
தெய்வத் திருத்தலத் திருப்புக ழமுதம்
வையத்தில் தமிழின் வாழ்வு.

பன்முகப் பரிமாணம் பாடலாற் படைத்தவர்
துன்னிய வர்த்தகத் துறையினர் - இன்னமும்
பல்லாண்டு காலம் பாரினில் வாழ்கவே
எல்லாமும் இறையருளாற் பெற்று.

சதகம், அட்டகம், சந்தப் பாவுடன்
பதிகம், ஊஞ்சல், கீர்த்தனை –அதிகமாய்
நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலையும்
பாவலன் தந்திட்ட பரிசு.

"தெய்வப் புகழிசை வாரிதி" சேர்ந்துயர்
"தேச மான்ய" என வெல்லாம் - மெய்யாய்ச்
சைவத் தமிழ்ப்பணி செய்பவர் சால்பாம்
வையத்தில் வாழ்கபல் லாண்டு.

**ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர்**

**கலாநிதி,பண்டிதர் செ.திருநாவுக்கரசு**

## வண்ணை காமாட்சி அம்பாள் மேற் கவிஞர் பாடியது

பல்லவி

மனக்குறை தீர்த்து வைப்பாள் மகாமாரி --அருள்
தனைக்குறை வறவிந்தச் சகந்தனில் வாரியெங்கள்

அநுபல்லவி

தனக்குறை யில்லார்வாழ் தண்வண்ணைப் பதியமர்ந்து
சினக்குறை வில்பாம்பின் நிழற்குடைக் கீழிருந்து

சரணம்

புகலரி நாமத்தாற் போற்றிசெய்தே நின்று
அகமுரு கிப்பாட அம்பிகை யிரங்கிடுவாள்
அகமுள குறைகளெல்லாம் அவளறிந்தே வேண்டும்
சகலசௌ பாக்யங்களும் சகம்வர அருளியே

வாலைக் குமரியளாய் வண்ணப்பட் டுடுத்து நின்றே
சூலைக் கொடுத்திடென்ன சுதரையே யருளிடுவாள்
சாலைத் தடவழியே போய்வரு வோர்நின்றே
காலைத் தொழுதெழவே கருணைசெய் காமாட்சி



உ

சிவமயம்

## யாழ்-நாயன்மார்கட்டு கவிஞர் இராசையா குகதாசனது 60ஆம் ஆண்டு மணிவிழாவன்று தம்பதிகளை பாராட்டிப் பாடிவழங்கிய வாழ்த்துப் பாமாலை

பாரினில் பூத்திடும் கற்பகம் போல
பற்றியவூர் நாயன்மார் கட்டிலே குகதாசன்
சீரிய இராசையா தங்கலட் சுமிபெற்ற
சிறந்த மைந்தனாய் உதித்துநல் லுலகிலே
வார மாகவே கற்றுஇள மையிலேயே
வளர்ந்து கொழும்பில் முயற்சிசெய் ததனால்
சீரும் சிறப்புமாய் தெய்வம் பராவி,யத்
தெய்வச் சிந்தையராய் சிறந்துவாழ்ந் திருந்தார்.

### கவிஞர் எல்லா மூர்த்திகளையும் பாடல்

தொட்டனைத் தூறும் மணற்கேணி யனைய
சிந்தையில் ஞான கவிதையூற் றெடுக்க
மட்டிலா ஐங்கரன் அம்மையப் பனுடனே
மாண்பின் குகனையும் பாடி மகிழ்ந்தே
திட்டமாய் ஊரின் பழமரம் போல
சிறக்கப் பாடிடும் கவிஞர் குகதாசன்
இட்டமாய் அறிஞர்கள் பாராட்ட நூல்களை
இயற்றி அரங்கேற்றி இனிதுவாழ்ந் தனரே.

### கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்கள் நல்லூரிற் கௌரவித்தது

காரைநக ரீழச்சிதம் பரேசன் கோவில்
கருணை சௌந்தராம் பிகைசுந்த ரேசரை
வாரமாய்ப் பாடுநூல் வகுத்துமவ் வூரில்
வாழும்கருங் காலிமுருகன் திருவூடல் கேட்டவ்வூர்
சீரியல் கலாநிதி வைத்தீசர் அழைத்துயரிய
செழித்தநல் லூர்ச்சிவன் ஆலய முன்றலில்
மாரியாய் வாழ்த்திப்பொன் னாடையும் போர்த்தி
மகிழ்ந்து பாராட்டவும் வாழ்ந்தனர் மகிழ்ந்தே

**மாவை சு.து.சண்முகநாதக்குருக்கள் பாராட்டியது**

மாவை ஆதீன கர்த்தவாய் விளங்கியே
வாழ்ந்த சண்முக நாதக் குருக்களும்
பாவலன் நல்ல குகதாச னைநோக்கி யிந்த
மதிப்பின் முருகனைப் பாடியது போல
தேவர்கள் போற்றுமேனை முருகனா லயமவையை
சேர்ந்து திருப்புகழ் பாடிவா வெனஏற்று
ஆவலாய் இன்றுமே அவ்வண்ண மாக
அரும்பெரும் திருப்புகழ் பாடிடல் அறிந்தேன்.

**புலவர்மணி வை.க.சி விருதுவழங்கியது**

நல்லை,நா வலரைப் பாடிய தாசனை
நானும் வாழ்த்தியப் பாட்டினில் மகிழ்ந்தே
எல்லையில் சொன்னயம் பொருணயங் கண்டு
இணையில் நூலிதென்று பாராட்டி யவரை
கல்வியால் காலத்தால் அழியாத கம்பனாம்
கனதியாம் விருதை அளித்தனன் அதையன்று
சொல்லி நினைத்திட கூறியவ் விழாவிலே
தொடர்ந்து பாராட்டினேன் தொட்டுமகிழ்ந் தனரே.

**வாழ்த்தியஅனைவருக்கும் விருந்துபசாரம்செய்தகவிஞர்**

இந்த மணிவிழா நாயகன் தாசனின்
இனியஇல்லத்தில் எய்திவந் தோர்க் கெல்லாம்
சிந்தைகூர்ந் திடநல் தேவாமிர் தம்போல
தேனீர் பலகாரம் விருந்திட்டுக் குகதாசன்
எந்தன்போல் வந்தோரை ஏந்திக்கை கூப்பியே
இனிக்க வாழ்த்தித்தன் குடும்பத்தோடொன்றாய்
அந்தமில் நீடூழிவாழ்த் தியோரை வாழ்த்தி
அம்மையப் பனைஏற்றி மகிழ்ந்தார் ஆனந்தித்தே.

**வாழ்க கவிஞர் இராசையா குகதாசன்**

ஞானச்சுடரில் முருகன்கழல் வாழ்த்தும் குகதாசனை
வானச்சுடர்போல் நீடுவாழ நானும்வாழ்த்தினேனே.

வட்டுவினிவீதி
இணுவில்
யாழ்ப்பாணம்

அகவைநூறில்வாழும்
முதுபெரும்புலவர்,கலாபூஷணம்,புலவர்மணி
வை.க.சிற்றம்பலம்

உ
சிவமயம்

# தேசச்செழுந் தென்றலென செய்திதந்து வாழ்த்துகிறேன்



செந்தமிழ்க் கலைகள் மேவி
செழுந்தமிழ்ப் பண்பி னூற்றாய்
சந்தமும் சைவ மேன்மை
சார்ந்துநல் லுயர்ந்த கோவில்
சிந்தையில் பக்தி விஞ்ச
சிறந்தநா யன்மார் கட்டைச்
சொந்தமாய்க் கொண்ட மேலோன்
சோர்விலன்குக தாச னாமே.

பந்தமும் பிணைப்பும் நல்ல
பார்வையி னூடே செழுமை
சுந்தர அழகுத் தமிழை
சுவைபடக் கவிதை யார்க்கும்
மந்திர வயத்த னாகி
மாசிலா பக்தி யூற்றில்
விந்தைகள் புரிந்த வேளை
விளம்பினோம் புகழே போற்றி.

இளமையில் புலமை மிக்கோன்
இனித்திட மரபு கொண்டோன்
வழமையே வாழ வைக்கும்
வகுத்தபண் பாட்டில் நின்றோன்
பழகுதற் கன்பு நேயம்
பார்த்திட நொடிதே முடிக்கும்
அழகுறப் பணிக ளாற்றும்
அற்புதச் சமூகத் தோன்றல்

கண்ணியம் மிக்க மேன்மை
கருத்துடன் சமூகந் தன்னில்
எண்ணிட முடிக்கு மாற்றல்
எழிதினி லிவர்தம் நோக்கால்
புண்ணியம் எய்தும் பேறு
புவனிமா மனித னாகித்
திண்ணிய புகழி னாலே
திகழ்மணி விழாவும் கண்டாய்.

திருமுறைப் பண்ணே கோர்த்து
    திகழ்புராண படனஞ் சொல்லி
பெருமட மாதீ னங்கள்
    பேறுடை யால யங்கள்
நிறைவுறு வாழ்வு இல்லம்
    நீள்சன சமூக மெல்லாம்
குறைவிலா பக்தி யோங்கி
    குலவிட வழியே சமைத்தாய்.

திருமண வாழ்த்துப் பாடி
    தீந்தமிழ் உறவு காட்டி
வருவிழா வெல்லா வாழ்த்தும்
    வாய்மொழி சுவைக்கச் சொல்லி
கருவிலா வந்த வூற்று
    கற்பக தருவே யென்று
பருகினா ரின்னா ளுன்னை
    பற்றியே வாழ்த்து கின்றார்.

பக்தியின் ஊற்றாய் நின்று
    பாடிய ஊஞ்சற் பாக்கள்
சக்திக்கு மேலா யெழுந்த
    சந்தமாம் திருப் புகழ்கள்
சுத்தமாம் புதுமை யூடே
    சுவையுறத் திகழ்ந்த பாக்கள்
அத்தனைக்கு மணியா யின்று
    மணிவிழா காணு கின்றாய்.

தேசபந்து தேச மான்ய
    தேசாபிமான ஜனதா புத்திர
பாச அருட்கவிச் செல்வன்நீ
    பகர்தெய்வப் புகழிசை வாரிதி
நேசமுறு சமாதான நீதவான்
    நிகரரிய பட்டமுறும் வேளை
தேசச் செழுந் தென்றலென
    செய்திதந்து வாழ்த்து கின்றேன்.

**கொக்குவில் இந்துக்கல்லூரி**
**கொக்குவில்.**

**வே.ஞானகாந்தன்**
**அதிபர்**

உ

சிவமயம்



# தீந்தமிழ்க் கவிதைபோல
# செழிப்பொடு இனிதுவாழி

தேனினும் இனிய எங்கள் செம்மைசேர் செந்த மிழால்
வான்புகழ் சைவ மென்னும் வற்றாப்பெரு நதியி னிலே
ஊன்கலந் தே தெய்வப் புகழிசைத் தேன் அமுதத்தை
தான்கலந் தே தந்த தம்பிகுக தாசன் வாழி.

பார்புகழ்நல் அமுத மென்னும் பைந்தமிழ்த் துடுப்பெ டுத்தே
சீர்பெறுநற் கவிதை யென்னும் சிறப்புறு படகை யோட்டி
தார்அமரு இறைக ளாரின் தண்ணார் பதஞ் சூட்ட
ஊர்உலகு போற்றி டுமாறு ஒப்பரிய மாலை தந்தீர்.

மாலொடு சிவனை யன்னை மற்றுள தேவ தேவியர்
கோலமும் மூர்த்தி கீர்த்தி கொழித்திடு புகழி னோடு
வேலவன் புகழைப் பாடும் வித்தகப் புலவ ரேறே
சீலமொ டுலகு போற்றும் சிறப்பெலா மடைந்து வாழி.

திருவுடை யிலங்கை நாட்டின் திருத்தல மவைகள் தோறும்
பெருவருள் தரஅ மர்ந்தோர் புகழுரை குகனின் தாசா
முருகனை மனதிற் கொண்டோர் மூவுலகதும் போற்ற வாழ்வர்
அருணகிரி வழியிற் பாடும் அண்ணலே வாழ்க நீடு.

**ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி**
**கோவில்வீதி,யாழ்ப்பாணம்.**

**"விகடகவி"**
**மு.திருநாவுக்கரசு**

உ
சிவமயம்

# அணிவிழா பலகாண அருளிடையா



இராகமாலிகை

தாளம்:ஆதி இராகம்:மோகனம்

பல்லவி

அணிவிழா பலகாண அருளிடையா -இறைவா
அணிவிழா பலகாண அருளிடையா --இன்று
மணிவிழா காணுமிந்த மாண்புடை தம்பதிகள்

(அணிவிழா)

அநுபல்லவி

பணிவழி யாய்ப்புகழை பார்புகழ் தமிழாலே
மணிமணி யாய்ப்பாடி மலரிணை சூடுமிவர்

(அணிவிழா)

சரணங்கள்

சொத்தெனும் வீரமணி தூமறை பாடு வாயால்
சுந்தரனார்க் கிறைவன் சொன்முறை யோத நாடி
அர்ச்சனை பாட்டென்றே அருந்தமிழ்ப் புகழ்மாலை
சொக்கனின் அருளாலே சொக்கிடச் சூடுமிவர்

(அணிவிழா)

இராகம்: இந்தோளம்
பண்முறை பிறழாதே திருமுறை பாடிநின்றீர்
எண்ணமதே வாழும் இறைபுகழ் ஓதிவந்தீர்
ஷண்முக நாதனோடு –மாவை
ஷண்முக நாதனோடு ஷண்முக நாதனாரும்
தந்திடு மாசியினால் தரணியில் உயர்வோடு

(அணிவிழா)

இராகம்: மணிரங்கு
ஈழச்சிதம் பரத்தில் சௌந்தராம் பிகையோடு
ஆளவே யமர்ந்திருக்கும் சுந்தரேஸ் வரனாரின்
தாளையே மறவாதே தாழிடும் வயித்தீசர்
நாளதுமே யாசி நல்கிட புவிவாழ்வில்

(அணிவிழா)

இராகம்:துர்க்கா

இத்தரை நூறாண்டில் இலங்கிடும் பெரியரிவர்
முத்திப் பழுத்திருக்கும் முதுபெரும் புலவ ரென்றே
வைத்துத்தொழும் வை.க சிற்றம்பலம் ஐயா!
நித்தம்ஈ ஆசியினால் நீணிலம் புகழோடு
(அணிவிழா)

இராகம்:காபி

இலங்கையி லருள்வார எழுந்திடு மாலயங்கள்
இலங்கிடு மூர்த்திகளின் இணையடி கீர்த்திகளை
நலம்பெற அருணகிரி நவில்சந்தக் கவிபோலே
அலங்கரி குகதாசன் அணைதுணை யோடுபுவி
(அணிவிழா)

இராகம்:சாருமதி

பொன்னான மனையாட்டி புவனேசு வரியோடு
கண்ணான கஜரூபன் காயத்திரி குமரன்
வந்தேசேர் றோஜியொடு வளமவை பலசேர
கண்நேர தில்வாழ்வில் காசினி நிறைவோடு
(அணிவிழா)

இராகம்:சுருட்டி

உகப்புடை குருநாம "ஷண்முகப் பிரசாதம்"
எனப்புவி யுரை "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"
"குகப்பிர சாத"மதில் குவிந்திடு மாசியொடு
இகப்பிர சாதமெனும் இறைகளி னருளாலே
(அணிவிழா)

**ஓய்வுநிலை விரிவுரையாளர் சங்கீதபூஷணம் இசைமாமணி**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை "கரவைக்குமரன்"**
**வீரபத்திரர் கோவிலடி,உடுப்பிட்டி செல்லத்துரை குமாரசாமி.**



# சைவஉலகு பெருமைப்படும் சந்தக்கவிவாணர்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்களை எனது மாணவன் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மூலம் அறிவேன்.சென்ற ஆண்டு நல்லூர் உற்சவ காலத்தில் நல்லை நாவலர் மணிமண்டபத்தில் நடை பெற்ற கந்தன் கழற்கோர் கவிமாலை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட ஞாபகமும் உண்டு.

கவிஞர் அவர்கள் இயற்கையாய், இறையருளால் அமைந்த கவியாற்றலை வித்துவான் சொக்கன், வீரமணிஐயா போன்றோரிடம் கூர்மைப்படுத்திக்கொண்டு இறைபுகழ்களையே பாடிவருபவர்.குடா நாட்டில் மட்டுமல்ல வெளிமாவட்டங்களி லும் உள்ள பல சைவ ஆலயங்களுக்கு திருவூஞ்சல் திருப்பள்ளிஎழுச்சி, கீர்த்தனை மாலைகள், புகழ்மாலைகள், போன்றவற்றை மூர்த்தி தல தீர்த்த விசேடங்கள் விளங்கும் படியாக யாத்தளித்து சிவத்தொண்டு புரிந்த பெருமைக் குரியவர்.

தெய்வப் புகழிசை வாரிதி யான இவரின் பாடல்கள் யாவும் பக்திமயமானவை. சொல்நயம், பொருள் நயம் மிக்கவை.நாவலர் பெருமானின் திருச்சரிதையை விருத்தப்பா வடிவில் "நாவலர் சரிதமேதும் நற்றமிழ் மாலை"என்ற தலைப்பிலே பெருங் காவியமாகப் பாடும் பணியையும் மேற்கொண்டு வருகின்றார்.

மாவை ஆதீனகர்த்தரின் வேண்டுகோளுக் கமைவாக இலங்கையின் பல பாகங்களிலும் எழுந்தருளி அருள் பாலிக்கும் மூர்த்திகளின் கீர்த்திகளை அரு ணகிரி நாதரின் சந்தப்பாவடிவில் எடுத்தியம்பும் அறுநூறு திருப்பகழ்ப் பாடல்களை யாத்து தமது மணிவிழா மங்கல நாளில் தெய்வப் புகழிசைத் தேனமுதம் என்ற பெயரில் வெளிக்கொணர்வதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

மாண்புடை மணிவிழா மங்கலம் காணும் இத் தம்பதிகளின் மணி விழா பெருவிழாவாக அமையவும், தம்பதிகள் மிக நீண்ட ஆயுளோடு இந்நில மீது சகல சௌபாக்கியங்களும் பெற்றுத் திகழவும், கவிஞர் சைவ உலகம் பெருமைப்படும் படியாக இவை போன்ற பலநூல்களை உருவாக்கவும் இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்**

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**முன்னாள் துணைவேந்தர்.**

# பலமேடைகளைப் பாடல்களால் அலங்கரித்தவர்



தெய்வத் தமிழிசைக் கவிஞரான சிவத்திரு இராசையா குகதாசன் அவர்கள் மணிவிழாக் காணஉள்ளார் என்ற இனிப்பான செய்தியறிந்து மிகவும் மகிழ்ந்தோம் அவரின் மணிவிழா மங்கல நிகழ்வில் ஷண்முகப் பிரசாதமாக "தெய்வத் தமிழிசைத் தேனமுதம்" என்றும், மணிவிழா நாயகரின் மாண்புரை மங்கல நூலாக "குகப்பிரசாதம்" என்றும் இரு நூல்கள் வெளிவர உள்ளன என்றசெய்தி பாலும், தேனும் கலந்த உவப்பான செய்திகளாகவும் மிகவும் இன்ப அதிர்ச்சியைத் தருவனவாகவும் உள்ளன.

கவிஞர் அவர்கள் விருத்தம் வகைப் பாடல்களுக்கு "சொக்கன்" அவர்களைக் குருவாகவும், கீர்த்தனை வகைப் பாடல்களுக்கு வீரமணி ஐயா அவர்களைக் குருவாகவும் கொண்டவர்.யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களிலுள்ள பல ஆலயங்களுக்குத் திருவூஞ்சல்கள், திருப்பள்ளி எழுச்சிகள், நல்லூர், மாவை, கீரிமலை, சந்நதி ஆலயங்களுக்கு 116 திருப்பகழ் வடிவ பாடல்கள் என்பன பாடியுள்ளார். இந்து சாதனம் இதழில் தொடராக வெளிவந்த நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை (639) பாடல்கள் வந்துவிட்டது. மிகுதிப் பாடல்களும்தொடர்ந்து இந்து சாதனத்தில் வெளிவரும் என நம்புகிறேன். தவிரவும் இவர் பலவெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா போன்ற விழாக்களுக்கும் வாழ்த்துப்பாக்கள் பாடி உள்ளார்.

கிழக்கு மாகாணம் தவிர்ந்த "தொண்டீஸ்வரம் தொடங்கி கிளிநொச்சி மாவட்டம் வரையுள்ள முழுஆலயங்கள், யாழிலுள்ள சில ஆலயங்கள் உட்பட 560 ஆலயங்கள் மேல் மாவை ஆதீனப் பேரரசர் மறைந்த "மகாராஜஸ்ரீ" சு.து.ஷண்முகநாதக் குருக்கள் அருளாணையின்படியும், ஊக்கம் அளித்த கலாநிதி.க.வைத்தீஸ் வரக்குருக்கள், முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஆகியோரது ஆசியோடும் எழுதப்பெற்ற 600 திருப்புகழ் வடிவிலானபாக்கள் ஷண்முகப்பிரசாதமாக வெளிவரும்"தெய்வப் புகழிசைத் தேனமுதம்"ஆகவும், ஆதீனங்கள், சிவாச்சாரியார்கள்,நிறுவனங்கள், பேராசரியர்கள்,கவிஞர்கள், கல்விமான்கள். கலைஞர்கள் வழங்கிய மணிவிழா நாயகரின் மாண்புரை நூல் "குகப்பிரசாதம்"ஆகவும் வரவுள்ளது.

இவ்விரு நூல்களும் கவிஞர் அவர்களின் கவித்துவப் புலமையையும், அருணகிரி நாதர்அருளிய திருப்புகழ் போன்று சந்தச் சிறப்பும், முருகப்பெருமானதும், ஏனைய தெய்வங்களதும் திருத்தக்க புகழ்களைக் கூறுவதாகவும், இறைவரின் அருளைப் பெற்றுப் பாடியுள்ளார் என்று போற்றக் கூடிய சிறப்புடையதாகவும் அமைந்திருக்கும் எனநம்பலாம். கவிஞர் முன்னர் பாடிய பாடல்கள் சிலவற்றைப் படிக்கும் போது பாடல்கள் பொருட்செறிவும், இனிமையும் கொண்டவை யாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடிய திருநெறிய தமிழ்ப் பாடல்கள் போன்ற உணர்வுகள் கொண்டவையாகவும் இருந்தன.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு. (குறள்60)

என்பதற்கமைய அன்பு மனைவியுடன் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி அவர்களை சைவநெறியில் நிற்க வைத்த பெருமையும் இவர்களது நிறைவாகும். கவிஞர் இராசையா குகதாசன் தம்பதிகள், அவர்களின் மக்கள் உடல் நலத்தோடும், மனநலத்தோடும், பல்லாண்டு வாழ்ந்து சிவப்பணி நின்று, தொண்டினைச் செய்ய, சிவபெருமான் திருவருளை வேண்டி வணங்கி உளமார வாழ்த்தி அமைகின்றேன்.

அன்பே சிவம்

**சைவசித்தாந்த மன்றம்**
**கனடா.**

**தி.விசுவலிங்கம்**
**தலைவர்**

**தில்லையம்பலப்பிள்ளையார் மேல் கவிஞர் பாடியது**

பல்லவி

வேண்டுதல் அறியாயோ? வேழமுகா -உள்ளே
தூண்டு சுடரனைய சோதியே எந்தனது

அநுபல்லவி

பாண்டுரங்கன் மருகா பரம தயாளனே
பூண்தில்லை யம்பலப் புண்ணியனே எனது

சரணம்

சூலிலாருனை நோற்பின் சுதரை அருள்பவனே
பாலினால் அபிஷேகம் பண்ணினேன் பாராயோ?
வேலினாற் துணைரணமாய் (புண்ணில்)வாட்டுத லறியாயோ?
காலினாற் தலைவிதியை மாற்றிநீ யருளாயோ?

உ

சிவமயம்

அருட்சொல்வாரி,அருள்நெறித் தமிழருவி,சைவசித்தாந்த கலாநிதி,சைவசித்தாந்த பண்டிதர்,வருணனைக் கலைஞானி,சைவாலய அலங்காரன்,சைவப்புலவர் செ.கந்த.சத்தியதாசன் எம்.ஏ,ஜே.பி அவர்களின் வாழ்த்துரை.



## இறைபுகழ் பாடும் நிறைகுண சீலர்

ஆதியும் அந்தமுமில்லாதது இந்துசமயம். காலத்துக்குக் காலம் சிவபெருமான் கருணையினாலே பலபுலவர்கள் தோற்றம்பெற்று இறைவனது பெருமைகளையும், கீர்த்திகளையும் அழகொழுகும் தமிழில் பாடிவந் துள்ளனர். பாடியும் வருகின்றனர்.

தமிழ் பக்திமொழி என்பர் ஆராய்ச்சியாளர்.வாழ்வே வேண்டாமென்று உயிரை மாய்க்கச்சென்ற அருணகிரியை முருகன் கையிலேந்திப் பாடவைத்தான். ஊமைப்பிள்ளையான குமரகுருபரரைப் பாடவைத்தவர் திருச்செந்தூர் அழகன்.கந்தபுராணத்தைப்பாட அடியெடுத்துக் கொடுத்தவனும் முருகன்.இந்த வகையில் எல்லாத் தெய்வங்களுமே அடியவர்களின் பக்தியையும், பக்திக்கவிகளையும் விரும்புகின்றன. அருட்புகழை அவர்களைக் கொண்டு பாடவும் வைக்கின்றன. சங்க காலத்திலிருந்து இன்றுவரை தூயதமிழில் பக்தி ததும்பும் பாடல்களைப் பாடவைப்பவர் இறைவனே. அவன் திருவுளத்தை யாரறிவார்.

இன்றும் அக்கால நாகரிக, பண்பாட்டு அம்சங்களை எடுத்துக் காட்டும் பக்திப் பனுவல்களாக அப்பாடல்கள் விளங்குவதோடு பக்தியை வளர்க்கவும்,பாடிப் பரவி வழிபடவும் வல்ல கவிதைகளாகவும் உள்ளன. இறையருளாற் தோன்றிய இத்தகைய தெய்வீகப் புலவர்கள் வரிசையிலே நல்லூர் முருகன் அருட்பார்வை நல்கும் நாயன்மார்கட்டுக் கிராமத்திலே சைவாசாரம் பேணும் குடும்பத்திலே அவதாரம் செய்தவர்தான் தெய்வப் புகழிசை வாரிதி இராசையா குகதாசன் அவர்கள்.

இலங்கையில் மட்டுமல்ல,இந்தியா போன்ற நாடுகளிலுமுள்ள பல தலங்களுக்கும் சென்று மூர்த்தி, தல,தீர்த்த விஷேடங்களை நேரடியாக அனுபவித்தவர். அந்த இறையனுபவங்களாலே, இறையருளாலே நல்ல சொல்விற்பனமும், கவிபாடு மாற்றலும் இயற்கையாகவே கைகூடும் பேறைப்பெற்றவர். சந்நிதி,மாவை,கீரிமலை,நல்லூர் போன்ற ஆலயங்களின் மூர்த்திகளின் கீர்த்திபற்றி சந்தக்கவி பாடியவர்.

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கு
வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்பது தாயுமானவர் வாக்கு. இதன்பிரகாரம் முருகப்பெரு மானாகவே விளங்கிய மாவை ஆதீனப் பேரரசர் மறைந்த மாமேதை "மகாராஜஸ்ரீ" சு.து.ஷண்முகநாதக் குருக்கள் மனத்தின் உள்ளிருந்து இறைவாக்காய் திருவாய் மலர்ந்தருளிய அருளாணையை ஏற்று இலங்கைத்திருநாட்டின் பலபாகங்களிலுமுள்ள ஆலயங்களுறை இறைவர்களது கீர்த்திகளையும், மகிமைகளையும் திருப்புகழாகவே பாடியுள்ளார். இப்பணிமிகப்பெரிய சிவத்தொண்டு மட்டுமல்ல போற்றுதலுக்கு முரியதாகும்.

மேலும் தெய்வத் தமிழிசைக்கவிஞர் அவர்கள் தனது அகவை அறுபது நிறைவில் நடைபெறும் மணிவிழா வெளியீடாக உலகிலேயே மிக ஆதியானதும், தான்பிறந்தது மாகிய சைவ சமயத்திற்கு, மெய்ஞ் ஞானத்திற்கு வழிகாட்டும் சிவப்பரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட எம் தெய்வங்களுக்கெல்லாம் திருப்புகழ் பாடி அதை தெய்வப் புகழிசைத் தேனமுதம் ஆகத் தருவதும் இறைவனின் பேரருளே.

மணிவிழாத்தம்பதிகள் பல்லாண்டு நீடூழி வாழவும்,கவிஞரது புகழ் மேன்மேலும் ஓங்கவும், ஈழநாட்டுத் திருத்தலங்களுக்கு மட்டுமல்ல, இந்தியா மற்றும் மேலை நாட்டுத் தலங்களுக்கும் திருப்புகழ் பாடி பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டு மென்று எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரனைப் பிரார்த்திப்போமாக.

**அகிலஇலங்கைச்சைவப்புலவர்சங்கம்**
**யாழ்ப்பாணம்.**

**சைவப்புலவர்.செ.கந்தசத்தியதாசன்.**
**கௌரவ செயலாளர்**

# சைவமும் தமிழுமோங்க சகப்பணி யாற்றுஞ்சீலர்





கவிஞர் இராசையா குகதாசன் அறுபதாவது அகவை அடைந்திருப்பதுடன் அவருடைய மணிவிழா மங்கல நாள் அவரால் இயற்றப்பெற்ற கவிதைத் தொகுதி வெளியீட்டுடன் கொண்டாடப்பட இருப்பதை அறிந்து மிக மிக மகிழ்ச்சி அடைகின்றோம். கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனூடாகவே கவிஞர் குகதாசன் எனக்கு அறிமுகமானார். எனினும் பின்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் பல ஆண்டுகள் இவருடன் இணைந்து பணிசெய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

அவர் ஓர் ஆக்க இலக்கியகாரர் என்பதை அவருடைய சில ஆக்கங்களைப் படித்தபோது உணர முடிந்தது. "இந்து சாதனம்"இதழிலே ஆறுமுக நாவலர் பெருமான் வரலாற்றைக் கவிதையிலே எழுதிவந்தார். பண்டிதர் பட்டம் பெற்றவர் போல் "தெய்வத் தமிழிசைக் கவிஞர்" அவர்கள் இறையருளால் தான் பெற்ற தமிழறிவை, கவியாற்றலைப் பயன்படுத்தி சைவத்தமிழ்த் தொண்டு செய்து வருகின்றார்.இந்த வகையில் இவர் இயற்றிய பாடல் தொகுதியான "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" சிறப்புற்றதாக விளங்குகின்றது. கவிநாயகர் கந்தவனம் பாடிய "பாவாரம்"எனும் தொகுதியில் தமிழ் நாட்டுத் தலங்களையும் சில ஈழநாட்டுத் தலங்களையும் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் கவிஞர் குகதாசனின் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"தொகுதியிலுள்ள பாடல்கள் யாவும் ஈழநாட்டிலுள்ள தெய்வத் திருக் கோயில்களில் உறைகின்ற கடவுளர்கள் பற்றியே பாடுகின்றன.

எல்லாப் பாடல்களும் அருணகிரிநாதருடைய திருப்புகழ் சந்தத்திலேயே அமைகின்றன. அதனால் பாடல்கள் எல்லாவற்றையுமே விருப்புடன் படிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அரகரசி வாய வென்று அநுதினமு மோதி நம்பு
மடியரினை யாள வந்த -வடிவேலா
பரசிவனி னோடு விஷ்ணு சதிவடிவி லாகு அம்மன்
பணியுபரி வார மென்று -புடைசூழ
பரவுமடி யார்கள் கெஞ்சு வரமருள ஈழம் வந்து
பழமுதிரு சோலை நின்ற- முருகோனே.

என்று அம்பன்பிட்டியவில் ஈழபழமுதிர் சோலையிலே அமர்ந்துள்ள முருகனை கவிஞர் அருணகிரியாரின் "சரணகமலாலய"என்ற திருப்புகழ்ச் சந்தத்திலேயே பாடியுள்ளார். பஞ்ச ரதமேறி வரும் வண்ணை வைத்தீசுவரனை,

பஞ்ச --ரதமேறி
வஞ்ச மில்உ ளங்கொ டன்னை தன்னு டன்அ மர்ந்தி ருந்து
சந்த தம்வ ழங்கு கின்ற -வயித்தீசா என்று விழித்து
மன்னு துன்ப மெங்க ளும்நி றைந்தி டர்கள் செய்ய எங்கள்
நெஞ்ச ழிந்து நின்று விம்மல் --அறியாயோ?

என்று தன் உள்ளக் குமுறலையும் இணைத்துப் பாடுகின்றார். இத்தகைய சிறந்தசந்தப் பாக்களைக் கொண்ட ஒரு இலக்கியத் தொகுதியை கவிஞரு டைய அறுபதாவது அகவை நினைவாக வெளியிடுவது மிகப் பொருத்த மானதாகும்.

அறுபது ஆண்டுகளைக் கொண்ட ஒரு சுற்றினை நிறைவு செய்து அடுத்தசுற்றிலே கால்பதிக்கும் வேளையில் அவரே இயற்றிய இனிமையான சந்தக் கவிதைகளை வெளியிடுவதனூடாக அவருடைய அடுத்த சுற்று தெய்வங்களுடையஅருளாசியுடன் "கன்ன லின்த மிழ்க லந்து பண்ணு டன்நி தம்வ ழங்கி உள்ள முள்கி நின்று" துதி பாடிக் களிக்கவும், கவிச்சுவைஞர்களைப் பரவசப்படுத்தவும்வழி சமைக்கும் என நம்பலாம்.

மணிவிழாக் காணும் கவிஞர் குகதாசனுக்கு என்னுடையதும், துணைவியாரினதும் அன்பான வாழ்த்துக்களை இந்த வேளையிலே தெரிவித்து மகிழ்கின்றோம். அவரும் அவருடைய துணைவியாரும் பிள்ளைகளும் இறையாசிகள்நிறையப் பெற்று வளமுடனும், நலமுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர் முனைவர் அ.சண்முகதாஸ்**
**தகைசார் வாழ்நாட் பேராசிரியர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**முனைவர்மனோன்மணி சண்முகதாஸ்**
**முன்னாள் கக்சுயின் பல்கலைக் கழக**
**ஆய்வுப் பேராசிரியர்.தோக்கியோ,**
**ஜப்பான்.**

# தமிழோடிசை பாட பாடல்கள் வலுவூட்டும்

இறைவனை இசை வடிவமாகக் காண்பது எமது பண்பாட்டு மரபு. "ஏழிசையாய் இசைப்பயனாய்" எனச் சுந்தரமூர்த்தி நாயனாரும் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என அப்பரடிகளும் "நாதவிந்து கலாதீ நமோநம"என்று அருணகிரி நாத சுவாமிகளும் இறைவனை இசைவடிவாகக் கண்டு ஆராதிக்கின்றனர். இறைவனுக்கு உகந்த அஞ்சலிகளாக சைவாகமங்கள் கீதாஞ்சலி, நாதாஞ்சலி, நர்த்தனாஞ்சலி ஆகியவற்றை விதந்துரைக்கின்றன.

தமிழோடு இசை பாடல் எமது வழிபாட்டு முறையில் தலையாயது. "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"என்கிறார் திருநாவுக்கரசர். பண்டைய காலத்திலிருந்து ஏராளமான தமிழிசையாளர்கள் இறைவனைத் தமிழோடிசை பாடிப் பேரின்பம் துய்த்தனர். இதனாற்றான் உலக மொழிகளுள் பக்திமைக்குரிய மொழியாகத் தமிழ்மொழி பாராட்டப்பெறுகின்றது. பன்னிரு திருமுறை தந்த குரவர்கள், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் தந்த ஆழ்வார்கள் தம்மை வெவ்வேறு நிலைகளில் நிறுத்தி என்றும் அழிவற்ற செந்தமிழ் மாலைகளால் இறைவனைப் போற்றினர். பின்னாளில் அருணகிரிநாதர், அபிராமிப்பட்டர், குமரகுருபரர், இராமலிங்க சுவாமிகள் போன்ற அநுபூதிமான்கள், இறைவனைக் கன்னித் தமிழால் இனிக்க இனிக்கப் பாடினர்.

வண்ணச் சுவையும் சந்தச் சுவையுமுள்ள அருணகிரிநாதரின் திருப்புகழ் தமிழ் இலக்கியத்தில் புதுமையான பாடல்களாயமைந்து விளங்குவன. இத்தகைய சந்தப்பாடல்களை இயற்றுவதும் சுலபமான காரியமல்ல. நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்கள் கவிதை எழுதும் ஆற்றல் இயற்கையாகக் கைவரப்பெற்றவர். திருப்புகழ் வடிவிலான பாடல்களை ஈழத்தின் புகழ்பூத்த முருகனாலயங்களில் எழுந்தருளி அருளாட்சி புரியும் மாவைக்கந்தன், சந்நிதி முருகன் ,நல்லைக்கந்தன் ஆகிய தெய்வங்களின் மீது பாடிப் பல பெரியோர்களது ஆசிக்கு உரியரானவர்.இப்பெரியோர்களின் ஆசியுடன் தற்போது ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் கோவில் கொண்டு அருள் பாலிக்கும் தெய்வங்கள் மீது திருப்புகழ் வடிவிலான அறுநூறு பாடல்களை ஆக்கியுள்ளார். அருணகிரி நாத சுவாமிகள் விநாயகர் மீது பாடிய ஒருசில திருப்புகழ் தவிர்ந்த ஏனைய பாடல்களை முருகக்கடவுள் மீது மட்டுமே பாடியுள்ளார். திரு குகதாசன் அவர்கள் முருகன் மீது மட்டுமன்றி விநாயகர், அம்பாள், சிவன், திருமால், நாகதம்பிரான் போன்ற

ஏனைய வழிபடு மூர்த்தங்கள் மீதும் பாடியுள்ளார். ஒவ்வொருமூர்த்தம் பற்றிய பாடல்களிலும் அம்மூர்த்தத்திற்குரிய புராண வரலாறுகள், அருட் செயல்கள், திருவருட் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பெறுவதுடன் பாடிப்பணிவோரதுபிரார்த்தனைகளும், வேண்டுதல்களும் கூறப்படுகின்றன. இது அவ்வத் திருத்தலங்களில் பாடி வழிபடுவோர்களை இறைவனுடன் ஆற்றுப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளன. அதனால் "தெய்வத் தமிழிசைத் தேனமுதம்"என அழகாகத் தலைப்பிடப்பட்டு "ஷண்முகப் பிரசாதமாக" வெளிவர இருக்கும் நூல் ஈழத்தின் பல்வேறுபகுதிகளிலும் வாழும் வெவ்வேறு தெய்வ மூர்த்தங்களை உபாசிக்கும் இந்துப் பெருமக்கள் அனைவருக்கும் வரப்பிர சாதமாயமையும் என்பதில் ஐயமில்லை. திரு.குகதாசன் தம்பதிகளின் மணிவிழா சிறப்பாக நடைபெறவும் அந்நிகழ்வின் அழியா நினைவுச் சின்னமாக "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" எனும் "ஷண்முகப் பிரசாதம்" வெளிவந்து ஈழமணித் திருநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழோடிசை பாடல் மரபுக்கு வலுவூட்டவும் திரு.குகதாசன் தம்பதிகள் நீடு காலம் சுகதேகிகளாக வாழ்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றவும் எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**
**யாழ்ப்பாணம்.**

**கலாநிதி இ.குமாரவடிவேல்**
**ஓய்வுநிலைப் பேராசிரியர்**

## சண்டிலிப்பாய் நாகபூஷணிமேற் கவிஞர் பாடியது

பல்லவி

நீடிய சுகமருள் நித்யகல் யாணி -என்றும்
நாடிடும் பொருள்யாவும் நல்கிடும் தேவி

அநுபல்லவி

ஆடிடும் சிவனோடு (மன்றில்) ஆடிடும் காளி
மூடிடு மலம் மூன்றும்(நம்மை) முடக்கும்வ ராகி

சரணம்

நாயகி நான்முகி ஸ்ரீநாக பூஷணி
தூயநற் சீரணி துலங்கும் மகேஸ்வரி
ஆயகலை களெல்லாம் அருள்பர மேஸ்வரி
தீயவை நீக்கியே திருதரு நாரணி

# அகக்குழைவை வெளிப்படுத்தும் திருப்புகழ்



யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டைச் சேர்ந்த தெய்வத் தமிழிசைக் கவிஞர் திருவாளர் இராசையா குகதாசன் ஜே.பி அவர்களின் அறுபதாம் அகவைநிறைவை யொட்டி நடைபெறவிருக்கும் மணிவிழாவிற்கும் அம் மங்கல நாளில் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"என்ற தலைப்பில் ஷண்முகப்பிரசாதமாக வெளிவரும் மணிவிழா மலருக்கும் வாழ்த்துரை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய இளம் சந்ததியினரிடையே சமயவாழ்வு மீதான ஈடுபாடு என்பது வேகமாகக் குறைந்து வருகின்றது. அதனால் எமது தமிழ்ச் சமூகம் நாள் தோறும் பல்வேறு வகையான துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றது. பற்றற்றவனின் பாதங்களைப் பற்றினால் அன்றி எமது துன்பங்களுக்கு விடிவு வரப்போவதில்லை. சமூக திலகம் திருவாளர் இ.குகதாசன் இறைவனின் அருட்கடாச்சம் நிரம்பப் பெற்றவர். அவர் இன்றைய தலைமுறையும் நெஞ்சம் உருகிப்பாடும் வண்ணம் இந் நூலில் திருப்புகழால் இறைவனை அர்ச்சித்துள்ளார். இப்பேறு எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களின் மீது பாடப்பெற்ற பாடல்களின் முதலாவது தொகுப்பாக இந்நூல் வெளி வருகின்றது. திருவாளர் இ.குகதாசனின் கவியாற்றலும் திருப்புகழ் மீதான அவருடைய தாடனமும் இத் தொண்டினூடே சிறப்பாகப் புலப்பட்டு நிற்பதை அவதானிக்க முடிகின்றது. ஆண்டவனுக்கும் அடியவனுக்கு மிடையிலான அகக்குழைவை வெளிப்படுத்த திருப்புகழ் என்ற இலக்கிய வடிவம் பெரிதும் துணை செய்யும்.

சைவ மெய்யடியார்கள் தெய்வப் புகழிசை வாரிதி இ.குகதாசன் அவர்களுடைய திருப்புகழைப் பாடிப் பரவி எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சத்தைப் பெற வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றேன். இதுபோன்று சைவப்பெருமக்கள் பயன்பெறும் வண்ணம் பல அருட்பாமாலைகளைத் தொடர்ந்து வெளியீடு செய்ய வேண்டும் என்று வேண்டுவதோடு, மணிவிழாத் தம்பதிகளுக்கு எல்லா வளமும் எல்லா நலமும் கிடைக்க இறையருளை வேண்டுகிறேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**

**பேராசிரியர். கி.விசாகரூபன்**
**தலைவர்,தமிழ்த்துறை.**

# சொக்கனையா வின்பின் சொக்கிற்கு தையா
# உன்திருப்புகழ் கண்டு எங்கிராமம்.



எமது கிராமத்தவரான இராசையா குகதாசன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலரான தெய்வப் புகழிசைத் தேனமுதத்திற்கு நாயன்மார்கட்டு சனசமூக நிலயத்தின் சார்பாக வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

எமது நிலையத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் உதவி நின்ற அம்பிகை அடியாராகிய கவிஞர் அவர்கள் எமது குல தெய்வமான அன்னை இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாளின் தெய்வீக மகிமையையும், புகழினையும் கலாநிதி சொக்கனையா தலைமையில் கல்விப் பேராசான்கள் வாழ்த்த யாழின் முதல் இறுவட்டாக அம்பாள் சந்நிதியில் வெளியிட்டு எமது கிராமத்திற்கே பெருமை சேர்த்த பெருந்தகை.

நாயன்மார்களின் வரலாற்றை நோக்கும் போது ஒரு திருப்பு முனை யாக இறைவனால் ஆட்கொள்ளப்பெற்று, அடியெடுத்துக் கொடுக்கப்பெற்று பாசுரங்களை இயற்றியிருப்பர், அல்லது திருவருள் விளையாட்டின் மூலம் ஈர்க்கப்பெற்று அவன்புகழ் பாடியிருப்பர்.

இவ்வாறே மாவைக் கந்தனால் ஆட்கொள்ளப் பெற்ற தெய்வப் புகழிசை வாரிதியான கவிஞர் அவர்களும் மாவை ஆதீனப் பேரரசர் மறைந்த மாமேதை "மகாராஜஸ்ரீ"சு.து.சண்முகநாதக் குருக்கள் அவர்களின் அருளாணையை ஏற்று குருவருளும், திருவருளும் துணைநிற்க இத்தெய்வ கைங்கரியத்தை நிகழ்த்தியுள்ளார். இதுவும் ஒரு மிகப் பெரிய சிவத்தொண்டாகும்.

இலங்கையிலுள்ள ஐநூற்றி அறுபது தலங்கள் மேற் பாடப்பெற்ற அறுநூறு திருப்புகழ்ப் பாசுரங்கள் தாங்கி வெளிவரும் "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" நூலை வாசிப்போர் இருவகையான பயனைப் பெறுவர். ஒன்று தலத்தை நேரடியாகச் சென்று தரிசித்தது போன்ற ஆனந்த உணர்வு. மற்றையது அத்தலத்தில் இருந்து அருளாட்சி புரியும் இறைவன் திருமேனியின் பேரழகை நேரில் காண்பது போன்ற காட்சி. இறையருள் பெற்ற கவிஞரின் ஆற்றலால் இவ்விரண்டு தெய்வீக அநுபவங்களையும் படிப்போர் நெஞ்சிற் பரவச் செய்யக் கூடியவாறு பாசுரங்கள் புனையப் பெற்றிருப்பது மிகவும் பாராட்டக் கூடிய ஒரு பெருமுயற்சியாகும்.

அருட்கவிச் செல்வரின் இத் "தெய்வத் தமிழிசைத் தேனமுதம்" அனைவரது உள்ளத்தையும் கவர்ந்து நீண்டு நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. தெய்வத் தமிழிசைக் கவிஞரின் இத் தெய்வீக முயற்சியைப் பாராட்டுவதோடு மணிவிழாக் காணும் இம்மாண்புடைத் தம்பதிகள் பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற வாழவும், கவிஞர் இது போன்ற பல பக்திநிறை பாசுரங்களைப் பாடவும் அன்னை பேய்ச்சி பேரருள் புரியவேண்டு மென்று பிரார்த்தித்து யாழ்-நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் சார்பாக வாழ்த்தி அமைகின்றேன்.

**யாழ்-நாயன்மார்கட்டு சனசமூக நிலையம்** — **இ.அரசகுலசூரியன் பி.ஏ**
**நாயன்மார்கட்டு** — **தலைவர்**

## கவிஞர் பாடியளித்த அட்டலஷ்மி இராக மாலிகா

பல்லவி

அட்டலஷ்மி பாதம் அநுதினம் தொழுவோம் -எங்கள்
இட்டப்படி யாவும் இகமதிற் பெறுவோம்

அநுபல்லவி

துட்டத்துய ரோடி தூயஅர சாள்வோம்
முட்டப் பொருள் குவித்தே மூவுலகும் ஆள்வோம்

சரணங்கள் (வீர லஷ்மி)

சூலமொடு அபயம் சொரிவரத கரத்தாள்
காலனும் நடுங்கிடும் கதிரொளிசக் கரத்தாள்
நீலக்கடல் வடிவாள் நீங்காத புகழுடையாள்
மாலவனும் போற்றி மகிழ்வீரத் திருமகளாள்

விஜயலட்சுமி (அட்ட)

அற்புதங் காட்டியென்றும் ஆண்டருள் எண்கரத்தாள்
பொற்புடை வாளுடையாள் பொலிவீர விழியுடையாள்
நற்புகழ் நாரணனின் நெஞ்சுறை பெண்மானாள்
வெற்றிகள் வரஅருளு விஜயலட்சுமித் தாயாள்

தனலஷ்மி (அட்ட)

பொங்கெழில் தாமரையில் பொற்பதம் பதித்துநிற்பாள்
எங்கணும் நிறையுதனம் எழிற்கரம் பொழிந்து வைப்பாள்
தங்கிடு பொருள்புகழை தனலஷ்மி தந்துவைத்தே
தங்கரத் தினத்தாலே தரணியில் முந்தவைப்பாள்

தொடர்ச்சி 136ஆம்பக்கம்

# பரஞானம் பெற்றிவர் பரமனடி போற்றிவாழி



நுண்மான் சிறப்பனைத்தும் தன்னகத்தே கொண்ட பண்பாளர் இராசையா குகதாசனின் பரிமாணம் பகர்ந்து அவர்தம் புகழ்மணம் பரப்ப வெளிவரும் இச்சிறப்பு மலரிலே நானும் வாழ்த்துவதை எண்ணிப் பெருமகிழ்வு அடைகின்றேன். ஒருவர் தன் தந்தையைப் புகழ்தல் தன்னைப் புகழ்வதற்கு ஒப்பானது என்று கருதுபவர்களுக்காக ஒரு விடயத்தைக் கூறிவிட்டு மேலே செல்வதே சாலச் சிறந்தது.

"மன்னனுடைய மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவோர்க்கே"

-நன்னூல் சூத்திரம் 53.

ஒருவர் தனது முழுத் திறமைகளை அறிந்திராதவர்களுக்கு தன் ஆற்றல்களை வெளிப்படுத்தும் விதமாகக் கூறுவது பொருந்தும் என நன்னூல் சான்று பகர்கின்றது.

சித்தம் சிவமாகி நின்ற நாயன்மார்களுக்குக் குருபூசை மடம் அமைத்து வழிபட்ட சிறப்புடைய நாயன்மார்கட்டில் பிறந்து தமிழுக்கும் சைவத்திற்கும் இவர் ஆற்றும் பணிகள் அளப்பரியன. இவரது பட்டறிவும் இறைவனின் திருவருளும் இவரைக் கவிஞராக்கி அழகு பார்த்தது. காலமும் புலமும் கூட ஏங்கி நிற்கும் மரபுக் கவிப்பசிக்கு இவர்தம் பாடல்கள் தீனியாக அமைந்தன. சைவ ஆகம மரபின்படி ஆலயங்களில் கலைஞர் களையும் கலைகளையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது அவசியம். இன்று இக்கடமைகளைச் செவ்வனே ஆற்றி இவர் போன்றவர்களை ஊக்குவிப்பது சமுதாயத்தின் கைகளில் தங்கியுள்ளது.

இவரது பாடல்களில் மிளிரும் வாக்கு வன்மையானது தமிழில் பல பட்டப்படிப்புகளை மேற்கொண்ட பல கலாநிதிகளே வியந்து பாராட்டும் வகையில் அமைந்திருக்கின்றது. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நான்கு நிலைகளினூடு விருத்தியாகின்ற வாக்கானது இறைவனின் புகழ்மாலையை ஒரு கலைஞனின் ஊடாகப் பிரசவிக்கின்றது.

"பரா ப்ரத்யக் சிதிரூபா பச்யந்தி பரதேவதா
மத்யமா வைகரி ரூபா பக்த மானஸ ஹம்ஸிகா" என்று லலிதா சகஸ்ர நாமத்தில் கூறப்பட்டிருப்பதானது அம்பிகையே வாக்கு ரூபத்தில் விளங்கு

வதாக மொழிகின்றது. இவ்வாறு தன் வாக்கால் பலதிருத்தலங்களுக்குப் பாமாலை இயற்றும் பெரும்பேறைக் கொண்ட ஒருவரை எனது தந்தையாகப் பெற்றதே பெரும் பேறாகும். இவர் சமயப் பணிகள் மாத்திரமன்றிப் பல சமூகப் பணிகளையும் ஆற்றி வருபவர். இவரைப்பற்றிய ஒரு சிறு அறிமுகத்திற்காக இவர் பெற்ற விருதுகள், பட்டங்கள், சமயப் பணிகள், சமூகப் பணிகள், எழுதிய நூல்கள், ஊஞ்சற் பாடல்கள் மற்றும் கீர்த்தனைகள் எழுதிய தலங்கள் என்பவற்றைப் பட்டியலிடுவது அவசியமானது.

**பெற்ற விருதுகள்,பட்டங்கள்**

"தெய்வப் புகழிசை வாரிதி", "அருட்கவிச் செல்வர்", "தேசபந்து" "சாமஸ்ரீ" "காலத்தால் அழியாத கம்பன்" "தேசாபிமானி", "தேசபிரேமி", "தேசமான்ய" "ஜனதா புத்ர", "சமூக திலகம்" "தெய்வத் தமிழிசைக் கவிஞர்" "சமாதான நீதிபதி"

**ஆற்றிய சமய சமூகப் பணிகள்**

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை பழையமாணவர் சங்கஉறுப்பினர். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்திய சாலை விளையாட்டு மைதானக்குழுத்தலைவர். திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிப்பாளர் சபை அங்கத்தவர் , சமயத்திட்டப் பணிப்பாளர், கொடித்தினக்குழுத்தலைவர். பவள விழாக்குழு உறுப்பினர். சைவபரிபாலனசபை நிர்வாக உறுப்பினர், உபதலைவர், செயலர். வேதாந்த மடம் ஆலோசனைச்சபை உறுப்பினர், பொருளாளர், உள்ளகக் கணக்காய்வாளர், சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி அறக்கொடை நிதிய ஆயுட்காலச் செயலர். நாவலர் தர்மகர்த்தா சபை நிர்வாக சபை உறுப்பினர். கொழும்புத்துறை காயத்திரி பீட பொருளாளர். நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டுக்கழகச் செயலர். அரியாலை மத்தி வடக்கு கிராம அபிவிருத்திச்சங்க உப செயலர். யாழ் நாயன்மார்கட்டு சனசமூக நிலைய பொருளர். யாழ் நாயன்மார்கட்டு சனசமூக நிலைய புலமைப்பரிசில் நிதிய ஆயுட்காலப் பொருளாளர். இளங்கலைஞர் மன்ற நியமன ஆட்சிக்குழு உறுப்பினர். யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கப் பணிப்பாளர் சபை அங்கத்தவர். முத்தமிழ் வெளியீட்டுக்கழக உறுப்பினர்.

**எழுதிய, தொகுத்த நூல்கள்**

01) அபரக்கிரியையியல் ஒரு நோக்கு
02) சிவாலய பூசையில் சிவத்தமிழ் வேதங்கள்.
03) பன்னிரு திருமுறைத் தொகுப்பு(02)(2003) (2005) சைவபரிபாலனசபை வெளியீடு.
04) வாழ்வில் வளந்தரும் வண்டமிழ் வேதங்கள்.(2006)
05) "நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை" (நாவலர் புராணம்) புராண வடிவில் ஓதிப்பயனுறுமாறு வடிக்கப்பெற்ற தொழாயிரத்திற்கு மேற்பட்ட விருத்தப்பாக்கள் அடங்கிய நாவலர் சரிதம்.

**ஊஞ்சற் பாடல்கள், திருப்பள்ளி எழுச்சிகள் எழுதிய தலங்கள்**

கொழும்பு சர்வார்த்த சித்திவிநாயகர், சுப்பிரமணியசுவாமி, அல்லைப்பிட்டிக் கந்தசாமி, மண்கும்பான்கந்தசாமி,பத்தைமேனி சுப்பிரமணிய சுவாமி, கட்டுவன் ஐயப்ப சுவாமி, கட்டுவன் இராஜஇராஜேஸ்வரி,வண்ணை மீனாட்சி, மாகாளி, யாழ் கடைத்தெரு வேம்படி விநாயகர்,யாழ் போதனா வைத்தியசாலை ஞானவைரவர், வல்வெட்டி ஆதிவைரவர்,தில்லையம்பலப் பிள்ளையார், உரும்பிராய் சிவபுரீஸ்வரர், திருகோணமலை துறைமுக விநாயகர், சங்குவேலிப்பிள்ளையார், ஊரெழு ஞானவைரவர், கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார், நானாட்டான் முத்துமாரி, சுப்பிரமணியசுவாமி, காரைநகர் வியாவில் ஐயனார் உட்பட இருபத்தியெட்டுக்கு மேற்பட்ட ஆலயங்களுக்கான திருவூஞ்சல்கள். திருப்போரூர் ஆதீனம் சீர்வளர்சீர் கலாநிதி குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளின் பாராட்டைப் பெற்ற நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் திருப்பள்ளி எழுச்சிஉட்பட,அரியாலை ஞானவைரவர்,கட்டுவன் ஐயப்பன்,காரை வியாவில் ஐயனார்,கீரிமலைச் சிவன் போன்ற பலஆலயங்களுக்கான திருப்பள்ளி எழுச்சிகள், கற்பகப் பிள்ளையார் அட்டகம்,சதகம், புவனேஸ்வரி அம்பாள் பதிகம் போன்றவை.

**கீர்த்தனைகள் எழுதிய தலங்கள் மற்றும் பொதுவானவை..**

தமிழ் அணங்குக்குஅந்தாதிக் கீர்த்தனைகள்,பொதுவான கீர்த்தனைப் பாடல்கள், தில்லையம்பலப் பிள்ளையார், அல்லைப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி, நாயன்மார்கட்டு இராஜ ராஜேஸ்வரி, நல்லூர் முருகன், அரசடி விநாயகர், திருகோணமலை பத்திரகாளி, வண்ணை காமாட்சிஅம்பாள், உடுப்பிட்டி வைரவர், நவசக்திகள், வண்ணைவயித்தீசன், சிவபுரீஸ்வரர், நல்லை மனோன்மணி, யாக்கரு விநாயகர், ஜிந்துப்பிட்டி முருகன், வெயி

லுகந்த விநாயகர், உடுவில் கற்பக விநாயகர், செல்வச் சந்நிதிக் கந்தன் உட்பட பலஆலயங்கள் மேற் பாடப்பெற்ற முந்நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட கீர்த்தனைகள். சத்தியசாயி பாபாவின் நேரடி அங்கீகாரம் பெற்ற நூற்றி எட்டு போற்றிகள் உட்பட ஐம்பத்தொரு சாயி கீர்த்தனைகள்.

**ஒலிப்பேழைகள் இறுவட்டுக்கள்**

01) நாயன்மார்கட்டு இராஜ இராஜேஸ்வரி அம்பாள் மீது இவரால் இயற்றப் பெற்று உள்ளூர் கலைஞர்கள் ஒலிப்பதிவாளர்கள் இணைந்து தயாரித்ததும்,அக்காலத்தில் பெருவரவேற்பைப் பெற்றதும்,பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பப்பெற்றதும், யாழ்ப்பாணத்தின் முதலாவது ஒலிப்பேழையுமான "அம்பாள் இசை மாலை" (இரண்டு)

02) திருமுறைத்தேனமுது மூன்று ஒலிப்பேழைகள் (1999)

03) திருவெம்பாவை,திருப்பள்ளி எழுச்சி ஒலிப்பேழைகள் இரண்டு(2000)

04) மூவர் தேவாரம் இறுவட்டு ஒன்று (2003)

05) தென்னிந்திய திருச்சி வானொலிக் கலைஞர்களின் பக்க வாத்தியத் துடன் தயாரிக்கப்பெற்ற திருமுறைத்தேனமுதம் இறுவட்டு ஐந்து (2007)

**திருப்புகழ்**

மாவைக்கந்தன் புகழ்மாலை(27), கீரிமலச்சிவன் புகழ்மாலை(32), நல்லூர்க் கந்தன் புகழ்மாலை(28), சந்நிதிக்கந்தன் புகழ்மாலை(29). தவிரவும் மாவட்ட ரீதியில் மன்னார் மாவட்ட திருக்கோவில்கள் மேற்பாடப்பெற்ற திருப்புகழ்(32) முல்லைத்தீவு மாவட்டத் திருக்கோவில்கள்(32)வவுனியா மாவட்டத்துத் திருக்கோவல்(55)அநுராதபுர மாவட்டம் (03)பொலநறுவை மாவட்டம் (03) மொனறாகல மாவடடம் (06) பதுளை மாவட்டம் (08) நுவரெலியா மாவட்டம் (18) கண்டி மாவட்டம் (17) மாத்தளை மாவட்டம் (09) குருநாகல் மாவட்டம் (04) கேகாலை மாவட்டம் (03) இரத்தினபுரி மாவட்டம் (06) மாத்தறை மாவட்டம் (02) காலி மாவட்டத்தில் (03) கழுத்துறை மாவட்டம் (02)கொழும்பு மாவட்டம்(32)கம்பஹா மாவட்டம்(02)புத்தளம் மாவட்டம் (16)யாழ் மாவட்டம் (348)அடங்கலாக எண்ணூறுக்கு மேற்பட்ட திருப்புகழ் வடிவ பாடல்கள்.

மேலே கோடிட்டுக் காட்டியவாறு அவரது மகத்தான சேவைகளையும் படைப்புக்களையும் முழுமையாகப் பட்டியலிட முடியாது என்பதை உணர்கின்றேன். இங்கே கூறப்பட்ட எக்கருத்துக்களும் தந்தைக்காக

விதந்து கூறப்பட்டனவல்ல. உணர்ந்து அனுபவித்த பின் எழுதப்பட்டவை ஆகும். பல்லாண்டு கால கொழும்பு வாழ்வின் பின்னரோ பன்னிரெண்டு ஆண்டு காலக் கனடிய வாழ்வின் பின்னரோ இன்றளவும் சைவத்தின் மீதும் தமிழின் மீதுமான ஆர்வம் குறையாமல் அதீதமாக அதிகரித்து வந்தமைக்கு என்தந்தையே ஊக்கியாக இருக்கின்றார் என்றால் மிகையாகாது.

உலக தர்மம், வைதிக தர்மம், சிவதர்மம் எனும் மூவகைத் தர்மங்களுள் ஒன்றான சிவதர்மத்தின் நாற்பிரிவுகளில் உள்ள ஞானமானது அபரஞானம், பரஞானம் என இருவகைப்படும். இதில் தெளிதல், நிட்டை கூடல் பகுதிகளையுடைய பரஞானத்தை இவர் பெறவேண்டும் என்பதே எனது பெருவிருப்பாகும்.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே"

- திருமந்திரம் 1581.

மேலே திருமந்திரத்தில் மொழிந்தவாறு குருவினுடைய ஆன்மாவைச் சிவமே சரீரமாகக் கொள்ளும் சைத்தன்ய சரீர ஞானகுருவின் அருளால் சத்திநிபாதம், இருவினையொப்பு நிலைகளினூடு தெளிந்து அநுபூதி நிலைபெற என் சித்தத்தின் சொப்பனத்தில் வந்தருளிய சித்தனுக்கெல்லாம் சித்தன் இவருக்கு அருள்புரிய வேண்டும். இன்னமும் தொடப்படாத இலக்குகளை நோக்கி இவரது வெற்றிப் பயணமும் பொதுச்சேவையும் தொடர வேண்டுமெனவும் பரஞானம் பெற்றுப் பரமனடி போற்றி வாழ வேண்டுமெனவும் தேவனுக்கெல்லாம் தேவன் மகாதேவன் வாரியிறை அருளால் அந்தமொன்றில்லா ஆனந்தம் பெறவேண்டுமெனவும் என் துணைவி ரோஜிதாவோடு இணைந்து மனமார வாழ்த்தி வணங்குகிறேன்.

**தலைமகன்**
**குகதாசன் கஜரூபன்**

# இறவாக் கவிஞர் இன்புற்று வாழ்க



அறிவு என்பது இயற்கையின் அருங்கொடை. அறிவானது மண்ணில் ஊறும் நீரூக்கொப்பானது. பட்டப் படிப்புகள், புத்தகவாசிப்புகள் போன்றவற்றின் பணி மண்ணைத் தோண்டும் மண்வெட்டியின் பணியை ஒத்ததே. தோண்டுவதால் மட்டும் நீர் வருவதில்லை. மண்ணில் நீரூற்று இருந்தால் மட்டுமே நீர் சுரத்தல் சாத்தியம். இதனால் தான் பாலை நிலத்தில் பலநூறு அடிகள் தோண்டியும் நீர் சுரப்பதில்லை. இது புரியா இக்கால மாந்தர்கள் பட்டப்படிப்புகளில் அறிவை மதிப்பிடுவது அறிவீனம். எனது தந்தையார் கவிஞர் குகதாசன் அவர்கள் இயற்கை யாகவே இறைவன் திருவருளால் தமிழறிவு கைவரப்பெற்றவர். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற திருமூலரின் கூற்றுக்கிணங்க இறைவனை சொற்றமிழால் பாடி வருபவர். கவிஞர்கள் என்றாலே புதுக்கவிஞர்கள் என்றாகிப்போன இன்றைய ஈழத்து தமிழ் சமூகத்தில் குறிஞ்சி மலரெனப் பூத்த மரபுக்கவிஞர்.

எனது தந்தையார் தனது தொழில் மற்றும் எழுத்துப்பணியின் சுமைகள் காரணமாக சிறுவயது முதல் என்னிடம் அளவளாவுவதற்கு நேரம் ஒதுக்க முடிந்ததில்லை. நானும் என் தந்தையாரும் இதுவரை ஒருமுறையேனும் தமிழ், சமயத்தை பற்றி ஆற அமர உரையாடியிருக்காத போதிலும் என்னுள் இயற்கையாகவே எழுந்த தமிழ் மற்றும் ஆன்மீக பற்றுக்கு அவரின் அருகாமையை விட வேறேதும் காரணம் அறிகிலேன். தமிழிலே எழுந்த திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களை பற்றி எழுதும் விமர்சனங்களில் "இறவாப் படைப்பு" என்ற சொல்லாடல் பயன்படுத் தப்பட்டிருக்கும். ஒரு படைப்பானது அது எழுதப்பட்ட காலத்தையும் தாண்டி எக்காலமும் பயன்தரக் கூடியதாகவும் பொருந்துவனவாகவும் இருந்தால் அப்படைப்பையே இறவாப் படைப்பென்பர். அவ்வாறு என் தந்தையாரின் கவிதா நூல்களும் காலத்தை கடந்த இறவாப் படைப்பாக புகழ் பெற வேண்டும் என்பதே என் பேரவா.

தமிழர் வரலாற்றை உற்று நோக்கின் பண்டைய தமிழ் சமூகமும் மன்னர்களும் புலவர்களைப் பெருமதிப்பளித்துப் போற்றியே வந்துள்ளனர் என்பது கண்கூடு. ஆயிரம் ஆண்டு உயிர் வாழ அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்ததும், புலவருக்காக குமணன் தன் தலையையே

கொடுத்ததும், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் முரசுக் கட்டிலில் களைப்பால் உறங்கிய சங்கப்புலவர் மோசிகீரனை தண்டியாது அரசனே வெண்சாமரம் வீசிய சம்பவங்களும் இதற்கு சான்று பகிர்கிறது. ஆனால் இன்றைய நிலைமையோ தலைகீழாக இருக்கிறது.

இன்றைய நவீனத்துவ யுகத்தின் பாதிப்புகளால் தமிழ் சமூகத்தினர் தங்களது வேர்களையும் பண்பாடுகளையும் மறக்கத் தொடக்கிவிட்டனர் என்பதே கசப்பான உண்மை. தனது மொழியையும் பண்பாடுகளையும் புறந்தள்ளிய இனங்கள் வரலாற்றில் பின்னடைவையே சந்தித்துள்ளன. இத்தகைய பின்னணியில் எனது தந்தையார் போல் இயற்கையாகவே மரபுக்கவிதை எழுதும் திறன் வாய்த்த ஒருவர் பக்தி இலக்கியம் என்ற வட்டத்தினுள் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டது வருத்தத்துக்குரியது. தந்தையார் பக்தி இலக்கியங்களோடு மட்டும் நிறுத்திவிடாமல் தமிழரின் தொன்மையான நாகரீகம், நற்பண்புகள் மற்றும் வரலாற்று பெருமை களையும் எடுத்தியம்பும் கவிதைகளும் சமூக இலக்கியங்களும் வடிக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். எதிர்காலத்தில் அவர் மென் மேலும் சுந்தரத்தமிழில் அழியாக் கவிதைகள் புனையவும், தன் சுயம் தேடி தன்னுள்ளே பயணப்பட்டு தன்னை உணர்ந்து இனியொரு பிறப்பில் லாப் பெருவாழ்வு எய்தவும் எல்லாம் வல்ல இறை அவருக்கு அருள் புரிவாராக.

**இளைய இளவல்**
**குகதாசன் குமரன்**

## திருநெறிய தமிழ்சை அரங்கு

| | | |
|---|---|---|
| திருநெறிய தமிழ் | : | தேவார இசைமணி, தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் |
| வயலின் | : | கலாவித்தகர் திரு.கே.பத்மநாதன் |
| ஆர்மோனியம் | : | இசைக்கலைமணி திரு.என்.செல்வச்சந்திரன். |
| மிருதங்கம் | : | கலாவித்தகர் திரு.சதா.வேல்மாறன் |
| தபேலா | : | வித்துவான் திரு.பி.கபிலன் |
| மோர்சிங் | : | கலாவித்தகர் திரு.எஸ்.செந்துாரன் |

உ

சிவமயம்

# அகவையது அறுபதிலெம் அகமகிழும் வாழ்த்துக்கள்



திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணிநல் ல∴துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணிநல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

—சம்பந்தர்.

அகவை அறுபது நிறைவடைந்து தென்னிந்திய திருக்கடையூர் அபிராமி அம்பாள் சமேத அமிர்த கடேஸ்வரர் சந்நிதானத்தில் அபிஷேக ஆராதனைகளை நிறைவுசெய்து இறையாசி பெற்றுவந்த தங்களுக்கு குருவாசி யோடு யாழ்ப்பாணத்தில் மணிவிழா நடைபெறுவதையிட்டு பெரு மகிழ் வெய்துகின்றேன். மணிவிழா வெளியீடாக "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்ற நூல் "ஷண்முகப் பிரசாதம்" ஆகவும், "மணிவிழா நாயகரின் மாண்புரை மங்கல நூல்" "குகப்பிரசாதம்" ஆகவும் வெளிவர உள்ளதறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி.

காலத்துக்குக் காலம் பல்வேறு ஆலயங்களுக்குத் திருவூஞ்சல், திருப் பள்ளிஎழுச்சி,கீர்த்தனைமாலை போன்றவற்றைப்பாடி வெளியிட்டு தமிழுக்கும், சைவத்திற்கும் தாங்கள் பெரும் தொண்டாற்றி வருவது பேருவகையும்,பெருமையும் தரும்விடயமாகும். சைவத்தமிழ் மரபு வழி இலங்கையிலுள்ள தெய்வீகத் திருத்தலங்கள் பலவற்றின் மீதும் சந்தத்திருப்புகழ் வடிவில் அறுநூறு பாக்களைப் பாடி அதை மணிவிழா நாளில் வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரியது.

இந்த மங்கல நாளில் தாங்கள் ஆற்றிவரும் தமிழ்,சமய,ஆன்மீக,ஆலய த் தொண்டுகள் மேன்மேலும் சிறக்கவும்,தாங்களும் தங்கள் மனைவி பிள்ளைகள் யாபேரும் சிவனருளால் நலத்துடனும்,வளத்துடனும் பல்லாண்டு வாழவும் இறைய ருளை வேண்டி அவன்தாள் பணிந்து எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி அமைகின்றேன்.

**70,1-1 புதுச்செட்டித்தெரு** **திருமதி இரத்தினேஸ்வரி திருவாதிரை**

128ஆம்பக்கத் தொடர்ச்சி---கஜலட்சுமி

விரிமலர்த் தாமரையில் விளங்கானை துதிபுரிய
சொரியுநற் தனமழையால் சுகம்பல தந்திடுவாள்
அரியவன் நெஞ்சுறைவாள் அழகுத்தமிழ் வடிவாள்
கரியினில் இவர்ந்தருள்வாள் கஜலஷ்மித் தாயாள்

தொடர்ச்சி 138ஆம் பக்கம்

# வர்த்தகத் துறை சார்ந்த வித்தகர்



வர்த்தகத்துறை சேர்ந்த ஒருவரிடமிருந்து யாரும் எதிர்பாராத வித்துவப் புலமையோடு பார்போற்றும் தமிழில் கவி பாடிவரும் மைத்துனர், காலத்தால் அழியாத கம்பன் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்களை மணிவிழா மங்கல நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். தெய்வப் புகழிசை வாரிதியான கவிஞர் எமக்கு மைத்துனராகவும், அன்புத் தங்கைக்குக் கணவனாகவும் வந்து வாய்த்தது நாம்பெற்ற பாக்கியமே. இளவயது முதலே ஞானிகளுடனும், துறவிகளுடனும், அறிஞர்களுடனும் பேணிவந்த தொடர்பினாலே தான் பெற்றுக்கொண்ட ஞான உணர்வு பெருக்கெடுக்க, அவ்வுணர்வுகளை குருமார்கள் வழிப்படுத்த இறைய ருளினாலும், திருவருளினாலும் இறைபுகழ் பாடும் பேரின்பப்பேறை அடைந்தவர்.

அபிராமி அம்பாள் சமேத அமிர்தகடேஸ்வரர் சந்நிதியில் தமது ஷஷ்டியப்த பூர்த்தியை இறைவழிபாட்டோடு தொடங்கிய தம்பதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் அன்புள்ளங்கள் இணைந்து விழா எடுப்பதும், மணிவிழா மங்கல நாளில் மைத்துனர் தமிழ்கூறும் நல்லுலகிற்கு தான் யாத்த அறுநூறு திருப்புகழ் அடங்கிய தெய்வப் புகழிசைத் தேனமுதத்தை ஷண்முகப் பிரசாதமாகப் படையல் செய்வதும் எமக்கெல்லாம் பெருமையே.

எமது மனைவியின் குலதெய்வமான பயிரிக்கூடல் முருகன் மேலும் ஒரு திருப்புகழ் பாடிச் சிறப்பித்துள்ளார்.பல ஆலயங்களுக்குத் திருவூஞ்சற் பதிகங்களை அவ்வத் தலச்சிறப்புகள் விளங்கப் பாடியளித்தவர். இலங்கை யின் பல மாவட்டத்திலுமுள்ள ஆலயங்களுக்கும் பக்திச்சுவை நிறைந்த பாடல்களை யாத்து வழங்கும் திருவருட்பேறு பெற்றவர். இவர் ஆற்றிய பணிகளும், இவர் புகழும் இந்த உலகில் என்றும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.மணிவிழா மங்கலம் காணும் மைத்துனர்,தங்கை பிள்ளைகள் யாபேரும் இறையருளாலே பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற வாழவும், மணிவிழா நாயகர் மாண்புரை மங்கலமாக வெளிவரும் குகப் பிரசாதம் நீடித்து நின்று இவர்புகழைப் பரப்பவும் பேரருள் புரியவேண்டி சகல சௌபாக்கியங்களையும் அருளும் தாவடி அம்பலவாண வேத விநாயகர் தாள்வணங்கிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**தாவடி** **திரு.திருமதி நாகரத்தினம் லோகாம்பிகை தம்பதிகள்**
**யாழ்ப்பாணம்.** **மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.**

# ஆயிரம்பிறை கண்டிவ் அவனியர் போற்றவாழி



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வண்ணம் பல பணிகளை ஆற்றுகின்ற மக்கள் வாழும் நாயன்மார்கட்டிற் தோன்றி தானாற்றும் சமயப்பணி யாலும்,தமிழ்ப் பணியாலும் பல்வேறு விருதுகளைப் பெற்று பலரும் போற்ற அருட்கவிச் செல்வராக வாழும் பெருமகன்தான் இராசையா குகதாசன் அவர்கள். தான்கொண்ட ஊர்ப்பற்றுக் காரணமாகவும், தந்தை யாரைப் போற்றும் வண்ணமாகவும் இரு பெயரையும் இணைத்தே தன் பெயரை எழுதிவருபவர்.இவர் எனது தங்கையின் மனங்கவர் மணாளனாயும், என் குழந்தைகளின் சிறிய தந்தையாகவும் விளங்குவதும் நாங்கள் செய்த பாக்கியமே. திருமுறை பாடுவதிலும்,புராணபடன வித்தகராகவும் திகழ்ந்து வந்த இவர் தான்பெற்ற அநுபவ ஞானத்தாலே,இறையருட் கடாட்சத்தாலே தெய்வத் தமிழிசைக் கவிஞராக வாழும் பெரும்பேறைப் பெற்றுக்கொண்டார். சைவநாயன்மார்கள் தலங்கள்தோறும் சென்று தேவார திருவாசகங்களைப் பாடி சமயமும் தமிழும் வளர்த்ததைப்போல இவரும் இலங்கைத் திருநாட்டில் உள்ள அனைத்து ஆலயங்களின் மீதும் திருப்புகழ் வடிவுடைய பாடல்களை இயற்றும் பெரும்பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

இவரது சமூகப்பணிகளைப் பாராட்டி கொட்டடி சனசமூக நிலையம் "சமூக திலகம்"விருதளித்துக் கௌரவித்தது. கவிதைத்துறையிலும் பலவிருதுகளைப் பெற்றுக்கொண்ட இவருக்கு அரசும் பலஉயர் விருதளித்துக் கௌரவித்தது.எங்களது மணிவிழா நினைவுச் சின்னமாக இக.பர சௌபாக்கியம் தரக்கூடிய திருமுறைப்பாடல்களைத் தேர்ந்தெடுத்து "வாழ்வில் வளந்தரும் வண்டமிழ் வேதங்கள்"என்ற பெயரில் தொகுத்தளித்ததும், கவிஞர் பெருமகன் இலங்கையின் இரண்டாவது அதியுயர் விருதைப் பெற்றதைப்பாராட்டி பாசமீதூரப் பெற்ற எனது குழந்தைகள் பத்திரிகை மூலம் வாழ்த்தியதும் என்றும் பசுமையான நினைவுகளாகும்.

தெய்வப் புகழிசை வாரிதியவர்கள் திருத்தலங்கள் மேல் தன்னால் பாடப் பெற்ற தெய்வப் புகழிசைத் தேனமுதத்தை ஷண்முகப் பிரசாத மாக்கியும் மாண்புரை நூலை குகப்பிரசாத மாக்கியும் தமது மணிவிழா மங்கல நாளில் பருகத் தருவதும் இறைவன் திருவருளே. சுற்றம்சூழ தம்பதிகள் ஆயிரம் பிறைகண்டிவ் அவனிவாழ பேரருள் புரிய வேண்டி எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரன் தாள்பணிந்து வாழ்த்துகின்றோம்.

**96,வாசல ரோட்**
**கொட்டாஞ்சேனை**
**கொழும்பு -13**

**நெஞ்சார வாழ்த்தும்**
**திருமதி சிவஞானம் பரமேஸ்வரி**
**மக்கள்,மருமக்கள் ,பேரப்பிள்ளைகள்**

# சதாபிஷேகராக சகமதில் நீடுவாழி



சைவமும் தமிழும் தழைத்தோங்க தளர்விலாப் பணியாற்றி வரும் பேறு பெற்றவர் அன்புக்கும் மதிப்புக்குமுரிய மைத்துனர் இராசையா குகதாசன் அவர்கள்.இளமையிலேயே இயற்கையாயமைந்த கவியாற்றலை பேரறிஞர்களின் தொடர்பி னாலே மேம்படுத்தி இன்று தெய்வத்தமிழிசைக் கவிஞராகத் திகழும் பெரும் பேறைப் பெற்றவர். தங்கையும் மைத்துனரும் தம்பதி சமேதராக தென்னிந்திய திருக்கடையூர் அபிராமி அம்பாள் சமேத அமிர்த கடேஸ்வரர் சந்நிதானம் சென்று அபிஷேக ஆராதனைகள் ஆற்றி இறையாசி பெற்று வந்தவர்கள். குருவாசியாலே யாழ்ப்பாணத்தில் இருக்கும் அன்புள்ளங்கள் இணைந்து இத்தம்பதிகளுக்கு மணிவிழா நடாத்த இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

காரைமண் போற்றும் கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்களின் பேரன்புக்குப் பாத்திரமானவர்.அர்ச்சனை பாட்டேயாகும் என்ற ஆண்டவன் திருமொழிக்கமைவாக சொற்றமிழ் பாடிவருபவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னவாறே பொய்மையாளரைப் பாடுவதைத் தவிர்த்து எம் இறைகளின் புகழையே பாடி வருபவர். பல்வேறு நிறுவனங்களுடாக சமய, சமூகப்பணி களையாற்றி இலங்கையின் அதிஉயர் விருதுகளைத் தனதாக்கியவர். மறைந்த மாவை ஆதீனப் பேரரசர் மகாராஜ ஸ்ரீ சு.து.ஷண் முகநாதக் குருக்கள் இலங்கை மணித்திருநாட்டில் காணப்பெறும் சகல இந்துக் கோவில்களின் மூர்த்திகளின் மீது ஒவ்வொரு திருப்புகழ் வீதம் பாடிவா என அருளாணையிட இன்று நூறாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஐயாவும், செந்தமிழ் ஞாயிறு கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்களும் அருளாசி தர குருவருளினாலும், திருவருளினாலும் தான் ஐறுாற்று அறுபது திருத்தலங்கள் மேல் பாடிய அறுநூறு திருப்புகழ்ப் பாக்களை "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" என்று பெயரிட்டு ஷண்முகப் பிரசாதமாகப் பருகத் தருகின்றார்.மணிவிழா நாயகர் மாண்புரை மங்கலங்களாக "குகப் பிரசாதம்"மலரும் மலர்கின்றது.

மணிவிழா மங்கலம் காணும் மைத்துனரும்,தங்கையும் சதாபிஷேகம் கண்டு சகத்தினில் இனிதுவாழ பலுகாடு இராஜ இராஜேஸ்வரி அன்னை பேரருள் புரியவேண்டுமென்று மன,மொழி,மெய்களாற் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

**189-1-1மகாவித்தியாலய மாவத்தை**
**கொட்டாஞ்சேனை**
**கொழும்பு 13**

**வாழ்த்துக்களுடன்**
**திரு.திருமதி இ.கணேசமூர்த்தி இராஜேஸ்வரி**
**தம்பதிகள்**

# தெய்வப் புகழிசை வாரிதியின் புகழ் தேசமெங்கும் பரவட்டும்



எமது குடும்பத்தில் இரண்டாவது புதல்வனாகப் பிறந்த போதும்தலைமகன்போல் இருந்து எமதுகுடும்பத்தின், எங்களின் நன்மை,தீமை யெல்லாம் பேணிநடந்த அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அண்ணர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்களுக்கு,அவரின் மணிவிழா மங்கல நாள் வணக்கத்தையும், வாழ்த்தையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சிஅடைகின்றேன்.

இளவயது முதலே பொதுத்தொண்டுகளிலும், ஆலயப் பணிகளிலும் தன் பெரும்பகுதி நேரத்தைச் செலவழித்துச் சிறந்த சமூகசேவகராகத் திகழ்ந்த இவரை அரசு பலவிருதளித்துக் கௌரவித்தது பொருத்தமே. எமது நாயன்மார்கட்டு சனசமூகநிலையத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையிலும் பங்காற்றியிருந்த இவரை கொட்டடி சனசமூக நிலையமும் ''சமூக திலகம்''விருதளித்துக் கௌரவித்ததும் நாம் பெருமைப் படும் விடயமாகும். ஆரம்பத்தில் எல்லா விடயங்களைப் பற்றியும் கண்டபடி எழுதி வந்த இவர் இறையருட் கடாட்சத்தினாலே பின்னாளில் தான் குருநாதர்கள் இருவரினதும் கட்டளைக்கு இணங்கி அவர்கள் பேராசியோடு இறைபுகழ்களையே பாடத்தொடங்கினார். முதலில் திருவூஞ்சல்கள் எழுந்தன்,பின் திருப்பள்ளிகள் எழுந்தன,கீர்த்தனை மாலைகள் எழுந்தன,பதிகங்கள் எழுந்தன இவ்வாறு நீண்டு கொண்டே போன இவரது பணி மாவைக் கந்தனின் ஆட்கொள்ளலின் பின் திருப்புகழ் பாணி வரை விரிந்துள்ளது.

இறையருள் வேண்டி தென்னிந்திய திருக்கடையூர் அபிராமி அம்பாள் சமேத அமிர்தகடேஸ்வரர் முன்றலில் அபிஷேக ஆராதனை நிறைவு செய்து திரும்பிய இவர்களுக்கு,யாழ்ப்பாணத்திலும் ஒரு விழா எடுக்கவேண்டும் என்று விரும்பிய குருமகான்களின் ஆசையாலும், ஆசியோடும் இன்று மணிவிழா எடுத்திருக்கும் அன்புநெஞ்சங்கள் யாவரும் எங்கள் குடும்பத்தின் பெருநன்றிக் குரியவர்கள்.

இன்று மணிவிழா மங்கலம் காணும் சகோதரர்,அண்ணர் அண்ணி தம்பதிகள் பன்நூறு ஆண்டு பிரதுபயனுறு வாழ்வைக் காண திருவருள் புரிய வேண்டுமென்று எம் குலதெய்வமான அன்னை இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி) தாள்பணிந்து வாழ்த்தி வணங்குகிறோம்.

**மஞ்சவனப்பதி வீதி** — **இராமலிங்கம் இராசையா குடும்பசார்பில்**
**கொக்குவில்** — **திரு.திருமதிஇ.கருணாநிதி சந்திரலீலா தம்பதிகள்**

# கற்போர் மனத்திற் கருத்தை விதைக்கும் கவித்திறனாளர்



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆஸ்தான கவிஞர் திரு இராசையா குகதாசன் ஆவார். இறையருளின்றி அணுவும் அசையாது என்பது சைவ சமயத்தவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இறையருளுடன் கவிதைகளை மரபுக்கு அமைய பாடும் ஆற்றல் மிக்கவர் அன்பர் திரு.இ.குகதாசன்.

கவிதை என்பது கற்போர் மனதில் பதிவு ஒன்றை ஏற்படுத்தி மீண்டும் படிக்கத்தூண்ட வேண்டும். ஒரு நல்ல கவிதையில் அக்கவித்திறன் இருக்கும். ஆழமான கருத்து விதைக்கப் பெற்றிருக்கும் கற்போர் உள்ளத்தை அந்த விதை தைக்கும் (கவி - விதை - தை) இப்படியான சிறந்த கவிதையை எழுதி வருபவர்தான் எங்கள் தெய்வத் தமிழிசைக் கவிஞர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வரலாற்றைப் புராணபடலமாக எழுத வேண்டுமென்ற எண்ணம் இறையருளால் உதித்தது. அன்பர் குகதாசனிடம் எனது கருத்தைக் கூறினேன். அதற்கென்ன முயற்சி செய்கிறேன் என்று கூறியவர் சில வாரங்களில் நாவலர் சரிதத்தை "நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை" எனும் தலைப்பில் கவிதையாக்கி ஒரு பகுதியைப் பார்வைக்குத் தந்தார்.

செல்வவடி வேல்மொழியச் செந்தமிழ தாலே
நல்லைநகர் நாவலரின் நற்சரித மாலை
சொல்லுமுறை யேதுபிழை நேர்ந்திடினுந் தள்ளி
நல்லதெனக் கொள்கவென நயந்துபணி கின்றேன் - என்ற பாடல் மூலம் கம்பன் சடையப்ப வள்ளலை மறவாது காவியத்துட் புகுத்தியது போல் சரிதமாலை பிறக்கக் காரணமான அடியேனின் பெயரையும் தவறாது உட்புகுத்திய கவிதை நயத்தை வியப்பொடு வாசித்து மகிழ்ந்தேன்.

எல்லாம் இறைவன் செயல் என்று நினைத்துக் கொண்டு சைவபரிபாலன சபையின் மாதாந்த இதழாகிய இந்து சாதனத்தில் பிரசுரிக்க ஒழுங்கு செய்தேன். கவிதையை படித்தவர்கள் உள்ளன்புடன் தமது கருத்துக் களைக் குறிப்பிட்டு வாழ்த்துக்களைக் கூறினார்கள். இவர்களின் இந்த வாழ்த்துக்களை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வாழ்த்துக்கள் என்றே குறிப்பிட விரும்புகிறேன். எதிர்பாராத சூழ்நிலையில் இந்து சாதனம் வெளிவருதல் தடைப்பட்டு நற்றமிழ்மாலை முற்றாக வெளியிடப் பெறாமல் உள்ளது. எனினும், விரைவில் இத்தடை நீங்கி எழுதி முடிக்கப்பெற்றுள்ள கவிதை முழுமையாக இந்துசாதனம் இதழில் வெளியிடப்பெற்று நூல்வடிவு பெறும் நாளை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

இலங்கைத் திருநாட்டிலுள்ள திருக்கோவில்களின் மூர்த்திச் சிறப்பை திருப்புகழாகப் பாடுவது என்பது இதுவரை யாரும் முயன்று பார்க்காத ஒரு விடயமாகும். இவரால் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் மேற்பாடப்பெற்று "கந்தன் கழற்கோர் கவிமாலை" எனும் தலைப்பிலான திருப்புகழ் மாதந்தோறும் ஞானச்சுடர் இதழில் வெளிவந்து கொண்டிருப்பது முருகன் திருவருளே.

சைவபரிபாலன சபையின் ஆயுட்கால அங்கத்தவரான திரு.இ.குகதாசன் பலகாலம் நிர்வாக சபை உறுப்பினராக, உப தலைவராகப் பணியாற்றிருந் தார் 2006-2007 வரை செயலாளராகக் கடமையேற்ற இவர் நாட்டுச் சூழல் காரணமாக முழுமையான செயற்பாட்டைச் செய்ய முடியாவிடினும் யாப்பின் குறைபாடுகளை மாற்றியமைத்தது திருத்திய ஒரு யாப்பை தனது காலத்தில் உருவாக்கினார். இந்துசாதனம் பத்திரிகை வெளியீட்டில் முக்கிய பங்கு வகித்ததோடு சபைத் தலைவராக இருந்த அமரர் வ.கந்தசாமி அவர்களுடன் இணைந்து பலவழிகளிலும் சபையின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.

அகவை அறுபது கண்டு மணிவிழாக் காணும் தம்பதிகளின் வாழ்வு மகிழ்வுடன் அமைய சிதம்பரம் நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**சைவபரிபாலன சபை,**<br>**நீராவியடி,**<br>**யாழ்ப்பாணம்.**

**"சொல்லின் செல்வர்"**<br>**இரா.செல்வடிவேல்**<br>**செயலாளர்**

## "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"
## சிறப்பு இசையரங்கம்

| | | |
|---|---|---|
| பாட்டு | : | இசைமாமணி, சங்கீதபூஷணம் திரு.எஸ்.குமாரசாமி |
| வயலின் | : | ஸ்ருதி வேந்தன் திரு.அ.ஜெயராமன் |
| மிருதங்கம் | : | இசைக்கலைமணி திரு.சி.துரைராஜா |
| தபேலா | : | கலாவித்தகர் திரு.சதா.வேல்மாறன் |
| முகர்சிங்,கஞ்சிரா | : | கலாவித்தகர் திரு.க.நந்தகுமார் |

# திருப்புகழ்க் கீடான அருட்புகழ்ப் பாக்கள்



கல்வி, சோதிடம், வைத்தியம் மூன்றிலும் முடிசூடா மன்னர்களாகப் பலபேர் வாழ்ந்த பழம்பெரும் பதிதான் நாயன்மார்கட்டு. நல்லூர்ப் பதியிலிருந்து அரசாட்சி செய்யும் அலங்காரக் கந்தவேள்ப் பெருமானின் அருளாட்சிக்குட்பட்ட ஒரு சிறிய கிராமம். அக்கிராமத்தில் தமது குல தெய்வமான பேய்ச்சி ஆச்சியின் அடிமறவா வாழ்ந்த இராசையா தங்கலட்சுமி தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாகத் தோன்றியவர்தான் எம் அன்புக்கும் மதிப்புக்குமுரிய கவிஞர் திரு.குகதாசன் அவர்கள்.

கவிதைத் துறையில் அழுத்திக் கால் பதிக்க முன்பாகவே மிக இளவயதிலேயே புலவர்என்று செல்லமாக ஊரில் அழைக்கப்பெற்ற இவர் பிற்காலத்தில் பெருங்கவிஞராக வந்தது இறையருளே. யார் வைத்தார்கள், யார் அழைக்கத் தொடங்கினார்கள் என்று தெரியாமலே இவர் அப்பெயரால் அழைக்கப் பெற்றதும் பின்பு இவர் அதுவே ஆனதும் ஆச்சரியந்தான்.

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்" - என்பார்கள்

இதற்கு இவரையே உதாரண புருஷராகக் கொள்ளலாம். முறைவழி கல்விப் பெறாவிடினும் இறைவழி யுலாவி கவிசொலும் ஆற்றலை இயற்கை யாகவே பெற்றுக்கொண்டவர். தான் அவனிடம் இருந்து பெற்ற ஞானத்தை அருட்புகழ் மாலைகளாக்கி அவ்விறைவனுக்கே சூடி மகிழ்ந்தவர். பிறந்த ஊரையும் தந்தையாரையும் போற்றும் வண்ணம் தனது ஆக்கங்கள் யாவற்றையும் - நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் என்றே பதிவு செய்து வருபவர்.

மாவைக்கந்தனின் மாட்சிமை கூறும் அருட்புகழ்ப் பாடல்கள் பிறந்ததும், அத்திருப்புகழால் மாவை ஷண்முகநாதப் பெருமானுக்கு அர்ச்சனை நடந்ததும் அற்புதமாகும். அப்பேருணர்வினாலே உந்தப் பெற்றோ? அல்லது இறை நியதியோ? மாவை ஆதீனகர்த்தர் இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோவில்கள் முழுவதின் மீதும் பாடவேண்டுமென்று ஆணையிட மறைந்த குருநாதர்களதும், வாழும் குருநாதர்களதும் ஆசியோடு அருணகிரியின் திருப்புகழ்க்கீடாக அறுநூறு அருட்புகழ்ப் பாடல்களை யாத்து தனது மணிவிழா மங்கல நாளில் படையலாகத் தருவதையிட்டு பெருமகிழ் வெய்துகின்றேன்.

பல்வேறு சமய, சமூக நிறுவனங்களூடாக பல அறப்பணிகளை ஆற்றிவருவதன் மூலம் பல பெரியோர்களதும், துறவிகளினதும் பேரன்பையும் ஆசியையும் பெற்று வாழ்பவர். திருக்கடையூர் அபிராமி அம்பாள் சமேத அமிர்தகடேஸ்வரர் பாதவருள் வேண்டித் தொழுதுதிரும்பிய தம்பதிகளுக்கு நடைபெறும் மணிவிழாவும், நூல்வெளியீடும் சிறக்கவும் மணிவிழாத் தம்பதிகள் பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற வாழவும், தெய்வத் தமிழிசைக் கவிஞர் அவர்கள் மிகுதி ஆலயங்களையும் பாடிவர நீண்ட ஆயுளையும் நிறைந்த புலமையையும் அருளவேண்டி அன்னை இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாளின் பாதார விந்தங்களை மன, மொழி, மெய்களால் வழுத்துகின்றேன்.

இல.30,நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06

கலாநிதி.இ.செந்தில்நிதி
தலைவர் பௌதீக விஞ்ஞானத்துறை
பிரயோக விஞ்ஞான பீடம்.
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## தெய்வத் தமிழிசைக் கவிஞர் இராசையா குகதாசன் மணி விழாக்குழு

**தலைவர்** : கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
முதலாவது பீடாதிபதி,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி

**செயலர்:** சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்
செயலர்,சைவபரிபாலனசபை

**நிதிச்செயலர்** : சிவத்திரு எஸ்.வெற்றிவேலாயுதம் அவர்கள்
தலைவர், திருநெறிய தமிழிசை வெளியீட்டுக்கழகம்

**நிர்வாகஉறுப்பினர்கள் :**

அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார் க.கு.சிவபாலன்
பொருளர்,அகில இலங்கைத் திருமுறைமன்றம்

சிவத்திரு நயினை கிகிருபானந்தா
செயலர்,யாழ்.இலக்கிய வட்டம்

**விழா ஒழுங்கமைப்பு,நெறியாள்கை :**

சிவத்திரு க.சோமசேகரம்
அறங்காவலர்,காரை வியாவில் ஐயனார் தேவஸ்தானம்.

## பா தொடுக்க நூல்கொடுக்கும் பேறு பெற்றேன்

கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் கோவில் ஓதுவாராக இருந்த எனது தந்தையாரின் அத்தியந்த நண்பராக இருந்தவர் அன் அன்புக்கும் மதிப்புக்குரிய நாயன்மார்கட்டு இராசையா குகதாசன் அவர்கள். அவரின் மணிவிழா மலருக்கு வணக்கவுரை வழங்குவதில் பெரு மகிழ் வெய்து கின்றேன். மணிவிழாவிற்கு அணிசெய்யும் வெளியீடாக வெளிவரும் தெய்வப் புகழிசைத் தேனமுதம் நூல் தெய்வீக மணம் பரப்புமென்பது திண்ணம். எமது ஜெயந்திநகர் முருகன் மேலும் இருபாடல்கள் பாடப்பெற்றுள்ளதும் முருகன் திருவருளே.

தமிழ்வேள் முருகன் அருணகிரியாரை தன் கையிலேந்தி தடுத்தாட் கொண்டு தண்டமிழ் பாடல் தரவைத்தவன்.நாயன்மார்களும் அடியார்களும் இறைகள் வயமாகி அருந்தமிழ் பாடல்களை சைவமுந்தமிழுந் தழைத் தோங்க இவ்வுலகிற்கு அளித்தனர்.அவ்வாறே முருகன் திருவருளாலே இலங்கை முழுவதிலுமுள்ள ஆலயங்கள் மீது சந்தத் திருப்புகழ் வடிவிலே அருட்புகழ்ச் சிந்தைத்தர விளைந்த அன்பர் குகதாசனுக்கு இராமருக்கு அணை கட்ட உதவிய அணிலைப்போல அடியேனையும் உதவ வைத்தான் முருகன்.

வாழ்வு பெற்ற வல்லி சோழ இளவரசியின் மாவை ஆதீனப் பேரரசின் ஆதீனகர்த்தர் மாமேதை அருணாணையிட எப்படி எழுதுவேன்,வரலாற்று நூலை எங்கே தேடுவேன் எனக்கலங்கி நின்றபோது என்னை அறியாமலே அந்த நூலை முருகனே என்மூலம் இவர் கையிற்சேர்ப்பித்தான்.

இதில் திருவருள் எங்கே வருகின்றது என்று சிலநேரம் சிந்திக்க லாம். இவருக்கு இப்படி ஒரு நூல் தேவையென்பதை நானறியேன். என்னிடம் இப்படி ஒரு நூல் உள்ளதென்பதை அவரும் அறியார். அப்பா விற்குப் பரிசாகவும் எனக்குச் சுமையாகவும் இருந்த இந்தநூலை யாரிடமாவது வைத்துப் பேணும்படி ஒப்படைக்கலாம் என்ற சிந்தனை வந்தபோது இவர் நினைவே பிறந்தது. இங்கே தான் திருவருள் வருகின்றது. என்னோடு பழகிய உறவினர்,நண்பர் பலரிருக்க இவரிடம் கொடுப்போம் என்ற சிந்தனை ஏன்வந்தது. அதுவும் இவ்வளவு நாளும் அவரோடு பழகியிருந்தும் யாழ்ப்பாணத்தில் அருளாணை கேட்டு புத்தகம் கிடைத் தால் முயற்சிக்கிறேன் என்று கூறிவிட்டு கொழும்பு திரும்பிய அடுத்த நாளே இந்தப் புத்தகத்தை இவரிடம் கொடுக்கும் எண்ணத்தை யார் கொடுத்தது. இவை களெல்லாம் விடை தெரியாத கேள்விகள். இது இறைவன் திருவிளையாட்டன்றி வேறில்லை. அநுபூதி மான்களே ஆண்டவன் லீலை அறிவார். இத் தேனமுதம் வெளிவர அடியேனையும் ஒரு கருவி யாக்கி வைத்த இறையருளை மனமொழி மெய்களால் வணங்குகின்றேன்.

மணிவிழாத் தம்பதிகள் பல்லாண்டு, பல்லாண்டு சிறப்போடு வாழவும், மிகுதி ஆலயங்கள் மீதும் அருட்புகழ் பாடும் இவரின் பெரும்பணி நிறைவு றவும், நீண்ட ஆயுளையும் நிறைந்த புலமையையும் அருளவேண்டு மென்று எல்லாம் வல்ல ஜெயந்திநகர் முருகப்பெருமான் பாதாரவிந்தங்களை பணிந்து வணங்குகின்றேன்.

**கொழும்பு -11** **மு.அறம்வளர்த்த சுந்தரம்பிள்ளை.**

நிகழ்ச்சிகள்

காலை: 8:30 பூசைவழிபாடு (நீராவியடிகடையிற்சுவாமி ஆலயம்)

8:40 ஊர்வலம் (தம்பதிகள் விழாமண்டபத்திற்கு மங்கல வாத்திய சகிதம் அழைத்து வரல்)

8:55 மங்கல விளக்கேற்றல்

9:00 திருநெறிய தமிழிசை அரங்கம் தேவார இசைமணி கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்

10:05 ஆசியுரை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

10:10 பிரமச்சாரிய ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் (சின்மயா மிஷன்)

10:15 ஸ்ரீமத்ஸ்ரீ வேதவித்யா சாகரர் சுவாமிகள் (வேதாந்தமடம்)

10:20 மகாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள் (வாழ்வு பெற்ற வல்லி சோழ இளவரசி மாருதப் புரவீகவல்லியின் மாவை ஆதீனப் பேரரசர்)

10:25 சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள் பிரதம குரு அரசடிப்பிள்ளையார் தேவஸ்தானம்

10:30 வரவேற்புரை சிவத்திரு.எஸ்.வெற்றிவேலாயுதம் தலைவர், திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகம்

10:35 தலைமையுரை: தலைவர் அவர்கள்

10:40 வெளியீட்டுரை பேராசிரியர் தி.வேல்நம்பி அவர்கள். தலைவர் வணிகத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நூல்வெளியீடும் பிரதிகள் வழங்கலும்

முதற்பிரதி பெறுபவர் "கல்விக் காருண்யன்" சிவத்திரு இ.ச.பே.நாகரத்தினம் அவர்கள்

சிறப்புப்பிரதிகள் வழங்கல்

11:00 நூல்அறிமுக உரை ந.விஜயசுந்தரம் பிரதம ஆசிரியர்.வலம்புரி

11:10 கவிஞர் கௌரவமும் விருது வழங்கலும்

11:25 வாழ்த்துரை : பேராசிரியர் மா.வேதநாதன் தலைவர், இந்து நாகரீகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைவர் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானம்

ப.விக்னேஸ்வரன் ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் வடமாகாணம்.

க.சோமசேகரம் அறங்காவலர், காரை, வியாவில் ஐயானர் தேவஸ்தானம்.

11:40 ஏற்புரை கவிஞர் அவர்கள்

11:50 "தெய்வப் புகழிசைத் தேனமுதம்" சிறப்பு இசையரங்கு

பாட்டு: இசைமாமணி செ.குமாரசாமி

1:15 நன்றியுரை: விழாக்குழுச் செயலர்

1:20 நண்பகல் விருந்துபசாரம்

அனைவரும் உரிய நேரத்தில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

# அந்தராத்மாவோடு கூடிய அநுபவப் பாடல்கள்

"வாழ்த்துவதும் வானவர் தாம்வாழ்வான்"என்று திருச்சதகம் கூறுவதற்கமைய தேவர்கள், தாம்வாழ இறைவனை வாழ்த்துகின்றார்கள் இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என வருவதும்.நீங்காது என்னோடு வாழ்ந்தால் நான் வாழ்வேன் என்பது தானே--மணிவாசகம்

யாரேனும் நல்லதொன்றைச் செய்யும் போது "வாழ்க"என்கிறோம்.உலகு இன்புற நல்லோர் வாழ வேண்டும். இறைவனை வணங்கும் மக்கள்பரம் பொருளாகிய அந்த அழியா இயற்கை அழகை "வாழ்க" வென்று வாழ்த்துவது எதுபோன்ற தென்றால் மக்களைப் புரந்தூட்டும் பெற்றோரை அவர் மக்கள் வாழ்த்துவது போன்றதே. அல்லாமலும் பெற்றோர் முதுமையில் குழந்தை போன்று மென்மை பெறுவர். மேன்மையுடைய பிள்ளைகள் மென்மையான அவரை வாழ்த்துவர். மக்கள் தாம் குழந்தையாக இருந்த காலத்தில் பெற்றோர் பேணினர். பின்பு பெற்றோரை வளர்ந்த பிள்ளைகள் பேணவேண்டும். அதுவும் இல்லற வாழ்வாலே தான் ஆகும். இல்லறத்தை நல்லறமாக்கும் சமயத் தொண்டனுக்கும் இது சமூகக்கடமையே. மேலும் "பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்ற சிவபுராணத்தின் ஈற்றடியை நோக்கினால் சிவன் பாதம் தேர்ந்தவர்கள் --தொழுபவர்கள் அவர்கள். அவனுடன் கலந்து அவனைப் புகழும் பெற்றியர் ஆக பலகாலத்தவரும் பலநிலையிலிருப்பவரும் பணிந்து புகழ்ந்து போற்ற உலகு பயன்பெறும். இல்லறவாழ்வில் இருப்போரும் பயன் பெறுவர். அது சமூகத்திற்கு உதவும். ஏத்துதல் -புகழ்தல் என்பதாம். பணிந்து ஏத்தச் சிவனடிக்கீழ் சிவபுரத்தின் உள்ளார் எனக்கொண்டு கூட்டிப் பொருளுரைக்கப் பொருளுணர்வு சிறக்கும்.

அவனருளாலே அவன்தாள் வணங்கி வர அவன் கருணையால் ஈர்க்கப் பெறுவான்.தவமும் தவமுடையார்க்கே என்பதற்கமைய "ஈர்த்து எனையாண்ட எந்தை பெருமானே"என ஏத்தும்படி இறைசக்தியை நினைந்து அவன் உருகுவான். உள்ளம் "கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்" சைவத்திரு இ.குகதாசனும் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்து உருகுபவரே யாவார். அவ்வாறு அகங்கலந்து கசிந்துருகிப்பாடிய இவர்போன்ற பல்வேறு அடியார்களின் பனுவல்களேஇன்று புறத்தார்க்கும் பயன் தருகின்றன. அவை அகத்திணையின் பாற்பட்டும் புறத்திணையின் பாற்பட்டும் உலா வருகின்றன.

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே."

இதனுள் சைவசமயப் புறத்திணை இலக்கணம் முழுவதும் அடங்குகின்றது

எல்லா மக்களுக்குமான உலக நெறியைக் கூறுவதாகவும் உள்ளது. மும்மலங் களையும் களைந்து சிவ அன்பர்களோடு இணங்குதல் ஒன்று. அவ்வன்பர்களின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடுதல் மற்றையது.இந்த இரண்டு பெரும் பகுதியைப் போதிப்பது இது. மேலும் இயற்கையின் இணைப்பால் அந்தச் சக்தியின் உணர்வால் அழியா அழகால் இயற்கையில் தனக்குள்ள இடத்தையும் அறிகின்றான்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியு மறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்கத் தானிருந் தானே.

இது போன்று சைவத்திரு இ.குகதாசன் அவர்களும்பத்தியாற் பாடிப் ''பா''மலரால் அர்ச்சிக்கின்றார். அவர் எடுத்தாண்ட சில அடிகள்,

தாள்நாடி யேநினைந்து ''பா''பாடி யேபுனைந்து
தார்சூடு வாருகந்த --பெருவாழ்வை.

என்றும்

குலங்காவல் அளிக்கவென வருந்தேவன் எனப்புகழ
குழைந்தோடு மருட்கருணை --பொழிவோனே

என்றும்

அருளடி யணைந்து அவனியில் வணங்கும்
அடியவ ருகந்த ---தொருவாழ்வை

என்றும்

தருவாய் நினைந்து தருகோ விலுற்றுத்
தருவோய் வரத்தை ---யெனவோத

இவ்வாறெல்லாம்

வருகின்ற முதலடிகளையுடைய இவரது பாடல்கள் புறத்தாரும் மனங்கொண்டு பாடலாம்.

கடவுளருடன் கலந்து அவர்தாள் உவந்து கசிந்துருகிப் பாடுகின்ற இவ்வடியவர்களின் பாடல்களுக்கு பதங்காண வேண்டியதில்லை. அவை யெல்லாம் அவரவர் பத்திநிலை ஈடுபாட்டால் அமைவனவாகும். நாயன்மார்கள், அடியவர்கள் பாடியவற்றை உரைத்துப் பார்க்குந் தகுதி எவர்க்கும் இல்லை. அவையெல்லாம் அவரவர் அந்தராத்மாவோடு கனவு,நனவோடு கூடிய அநுபவம்.

''கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்
திண்டிறலுக் கென்னோ செயல்''

என்ற திருவருட்பயன் நூலாலும் இதனைத் தெளியலாம். ''அவத்தை நிலைகள் மூவகைப்படும். **நின்மலாவத்தை, யோகாவத்தை, சகலாவத்தை** அவற்றுள், நின்மலாவத்தையிலே ஆன்மாவானது **புறக்கரணம் உட்கரணம்** ஆகியவற்றிற் சார்ந்திருந்து தன்னையறிவது **சாக்கிரம், புறக்கரணத்தை**

விட்டு **உட்கரண** முயற்சியுடன்கூடித் தன்னையறிவது **சொப்பனம், போகங்களில்** விருப்பின்றிச் சலனமற்ற **மனத்துடன்** கூடியிருப்பது **சுழுத்தி. மனத்தையும்** விட்டு **ஞானத்துடன்** கூடியிருப்பது **துரியம், சிவத்துடன்** ஐக்கியம் பண்ணியிருப்பது **துரியாதீதம். யோகாவத்தையிலே** பிரத்தியாகாரம் **சாக்கிரம்,** தாரணை **சொப்பனம்** தியானம் **சுழுத்தி.** சமாதியிலே தற்சொரூப தரிசனம் **துரியம்:** சிவனைத் தரிசிப்பது **துரியாதீதம்** சகலாவத் தையிலே **ஆன்மாக்கள்** விழிப்பாயிருந்து **காண்டல் கேட்டல்** முதலிய தொழில்களில் நிற்றல் சாக்கிரம் கனாக்காணும் நிலையாகிய தாக்குதலில்லாத நித்திரை **சொப்பனம்.** கனவில்லாத உறுதியான **நித்திரை சுழுத்தி** துன்பத்தினால் அறிவுகேடான நிலை **துரியம்** கருவிகளின்றும் **ஆன்மா நீங்கும்** நிலை **துரியாதீதம்**'' என்ற சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் உரைவிளக்கத்தால் தெளியலாம். வலிமையற்ற ஆன்மா இறைசார்ந்து நிற்றல் வேண்டுமல்லவா.

இறை சார்ந்துவரும் அநுபவக் கலப்பிற்கு விவாதமும் வேண்டியதில்லை.

“ஊனொடுண்டல் நன்றென ஊனொடுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினாற் பேசநின்ற தன்மையன்”

என்பது ஞானசம்பந்தம். எந்தவுணவு நன்று எந்தவுணவு தீது என்றவாதம் பண்டு தொட்டு இன்றுவரை நிகழ்கின்றது. அந்த விவாதம் உலகில் இருப்பதைக் கூறுகின்றார் அவர். பௌத்த, சமண சமயங்கள் வேறுபட்டுப் போனதற்கு இந்த வாதமே காரணம்.தற்போதுகூட சமயநிலையில் இந்த வாதம் முதன்மையாக உள்ளதைஅவதானிக்கலாம். சரி பிழை ஒருபுற மிருக்கட்டும் உயிர்களிடத்து அன்புடையார் அதனை வருத்துவதற்குத் துணையாக மாட்டார் -கருணையுள்ளம் அவரைத் தடுக்கும். அன்பே சிவமாகி அவரை ஆட்கொள்ளும்'' அவ்வன்பே சிவம். அன்பு வேறல்ல. சிவம் வேறல்ல. நோக்குவாரது கருத்தில் நுண்ணறிவை ஏற்படுத்தக்கூடியதிது. இவை இரண்டும் ஒன்றே.

அன்பே சிவமாய் அமர்ந்திருந்து மெய்யுணர்வு இன்பங் கண்டவருக்கு சத்தென்னும் மெய்யும் சித்தென்னும் உணர்வும் ஆனந்த மென்னும் இன்பமும் தானே வந்தடையும்.

“சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே”

அத்தன் அன்பு காரணமாய் அருளினன் இவ்வின்பத்தைப் பாடுவார் மாணிக்க வாசகர்.அவர் உள்ளுணர்வோடு கூடிய அன்பைக்கொண்ட அடியார். ஈசன் அருளைத்தர முன்னிற்பவர் அவரின்பத்திற் துய்த்தவர். இறையுணர்வில்லாற்கு அல்லது உலகத்துயிர்கள் மாட்டு அன்பில்லாற்கு மனம் பண்படுதலில்லை.

புகழ்ச்சியை விரும்பியோரது மனமானது ஒன்றை நினைக்கவைத்து விடும். அதாவது வாக்கு ஒன்றாக மனமொன்றாக வேறு வேறு படுத்திச்செயற்படுத்திவிடும். மனங்குவிந்து ஒன்றுதல் இல்லாததாகி விட்டால் அதனாற் பயனில்லையே!

"ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்றன் திருக்குறிப்பே"

என்பார் அப்பரும்.

"ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே"என்பது திருவாசகம். ஆக, கடவுளர்பால் அன்பு மீதூரப் பெற்றும், உலகினர்க்கும் உவந்ததையே நினைந்து தலங்கள் பற்றி அறிந்தும், உணர்ந்தும், அவைதோறும் சென்றும் தமதுணர்வைப் பாடல்களாக, திருப்புகழ்ச் சந்தம் தோன்ற யாவர்க்கும் "பா"வடிவிற் தந்த அன்பரைச் சைவத்திரு இராசையா குகதாசன் அவர்களை மணிவிழா மங்கலங்காணும் இன்நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

—: உலகு பயனுற வாழ்க வாழ்கவே :—

**"நந்தா விளக்கம்"** **பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் எம்.ஏ(சிறப்பு)**
**சிந்துபுரம்** **செயலர்,விரிவுரையாளர்**
**வட்டுக்கோட்டை** **இன்ஸ்ரிரியூட் ஒவ் ஒறியன்ரல் ஸ்ரடீஸ்**

129ஆம்பக்க தொடர்ச்சி தான்யலஷ்மி

கண்ணது பொழியருளால் கவலைகள் தீர்த்திடுவாள்
மண்ணது நிறைதான்ய மணிகளைத் தந்திடுவாள்
எண்ணறு கரமுடையாள் ஏற்புடைப் படையுடையாள்
தண்ணருளாற் தான்யம் தரணியிற் தந்திடுவாள்

ஐஸ்வர்யலட்சுமி ( அட்ட)

நாற்றிசையும் புகழும் நல்லழகே யுடையாள்
சாற்றிடும் சௌபாக்யம் சரண்புகுவார்க் கருள்வாள்
நாற்கர நாயகியாள் நறுந்தனந் தானருள்வாள்
போற்றிடும் ஐஸ்வர்யம் பொழியருட் கரமுடையாள்

சந்தானலஷ்மி

சிந்தெழிற் திருக்கரத்தே சீர்மகவே யுடையாள்
நந்துயர்க் கேடயத்தாள் நமதிடர் வார்க ரத்தாள்
அந்தமில் புகழுடையாள் அருள்சொரி அறுகரத்தாள்
சந்தானந் தனைப்பெருக்கி நம்மானங் காத்திடுவாள்

ஆதிலஷ்மி

அருட்சோதி வடிவான ஆதிலஷ்மித் தாயாள்
பொருட்கோடி தானருளும் பேரருட் கரமுடையாள்
இருட்டேது மில்லாத இகவாழ்வு தந்திடுவாள்
விருப்போடு தொழுவார்க்கு வேண்டிய தளித்திடுவாள்

## "கவிமடுவ" கவிச்சவால் பாடல்

பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனின் அழைப்பின் பேரில் 23:04:2011 அகில இலங்கை கவிஞர்கள் சம்மேளனத்தின் "வடக்கிற்கான உறவுப் பயணம்"என்னும் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்து கொண்டபோது அந்நிகழ்வில் பங்குபற்றிய விமலசார தேரரும் ரூபவாகினி பிரதிப்பணிப்பாளர் விவேகாராமய குணதிலக பாரா.வாதுவ (0714393345) அவர்களும் இந்த உறவுப்பாலம் நிகழ்வு பற்றி நாங்கள் தரும் கவிப்பாணியில்உடனடியாக ஒரு கவிதையை யாத்து மேடையிற் பாடமுடியுமா? என்ற வேண்டுகோளை ஏற்க பலரும் தயங்கி நின்றபோது அதைச்சவாலாக ஏற்று மண்டபத்தில் வைத்து அவர்கள் தந்த பாணியைப் பின்பற்றி யாத்து அவர்களின் பாராட்டைப்பெற்ற அவர்கள் பாணிக் கவிதை.

### அவர்கள் தந்த மாதிரிக் கவிதை

சின்னையா சிரித்துச் சிரித்து பாஞ்சா லைக்கு வாரது
உங்கஇருக்கும் பாஞ்சா லைக்குப் பத்து ரூபா கொடுத்தது

அதுக்கு நாம் உங்களுக்கு ஒருசங் கதி சொன்னது
சின்னையா சத்தி யமா நிர்வாணத் திற்குப் போனது.

### இதே பாணியில் அடியேன் பாடியது

விமல சார தேரருக்கும் விரும்பிவரு சோத ரர்க்கும்
தமர ரான கவிஞருக்கும் தாங்கிவரு கலைஞர் கட்கும்

கமழு வாச வாகினியின் பிரதிப் பணிப் பாளருக்கும்
எமது பாச நன்றியொடு ஈந்தனம் எம்வ ணக்கங்கள்.

கலாச்சார அமைச்ச ரெனுங் கௌரவத் தோடெம் யாழில்
உலாப்போக வரு கௌரவ டி.பி.எக்க நாயக்கா

தலைமையிலே இலங்கை யுள கவிஞரெலா மொன்று பட்டே
கலைப்பாலம் போட்டி டுவோம் கவினுறவே இன்று தொட்டே

வடக்கிலுளார் உறவு தேடி நீங்களெ லாம் இங்குவந்தீர்
இடக்குசெயா துங்க ளுக்கே இகமீந் தோம் வந்தனங்கள்

தொடக்கம தாய்நாம் தந்தோம் தூய தமிழ்ச் சிந்தது
நடக்க வேண்டும் இதைத் தொடர்ந்தே நாடெங்கும் நல்லது

நாங்கள் உங்கள் பஞ்சாலைக்கு நாடெல்லாம் வாறது
நீங்க ளெங்கள் கோவிலுக்கும் நெடும்பயணம் போறது

உலகத்து மொழியி லுள காவியங்கள் தேர்ந்தெ டுத்தே
அதைவடிப்போம் நாமி ணைந்து நம்மொழியில் நனைத் தெடுத்தே

எல்லோரும் இந்நாட்டு மன்னரென்றே எடுத்து ரைப்போம்
சொல்லோடு நிற்காது சுதந்திரத்தைக் கொடுத்து வைப்போம்

அக்கால மன்னர் களோ அளித்து வந்தார் நிவந்தங்கள்
இக்காலம் எதுவு மில்லை ஏங்கு கின்றோம் வண்டினங்கள்

மண்டங்கள் ஏது மில்லை மாண்பொ டெம தொழும்புசெய
தொண்டுசெய ஓரி டத்தை தூயவரே ஒழுங்கு செய்யும்

பலகவிஞர் எழுதி விட்டுப் பாதையின்றித் தவிக் கின்றார்
சிலகவிஞர் எதையெ தையோ செய்துசெய்து குவிக் கின்றார்

வறுமையொடு புலமை யதும் சேர்ந்துவந்தே பிறந்த தனால்
எழுதுவதை அச்சேற்ற ஏதுவழி கூறு மையா?

உறவுக்கோர் பாலமதை உவப்பினொடு நாம் தந்தோம்
மறக்காமல் வளர்த் திடுவோம் மாண்புதனைப் பாங்கி னொடு

கவிஞர்நா மொன்று பட்டே தந்திடுவோம் காவி யங்கள்
களிப்பினொடு நாம ளிப்போம் சிறப்புசொலும் பாயி ரங்கள்.

இதுவரையு மெம்மி டையே இருந்தபகை களைந்து விட்டே
துதிபுரியு இறைக ளளீ தூயவரு ளத னாலே

நதியதெனத் திரண்டு வரு நற்கவிஞர் நாமி ணைந்தே
புதுயுகத்தை படைத்தி டுவோம் புறப்படுவீர் நீரி ணைந்தே.

## கவிஞர் நல்லூர்க் கந்தன் மேற் பாடியது

பல்லவி

நின்றாடியே அடியார் நினைத்தொழுவார் -பழநி
சென்றோடியே அமர்ந்த செழுந்திருக் கோலங்கண்டு

அநுபல்லவி

மன்றாடியும் உனக்கு மாங்கனி தரமறுத்தார்
என்றாலும் நீயெமக்கு எழில்ஞானப் பழமன்றோ

சரணம்

பண்டாரமாக வந்து பழநி ஆண்டியாகி
தெண்டாயுதம் தரித்த திருத்தவக் கோலந்தன்னை
கண்டார்வமாய் அடியார் கனிந்துமனம் உருகி
கொண்டாடிப் பாடியுன் கோபந் தணிகவென்று

# மகா ஆசீர்வாதம்

பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய பிரதம குருவின் வேண்டுகோளுக் கமைவாக கவிஞர் அவர்களால் இயற்றப்பெற்று ஒவ்வொரு நாள்உற்சவத்தின் போதும் அந்தந்த உற்சவதினத்தைக் குறிப்பிட்டு அளிக்கப்பெற்றுவந்த தமிழ் மகா ஆசீர்வாதம்.

தேவி ஆலயத்திலே பிரசன்னமாக இருக்கும் மகான்களுக்கும், ஆத்மார்த்தமாக நின்று ஆசிவழங்கிக் கொண்டிருக்கும் குருவுக்கும் சிரந்தாழ்ந்த வணக்கங்கள். சித்தியையும் புத்தியையும் இரு சக்தியாகப் பூண்டு விக்கினம் யாவும் நீக்கியருளும் விக்கினேஸ்வரப் பெருமானே!

பாரெல்லாம் படியளக்கும் காரணியான ஆதிசக்தி,பராசக்தி,இச்சாசக்தி, கிரியாசக்தி,ஞானாசக்தியாக விளங்கும் உமையம்மையுடன் இரண்டறக்கலந்து பஞ்சகிருத்தியங்களுக்கும் தலைவராக விளங்குகின்ற ஆதிபரம்போருளே!

- நம்பரன் வாசல் காக்கும் நந்தி மா தேவனாரே!
- இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தியாக விளங்கும் வள்ளி தெய்வானை யோடு கரமதில் வேல்தாங்கி வரமதால் வளமெல்லாம் நல்கும் சுப்ரமண்யப் பெருமானே!
- அரனவன் ஆணையேற்று ஞானமும் நீதியும் நல்கும் வீரபத்ரதேவே!
- அரிகரன் இணைப்பினாலே அகிதலத்துதித்து அடிதொழும் அன்பர்க் கெல்லாம் அருளிடும் ஹரிஹர புத்திரதேவே!
- சாமுண்டி சமேதராக சகமுள சந்நிதி தோறும் நின்று காத்தருள் புரிந்து நிற்கும் வைரவ தேவனாரே!
- சரஸ்வதி தேவியோடு சங்கமமாகி வாழும் சத்தியலோகம் நின்று சகல சீவராசிகளையும் சகமதிற் படைக்கும் பிரம்மதேவே!
- இஷ்டங்கள் யாவும் நல்கும் அட்டலட்சுமித் தேவியோடு ஸ்ரீவைகுண்ட லோகம் நின்று சீவன்கள் அனைத்தையும் காத்து ரட்சிக்கின்ற ஸ்ரீ விஷ்ணு தேவே!
- தேவியரோடு நின்று திக்குகள் எட்டும் காக்கும் அட்டதிக்குப் பாலகர்காள்!
- சப்த மாதர்காள்! நவசந்தி தோறும் நின்று நலமருள் நவசக்திகாள்!

- நிமலனின் முன்புநித்தம் நிருத்தியாஞ்சலிகள் செய்யும்நிறை நடனமாதர்காள்!
- பூசையின் பலனையெல்லாம் பூரிப்போடருளும் சண்டேஸ்வரப் பெருமானே!

இலங்கா புரியின் வடபால் அமைந்த யாழ்ப்பாண மாநகரில் நல்லூர்ப் பாணன்குளப் பதியிலே பல்லாண்டு காலமாகக் கோவில்கொண்டெழுந்தருளி யிருந்து சகல சீவராசிகளுக்கும் தன் பேரருளினாலே வாழ்வளித்துக் கொண்டிருக்கும் அன்னை புவனேஸ்வரியாம் நாச்சியம்பாளுக்கு பங்குனி மாத சித்திரை நட்சத்திரத்தைத் தீர்த்தாந்தமாகக் கொண்டு ஆண்டு தோறும் நடைபெறுகின்ற பதினைந்து நாள் மகோற்சவத்தின் கொடியேற்றவிழா நடைபெறுகின்ற இன்று சித்திரபானு வருடம் உத்தராயணத்திலே பின்பனிக் காலமும்,ரேவதி நட்சத்திரமும்,வியாழக்கிழமையும், சித்தாமிர்த யோகமும் திருதியை திதியும் கூடிய சுபதினத் திலே தேவரீரெல்லோரும் முப்பத்து முக்கோடி தேவர்கள்,ரிஷிகள் மற்றும் முனிவர்களோடு பிரசன்னமாகிநின்று தேன்தமிழ் மொழியிலே செப்பிடும் ஆசி கேட்க வான்வழி வந்து நீங்கள் வழங்கிடும் ஆசியினாலே

- தேவி ஆலயத்தில் இன்று செய்யப்பெற்ற வழிபாட்டின் மூலம் சகல சீவராசிகளுக்கும் சர்வமங்களங்கள் உண்டாகட்டும்.
- தேவி ஆலய மகோற்சவ விழாவிலே செபிக்கப் பெற்ற மந்திரங்கள், தந்திரங்கள் அபிஷேகத் திரவியங்கள்,கால நியமங்கள்,கிரியைகள் போன்ற வற்றில் ஏற்பட்ட குறைபாடுகளும்,அறிந்தோ அறியாமலோ எமது வழிபாட்டில் ஐம்புலங்களின் ஆட்சியினாலே ஏற்பட்ட வழுக்களும் தேவியின் திவ்விய அருட்கடாட்சத்தினாலே உடனேயே அகன்று போக வேண்டு மென்று பெரியோர்களும் மகான்களுமாகிய தாங்கள் அநுக்கிரகிக்க வேண்டும்
- தேவி ஆலயப் பிரகாரங்கள் யாவும் வாழை, கமுகு, தோரணம், வெள்ளைகொடி, பூமாலை போன்றவற்றால் அலங்கரிக்கப்பெற்று சர்வ அலங்காரமாகத் திகழட்டும்.
- தேவி ஆலய மகோற்சவ காலங்களிலே அம்பாளுக்குச் சிறந்த அபிஷேக வழிபாடுகள்,உயர்ந்த பட்டுவஸ்திர,அணி,மணி,ஆபரண அலங்காரங்கள், சுவையுள்ள நைவேத்தியங்கள்,சுகந்த தூப தீபங்கள், பானீயங்கள் சோடச உபசார வகைத் தீபாராதனைகள் ஆகியவற்றால் தேவியை மகிழ்வித்தும், நான்கு வேதங்களாலும், இருஷிகள், முனிவர்கள் தோத்தரித்த

தோத்திரங்களாலும், பரம்பொருளின் மனவுரையைத் தமதுரையாகக் கொண்டு பாடிய நாயன்மார்களின் திருமுறையாலும் அன்னையை வழிபடட்டும்.

தேவிஆலய மகோற்சவ காலங்களிலே தேவியின் அடியாரெல்லாம் ஆசார அநுட்டானத்துடனும்,விரத நியமத்துடனும்,ஆலயம்வந்து தேவியை வழிபடட்டும்.

தேவியின் திவ்வியோற்சவ காலத்திலே சங்க வாத்யம் ,துளைவாத்தியம், தோல்வாத்யம், நரம்பு வாத்யம் போன்ற சகல வாத்யங்களும் முறையே ஊஜ்ஜனை, அடானா, சாரங்கா, மத்தியமாவதி, கொல்லி, வராளி, குஞ்சரி, பைரவி, தக்கேசி, மகுடராமகிரி, மாளவி, தசாட்சரி போன்ற நவசந்தி இராகங்களும் இசைக்கட்டும்.

சத்தியபாதம்,சமபாதம் மயூரபாதம்,குஞ்சிதம், தண்டம்,ஏகபாதம், மண்டலம், ஊர்த்துவபாத நாட்டியங்களெல்லாம் சிறப்பாக நடைபெறட்டும்.

தேவிஆலயத்தின் யாகசாலை,பாகசாலை,கோசாலை,வாகனசாலை,வாத்ய சாலை இவைகளெள்லாம் அந்தந்த திரவியங்களால் நிறைந்து பொலியட்டும்.

தேவி ஆலயத்தில் நடைபெறுகின்ற நித்திய,நைமித்திய,ஆகாமிய,சஞ்சித வழிபாடுகளெல்லாம் குறைவின்றி நடைபெறட்டும்.

தேவி ஆலயத்தில் நடைபெறுகின்ற நித்திய உற்சவம்,வாரஉற்சவம்,பட்ச உற்சவம் மாத உற்சவம் பிரம்மோற்சவம் வசந்தோற்சவம், திருவூஞ்சலுற் சவம் போன்ற சகல உற்சவங்களும் அந்தந்தக் காலங்களில் தடையின்றிச் சிறப்பாக நடைபெறட்டும்.

தேவிஆலயச் சூழலில் தேவியின் அலங்காரங்களுக்காகச்சிறந்த நந்தவனங்களெல்லாம் அமையட்டும்.

தேவியாலயத்தில் வேத தோத்திரங்கள் ,திருமுறைத் தோத்திரங்கள் புராண படனங்கள் யாவும் சிறப்புற ஓதப்பெறட்டும்.

தேவியாலயத்தின் மூலஸ்தானம், அர்த்தமண்டபம்,மகாமண்டபம்,தர்சன மண்டபம், தம்பமண்டபம்,கோபுரமண்டபம்,வசந்தமண்டபம், முதலிய மண்டபங்கள் யாவும் சிற்ப சாஸ்திர முறைப்படி அழகொளிர அமைந் திருக்கட்டும்.

தேவி ஆலயத்தின் தேவைகள் யாவும் சிறப்புற நிறைவேறத் தேவையான தன, தான்யம் வழங்கியும், சரியை, கிரியைத் தொண்டுகள் ஆற்றியும்

வருகின்ற அடியவர்கள்,ஆலயபரிபாலகர்கள்,திருமுறை ஓதுவார்கள் யாபேரும் சகல சம்பத்துமடைந்து வாழட்டும்.

தேவி ஆலயத்தில் நித்திய,நைமித்திய,பட்ச,மாத மகோற்சவ விழாக்களை யெல்லாம் உபயமாக ஏற்று நடாத்திவருகின்ற யாபேரும் நாடுபோற்றுகின்ற கல்விமான்களாகவும்,நல்வழியில் செல்வம் தேடுபவர்க ளாகவும், நல்ல ஆயுள் ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், அட்டஐஸ்வரி யங்கள் கிடைக்கப்பெற்றும், எண்ணிய செயல்கள் யாவும் எண்ணியாங்கு எய்தப் பெற்றும், அன்பும்,பண்பு உள்ளவர்களாகவும், உண்மை பேசுபவர்க ளாகவும், நன்மனைமக்கள் அமையப் பெற்றவர்க ளாகவும், செய்தொழில் விருத்தி கண்டும் செழிப்புடன் என்றென்றும் நலமாக வாழட்டும்.

தேவியாலயத்தைச் சூழவுள்ள மக்களும் இந்தப் புண்ணிய பூமியிலே வாழ்கின்ற அனைத்து மக்களும் தர்மவான்களாக, நியாயவான்களாக, நல்ல புத்திமான்களாக,திருமறை போற்றும் சீலராக,திருமுறைபாடும் செம்மல்களாக, செழுந்தமிழ் கலை,கலாச்சாரம் பேணுபவர்களாக வாழட்டும்.

### இறுதியில் இயம்பும் வாழ்த்து.

ஆளுநர் வாழ்க, அவர்செங்கோல் வாழ்க! அறம் வாழ்க!நம்அரசும் வாழ்க ஆனினம் வாழ்க!அந்தணர் ஆச்சாரியர் வாழ்க!திருமறை வாழ்க!திரு முறை யும் வாழ்க!மாதம் மும்மாரிபெய்க!மண்விழை செடி கொடி மரங்கள் வாழ்க! பாரெலாம் போற்றுமெங்கள் பசுந்தமிழ் அரசும் வாழ்க!சீர்தரு தன, தான்யம் பெருகியே செகமுள உயிர்களெல்லாம் செழித்துமே வாழ்க! வாழ்க!

## கவிஞர் சரஸ்வதி தேவிமேற்பாடியது

பல்லவி

வாணிசரஸ் வதியே வாக்கில் நிற்பாய்
பேணிநற்சங் கீதம் பெருகிநாவிற் பாய

அநுபல்லவி

வீணையி னோடமரும் வித்தியா ரூபிணியே
ஆணிப்பொன் முத்தாக அறிவிற் பொலி சுடரே

சரணம்

சுரலய ஞானமதென் சுருதியுடன் இணைந்து
கரமது தாளமதில் கலந்துபின்னிப் பிணைந்து
சிரமது அசைந்தாட ரிதமது இசைந்தோட
சுரருலகும் மயங்கும் சுத்தசங் கீதம்பாட.

உ

சிவமயம்

# இகமெனை உயர்த்தினோர்க்கு இயம்பினேன் இதயநன்றி

மணிவிழா நடைபெறக் காரணமாக இருந்த அன்புள்ளங்களை மன, மொழி மெய்களால் வணங்குகின்றேன். இப்படியான ஒருநூலை எழுத வேண்டுமென்று விரும்பி அருளாணையிட்ட மறைந்த "மகாராஜஸ்ரீ" சு.து.ஷண்முகநாதக்குருக்கள் இந்நூலை பார்க்கவில்லையே என்று மனம் வருந்துகிறேன்.

"என்னை இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே" என்ற கருத்துக்கமைவாக இப்பிறவிப்பயனை அடியேன் அடிபாடி அடி அடையுமாறு இந்நிலைக்கு என்னை உயர்த்திவைத்த மறைந்தும் மறையாத குருநாதர்களான வீரமணி ஐயாவையும்,சொக்கன் ஐயாவையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன் மற்றவர்களுக்கு எப்படியோ,என்னை உயர்த்த வேண்டும், வளர்க்க வேண்டுமென்பதற்காக தங்களுக்கு வந்த பலசந்தர்ப்பங்களை அடியேனுக்கு வழங்கியவர்கள். தாங்கள் மறைந்தபின்னும் தங்கள் பாணி நிலைக்க வேண்டுமென்று விரும்பியவர்கள். தொழிலையும், தோற்றத்தையுங்கண்டு ஓடியவர்களைத் தடுத்துநிறுத்திய உத்தமர்கள். நீ பொய்மையாளரைப்பாடப் பிறந்தவனல்ல.உன்பிறப்பு எந்தை புகழை ஓதப் படைக்கப்பட்டது என்ற உணர்வை,நம்பிக்கையை உறுதியுடன் பேணுமாறு வலியுறுத்தியவர்கள். பேணப்பணித்தவர்கள், பேணி எழுதிட வழிப்படுத்தியவர்கள். இருவரின் திருவடிகளையும் நன்றியோடு வணங்குகின்றேன்.

## மறக்கமுடியாதவர்கள்

மனதில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டவர் மறைந்த மாவை ஆதீனகர்த்தர்.பெரிய மாமேதை.அடியேனின் திருப்புகழை தெய்வ அந்தஸ்த்துக்கு உயர்த்தியவர்.திருப்புகழ் அர்ச்சனையாக ஷண்முகருக்கு ஆறுபக்கமும் இப்பாடல்கள் பாடப்பெற்றபோது பூப்போட ஒழுங்கு செய்து பலசோடஷ உபசாரங்களோடு அரங்கேற்றியவர். அடியேன் முழுக்கோவில் களுக்கும் எழுதமறுத்துப் போட்ட தடைமதில்களையெல்லாம் உடைத் தெறிந்து பாடப்பணித்தவர்.இன்று ஐநூற்றி அறுபது கோவிலுக்கு அறுநூறு பாடல்கள்பாடி முடித்திருப்பதற்கு அக்குருவருளும், திருவருளுமே

காரணம்.அம்மேதையோடு பேசியவிடயங்கள் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள், பெற்றுக் கொண்ட விடயதானங்கள்,உபதேசங்கள் என்றும் மறக்கமுடியாதவையாகும்.

அடுத்து இந்துமத பீடாதிபதியாயிருந்த வணக்கத்திற்குரிய சாம்பசிவ சிவாச்சாரியார். அவரும் மகாமேதை.குருத்துவம் சம்பந்தமாகப் படித்துப் பட்டம் பெறாத துறையே கிடையாது. சோதிடத்திலாகட்டும், மருத்துவத்தி லாகட்டும்,வேதத்திலாகட்டும், பூசைநெறி முறையிலாகட்டும், மாந்திரீகத்தி லாகட்டும் இன்னும் பல்வேறு துறைகளிலாகட்டும் அறிவுசால் அந்தணர்.இவையெல்லாம் பின்னர் நான் தெரிந்து கொண்டதுதான்.

இவருக்கு ஒரு வரவேற்பு விழா.வாழ்த்து எழுத விழாக்குழு தொடர்பு கொண்டது. எழுத மறுத்துவிட்டேன்.பின்னேரம் குருநாதர் சொக்கன் ஐயாவிடமிருந்து அழைப்பு வந்தது.இரவு சென்றேன்.அவர்முற்றத்தில் சிவாச்சாரியாரும் குருநாதரும் இருந்து சுவராசியமாக உரையாடிக் கொண்டி ருந்தார்கள். அடியேனைப்பார்த்தவுடன் வாரும், இரும் என்ன பிரச்சனை என்றார்.எதற்கு வினவுகிறார் என்றோர் குழப்பம். என் அமைதி பார்த்து வாழ்த்து எழுத என்னைத்தான் அணுகியவர்கள் நான்தான் பெடியனிடம் கொடுங்கள் எழுதுவான் என்று அனுப்பிவிட்டேன் என்றார்.இவர் ஒரு பிராமணர் பலமடங்கு வயதுமூத்தவர் அதனால் அவரைவாழ்த்துவதற் கானதகுதி எனக்கில்லை என்று சொன்னேன்.சிவாச்சாரியார் சிரித்தாரே ஒருசிரிப்பு. நான் இவ்வளவு நேரமும் பெடியனைப் பிழையாக நினைத்திருந்தேன்.இப்போதான் தெரியுது பெடியனில் பிழையில்லை வாத்தியாரிற்தான் பிழையென்று சொல்லி விட்டு தம்பி, தருகிற விடயத்தை கவிதை யாக்கித் தருவது மட்டுந்தான் உமது வேலை.இங்கே வாழ்த்துவது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த தமிழ்.நீரல்ல என்றார்.நான் திகைத்துவிட்டேன்.காரணம் ஒவ்வொரு வாழ்த்தும் வரையும் போதும் நான் வாழ்த்துவதாகத்தான் அதுவரை நினைத்துக் கொண்டிருந் தேன். பின்பு வாழ்த்து வரைந்ததும்,பின்னாளில் அவரிடம் இருந்து சமய ஞானம் பெற்றதும் தனிக்கதை. ஆனால் அந்நிகழ்வின் பின் ஆயிரம் பிறைகண்ட அந்தணப்பெருமக்களுக்கும் வாழ்த்துப்பாக்கள் வரைந் தேன்.வரையலாம் என்ற ஞானத்தை இவரிடமிருந்தே பெற்றேன்.

## திரு இரா.செல்வவடிவேல் அவர்கள்

எத்தனை திறமைசாலிகளாய் இருந்தாலும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் வேண்டும். தனக்கு வந்த அத்தனை சந்தர்ப்பங்களையும் அடியேனுக்கே வழங்கிமகிழ்ந்தவர். செல்வச்சந்நிதிக் கந்தனுக்கு வரலாற்றையொட்டிய கீர்த்தனைகள் தேவைப்பட்ட போது வரலாற்றுப்புத்தகத்தை கையளித்து இருபத்தியொன்பது கீர்த்தனைகள் எழுதும் சந்தர்ப்பத்தை வழங்கினார்.இந்து சாதன மீள்வருகையின்போது நாவலரின் கதையைப் புராாணமாக எழுதினால் விழாக்களில் ஓதவிடலாம் என்ற சிந்தனை வந்த போது அப்பெரும் பொறுப்பையும் சபையின் சார்பில் என்னிடம் ஒப்படைத்தார்.

இதழாசிரியரான சிற்பிஜயா என்னை அறியாதவர். எழுதுவாரோ? முடிப்பாரா? தரமாக இருக்குமா? என்றெல்லாம் தயங்கியபோது (அப்போது முப்பத்தைந்து பாடல்கள்தான் எழுதி முடிக்கப்பட்டிருந்தன.)தொடங்கினால் தொடர் தவறாது வரவேண்டுமேயென்ற கவலையில் வினாவிய வினாக்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து வெளிவரப்பண்ணியவர். இதன்மூலம் மிகமூத்த எழுத்தாளரான சிற்பி ஐயாவுடனான நட்பைப்பெற்றுத்தந்தார். இந்து சாதனம் இதழின் அறிமுகத்தில் சந்நிதி முருகனுக்கு இவர் எழுதிய திருப்புகழ்ப் பாக்கள் பிரசித்திபெற்றவை.என்று வர கவிநண்பர் வட்டம் சந்திதியானுக்கு நீ எழுதியதைச் சொல்லவேயில்லையென்று கேட்க,இப்போ என்ன சந்நிதியானுக்கும் உம்புகழ் வேணும்போல் தெரிகின்றது எழுதிவிடும் எனஎழுதிவாங்கி அவைகளையும் சந்நிதியான் ஆச்சிரம மலரிலும், கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ் அம்மையார் எழுதிய ஆற்றங்கரையான் நூலிலும் வர வழிசமைத்தவர். இன்னும் பல.விரிவுகருதி மற்றவைகளை விட்டு அவரையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவுகூருகிறேன்.

## கலாநிதி.க.வைத்தீசுவரக்குருக்கள் ஐயாவும், (க.வை) முதுபெரும்புலவர்வை. க.சிற்றம்பலம் ஐயாவும் (வை.க)

இறைவன் திருவருளை என்னவென்பேன். கற்பித்த குருநாதர்கள் வீரமணி ஐயாவும், சொக்கன் ஐயாவும்.என் வளர்ச்சியிலும்,உயர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக இருந்து ஆலோசனைகள் சொல்லி வழிப்படுத்தும் குருநாதர்க ளாக இருந்தார்களோ அதே முறைவழியில் க.வயித்தீசுவரக் குருக்களும், வை.க.சிற்றம்பலம் ஐயாவும் சேர்ந்துள்ளாகள். என்னே ஒற்றுமை இது இறைவனால் ஏற்படுத்தப்பெற்ற வழிப்படுத்தல் அல்லாது வேறில்லை.

காய்தல், உவத்தல் இன்றி என்வளர்ச்சியொன்றே கருதிஆலோ சனைகள் தருபவர்கள். இந்த சமுதாயம் பலரையும் பயன்படுத்தும் வாய்ப்பை இழந்து நிற்கின்றது. உன்னையும், உன்பணியையும் இழக்கத் தயாரில்லை என்று பாடும் பணிக்குப் பக்கத்துணையாய் இருப்பவர்கள். படித்தவர்கள், பலகலையில் வல்லவர்கள் சிலபேர் காட்டும் பஞ்சமா பாதகங்களினால் நான் தளர்வுற்ற போதெல்லாம் நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலைக்கு நாவலர் வாக்காக அடியேன் எழுதிய

"சைவர்க ளெல்லாம் தங்கள் சமயமும் பாஷை தானும்
வையக முயர நான்செய் வகையில முயற்சிக் கெல்லாம்
கைவர உதவி டாதும் கனஅவ மதிப்பு மூறும்
செய்குவ ரேனும் அற்ப அளவிலும் கவலை யில்லை.

என்ற பாடலையே உதாரணமாக்கி எதுபற்றியும் கவலைகொள்ளாமல் பணிசெய்ய ஊக்குவித்தவர்கள்.நீ செய்வது சிவத்தொண்டு.சைவ சமயத்தில் நாயன்மார்களோ இலக்கியங்கள் படைத்தவர்களோ யாரையும் கேட்டுப் பாடவில்லை.அந்த மாவை முருகனின் வசந்த மண்டபத்தின்முன் சு.து.ஷண்முகநாதக் குருக்களின் வாய்வழி வந்த "நீர் பாடுமன்" என்ற சொல் வானோசைவழி வந்த முருகன் ஆணை.இதையே மனதிற் கொண்டு பாடு என்று பாடவைத்த பண்பாளர்கள்.தற்போது தொண்ணூற்றி எட்டு வயதை எட்டியும்,பத்துநாள் காய்ச்சலில் படுத்த படுக்கையில் இருந்த போதும் அதைத்தெரியாமல் நான் அனுப்பிய பாடல்களை சுத்தமாக, சத்தமாக வாசிக்கக்கூடிய ஒருவரைக்கொண்டு வாசிப்பித்துக்கேட்டு அபிப்பிராயங்களையெல்லாம் விரிவாக எழுதி அதனோடு தனது சுகயீனத்தையும் குறிப்பிட்டு தன் கைப்பட கடிதம் எழுதி குருக்கள் அனுப்புகிறார் என்றால் அவருக்கு நான் என்னகைம்மாறு செய்வேன். வை.க.சி.ஐயாவோ அடியேனுக்கு அளித்த பாட்டில் குறிப்பிட்டது போல ஏந்திக்கைகூப்பி வாரும் அருண கிரியாரே என்று வரவேற்பார். மனம், உடல், கைகால் எல்லாம் கூசும்.நுறாண்டு கண்ட அற்புதக் கவிஞன். இந்தவயதிலும் தன்கைப்பட வாழ்த்துப்பா வரைந்தனுப்புவதில் ஒரு குதுாகலம்.இதற்கு நான் என்னதவம் செய்திருக்கவேண்டும்.சிறு குழைந்தை போல் பழையவிடயங்களையெல்லாம் பகிர்ந்து கொள்வார்.நூறு வயதிலும் செல்லச் சந்நிதியானுக்கு இன்றும் பாடல் எழுதிக்கொண்டிருப்பவர்.இதில் மகா ஆச்சரியம் என்ன வென்றால் குருக்களும் நானும் ஏற்கனவே தொடர்பு. நான் இப்படி ஒரு முதுபெரும்புலவர் இருக்கிறார் என்று அறிவேன். பார்த்ததில்லை.சந்திக்க வேண்டும் என்ற ஆவல் மட்டும் இருந்தது.

அவருக்கும் என்னைப் பார்க்கவேண்டு மென்று ஆவல் இருந்ததை அறியேன். நான் கொழும்பில் இருப்பதால் யார்மூலம் என்னோடு தொடர்புகொள்ள முடியும் என்று தெரியாது தவிப்போடு இருந்திருக்கின்றார்.இறைவன் திருவிளையாடலை என்ன வென்பேன். ஒரே மேடையில் எனக்கும், வைத்தீசுவரக் குருக்கள் ஐயாவுக்கும்,வை.க.சி ஐயாவுக்கும் பாராட்டுவிழா நடக்கின்றது.இவருக்கும் நடப்பதை நான் அறியேன்.எனக்கு தொலைபேசி அழைப்புத்தான்.அன்று காலைதான் யாழ் வந்து குறித்த நேரத்திற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்தான் விழாநடக்கு மிடத்திற்குச் சென்றேன். வரவேற்ற விழா ஏற்பாட்டாளர்களால் உங்களை ஒருவர் சந்திக்க அறையில் காத்திருக்கின்றார் என்றார்கள்.சென்றேன் வாரும் அருணகிரியாரே என்று கூப்பிய கரத்தோடு முதியவர் எழுந்திருக்க முயன்றார். அவரை அமர்த்தி நான் நிலத்தில் அமர்கின்றேன்.என்திருப்புகழை பாடிக்காட்டினார். திகைத்துவிட்டேன்.யான் யார் தெரியுமா? என்றார் ஆண்டவன் போல்ஒருவர் வந்து இவர்தான் முதுபெரும்புலவர் என்று சொல்லி என்னைக் காப்பாற்றினார். என்னை எப்படிக் கண்டுபிடித்தீர்கள் என்றேன்.முருகன் காட்டினான் என்று விகடமாகச் சொன்னார்.பல விடயங்கள் பற்றிப் பேசினோம் அவர் என்னைப்பற்றிச் சொல்லச்சொல்ல வியந்து போனேன்.அப்பேர்ப்பட்ட பெருந்தகை ஆனால் அருணகிரியாரே என்று கூப்பிடுவதிலே சற்று சங்கோசம். ஒருநாள் கேட்டும் விட்டேன்.நூறாண்டு வாழும் பெரியமனிதர். எனக்கு வெட்கமாக இருக்கின்றது. எல்லோரும் போல வாடா மோனை என்றால் காணும் என்றேன்.வெண்தாடி முகமூடு ஒருபெரிய சிரிப்பு.பின் சொன்னார். நான் உன்னைப் பற்றி இருவிடயம் வைத்திருக்கின்றேன்.கவிஞன் பிறக்கின்றானே தவிர உருவாவதில்லை.நீ சொக்கனிடம் விருத்தத்தையும், வீரமணியிடம் கீர்த்தனையையும் தான் படித்தாய்.ஆனால் சந்தக்கவிதை நின்று அந்த முருகனையே ஆட்டுமாபோல் பாடுவதென்றால் அருணகிரி வாக்கில் நின்று வளையவாறான் என்று தானே அர்த்தம்.அதற்குமுருகனும் இசைவில்லையென்றால் பாடல்கள் தேன்கலந்து ஊன்கலந்து வருமா? இரண்டாவது உன்பிறப்பில்,சந்ததியில் சந்தேகம் என்றார்.நீ நாயன்மார்கட்டு ஆள். உங்கள் திருக்குளத்திலிருந்து தான் இரகுவம்சத்தை அரசகேசரி மன்னர் பாடினார். நீ அந்தக் குளத்துக்கு அருகாமையில் இருப்பதாலும், தாய், தந்தை, பாட்டன், பாட்டி, பூட்டன், பூட்டி முதல் பூர்வீகமே நாயன்மார்க்கட்டு என்பதாலும் ஒருவேளை நீ அரசகேசரி மன்னன் அடியில் பூத்தமலரோ, அவர் வம்சத்தில் வந்தவனோ என்று நிச்சயம் ஆராயவேணும்.படித்து எழுத முடியாததை எழுதுவதால் வித்து பிறவிக்கவி வித்தாயிருக்க வேணும். ஆனபடியால் நான் அந்தக் கோணத்திலும் பார்க்கிறேன். அடுத்தது

நான் உன்னுள் குடிகொண்டிருக்கும் அருணகிரிநாத சுவாமிகளை வணங்கினேன் அல்லாது உன்னை வணங்கவில்லை என்றாரே பார்க்கலாம். இப்பேர்ப்பட்ட பெருந்தகைகளுடன் என்னைப்பழகவிட்ட இறையருளை எண்ணி இன்றும் வியக்கிறேன்.ஷஷ்டியப்த பூர்த்தியை திருக்கடவூரில் முடித்து யாழ் திரும்பியவுடன் இருவரிடமிருந்தும் அழைப்பு சென்றேன். பாராட்டுக்கள். வாழ்த்துக்கள். பின்பு தான் அறுநூறு திருப்புகழையும் சிறிய மணிவிழாவைச் செய்து வெளியிடுவதென்ற அவர்களின் விருப்பவெளிப்பாடு.திருப்புகழுக்கு "தெய்வப் புகழிசைத் தேனமுதம்"என்றும், அதை "ஷண்முகப்பிரசாதம்" ஆக வெளியிடுவதென்றும் முடிவானது. மணிவிழா மலருக்கு "குகப்பிரசாதம்" என்றும் அதை மணிவிழா மங்கலங் காணும் நாயகரின் மாண்புரை மலராக வெளியிடுவதென்றும் முடிவானது. இப்பெருந்தகைகளை மனமொழி மெய்களால் நன்றியோடு வணங்கி மகிழ்கிறேன்.

### எதிர்மறையாளர்

நான் முன்பே குறிப்பிட்டது போல தோற்றத்தையும் தொழிலையும் கண்டு ஓடியவர் பற்றிய மறக்கமுடியாத ஒரு சம்பவம்.ஒரு பவழவிழா.நானும் அந்த நிறுவனத்தில் ஒரு பணிப்பாளர். தலைமைப் பணிப்பாளரான பேராசிரியரின் வேண்டு கோளுக்கமைவாக அன்றைய சகல பத்திரிகை களிலும் நிறுவனத்தின்தேவை மற்றும் பலவிடயங்களை உள்ளடக்கிய அடியேனுடைய கவிதை பிரசுரமாயிருந்தது.அது பற்றிஅன்றைய பிரதமவிருந்தினரான கல்விப்பணிப்பாளர் மேடையில் வியந்து இவ்வளவு தேவையுண்டென்பதை இக்கவிதையைப் பார்த்தபின்தான் தெரிந்து கொண்டேன் என்றும், கவிதையைப் பார்த்தால் இந்நிறுவனத்தோடு தொடர்புடைவர் தான் எழுதியிருக்க வேண்டும் அருமையாக தெளிவாக வந்திருக்கின்றது என்றும் பேசினார்.மேடையில் அமர்ந்திருந்த பேராசிரியர் அவர் எங்கள் பணிப்பாளர்களில் ஒருவர் சற்று நேரத்தில் நன்றியுரையாற்ற இந்த மேடைக்கு வருவார்.நீங்கள் சந்திக்கலாம் என்றிருக்கின்றார். சந்திக்குமாறு எனக்கும் தகவல் வந்தது.காலை நிகழ்வு நிறைவின் இடைவேளையில் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்தோம்.நானும் வேட்டி சால்வை பணிப்பாளரும் வேட்டி சால்வை உடுத்தியிருந்தோம்.ஒரு ஆசிரியர் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்க வந்தார். பணிப்பாளர் என்னைக் காட்டி சாருடன் இன்று வந்த கவிதைபற்றி பேசிக்கொண்டிருக்கின்றேன்.சற்று இரும் என்றார்.அவர் சார்யார் என்றார்.இவரும் ஒருபணிப்பாளர்தான் என்றார். உடனே அந்த ஆசிரியர் ஓம் சேர் நானும் கவிதைகள் எழுதுவது தெரியுந்தானே.

என்றாலும் சேர்மாதிரி எழுத வராது அப்படி யிப்படியென்று ஆகா, ஓகோ என்று புகழ்ந்து தள்ளினார். அவரின் நோக்கம் பணிப்பாளரைச் சந்தித்து தனது ஏதோஒரு கோரிக்கையை முன்வைக்க முயன்றிருக்கின்றார் என்று பின்னர் அறிந்துகொண்டேன். மதிய உணவுக்கான அழைப்புவர நான் கல்விப் பணிப்பாளரை அனுப்பிவிட்டு மற்றஒழுங்குகளைக்கவனிக்க முயல அந்த ஆசிரியர் வந்து(என்னை) சேரைச்சந்திக்க வேணும் எங்கு வந்து சந்திக்கலாம் என்றார்.நானும் ஏதோ கவிதைபற்றி பேசுவதற்காக என்று நினைத்து மனோகராச் சந்திக்கருகில் இருக்கும் தவிட்டுக்கடைக்கு வந்தால் சந்திக்கலாம் என்றேன்.

''கடையா'' என்று கேட்டு அவர்முகம் போன போக்கை இன்றுவரைக்கும் என்னால் மறக்க முடியவில்லை.இல்லை கல்விப்பணிப்பாளர் நீங்களும் ஒரு பணிப்பாளர் என்றாரே என்றார்.ஆம் இந்த நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவர் என்றேன்.கொஞ்சநஞ்ச மிருந்த நம்பிக்கையும் போய் கோபத்தோடு அகல அவரின் சகநண்பர் வந்து வெற்றியா என்று கேட்க,அதையேன் கேட்கிறாய் ஒருதவிட்டுக்கடைக்காரன் எழுதிய கவிதையைப்போய் நல்லாயிருக்கென்று நேரத்தை வீணாக்கினது தான் மிச்சம். நானும் அந்தப்பணிப்பாளர் மதிப்புக்கொடுத்துக் கதைத்த படியால் இவரும் ஒரு கல்விப்பணிப் பாளராக்கும் அவரைவிட உயர்ந்தாளாக்கும் இவரோடை கதைச்சு விடயத்தை முடிக்கலாம் என்ற பின்தானே தெரியுது ஒருதவிட்டுக் கடைக்காரனென்று. அறிவில்லாதவன் முதலே அவர்சொல்லும் போது நான் கல்விப் பணிப்பாளரில்லை என்று சொல்லியிருந்தால் நான் அவருடன் பேசியிருப்பேன் தானே என்று தான் கற்பனை பண்ணி ஏமாந்ததற்கு என்னைக் குற்றவாளியாக்கி பலவாறு என்காதுபட தன்நண்பரிடம் பேசினார். தான் வந்தவிடயம்பற்றி பணிப்பாளருடன் உரையாட முடியவில்லையே என்ற காற்சட்டை சேட் போட்ட அந்த போலிக் கனவானை எண்ணி வருந்தினேன். மதியம் பேராசிரியரோடு உணவருந்தும் போது சம்பவத்தைச் சொன்னேன். அவரும் சிரித்துவிட்டு அவர்சரியாத்தான் சொல்லியுள்ளார். நீதான் புரியாமல் இருக்கிறீர் என்ற போது பகீர் என்றது. மாலைவிழா வேலைகள் நிமித்தம் கனத்த இதயத்தோடு கடமையாற்றிக் கொண்டிருந்தேன். இதைக்கவனித்த இன்னொருவர் விசாரித்தபோது வாத்தி எவ்வளவு சுயநலமாய் நடந்திருக்கிறானென்று பொரிந்து தள்ளிவிட்டு வாத்தி சொன்னது கூட இப்ப பெரிசா இல்லை இத்தனை வருடமும் என்னுடன் பழகிய பேராசிரி யரும் சொல்லிவிட்டார் அதுதான் தாங்கமுடியவில்லை யென்றேன். அவர் நம்பவில்லை.ஒருநாளும் உம்மை அப்படிச் சொல்லி இருக்க மாட்டார்.கல்வி

வேறு, அறிவு வேறு,ஞானம் வேறு என்பதை பேராசிரியர் நன்கறி வார். கற்றிலனாயினும் கேள் என்று சொல்பவர்.என்று விட்டுச்சென்றவர் சற்று நேரத்தில் சிரித்தபடி வந்தார்.அவரும் சரியாகத்தான் சொல்லியுள்ளார் என்ற போது பரிதாபமாக நண்பரைப்பார்த்தேன்.சிரித்துக்கோண்டே சொன்னார் அறிவில்லாதவன் என்ற பதத்தைப் பிரித்துப்பாரும் அறிவில் ஆதவன் போன்றவன் என்ற ஒரு பொருள்வரும் அதாவது நீர் அறிவிலே சூரியனைப்போலப் பிரகாசிப்பவர் என்று பொருள் சரிதானே என்றார். பின்னால் பேராசிரியரும் வந்தார்.நீர் நின்ற கோபத்தைப் பாரத்துவிட்டுச் சொன்னேன். சற்று நிதானித்து நான் அப்படிச்சொல்லுவேனா என்று சிந்தித்திருந்தால் உண்மை விளங்கியிருக்கும்என்றார்.நான் வெட்கிப் போனேன். பேராசிரியர்நந்தி ஐயாவும் பெரிய தத்துவத்தையே சொன்னார் விரிவு கருதி இன்னொரு சந்தர்ப்பத்தில் அதுபற்றி எழுதுகிறேன்.

அடியேனின் பணிகள் மேல் மதிப்பும், மரியாதையும் கொண்டுள்ள பலபேராசிரியர்கள் யாழ், கொழும்பு, தென்கிழக்கு பல்கலைகழகங்களில் கடமையாற்றுகிறார்கள். அன்போடு பழகியும் வருகிறார்கள். என்றாலும் ஒரு சிலரைப் போல அந்த ஆசிரியரின் மனதில் பல்கலைக்கழகம் புகாதவன், பட்டம் பெறாதவன், சாதாரண தவிட்டுக்கடை நடாத்துபவன் கவிதை எழுதுவதா? இதை கல்வி மானான பணிப்பாளர் பாராட்டுவதா? என்பதே அவர் நிலைப்பாடு.இவர்களெல்லாம் பல்கலைக்கழகம் என்ற மாயையிலிருந்து என்று வெளிவருவார்களோ அறியேன். படிக்காத மேதைகளையும் கண்டேன். பிடிக்காத மேதைகளையும் பார்த்தேன். படித்தும் வஞ்சகம் செய்யும் பாதகர்களையும் அறிந்தேன், வஞ்சகம் செய்வதற்காகவே படித்த பாவிகளையும் தெரிந்தேன். இது வாழ்வு கற்றுத் தந்தபாடம். முன்னவர்கள் வணக்கத்திற்கும்,வாழ்த்திற்கும் உரியவர்கள். பின்னவர்கள் தாங்கள் கற்ற பலகலையில் இதையுமொரு பிரதான கலையாகக் கற்றுத் தேர்ந்தவர்கள். வாய்ச்சொல்லில் வீரர், நேரே கண்டால் தேனொழுகப்பேசுவார்கள். வாக்கொன்றும் வாழ்வொன்றுமாய் வாழத்தெரிந்த வடிபுளிகள் என்று நினைத்து மறக்கப் படவேண்டியவர்கள். மறந்து மன்னிக்கப்பட வேண்டிய அந்த ஆசிரியருக்காகவும், அவர் போன்ற பல்கலைக்கழக மாயையில் உள்ளவர்களுக்காகவும் பின்வரும் கவிதையை அவர்களின் பார்வைக்குச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

உயிரிளந்த பிணமதனை உடமையாலும்
உவப்பில்லாக் கடதாசிப் பூவினாலும்
இயன்றளவும் மூடி இன்புற்றாலும்
இறந்தபிணம் இறந்ததுதான் உயிர்ப்பங்கில்லை

பயின்றதுவோ பலநூ லானாலும்
பாவிலக்கணம் தேடிப்படித் திட்டாலும்
முயன்றெழுதும் கவிதைவெறும் சொற்கூட்டன்றி
முழங்கு பிறவிக்கவியின் முதிர்வாக்காமோ?

காரிகையோ கற்றறியான் கவிதைபாடும்
கலையிலே வியன்பெற்றா னென்றாலீது
பாரினிலே புதுமையென்பர்;கவிஞன்பட்டப்
படிப்பதனைப் படிப்பதனால் ஆவதில்லை
பேரினிலே ஒன்றில்லை பிறப்பிலேதான்
பிறக்கிறான் கவிஞனென்பதோர் பேருண்மை
ஆரினிமேல் கவிஞனென்ன ஐயம்வேண்டாம்
அவன்பாட்டில் உயிருண்டோ என்றுபாரீர்.

இது 1946 ஆம் ஆண்டு திரு எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் "யார் கவிஞன்" என்ற தலைப்பிலே எழுதிய கவிதை.முன்சொன்ன சம்பவத்தைக் கேள்வியுற்ற இன்னுமொரு பேராசிரியர் அடுத்தநாள் அன்பளிப்பாக எனக்கு உவந்தளித்த பத்திரிகை நறுக்கின் பிரதி..

## பண்ணிசை யருளிய அருளாளர்கள்

இறைவன் கேட்டு முகம் சுழிக்காதவகையில் ஓரளவிற்காவது பண்ணொடு பாடுகிறேனென்றால் அப்பெருமை இருவரைச்சாரும்.ஒருவர் சிவஞானம் எமக்களித்த சிவஞானம். பக்தி, வித்தை, ராகம், தாளம், சொல், பொருள், பாவம் ஒருங்கே சேர வயலின் கருவியை இசைத்தவாறே பாடும்திறன் மிக்கவர்.மற்றவர் ஆழ்ந்த புலமையோடு சிறுவயது முதலே பண்முறை பிறழாது,வகுத்தான் வகுத்தமுறையில் சற்றும் பிசகாது ஓதுவார்க்குரிய அங்கலட்சணத்தோடு பாடிவரும். தேவார இசைமணி கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் இவர்கள் இருவரும் பயன் கருதாது நீர் வார்த்த ஊற்றுக்கள்.

## சாயி கீர்த்தனைகள்

சாயி நாம மோதாத என்னை "நாமந்தனை ஓது"என்று பாட வைத்த தோடு ஐம்பத்தியொரு கீர்த்தனைகளையும், நூற்றியெட்டு போற்றிகளையும் புனைவிக்கவைத்து சாயியின் நேரடி அங்கீகாரத்தையும் பெற்றுத்தந்த பெருமை இந்த "திருவாசகம்"சிவஞானம் ஐயாவையே சேரும்.முன்னாள்

தலைவர் சிவஞானம் ஐயாவும் குறிப்பிடத்தக்க வராவார்.இப்பாடல்களை சமித்திகள் தோறும் பாடிவரும் அவர்தம் புத்திரர்களான வைத்திய கலாநிதி சி.சிவகோணேசன் அவர்களும், அநுசரணை வழங்கி வரும் திரு.சி.சிவபாலன் அவர்களும் நன்றியோடு நினைவு கூரப்பட வேண்டியவர்களே.

## குடும்பத்தார்காட்டிய பொறுமை

குடும்பமெனுங் கோவிலில் மனைவி புவனேஸ்வரி அம்மாள்.அம்மாள் என்ன அம்பாளே தான்.நானும் குழந்தைகளும் நன்றாக வாழுகின்றோம் என்றால் தன்னை மெழுகுவர்த்தியாக உருக்கி ஒளிகொடுத்த தீபம்.என்பணிகளுக் கெல்லாம் தடை சொல்லாத ஓர் சீவன்.வாழ்ந்தால் என்னோடு வாழ்ந்திருப்பேன் என்று வனம்புகுந்த சீதை.அன்னை தயையும், அடியாள்பணியும், அலர்ப்பொன்னின் அழகும்,புவிப்பொறையும் விறன்மந்திரி மதியும் பேசிலிவையுடையாள் பெண் என்ற பாடலுக்கு அணிகலனாகத் திகழ்பவர்.சில நேரம் வீட்டுப்பிரச்சனைகள் பற்றிக் கதைக்கவே நேரமிருக்காது. இதனால் மிகப்பாதிப் புற்றது எனது இளையமகன்.யாழில் இருக்கும்போதும் ஒரே நேரத்தில் பல பொது நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளில் பணியாற்றிவந்தேன்.லீவு நாட்களில் கூட வீட்டில் நிற்க முடிவதில்லை.இவை யெல்லாவற்றையும் பொறுத்து எந்தவித சச்சரவுமில்லாமல் நிறைவாழ்வு கண்டிருக்கின்றேன் என்றால் அது என்மனையாளையே சாரும்.பிள்ளைகள் தங்கள் பிரச்சனைகளை அம்மாவுடனே தீர்த்துக்கொண்டார்கள். குறிப்பாக 2009ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் பட்டகஸ்டம் கொஞ்சமல்ல. 2012 இந்த நூல் எழுதத் தொடங்கியதிலிருந்து சொல்லவே தேவையில்லை.கவிதை ஊற்றாக வரும்போது குறுக்கீடு செய்வது கோபத்தை யுண்டாக்கும் என்றுணர்ந்து எல்லாவற்றையும் பொறுமையோடிருந்து காத்த பெருமை மனையாளையும் இளைய மகனையுமே சாரும்.அவர்கள் ஆற்றிய இந்தப்பணியானது உலக நன்மைக்காகவே. விழா எடுக்கவேண்டும் என்ற குருமார்களின் விருப்பறிந்து அதற்காக பல்வேறு வழிகளில் முயற்சி எடுத்த இளைய புதல்வனையும் அதற்குக் கைகொடுத்து ஒத்துழைத்த மூத்த புவல்வனையும் இந்தநேரத்தில் நன்றியோடு நினைவு கூருகின்றேன். இரு குருநாதர்களதும், பிள்ளை களினதும் விருப்பத்தை அறிந்து விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை முனைந்து செய்த இரா.செல்வவடிவேல் அவர்களுக்கும் விழாக் குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இளங்கலைஞர்கள் முதல் பேரறிஞர்கள்,கல்விமான்கள், மதபீடாதிபதிகள், ஆதீனங்கள் பேராசிரியர்கள் முதல் நூறாண்டு கண்டுவாழும் பெரியார்வரை வாழ்த்துரைகளையும், ஆசியுரைகளையும், வாழ்த்துக் கவிதைகளையும் உரிய நேரத்தில் வழங்கி என்னைக் கௌரவப் படுத்தியுள்ளார்கள். அவர்கள் திருவடிகளை மனமார வணங்குகின்றேன்.

என்னுடைய திருமணவிழாவை முப்பத்திநான்கு ஆண்டின் முன் ஒளிப்பதிவு செய்த என் பள்ளித் தோழனும், நண்பனும், எவர்விஷன் நிறுவன அதிபருமாகிய திரு.வி.தர்மராஜா அவர்களே இன்றைய எனது மணி விழாவையும் ஒளிப்பதிவு செய்வதையிட்டு எனது பெருமகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றுவரை மாறா அன்புடன் எனது ஆக்கங்கள் வெளிவர உதவி நிற்கும் நண்பன் சி..சற்குருநாதனையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

மணிவிழா மலர் வெளிவர அன்பர்கள்.நண்பர்கள்.உறவினர்கள் என பலரும் கேட்காமலே பல்வேறு வழிகளிலும் மனமுவந்து பெருமுதவிகளைச் செய்திருக்கின்றார்கள், அவர்களையும் இந்த நேரத்தில் நன்றியோடு நினைவு கூருகின்றேன். இந்த நல்ல நாளில் இச்சிறப்பைக் காண, மனசார வாழ்த் துரைக்க என் வாழ்விலும் தாழ்விலும் இரண்டறக் கலந்த மைத்துனர் இ.திருவாதிரை இல்லையே என்பது என்மனதை நெருடவே செய்கிறது.என் மணவிழா மங்கல நாளில் எங்களின் வாழ்வு வளம் பெறவேண்டிதானே சாரதியாகி போகும் வழிதோறும் காணும் ஆலயங்கள் தோறும் கண்ணீர் சிந்த தேங்காயுடைத்து கற்பூரதீபம் ஏற்றி வழிபட்ட காட்சி இப்போதும் நெஞ்சில் நிறைந்துள்ளது. அவர் இந்தவிழாவில் இல்லாதது ஒருபெரும் குறையே. அதே போல எனது சகலர் கு.சிவஞானம் அவர்கள் இல்லாத தும் பெருங்குறைதான். அமரரான இவ் இருவரோடு சு.து.ஷண்முகநாதக் குருக்களும் வானின்றிழிந்து வந்திம் மண்டபம் நின்று வாழ்த்துவர் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.

## தொடருரை

அடியேன் உணர்வு பூர்வமாகப்பாடிய திருப்புகழ்ப்பாக்களை இன்னும் மெருகேற்றவும், படிப்போர் பொருள் விளங்கி இலகுவாகக் கையாளக் கூடியவாறு மிக இறுக்கமாயுள சந்தத்தில் தளர்ச்சி ஏற்படுத்தவேண்டு மென்றும் சில ஆக்க பூர்வமான, அறிவு பூர்வமான ஆலோசனைளை என் பேரன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய கம்பவாரிதி இ.ஜெயராஜ்

வழங்கியிருந்தார். தவிரமுன்னாள் துணைவேந்தரும், தற்போதைய சமூகவியல் துறை தலைவருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களும்,கீரிமலைச் சிவனவன் கழற்கோர் செந்தமிழ் மாலைக்கு ஆய்வுரை வழங்கிய செந்தமிழ்ச் சொல்லருவி எஸ். லலீசன் அவர்களும் , பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் அவர்களும் சில ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றார்கள். இவை கிடைக்கும் போது அச்சேற்றம் ஏறக்குறைய முடிவடைந்து விட்டதால் அடுத்த வெளியீட்டின் போது இவற்றை நடைமுறைப்படுத்த ஆவன செய்யப்பெறும். இறைவன் திருவருள் கைகூடின் காரைநகர் ஆலயங்களின் மூர்த்திகளின் கீர்த்தி அடுத்தவெளியீடாகவரும். எழுதி முடித்தால் வெளியிடுவதற்கான பொறுப்பை ஏற்க அன்புக்கும் மதிப்புக்குமுரிய மகாராணி க.சோமசேகரம் அவர்கள் முன்வந்திருக்கின்றார். ஆலயங்களின் தெளிவான கீர்த்திகள் தேடியலையாமற் கிடைக்குமாயின் அடுத்த ஆண்டே இப்பணி நிறை வேறும் என்று கூறி அப்பணி நிறைவுற குருவருளும், திருவருளும் அடியேனை ஆசீர்வதிக்க வேண்டிப் பிரார்த் திக்கின்றேன்.

எனது நூல்வெளியீடுகளையெல்லாம் கழகத்தினூடாக நடாத்தி வைத்தும் இன்னும் பல்வேறு வழிகளிலும் என்னுடைய வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் உள்ளன்போடு உதவிவரும் சிவத்திரு.எஸ்.வெற்றி வேலாயுதம் அவர்களை நன்றியோடு வணங்குகின்றேன். அவர் என்னுடைய எழுத்துப் பணிகளுக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்குபவர். முற்காலத்திலே அரசர்களும், ஆலயங்களும் புலவர்களைப் போற்றிப் புரந்ததுபோல இப்போது இப்புலவரை புரக்கும் புரவலராகத் திகழ்பவர். அப்பேற்பட்ட பெரியார்க்கு மீண்டும் நன்றி கூறிகின்றேன். யாருக்காவது நன்றி கூறத் தவறியிருப்பேனானால் என் முதுமை மற்றும் மறதியால் நிகழ்ந்தல்லாது வேறில்லை.

மணி விழாவோடும், நூல் வெளியீடோடும் உழைத்த அத்தனை அன்புள்ளங்களிலும் மூத்தோரை அன்போடு மனம், மொழி, மெய்களால் வழுத்தியும், இளையோரை வாழ்த்தியும் அமைகின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

**74/12, இராமநாதன் வீதி,**
**நாயன்மார்கட்டு, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**"தெய்வத் தமிழிசைக் கவிஞர்"**
**இராசையா குகதாசன்**






























